# மெய்யான
# சீஷத்துவம்

வில்லியம் மேக்டொனால்ட்

GOSPEL FOR ASIA
PUBLICATIONS
Tiruvalla, Kerala, India

MEYYANA SEESHATHVAM
Tamil
Translation of the book, 'True Discipleship' by
William MacDonald
ISBN 81 - 7377 - 024 - 7
Copyright 2000 Author
First Impression 2000
Printed in India
Price Rs. 60.00

# முன்னுரை

இச்சிறுநூல் புதிய ஏற்பாட்டு சீஷத்துவத்தின் சில கோட்பாடுகளைத் தொகுத்து அளிக்கும் முயற்சியில் தோன்றினது. இந்தக் கோட்பாடுகள் நம்மில் பலருக்கும் புதுமையானவையல்ல. இவற்றைப் பரிசுத்த வேதாகமத்தில் பல ஆண்டுகளாக நாம் படித்தும், அறிந்தும் இருந்தாலும் பல சிக்கல்கள் நிறைந்த இக்காலத்திற்கு இவை உகந்தவையல்ல, இது மிகக் கடினமான உபதேசம், யார் இதை ஏற்றுக்கொள்வார் என்று முடிவுசெய்து, இவற்றை ஓரங்கட்டிவிட்டோம் அனலற்றுக் குளிர்ந்துபோன நமது ஆவிக்குரிய வாழ்க்கையே போதும் என்று திருப்தியடைந்து விட்டோம்.

இவை நடைமுறைக்கு ஒவ்வாதவை அல்ல; மாறாக நமது இரட்சகர் சீஷத்துவத்திற்கு விதித்திருக்கும் நிபந்தனைகள் குறைந்தபட்சமானவைதான், கைக் கொள்ளக்கூடியவைதான் என்ற போதனையுடன் வெளிப்பட்ட ஒரு இளைஞர் குழு, தங்கள் சாதனையிலும் இலகுவாகச் செய்து காண்பித்துள்ளனர். உலகநற்செய்திப்பணி வெற்றிபெற, இவற்றிக்குக் கீழ்ப்படிவதைத் தவிர வேறொரு வழியுமில்லை எனவும் அறிகிறோம்.

இங்கு விளக்கிக் கூறப்பட்டுள்ள பல உண்மைகளுக்கும் உயிருள்ள சாட்சிகளாக விளங்கும் இவ்வாலிபர் குழுவுக்கு எங்கள் நன்றிக்கடன் உரித்தாகுக.

இவ்வரிய உண்மைகளை எமது சொந்த அனுபவத்தில் முழுமையாக அனுபவிக்காமலும், செயல்படுத்த இயலாமலு மிருந்தாலும், இவையே எமது இலட்சியமும் இதயத்துடிப்புமாகும் என்று பறைசாற்றுகிறோம்.

வில்லியம் மேக்டொனால்ட்

# அறிமுகம்

ஒருவர் மறுபடியும் பிறந்தவுடன், மெய்யான சீஷத்துவத்திற்கு வழி பிறந்து விட்டது என்று கூறலாம். கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் இதற்கு அடிகோலுகின்றன.

1. கடவுளுக்கு முன்பாக ஒருவர் தான் பாவமுள்ளவர், நஷ்டப்பட்டுப் போனவர், குருடன், நிர்வாணி என்று உணர்வடையும் பொழுது.
2. தனது நற்பண்புகளாலும், நற்செய்கைகளினாலும் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முடியாது என்று அறிக்கை செய்யும் பொழுது.
3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தனக்காகத் தன் சார்பிலே, தனக்குப் பதிலாக மரித்தார் என்று விசுவாசிக்கும் பொழுது.
4. திட்டவட்டமான தீர்மானத்துடன் இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும் பொழுது.

இவ்வாறுதான் ஒருவர் கிறிஸ்தவராகிறார். துவக்கத்திலேயே இதனை வலியுறுத்துவது மிக முக்கியம் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதினால் ஒருவர் கிறிஸ்தவராகி விடலாம் என்று பலரும் நினைக்கின்றனர். இல்லவே இல்லை! அது ஒரு போதும் முடியாது. முதலாவது நீங்கள் கிறிஸ்தவரானால் தான், பின்னர் நீங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை நடத்த முடியும்.





பின்வரும் பக்கங்களில் வரைச் சட்டமாகக் கூறப்படும் சீஷத்துவம் இயற்கைக்கு அப்பாற்பட்ட, அசாதரணமான, ஒரு வாழ்க்கையாகும். அப்படி வாழ்வதற்கு இயல்பாக நம்மில் எவ்வித ஆற்றலும் கிடையாது. தேவ வல்லமை நமக்கு வேண்டும். மறுபடியும் பிறக்கும் பொழுதுதான், இயேசுகிறிஸ்து கற்பித்தபடி வாழும் ஆற்றல் பெறுகிறோம்.

மேலும் தொடர்ந்து வாசிக்குமுன் உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். "நான் எப்போழுதாவது மறுபடியும் பிறந்திருக்கிறேனா? இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் நான் கடவுளுடைய பிள்ளை என்ற நிச்சயம் எனக்குண்டா?"

உங்களுக்கு இந்த மறுபடியும் பிறந்து, தேவ பிள்ளையாகும் அநுபவம் இல்லாவிட்டால், இப்பொழுதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகரும் ஆண்டவருமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று பரிந்துரைக் கிறோம்.

பின்னர் அவர் கட்டளைகள் எல்லாவற்றிக்கும் கீழ்ப்படிவதற்கு முடிவு செய்யுங்கள். கிரயம் எதுவாயிருந்தாலும் சரி, பரவாயில்லை. முடிவில் ஒரு போதும் வருந்தமாட்டீர்கள்; அதற்குப்பதிலாக மட்டில்லா மகிழ்ச்சி அடைவீர்கள்.

வில்லியம் மேக்டொனால்ட்

# சீஷத்துவத்தின் நிபந்தனைகள்

உண்மையான கிறிஸ்தவம் என்பது ஒருவர் தன்னை முற்றிலுமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அற்பணிப்பதாகும்.

வேலையில்லாத மாலைப் பொழுதையோ அல்லது வார இறுதி நாட்களையோ, அல்லது பணிக்காலம் முடிந்து ஓய்வு பெற்ற ஆண்டுகளையோ ஒரு பொழுது போக்காகத் தமக்குத் தருகின்ற ஆண்களையும் பெண்களையும் இரட்சகர் தேடிக் கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாகத் தங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவுக்கு முதன்மையான இடத்தை கொடுக்க முன்வருகிறவர்களையே அவர் வரவேற்கிறார். "அன்று போல இன்றும், செம்மறியாட்டுக் கூட்டமாக நோக்கமின்றித் தம் வழிவரும் திரள் கூட்டத்தை ஆண்டவர் தேடவில்லை. மாறாக தாம் எப்படி தன்னலமற்ற சுயவெறுப்பின் பாதையை வகுத்துச் சென்றாரோ, அப்படியே தம்மை உண்மைப் பற்றுடனும் சுயவெறுப்புடனும் பின் செல்லத் தீர்மானித்துள்ள தனி நபர்களையே அவர் தேடிக் கொண்டிருக்கிறார்." எச். எ. இவான் ஹாப்கின்ஸ்.

கல்வாரிச் சிலுவையில் கர்த்தர் இயேசு செய்த தியாகத்திற்குத் தக்க பதில் நிபந்தனையற்ற, முழுமையான அற்பணிப்பே. இதற்குக் குறைந்தது எதுவும் கிடையாது.

சராசரங்கள் அனைத்தும் வியப்பூட்டும் இவ்வன்புக்கு எம்மாத்திரம்? நமது ஆத்துமாக்களும், ஜீவியங்களும், நமக்குண்டான யாவையும் ஒப்புக் கொடுப்பதே இதைத் திருப்தி செய்யும்.





தமது சீஷர்களாக இருக்க விரும்பினோர்க்கு மிகக் கண்டிப்பான விதிகளையே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கொடுத்தார். சொகுசான, சோம்பேறித்தனமான வாழ்க்கையை விரும்பும் இக்காலத்திய மக்களுக்கு இவை புதுமையாக இருக்கின்றன. நரகத்திற்குத் தப்பி மோட்சத்தின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்வதுதான் கிறிஸ்தவம் என்று பொதுவாக நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். இதைத்தவிர, இவ்வுலக வாழ்க்கை தரக் கூடிய சிறப்பான யாவற்றையும் அநுபவிக்க எல்லா உரிமையும் நமக்கு உண்டு என்றும் முடிவு செய்து விட்டோம். ஆனால், விவிலியத்தில் சீஷத்துவத்தைப் பற்றிக் கூறப்படும் கண்டிப்பான வாக்கியங்களையும் கிறிஸ்தவத்தைப் பற்றிய நமது எண்ணங்களையும் எப்படி இணைப்பது என்பது நமக்கு புதிராக இருக்கிறது. இவை இரண்டிற்கும் அதிக முரண்பாடு இருப்பதை உணருகிறோம்.

தாய் நாட்டுப் பற்றின் அடிப்படையில் வீரர்கள் தங்கள் உயிரையும் இழப்பது சரி என்று ஏற்றுக் கொள்கிறோம். அப்படியே பொது உடமைக் கட்சியினர் தங்கள் அரசியல் பற்றுக் காரணமாக சாகிறதைக் கண்டு நாம் வியப்படைகிறதில்லை. ஆனால் எப்படியோ கிறிஸ்துவின் தொண்டர்கள், "இரத்தம், வியர்வை, கண்ணீர்" சிந்துவது நமது சிந்தனைக்கு எட்டாததாக இருக்கிறது!

ஆகிலும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் மிக தெளிவாக இருக்கின்றன. அவற்றை உள்ளபடியே நாம் ஏற்றுக்கொண்டால் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. இப்பூலோக இரட்சகர் விதித்த சீஷத்துவத்தின் நிபந்தனைகளாவன:

**1. இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள ஈடு இணையற்ற அன்பு:**

"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்கு

சீஷனாயிருக்கமாட்டான்." (லூக்கா 14:26). உறவினர்களுடன் எப்பொழுதும் பகைமை உணர்ச்சியுடன்தான் நாமிருக்க வேண்டும் என்பது இவ்வசனத்தின் பொருளல்ல; ஆனால் கிறிஸ்துவின் மீதுள்ள நமது அளவற்ற அன்புடன் ஒப்பிடும் பொழுது, இதர பாசங்கள் எல்லாம் பகைகளாகவே காணப்படும் என்பதுவே இதன் அர்த்தம்.

இவ்வசனத்தில் காணப்படும் சொற்றொடராகிய "தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால்" என்பதுதான் உண்மையில் மிகக் கடினமானது. சீஷத்துவத்திற்குரிய மிகக் கடினமானத் தடைகளில் அதிகமுக்கியமானது தன்னன்புதான். அவருக்காக நமது உயிரையே மனதாரத் தியாகம் செய்ய முன்வரும் வரை அவர் விரும்புகின்ற இடத்தில் நாம் இல்லை என்பது உறுதி.

**2. சுயத்தை வெறுத்தல்:**

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து,..." (மத்தேயு 16:24) சுயத்தை வெறுத்தல் என்பதும், சுய வெறுப்பு என்பதும் ஒன்றல்ல. சுய வெறுப்பு என்பது தன் மேலேயே ஒரு வெறுப்பு உண்டாகி சில ருசிகரமான உணவுகளையும், உல்லாசங்களையும் உடைமைகளையும் விட்டு விடுவதைக் குறிக்கிறது. ஆனால் சுயத்தை வெறுத்தல் என்பது சுய உரிமைகளையும் சலுகைகளையும் கோராமல் கிறிஸ்துவின் கர்த்தத்துவத்துக்குப் பூரணமாக கீழ்ப்படிவதைக் குறிக்கிறது. அதாவது சுயம் இதயச் சிங்காசனத்தை விட்டு கீழிறங்குவதாகும்.

ஹென்றி மார்டின் விளக்குகிறது போல, "ஆண்டவரே, எனது சித்தம் என்று ஒன்றுமே வேண்டாம்; எனது மெய்யான மகிழ்ச்சி எனக்கு வெளிப்படையாக நேரிடக்கூடிய எதையும் எவ்வளவேனும் சார்ந்திருப்பதாக நான் கருதவேண்டாம்; ஆனால் முற்றிலும் உமது சித்தத்துடன் இசைந்திருப்பது என் பாக்கியம்."





*"எனது மகிமை ஜெயவேந்தரே, பரலோகப் பிரபுவே,*
*எனது கரங்களைப் பற்றிக் கொள்ளும், உம் கரங்களில் ஈந்தேன்,*
*எனது சித்தம் முழுவதும், முடிவாக உமது சித்தம் என்றிருந்தேன்,*
*என்றென்றும் மீட்பரின் அரியணை அடிமை நான்",*
எச். ஜி. சி. மூல்

**3. சிலுவையை மனதாரத் தெரிந்து கொள்ளுதல்:**

**"ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்." (மத். 16:24)**

இங்கு சிலுவை என்பது உடல் ஊனத்தையோ, மனவியாகுலத்தையோ குறிக்காது; ஏனென்றால் இவை எல்லா மனிதருக்கும் பொதுவானவையே. சிலுவை என்பது வேண்டுமென்றே மனப்பூர்வமாகத் தெரிந்து கொள்ளும் வழியாகும். "இவ்வுலகத்தைப் பொறுத்த வரையில் இது அவகீர்த்தியும் அவமானமும் நிறைந்த வழியாகும்." சி.எ. கோட்ஸ். தேவகுமாரன் மீது இவ்வுலகம் சுமத்தின நிந்தை, உபத்திரவம், வசைமொழி, பாடுகள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாகக் குறிக்கும் சொல்தான் சிலுவை என்பதாகும். உலகத்துடன் வாழாது, எதிர் நீச்சல் போட ஆசிக்கும் யாவருக்கும் கிடைக்கும் பங்குதான் இந்த சிலுவை.

சிலுவை - கிறிஸ்துவுடன் பாடுகள் - வேண்டாமா? அப்படியானால் எந்த விசுவாசியும் உலகத்தோடும் அதன் வழிபாடுகளோடும் நடந்தால் போதும்; சிலுவையைத் தவிர்த்துவிடலாம்.

**4. கிறிஸ்துவையே முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றும் வாழ்க்கை:**

"ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால் அவன்

தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்''. (மத்தேயு 16:24). இதன் பொருளை விளங்கிக் கொள்ள, ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை எத்தகையதாயிருந்தது?'' என்ற சிறுகேள்வியை ஒருவர் தனக்குத்தானே கேட்டுக் கொள்ள வேண்டும். அது கடவுளுடைய சித்தத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படிந்த ஒரு வாழ்க்கை. அது பரிசுத்த ஆவியானவரின் பலத்தில் மட்டும் நடந்த வாழ்க்கை. பிறர் நலனுக்காகவே வாழ்ந்த தன்னலமற்ற வாழ்க்கை. தமக்கு எதிராக கொடிய அநீதி இழைக்கப்பட்டபோதிலும் நீடிய பொறுமையுடன் வாழ்ந்த வாழக்கை. வீரமும் வைராக்கியமும் நிறைந்து, தன்னையே செலவு செய்து, தாழ்மை, தன்னடக்கம், தயவு, மனஉருக்கம், இரக்கம், விசுவாசம், பக்தி ஆகியவை நிறைந்த ஒரு வாழ்க்கை (கலாத்தியர் 5:22-23). அவருடைய சீஷராக இருக்க வேண்டுமானால் அவர் நடந்தபடியே நாமும் நடக்க வேண்டும். கிறிஸ்துவைப் போலிருப்பதின் கனிகளை நாம் வெளிப்படுத்தவேண்டும். (யோவான் 15:8)

**5. *கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள் அனைவர் மீதிலும் ஊக்கமான அன்பு:***

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்''. (யோவான் 13:35). இந்த அன்பு ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்கள் என்று எண்ணுகின்ற அன்பு, திரளான பாவங்களை மூடும் அன்பு, நீடிய சாந்தமாகவும், தயவாகவும் இருக்கிற அன்பு 1கொரிந்தியர் 13.4-7ல் கூறப்பட்டுள்ளதுபோல், இந்த அன்பு தன்னைத்தானே புகழ்வது இல்லை, கர்வமடைவதுமில்லை, அயோக்கிய மானதைச் செய்வதுமில்லை. தனக்கானதை நாடுவதையும், சினமடைவதையும், தீங்கு நினைப்பதையும் இது வெறுக்கிறது. சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும்,





சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். இந்த அன்பு இல்லாவிட்டால் சீஷத்துவம் என்பது பனிக்கட்டியாய்க் குளிர்ந்து போன, நியாயப்பிரமாணிக்க துறவற வாழ்க்கை யாகிவிடும்.

**6. *வலது இடதுபுறம் சாயாமல் திருவசனத்தைப் பிடித்துக் கொள்ளுதல்:***

"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்.'' (யோவான் 8:31). அதாவது விடாப்பிடியாகத் தொடர்ந்து நிலைத்திருத்தல் என்பது மெய்யான சீஷத்துவத்திற்கு இன்றியமையாதது. பார்த்தோர் பரவசமடைய மின்னொளி வேகத்தில் பந்தயத்தைத் தொடங்கலாம். ஆனால் நல்லதொரு முடிவை அடைவதே உறைகல் சோதனையாகும். சீஷத்துவத்திலும் முடிவுமட்டும் உறுதியாய் நிலைத்திருப்பதையே கர்த்தர் பாராட்டுகிறார். "கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டு பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்.'' (லூக்கா 9:62). 'மனம் போல் வாழ்வு' என்றாற்போல், தோன்றி மறையும், ஒழுங்கற்ற கீழ்ப்படிதலை தேவன் வெறுக்கிறார். சலனமில்லாத, கேள்விகேட்காத முறுமுறுப்பில்லாத கீழ்ப்படிதலே கிறிஸ்துவுக்கு உகந்ததாகும்.

*''நான் பின்னோக்காமலிருக்க எனக்கு உதவும், ஆண்டவரே!*
*எனது கலப்பையின் கைப்பிடி கண்ணீரால் நனைந்துள்ளது,*
*கலப்பையின் நுனியோ துருவேறிக் கெட்டுப்போயுள்ளது,*
*ஆகிலும்*
*என் தேவனே, என் தேவனே, நான் பின்னோக்காமலிருக்க*
*எனக்கு உதவும்.''*

**7. அவரைப் பின் செல்ல எல்லாவற்றையும் விட்டு விடல்:**

"அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டான வைகளை யெல்லாம் வெறுத்து விடாவிட்டால், அவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்". (லூக்கா 14:33). சீஷத்துவத்துக்குக்

கிறிஸ்து விதிக்கும் நிபந்தனைகளில் எல்லாம் மிகவும் வரவேற்கப்படாதது இதுவாகத்தான் இருக்க வேண்டும். விவிலியத்திலேயே விரும்பப்படாத ஒரு வசனம் உண்டென்றால் அது இதுவாகத்தானிருக்கும். விவேகமுள்ள இறையியல் நிபுணர்கள் ஆயிரம் காரணங்களைக் கூறி இவ்வசனம் நேரடியாகக் கூறுவது அதன் மெய்ப் பொருளல்ல என விளக்கலாம்; அல்லது வாதிடலாம். ஆனால் கள்ளங்கபடற்ற எளிய சீஷர்கள், கர்த்தராகிய இயேசு தாம் உரைத்ததின் பொருளை அறிந்துதான் பேசினார் என்றுணர்ந்து அதை அப்படியே ஏற்றுக்கொள்கின்றனர்.

எல்லாவற்றையும் விட்டு விடுதல் என்பதின் பொருள் என்ன? இன்றியமையாத அடிப்படைத் தேவைகளுக்கு மிஞ்சினவைகளும், கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பப் பயன்படக் கூடியவைகளுமான எல்லாவற்றையும் ஒரு கிறிஸ்தவன் கொடுத்து விடுதல் என்று அர்த்தமாகும்.

இவ்வாறு எல்லாவற்றையும் விட்டு விடுகிறவன் சோம்பித்திரியும் வீணனல்ல. தனக்கும் தன் குடும்பத்திற்கும் உள்ள உடனடித் தேவைகளுக்காகக் கடினமாய் உழைக்கிறவன். அவன் கிறிஸ்துவின் பணி வளர்ந்து பெருகுவதையே தனது வாழ்க்கையின் இலட்சியமாக கொண்டிருப்பதால், தனது தினசரி தேவைகளுக்குப் போக மீதமுள்ள எல்லாவற்றையும் கர்த்தருடைய சேவையில் முதலீடு செய்துவிட்டு தன்து எதிர்காலத்திற்காகக் கவலைப்படாமல் தேவனிடம் அந்தப் பொறுப்பை விட்டுவிடுகிறான். தேவனுடைய வாக்குறுதியின்படியே, முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடும்பொழுது மற்றவையெல்லாம் - உணவும், உடையும், உறைவிடமும் - கூடக் கொடுக்கப்படும் (இலவசமாக) என்று பூரணமாக நம்பியிருக்கிறான். கிறிஸ்துவின் நற்செய்தி கிடைக்காததால் ஆத்துமாக்கள் அழிந்து கொண்டிருக்க, அவன் எப்படி மனதாரப் பணத்தை பதுக்கி வைக்க முடியும்? கர்த்தர் தமது பரிசுத்தவான்களைச் சேர்த்துக் கொள்ளவரும்போது





பயனில்லாமற் போவதுடன், சத்துருவின் கையில் விழக்கூடியதுமான செல்வத்தைச் சேர்ப்பதிலேயே தனது வாழ்க்கையைப் பாழாக்கி விடும் அறிவிலி அவன் அல்ல. பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் என்ற ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதே அவனது அவா. எல்லாவற்றையும் விட்டு விடும் பொழுது, ஒரு மெய்யான சீஷன் எப்படியும் தன்னால் தக்க வைத்துக் கொள்ள முடியாததையும், தான் நேசிக்காமல் வெறுத்து விட்டதையும் கொடுத்துவிடுவதினால், தான் நித்தியமாக இழக்க முடியாததைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுகிற பாக்கிய சாலியாகின்றான்.

இவை ஏழும் கிறிஸ்தவ சீஷத்துவத்தின் நிபந்தனைகள் ஆகும். இவை மிகத் தெளிவானவை; குழப்பத்திற்கிடமின்றி, தெளிவாகக் கூறுகின்றன. இவற்றை சீர்ப்படுத்தி, நெறிப்படுத்துகின்ற வேளையில், ஆசிரியர் தாம் எவ்வளவு அப்பிரயோஜனமான ஊழியர் என்றும் அறிக்கையிடுகிறார். ஆகிலும் தேவப் பிள்ளைகளின் தோல்வியைக் காரணம் காட்டி, தேவ உண்மையை எப்பொழுதும் அடக்கி வைக்க முடியுமா? செய்தி கொண்டு போகிறவனைவிட செய்தியல்லவா அதிமுக்கியம் என்ற உண்மையை மறக்கவோ மறைக்கவோ முடியாதே? தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வது நியாயமல்லவா? "நான் செத்தாலும் உமது சித்தம் நிறைவேறட்டும்" என்று கூறிய பெருமானோடு நாமும் ஒன்றித்துக் கொள்வோமா?

கடந்த காலத்தில் ஏற்பட்ட நமது தோல்விகளை ஏற்றுக்கொண்டு, அறிக்கையிட்டு, நம்மீது கிறிஸ்துவுக்கிருக்கும் உரிமைகளைத் துணிவுடன் ஒப்புக் கொண்டு, இதுமுதல் மகிமையின் கர்த்தருக்கு மெய்ச்சீடராய் இருக்க நாடுவோமாக.

*"எனது ஆண்டவா, உம கதவணடை என்னை வழிநடத்தும்*
*எனது செவியில் மீண்டும் ஒரு முறை துளையிடும், நாதா,*
*சுந்தேன் எந்தனை,*
*உமது கட்டுகளே எனது சுதந்திரம், நானறிவேன், நான்*
*உம்முடன் தங்கி, உழைத்து, சகித்து, பணிந்திருப்பேனாக"*

எச். ஜி. சி. மூல்

# எல்லாவற்றையும் விட்டு விடல்

"அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:33).

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒருவன் சீஷனாயிருக்க வேண்டுமானால் அவன் தனக்குண்டானதையெல்லாம் வெறுத்து விடவேண்டும். இரட்சாபெருமானின் வார்த்தைகளுக்குச் சந்தேகத்திற்கிடமில்லாத தெளிவான கருத்து இதுதான். இத்தகைய 'கடுமையான' கோரிக்கையை நாம் எவ்வளவுதான் எதிர்த்தாலும், "நிறைவேற்ற முடியாத மற்றும் ஞானமற்ற-அர்த்தமற்ற கொள்கை" என்று கூறி ஏற்க மறுத்தாலும், வெறுத்தாலும் இதுதான் கர்த்தருடைய வார்த்தை என்பதும், அவர் நினைத்ததையே கூறினார் என்பதும், அதற்கு இரட்டை அர்த்தம் இல்லை என்பதும் உண்மையிலும் உண்மை.

சற்றும் வளைந்து கொடுக்காத இவ்வுண்மைகளை நாம் துவக்கத்திலேயே சந்தித்துவிடவேண்டும்.

1. ஒரு குறிப்பிட்ட, தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்தவ ஊழியர்களைப் பார்த்து இயேசு கிறிஸ்து இவ்விதம் கூறவில்லை. "உங்களில் எவனாகிலும் (யாராயிருந்தாலும் சரி)" என்று அர்த்தப்படும்படி கூறினார்.
2. நாம் எல்லாவற்றையும் விட்டுவிட மனதுள்ளவர்களாயிருக்க வேண்டும் அல்லது ஆர்வம் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று சொல்லாமல், "உங்களில் எவனாகிலும்... வெறுத்து விடாவிட்டால்" என்று ஆணித்தரமாகச் சொன்னார்.





3. நமது ஆஸ்தியில் ஒரு பகுதியை மட்டும் விட்டு விட்டால் போதும் என்று சொல்லாமல் "தனக்குண்டானவைகளையெல்லாம்" என்று சொன்னார்.
4. தனது செல்வத்தை இழக்காமல், பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கிறவன் நீர்த்த அல்லது அரைகுறையான சீஷத்துவத்தை மேற்கொள்ளக் கூடும் என்று அருள் நாதர் உரைக்காமல், "அவன் எனக்கு சீஷனாயிருக்கமாட்டான்" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இவ்வளவு தீவிரமான நிபந்தனை திருமறையிலே இது ஒன்றுதான் இருக்கிறது என்று நாம் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனென்றால், "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை." (மத்தேயு 6:19-20) என்று அருள் நாதர் கூறுவதும் அல்லது கட்டளையிடுவதும் - மிகக் கண்டிப்பான போதனையல்லவா?

"விபசாரத்தையும் கொலையையும் எவ்வளவு தெளிவாக நமதாண்டவர் தடைசெய்திருக்கிறாரோ, அப்படியே செல்வத்தைச் சேர்த்து வைப்பதையும் அவர் அனுமதிக்கவில்லை..." என்று ஜான் வெஸ்லி அறிவிக்கிறார்.

"உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள்..." என்று லூக்கா 12:33ல் இயேசு சொல்லவில்லையா?

நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வகை தேடி வந்த செல்வச் செருக்குள்ள இளந்தலைவனுக்குக் கர்த்தர் கூறின அறிவுரை என்ன? லூக்கா 18:22ல் "உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது

பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப்பின்பற்றி வா என்றார்". இதனை இப்படியே எடுத்துக் கொள்ள மனமில்லாவிடில்,அவர் கூறியதின் கருத்துதான் என்ன?

''காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்.'' (அப்போஸ்தலர் 2:45) என்பது ஆதித்திருச்சபை விசுவாசிகளைப் பற்றின உண்மையாயிருந்ததல்லவா?

இவ்வாறு கடந்த காலங்களிலெல்லாம் தேவனுடைய பரிசுத்தவான்கள் தங்கள் வாழ்க்கைகயில் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு அருட்பணியில் இருந்திருக்கிறார்கள் என்பது உண்மையல்லவா?

"பொருளீட்டுவதும், பூமியில் செல்வத்தைச் சேர்த்து வைப்பதும் அஞ்ஞானம் அல்லது மதியீனம் என்று அந்தோணி நாரிஸ்குருவ்ஸ் மற்றும் அவரது துணைவியார் இருவரும் திட்டவட்டமாக உணர்ந்தனர். பின்னர் தங்கள் மிகுதியான வருமானம் முழுவதையும்.... கிறிஸ்துவின் சேவைக்கென்று அர்ப்பணித்தனர்.'' அத்துடன் நின்றுவிடாது தங்களையும் முழுநேர ஊழியத்திற்கு அர்ப்பணித்து பாக்தாத்திற்குச் சென்று முன்னோடி மிஷனரிகளாயினர் மேலும் ''கிறிஸ்தவ பக்திப்பற்று" என்ற தமது குறுநூலில் இப்பொருளின் மீது தாமறிந்த உண்மைகளையும் உறுதியான முடிவுகளையும் தொகையாக பிரசுரித்துள்ளனர்.

நித்திய ஜீவனைப் பெறும் அபிலாஷையில் ஆண்டவரை அணுகின செல்வந்தனான இளந்தலைவன் இழந்துபோன பொன்னான வாய்ப்பைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சி.டி. ஸ்டட் என்ற இங்கிலாந்து நாட்டுப் பிரபு, தமது பெற்றோரிடமிருந்து வாரிசுரிமையாகப் பெற்ற செல்வம் அனைத்தையும் ஆண்டவரின் தொண்டுக்கே அர்ப்பணித்து விட்டார். மிகவும் எளிதான முறையில் படாடோபமின்றி,





தேவனுடைய வார்த்தையில் காணப்படும் மிகத்தெளிவான நிபந்தனைகளை நிறைவேற்றினார். அவருடைய பூரண கீழ்ப்படிதலினால் அவர் ஆயிரமாயிரமான பவுன்களை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுத்துவிட்டார். பின்னர் எஞ்சியிருந்த 3400 பவுனை தமது இல்லத்தரசிக்கென்று ஒதுக்கி வைத்தார் ஆனால் அவரது துணைவியாரோ: 'சார்லி, அந்த செல்வந்தனான வாலிபனுக்குக் கர்த்தர் என்ன சொன்னார்?' என்று கேட்டார். அதற்கு, "எல்லாவற்றையும் விற்றுவிடு" என்று திருமதி ஸ்டட் பதில் கூறினார். 'நல்லது; அப்படியானால் நாம் நமது திருமண வாழ்க்கையின் துவக்கத்திலேயே மனத்தெளிவுடன் செயல்படுவோம்'. என்று திருமதி ஸ்டட் கூறினார். உடனே அந்தப் பணமும் மிஷனரி ஸ்தாபனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது அதன் பின்னர் தங்களையும் கர்த்தரின் ஊழியத்துக்கே ஒப்புக் கொடுத்துவிட்டனர்.

அதேவிதமான ஆவியும் சிந்தையும்தான் ஜிம் எலியட்டையும் ஆட்கொண்டது. அவர் தமது நாட்குறிப்பேட்டில் இவ்வாறு எழுதியிருந்தார்: "பிதாவே, நிலையற்ற எல்லாவற்றின் மேலும் உள்ள என் பற்று அற்றுப்போகட்டும். எனது ஜீவன்,எனது கீர்த்தி, எனது உடமைகள், இவையனைத்தையும் உடும்புபிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறஎனது கையின் வலிமைதளரட்டும். கொஞ்சுவதற்கு வாஞ்சிக்கும் ஆசையையும், பிதாவே நான் இழந்து போகட்டும் ஏனையவற்றை விட்டு விட்டாலும் "தீமையற்றது" என்று நான் மதிக்கும் சிலவற்றின் மீதுள்ள எனது பிடியும் அற்று போகட்டும். எனதாண்டவரின் கரங்கள் ஆணிகள் கடாவப்படத்திறந்தது போல, எனது கரங்களையும் கல்வாரி ஆணியை ஏற்றுக் கொள்ளத் திறந்தருளும். இப்படி எல்லாவற்றின் மீதுள்ள எனது பிடி யாவும் தளர்ந்து விட்டால், என்னைக் கட்டியிருக்கிற அடிமைத்தளைகளினின்று நான் விடுதலையாகிவிடுவேனே. கிறிஸ்து தமது பிதாவுக்குச் சமமாயிருப்பதையோ, பரலோகமகிமையையோ, கொள்ளை

யடித்தப் பொருளை விடாமல் பிடித்துக் கொள்வதைப் போல நடந்து கொள்ளாமல், நமது நிமித்தம் எல்லாவற்றையும் துறந்து, பூலோகம் வரவில்லையா? நானும் எனது அற்பப் பற்றுகளை விட்டுவிடுவதற்கு உதவி செய்யும் தகப்பனே."

கர்த்தரின் வார்த்தைகளை எழுத்தளவில் அப்படியே எடுத்துக் கொண்டு செயல்படுத்துவதற்கு நமது நாத்தீக இருதயங்கள், இவை சாத்தியமாகாது என்று கூறுகின்றன. நாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டால், நாம் பட்டினி கிடப்பது நிச்சயம். எப்படியிருப்பினும், நமக்கும் நமது அன்புக்குரியவர்களுக்கும் எதிர்காலத் தேவைகளுக்காக நாம்தானே சேர்த்து வைக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் எல்லாவற்றையும் இழந்து விட்டால், கர்த்தருடைய பணிகளுக்குத் தேவையான பணத்தை யார் கொடுப்பார்கள்? செல்வந்தரான கிறிஸ்தவர்கள் ஒரு சிலராவது இல்லையெனில், மேல் மட்டத்திலிருப்போருக்கு நற்செய்தி அறிவிப்பது எப்படி? இவ்வாறு கேள்விக் குறிகளும், தர்க்கங்களும் முண்டியடித்துக் கொண்டு வருவதினால் நாம் கர்த்தராகிய இயேசு கூறினதின் பொருள் வேறு என்று நிரூபித்துக்காட்ட முற்படுகின்றோம்.

உண்மை என்னவென்றால், கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதுதான் புத்தியுள்ள, நியாயமான வாழ்க்கையாகும்; அதுவே மகிழ்ச்சி நிரம்பினதுமாகும். வேத வாக்கியங்களின் சாட்சியும் திட்டவட்டமாக அறிவிப்பதாவது, கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும் தரித்திரரானதில்லை, ராஜ்ய மேன்மைக்காய் நஷ்டப்பட்டோர் எவரும் கஷ்டப்பட்டதில்லை. தேவனுக்குக் கீழ்ப்படிகிறவனின் முழுப் பொறுப்பையும் அவரே ஏற்றுக் கொள்கிறார்.

எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் நாதியற்ற நாடோடியல்ல; பிறர் கையை எதிர் பார்க்கும் பிச்சைக்காரனுமல்ல;

1. கிறிஸ்தவன் ஒரு கடின உழைப்பாளி. அவன் தனக்காகவும்,





தன்னுடையவர்களுக்காகவும் உழைத்துச் சம்பாதிக்கிறவன்.

2. அவன் சிக்கனமாய் வாழ்கிறவன். அவன் எளிதான வாழ்க்கையை மேற்கொண்டுதனதுஇன்றியமையாத தேவைகளுக்குப் போக மீதமான எல்லாவற்றையும் கர்த்தருடைய வேலைக்கென்றே கொடுத்து விடுகிறான்.

3. மூன்றாவதாக, அவன் தொலை நோக்குப் பார்வையும் விவேகமும் உள்ளவன். பூமியிலே பொக்கிஷங்களை மதியீனமாய் சேர்க்கிறதை விட்டுவிட்டு, பரலோகத்திலே தன் பொக்கிஷங்களை ஞானமாய்ச் சேர்க்கிறான்.

4. அவன் எதிர் காலத்திற்காகத் தேவனையே நம்பியிருக்கிறான். தன் வாலிபத்தையும், அறிவும் ஆற்றலும் நிறைந்த ஆண்டுகளையும் முதிர்வயதின் பாதுகாப்பிற்காகச் செல்வம் சேர்ப்பதையே குறிக் கோளாகக் கொண்டிராமல் - வாழ்க்கையின் மேன்மையான ஆண்டுகளை விரயமாக்கி விடாமல், அவற்றை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சேவைக்காகச் செலவிட்டு, வருங்காலத் தேவைகளுக்குக் கர்த்தரையே சார்ந்திருக்கிறான். ஆண்டவரின் பிரதான கட்டளை களையும், வாக்குத்தத்தமும் அடங்கியுள்ள மத்தேயு 6:33-ன் படி தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுகிறதினால், அவனது சரீரத்தேவைகள் பரத்திலிருந்து குறைவின்றிக் கொடுக்கப்படும் என்று நிச்சயமாய் நம்பியிருக்கிறான்.

வருங்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் மற்றும் பற்றாக்குறைகளைச் சமாளிக்கும் நோக்கத்தோடு பணத்தைத் தேடி பதுக்கி வைப்பது நியாயமற்ற, புத்தியற்ற செயல் என்பதற்குப் பல தகுந்த காரணங்களைக் கூறுவான்.

1. ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக நிகழ் காலத்தில் பயன்படுத்தக் கூடிய பணத்தை ஒரு கிறிஸ்தவன் எப்படி நல்மனசாட்சியுடன் பதுக்கி வைக்க முயலுவான்? "ஒருவன்

இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்க அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்புநிலை கொள்ளுகிறதெப்படி?" (1 யோவான் 3:17)

மேலும், "உன்னில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிலும் அன்பு கூருவாயாக", (லேவி 19:18) என்ற முக்கியமான கட்டளையைக் கவனித்துப் பாருங்கள். நமது தேவைகளுக்குப் போக, எஞ்சினது ஏராளமாக நம்மிடமிருக்கையில், பசியும் பட்டினியுமாக இருக்கும் அயலானுக்கு ஒன்றும் கொடுத்து உதவாவிட்டால், நம்மில் அன்பு கூருகிறது போல அவனிலும் அன்புகூருகிறோம் என்று உண்மையுடன் எப்படிக் கூற முடியும்? உங்களுக்கு இன்னும் ஒரு சவால்! சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமான சந்தோஷம், சமாதானத்தைப் பெற்றனுபவிக்கும் நீங்கள், இந்த அறிவை, அநுபவத்தை, மாபெரும் ஈவைக் கொடுத்து விட்டு, அதற்குப் பதிலாக... நூறு உலகங்களைக் கொடுத்தால் பெற்றுக் கொள்வீர்களா? இதற்கு எவ்வளவேனும் இணங்க மாட்டீர்களென்றால், இவ்வளவு பெரிதான இரட்சிப்பையும் பரிசுத்தமாக்கும் அறிவையும், பரலோக ஆறுதலையும், நித்திய மகிமையை அடைவதற்கான அறிவையும், அதற்கான வழிவகைகளையும் நாம் தடைசெய்யாதிருப்போமாக".

அந்தோனி நாரீஸ் குருவ்ஸ்.

2. வெகு சீக்கிரத்தில், நினையாத நேரத்தில், கிறிஸ்து வந்து விடுவார் என்பதை நாம் யதார்த்தமாக நம்புவோமென்றால், நமது பணத்தை உடனடியாக நற்பயனுக்காகச் செலவிடுவோம். இல்லாவிடில் நித்திய நன்மைக்காகப் பயன்பட்டிருக்கக் கூடிய பணம் பிசாசின் (அந்திக் கிறிஸ்துவின்) கையில் விழ ஏதுவாகும்.

3. ஊழியத்திற்கு தேவையான பணம் நம்மிடம் இருந்தும் நாம் அதற்காக அதனைப் பயன்படுத்த மனதில்லாதிருந்து





கொண்டு, "ஆண்டவரே உமது சேவைக்குத் தேவையான நிதிவசதியை எங்களுக்கருளும்" என்று ஜெபிப்பது கேலிக் கூத்தல்லவா? மனச்சாட்சியை மழுங்கவைத்து விட்டு, மாய்மாலமான விண்ணப்பங்களை ஏறெடுக்காதிருக்க பூரண அர்ப்பணிப்பு நமக்கு உதவுகிறது.

4. இதுபோன்ற சீஷத்துவத்தின் சில உண்மைகளுக்கு நாம் கீழ்ப்படிவதற்கு மறுத்துக் கொண்டிருக்கும்போது, மற்றவர்களுக்கு நாம் எப்படி தேவனின் முழு ஆலோசனையையும் கற்பிக்க முடியும்? நாம் பேசுவதற்கு அருகதையற்றவர்களாய் வாய் கட்டப்பட்டிருப்போம்.

5. இவ்வுலகத்திற்குரிய திறமைசாலிகள் எதிர்காலத் தேவைகளுக்காக அபரிமிதமாகச் சேர்த்து வைக்கின்றனர். இது விசுவாசித்து நடப்பதல்ல, தரிசித்து நடப்பதாகும். தேவனையே நம்பி வாழ்வதற்காக அழைக்கப்பட்டவன் தான் கிறிஸ்தவன். அவனும் மற்றவர்களைப் போல பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவனாயிருந்தால், அவன் எவ்விதத்தில் உலகத்தாருக்கும் அவர்கள் வழிபாடுகளுக்கும் வேறுபட்டவனாவான்?

நாம் நமது குடும்பங்களின் வருங்காலத் தேவைகளுக்காகப் போதுமான அளவு சேகரித்து வைக்காவிட்டால் நாம் அஞ்ஞானிகளைவிட மோசமானவர்கள் என்ற விவாதங்களை அடிக்கடி நாம் கேட்கிறோம். இதற்கு அநுகூலமாகக் கீழ்க்கண்ட இரண்டு வசனங்களை மேற்கோள் காட்டுகின்றனர்.

"...பெற்றோருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றோர்களே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும்". (2 கொரிந்தியர் 12:14).

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்"

(1தீமோத்தேயு 5:8). இவ்வசனங்களைக் கருத்தூன்றிப் படித்தால், இவை எதிர்காலத்தில் ஏற்படும் எதிர்பாராத நெருக்கடிகளைப் பற்றியல்ல, இப்போதையத் தேவையைப் பற்றியே குறிப்பிடுகின்றன என்பது புலனாகும்.

மேலும், முதலாவது குறிப்பிடப்பட்ட வசனத்தில், பவுல் எதிர் மாறாகப்பொருள்படும்படி நயமாகப் பேசுகிறார். கொரிந்து சபையை ஸ்தாபிப்பதற்குப் பவுல் காரணகருவியாக இருந்தபடியினால், தம்மை தகப்பன் ஸ்தானத்திலும், சபையாரைத் தமது பிள்ளைகளாகவும் கருதிப் பேசுகிறார். பொருளாதார ரீதியில் சபைகள் தான் தங்களது தேவ ஊழியரைப் போஷிக்கவும் தாங்கவும் கடன் பட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் பவுல் அவர்களுக்குப் பாரமாயிருக்கவில்லை. எனவேதான் அவர்களைக் குற்றப்படுத்தாதபடி அவர்களைத் தேற்றுவதற்காக இவ்வாறு பெற்றோருக்கு பிள்ளைகள் அல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள்தான் வேண்டியவற்றைக் கொடுக்கவேண்டும் என்கிறார். இது, பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் வருங்காலத்துக்காகச் சேர்த்து வைக்க வேண்டும் என்று ஆலோசனை கொடுப்பதற்காகவே அல்ல. இப்பகுதி முழுவதும் பவுலின் அப்போதைய தேவைகளைக் குறித்துப் பேசுகிறதே அல்லாமல், வருங்காலத்தில் அவருக்கு ஏற்படக்கூடிய தேவைகளைப் பற்றிப் பேசவில்லை.

இரண்டாவதாகக் குறிக்கப்பட்ட வசனத்தில் ஏழை விதவைகளின் பராமரிப்பைப் பற்றி அப்போஸ்தலன் விளக்குகிறார். அவர்களைக் கவனிக்க வேண்டியது அவர்களது உறவினர்களின் பொறுப்பாகும். பொறுப்பேற்க உறவினர்கள் இல்லாவிட்டாலோ அல்லது தவறி விட்டாலோ, உள்ளூர் சபைதான் கிறிஸ்தவக் கைம்பெண்களைக் கவனிக்க வேண்டும். இச்சந்தர்ப்பத்திலும் பிரச்சனை நிகழ்காலத்தைப் பற்றினதேயல்லாமல், எதிர்காலத்துக்கு வேண்டியவற்றைப் பற்றினதல்ல.

தேவனின் திருச்சித்தம் என்னவென்றால், கிறிஸ்துவின்





சரீரமாகிய சபையின் உறுப்பினர்கள் தேவையிலிருக்கும் இந்த உடன் விசுவாசிகளின் உடனடித் தேவைகளைக் கவனித்தல் வேண்டும்.

"இது பரஸ்பர பகிர்ந்து கொள்ளும் முறையாகும். தற்சமயம் உங்களுடைய பரிபூரணம், அவர்களின் தேவைகளைச் சந்திக்கப் பயன்படுகிறது. பின்னொரு காலத்தில் அவர்களின் முன்னேற்றம் உங்கள் தேவைகளைச் சந்திக்க உதவுமல்லவா? இவ்வாறு நாம் ஒருவருக்கொருவர் பரஸ்பரமாக உதவி செய்கிறோம். வேதமும் அப்படியே சொல்கிறது: ''எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை; கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்கு குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிற பிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின்படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக". (2 கொரிந்தியர் 8 : 14-15)

வருங்காலத் தேவைகளுக்காகக் கட்டாயமாய்ச் சேர்த்து வைக்க வேண்டுமென்று எண்ணுகிற கிறிஸ்தவன், எவ்வளவு சேர்த்து வைக்க வேண்டுமென்ற கடினமான பிரச்சனையைச் சந்திக்கிறான். இவ்வாறு எவ்வளவு தேவைப்படும் என்று தீர்மானிக்க முடியாத செல்வத்தைத் தேடுவதில் வாழ்நாளை வீணாக்கிப் போடுவதுடன், தன்னிடமுள்ள சிறப்பானதைக் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குக் கொடுக்கும் மாபெரும் சிலாக்கியத்தையும் இழந்து பரிதபிக்கத்தக்கவனாவான். அவன் தன் வாழ்க்கையின் முடிவில் உணரப்போகும் உண்மை என்னவென்றால், தான் முழு மனதோடு மீட்பருக்கென்று வாழ்ந்திருந்தால் எப்படியும் தன் தேவைகள் யாவும் நிறைவாக்கப்பட்டிருக்கும் என்பதுதான். அத்துடன் கர்த்தருக்குக் கீழ்ப்படியாமைக்கு ஆகும் செலவு கீழ்ப்படிகிறதற்கு ஆகும் செலவை விட மிக அதிகமாகும் என்றும் உணருகிறான்.

கிறிஸ்தவர்கள் யாவரும் கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகளை எழுத்தளவில் உண்மையாக எடுத்துக் கொண்டால், கர்த்தரின் அருட்பணிக்கு ஒருபோதும் நிதிபற்றாக்குறை இருக்காது. கிறிஸ்துவின் நற்செய்தி வளமுடனும் வல்லமையுடனும் புறப்பட்டுச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. அச்சூழ்நிலையில், குறிப்பிட்ட ஒரு சீஷனுக்கு பற்றாக்குறை ஏற்படும்பொழுது, அவனுக்கு உதவி செய்கிறதைத் தங்கள் பாக்கியமும், சிலாக்கியமும் என்று மகிழ்ச்சியுடன் மற்ற சிஷர்கள் வரவேற்பார்கள்.

செல்வமும் செல்வாக்குமுள்ளவர்களை நற்செய்தியுடன் அணுகுவதற்குக் கிறிஸ்தவர்களும் அத்தகைய அந்தஸ்து பெற்றிருக்கவேண்டும் என்பதுஅறிவீனமாகும். ரோமப் பேரரசனாகிய இராயனின் வீட்டாரைப் பவுல் அப்போஸ்தலன் ஒரு கைதியாகச் சிறையிலிருந்து கொண்டே ஆண்டவருக்கு என்று வசப்படுத்திவிட்டார் என்று வாசிக்கிறோம். (பிலிப்பியர் 4:22) நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், மேல் விவரங்களை அவருடைய பொறுப்பிலேயே விட்டுவிடலாம். அவர் நேர்த்தியாகச் செய்து முடிப்பார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரி இந்தக் காரியத்தில் முடிவானது. வேலைக்காரன் தன் எஜமானைவிடப் பெரியவன் அல்ல "தனது எஜமான் தரித்திரராகவும், சிறுமைப் பட்டவராகவும், நிந்திக்கப்பட்டவராகவும் இப்புவியில் வாழ்ந்து இருந்ததை மறந்துவிட்டு, அவருடைய வேலைக்காரன் செல்வந்தனாகவும், செல்வாக்கும் மதிப்பும் பெற்றவனாகவும் வாழ முயல்வது ஏற்புடையதல்ல", என்று ஜார்ஜ் முல்லர் விமர்சிக்கிறார்.

கிறிஸ்து அநுபவித்தப் பாடுகளில் வறுமையும் அடங்கியிருந்தது. (2கொரிந்தியர் 8:9). என்பது வெள்ளிடை மலை. ஏழ்மை என்றால் கஞ்சியும், கந்தையும், அழுக்கடைந்த மேனியுடனும் இருக்கிற அவல நிலைமை என்று அர்த்தமல்ல; ஆனால் நிச்சயமாக ஆடம்பர வாழ்க்கையும், சேமிப்புகளும்





இருக்கமுடியாத வாழ்க்கையாகும். நமது கர்த்தரும் அவருடைய அப்போஸ்தலர்களும் மெய்யாகவே ஏழைகளாக இருந்திராவிட்டால், அவர்கள் செய்து முடித்துள்ள இவ்வளவு பெரிதான பணிகளையும் சாதனைகளையும் நிறைவேற்றியிருக்க முடியாது என்று ஆண்ட்ரு முர்ரே சுட்டிக் காட்டினார். ''கீழே விழுந்தவனைத் தூக்கி நிறுத்த ஆசிக்கிறவன், நல்ல சமாரியனைப் போல முதலில் கீழேயிறங்க வேண்டும். மனுக்குலத்தின் பெரும்பகுதியும் அன்றுமுதல் இன்றுவரை வறுமையில் தான் வாடிக்கொண்டிருக்கிறது."

குரூவ்ஸ்

தினசரிக் குடும்ப வாழ்க்கைக்கு அநேக தட்டுமுட்டு சாமான்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன அல்லவா என்று மக்கள் பரிந்துரைக்கின்றனர். ஆம், அது உண்மைதான்.

இக்காலத்தில் தொழிலுக்கும், வாணிபத்துக்கும் ஏராளமான மூலதனம் தேவைப்படுவதால், கிறிஸ்தவத் தொழிலதிபர்கள் அதற்கு விதிவிலக்கல்ல, எனவே அவர்களுக்கும் அதிகப் பணம் தேவைப்படுகிறது என்று மக்கள் வாதிடுகின்றனர். அதுவும்உண்மைதான்.

மோட்டார் வாகனங்கள்,கம்ப்யூட்டர்கள், டெலிபோன், ஃபேக்ஸ் போன்ற விலையுயர்ந்த நவீன சாதனங்கள் பொதுவாக மக்கள் வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல், தேவநாம மகிமைக்கென்று இறைப்பணிக்கும் தேவைப்படுகின்றன என்று குறிப்பிடுகிறார்கள், அதுவும் உண்மைதான். ஆனால் இந்த நியாயமான அத்தியாவசிய தேவைகளுக்காகும் செலவுகளைத் தவிர, ஒரு கிறிஸ்தவன் சுவிசேஷ பிரபல்யத்தினிமித்தம் சிக்கனமாகவும், தியாகத்தோடும் வாழ வேண்டும். 'கடினமாக வேலை செய்து அதிகமாய்ச் சம்பாதி, ஆனால் மிகக் குறைவாக நுகர்ந்து, மீதமுள்ளதை - எல்லாவற்றையுமே கிறிஸ்துவுக்குக் கொடு.'

குரூவ்ஸ்.

கடவுளுக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டிய ஒரு முக்கியமான பொறுப்பாவது, எல்லாவற்றையும் விட்டுவிடுதல்

என்றால் என்ன என்பதைத் தீர்மானிப்பது ஆகும். ஒருவிசுவாசி இன்னொருவரைக் கட்டுப்படுத்தவோ, அவருக்கு விதிமுறைகளை வகுக்கவோ முடியாது. ஒவ்வொருவரும் கர்த்தருக்கு முன்பாகத் தாம் உணர்த்தப்படுகிறபடியே செயல்பட வேண்டும். இது முற்றிலும் தனி நபரையே சார்ந்தது.

ஒருவர் இதுகாரும் தாம் அறிந்திராத அல்லது உள்ளுணர்வு பெற்றிராத விதத்தில் தன்னை ஒப்புக் கொடுக்கக் கர்த்தரால் தூண்டப்பட்டால், அதற்காக அவர் பெருமை பாராட்ட முடியாது. கல்வாரியின் வெளிச்சத்தில் பார்க்கும் பொழுது, நாம் செய்யக் கூடிய எந்த ஒரு தியாகமும் தியாகமே அல்ல என்று கண்டு கொள்வோம். மேலும் நாம் எவ்விதத்திலும் நம்மிடமே தக்க வைத்துக் கொள்ள முடியாததையும், அதன் பேரில் உள்ள பற்றினை இழந்ததையும் தான் கொடுக்கிறோம் என்பதை மறக்க வேண்டாம்.

"தான் ஒரு போதும் இழக்க முடியாத ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக, தான் பிடித்துவைத்துக் கொள்ளக் கூடாததை விட்டுவிடுகிறவன் முட்டாளல்ல" - ஜிம் எலியட்.



# சீஷத்துவத்துக்கு இடையூறுகள்

முழுமனதுடன் கிறிஸ்துவைப் பின்பற்றத் தொடங்கும் ஒருவன் தமக்கு முன் பல பக்கவழிகள் இருப்பதையும் காண்கிறான். அதுமாத்திரமல்ல, பின்வாங்கி, பழைய நிலைமைக்கே போய்விடுவதற்கான பல் வாய்ப்புகளும் அவனுக்குக் கொடுக்கப்படுகின்றன. சிலுவையின் தீவிரத்தைக் குறைத்து, சிலுவைப் பாதையை இலகுவாக்க முன்வருகின்ற பல குரல்கள் அவனுக்குக் கேட்கின்றன. தன்னைத்தான் ஒறுத்து வெறுத்து, பற்றற்றுச் செல்லும் வழியிலிருந்து அவனை விடுவிப்பதற்கு பல்லாயிரம் தூதர்களும் தயாராக இருக்கின்றனர்.

இயேசுகிறிஸ்துவைச் சந்தித்த மூன்று மனிதர், தாம் அவருக்குச் சீஷர்களாகும் ஆவலைத் தெரிவித்தபோதிலும், வேறு சக்திவாய்ந்த குரல்கள் அவர்களைத் திசைதிருப்பின எடுத்துக்காட்டை லூக்கா 9:57-62ல் தெளிவாகக் காண்கிறோம்.

"அவர்கள் வழியிலே போகையில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்றான். அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார். வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன்: ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ போய், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கி என்றார். பின்பு வேறொருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, உம்மைப்

பின்பற்றுவேன்,ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிலிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக் கொண்டு வரும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு இயேசு கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார்".

பெயர் சொல்லப்படாத இந்தமூன்று நபர்களும் கிறிஸ்துவை முகமுகமாகச் சந்தித்து, அவரிடம் தங்கள் உள்ளார்வத்தை வெளிப்படுத்தினர். ஆனால் தங்களுக்கும் (முழு அர்ப்பணிப்புக்கும்) அவருக்கும் இடையில் வேறொரு தடை ஏற்படுவதற்கு இடம் கொடுத்து விட்டனர்.

## திருவாளர் மிகத் துரிதமானவர்

முதல் மனிதனை 'மிகத் துரிதமானவன்' என்று நாம் அழைத்தால் மிகையாகாது. ஏனென்றால் கர்த்தர் எங்கே சென்றாலும், அவர் பின்னே செல்வதற்கு மிக உற்சாகமாக முன்வந்தான். 'நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றி வருவேன்' என்றான். அவனுக்கு எந்தக் கிரயமும் பெரிதாகத் தோன்றவில்லை. எந்தச் சிலுவையும் பளுவாயிராது என்று எண்ணினான். எந்தப் பாதையும் கரடுமுரடாயிராது என்று நம்பினான்.

'மிகத் துரிதமானவனுக்கு' இரட்சகரின் மறுமொழி, அவன் திறந்த உள்ளத்துடனும் உவகையுடனும் பேசினதற்கு ஏற்ப காணப்படவில்லை. இயேசு கொடுத்த மறுமொழியாவது: "நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, ஆனால் மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை". கர்த்தர் தந்த பதில் உண்மையில் மிகப் பொருத்தமானதே. "நான் எங்கே சென்றாலும் என் பின்னே வருவதாகக் கூறுகின்றாயே; சுகபோகமான உலகப்பொருட்கள் இல்லாமல் நீ வாழ முடியுமா? என்னைவிட நரிகளுக்குக்கூட அதிகமான வசதிகள் உண்டு; அப்படியே பறவைகளுக்கும் பாதுகாப்பான சொந்தக் கூடுகள் உண்டு





என்று நீ அறிவாயா? என் கரங்கள் சிருஷ்டித்த இப்பிரபஞ்சத்தில் நான் வீடுவாசலற்று நாடோடியாத் திரிகிறவன். நீ என்னைப் பின்பற்றி வரவேண்டுமானால் உனக்குப் பாதுகாப்பளிக்கும் வீட்டை நீ விடமுடியுமா? உனக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய வசதிகளையெல்லாம் தியாகம் செய்துவிட்டு எனக்காக முழுமனதுடன் பணிபுரிய முடியுமா?" இந்த நிபந்தனைக்கு அவன் முன்வரவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது ஏனெனில் அவனைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் நாம் கேள்விப்படுவதில்லை கிறிஸ்துவுக்குத் தன்னை சமர்ப்பிப்பதைவிட உலகவசதிகளை அவன் அதிககமாக நாடினான்.

## திருவாளர் மிகத் தாமதமானவர்

இரண்டாவது மனிதனை "மிகத் தாமதமானவன்" என்று அழைக்கலாம். முதல்மனிதனைப் போல இவன் வலிய ஆண்டவரிடம் வரவில்லை. தம்மைப் பின்பற்றும்படி கர்த்தர்தான் அவனை அழைத்தார். 'முடியாது' என்று ஒரேயடியாக அவன் மறுத்துவிடவில்லை. கர்த்தர்மீது கொஞ்சமும் அக்கறையில்லாதவன் என்றும் கூறிவிட முடியாது. ஆனால் அவரைப் பின்பற்றுவதற்கு முன்பு ஏதோ ஒன்றைச் செய்ய விரும்பினான். இதுதான் அவனுடைய பெரிய பாவம். கிறிஸ்துவின் உரிமையைக் காட்டிலும் தன் கோரிக்கைகளை அவருக்கு முன் வைத்தான். அவனுடைய பதிலைக் கவனியுங்கள், "ஆண்டவரே முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்."

ஒரு மகன் தன் பெற்றோரைக் கனம் பண்ணுவது முற்றிலும் நியாயமே. அதிலும் ஒருவருடைய தகப்பன் மரித்துவிட்டால், அவரை நல்லடக்கம் செய்வது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு உகந்ததுதான். ஆனால், வாழ்க்கையில் நியாயமான மரியாதைகள், உரிமைகள் மற்றும் சம்பிரதாயங்களும் கர்த்தராகிய இயேசுவின் உரிமைகளைப் பின்னுக்குத்

தள்ளிவிட்டு அவை முதலிடம் பெற முயன்றால், அவை நிச்சயமாகவே பாவமுள்ளவையாகின்றன. "ஆண்டவரே,... முன்பு நான்" என்று அவன் கூறியதிலிருந்து அவனுடைய சுயநலம் துலாம்பரமாக வெளிப்படுகிறது. அவன் பின்னால் கூறின வார்த்தைகள் அவன் உள்ளத்தில் மறைந்துகிடந்த சுயநலத்தை மறைக்கும் மூடுதிரையேயன்றி வேறல்ல.

"கர்த்தாவே... முன்பு நான்" என்ற அவனுடைய வார்த்தைகள் நீதி நெறிக்கு முரணானதும் தவறானதுமாகும். கிறிஸ்து கர்த்தர் அல்லது ஆண்டவர் என்றால் அவர்தான் முதன்மையான இடத்தைப் பெறவேண்டும். முன்னிலைச் சொல்லாகிய 'நான்' என்ற சுயம் சிங்காசனத்தில் அமர்ந்துவிட்டால், கிறிஸ்து அங்கு ஆளுகை செய்யாதவர் மட்டுமல்ல, அவருக்கே இடமில்லாமற்போகிறது.

"மிகத் தாமதமானவன்" நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமை இருந்தது; ஆனால் அவன் அதற்கு முதலிடம் கொடுத்துவிட்டான். எனவே, "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி" என்று இயேசு உரைத்தது மிகப் பொருத்தமானதே. அவருடைய வார்த்தைகளின் பொழிப்புரையாவது: "விசுவாசிகள் செய்யக்கூடிய சில பணிகளை ஆவிக்குரிய நிலையில் செத்தவர்கள் என்றுகருதப்படும் அவிசுவாசிகளும் திறமையுடன் செய்துமுடிக்கலாம். ஆனால், வாழ்க்கையில் உள்ள ஒருசில பணிகளை ஒரு விசுவாசி மட்டுமே செய்யக்கூடும். ஆதலால் குணப்படாத ஒருவன் சிறப்பாகச் செய்யக்கூடிய ஒன்றைச் செய்வதில், விசுவாசியாகிய நீ ஈடுபட்டு உன் வாழ்க்கையை விரயமாக்கிவிடாதபடிக்குக் கவனமாயிரு. ஆவிக்குரிய பிரகாரம் மரித்தவர்கள் சரீரப்பிரகாரமாக மரித்தவர்களை அடக்கப்பண்ணட்டும். நீயோ எனக்கு இன்றியமையாதவனாயிரு. என்னுடைய காரியததை உலகத்தில் முன்னேற்றமடையச் செய்வதே உன் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகட்டும்."





இந்தக் கிரயம் "மிகத் தாமதமானவனின்" கணிப்பில் செலுத்துவதற்கு மிகப் பெரியதாகக் காணப்பட்டது. அவனும் நமது காட்சியினின்று என்றென்றும் காணப்படாமலே போய்விட்டான்.

முதல் மனிதனின் எடுத்துக்காட்டில் உலக வசதிகள் மீதுள்ள நாட்டம் சீஷத்துவத்துக்கு ஒரு தடையென்றால், இரண்டாவது நபரின் எடுத்துக்காட்டில் கடமை அல்லது தொழில் கிறிஸ்துவுக்கு முந்தி நிற்பதால், அது கிறிஸ்தவனாக இருப்பதின் நோக்கத்தையே முறியடித்து, சீஷத்துவத்துக்குரிய இரண்டாவது தடையாக இருக்கிறது. உலகத் தொடர்புள்ள வேலை தவறானது என்று கூற முடியாது. ஒருவன் தன் தேவைகளையும், தன் குடும்பத்தாரின் தேவைகளையும் சந்திப்பதற்கு வேலை செய்ய வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆனால் மெய்யான சீஷத்துவமோ முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் கண்டிப்பாகத் தேடவேண்டுமென்று உரைக்கிறது. அன்றாடகத் தேவைகளை நிறைவுசெய்வதே தொழிலில் ஈடுபடுவதின் நோக்கமாகும். இப்பணியை மறுபடியும் பிறவாதவர்களும் சிறப்பாக நிறைவேற்றலாம். ஆனால் ஒரு கிறிஸ்தவனின் முதன்மையானதும் முக்கியமானதுமான ஒரே பணி, தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கிப்பதேயாகும். ஆதலால் ஜீவனாம்சத்திற்காகப் பாடுபடுவதில் ஒரு விசுவாசி தன் காலத்தையும், பிரயாசத்தையும் செலவிடுவது தகாது.

## திருவாளர் மிகச் சொகுசானவர்

"மிகச் சொகுசானவன்" என்று அழைக்கப்படக்கூடிய மூன்றாவது ஆள் வலிய கர்த்தரைப் பின்பற்ற விரும்புகிறதில் முதலாவது ஆளைப்போன்றவன். "ஆண்டவரே... முன்பு நான்" என்று முரண்பாடான வார்த்தைகளைக் கூறுவதினால் இவன் இரண்டாவது ஆளுக்கு ஒப்பாக இருக்கிறான். "ஆண்டவரே, உம்மைப் பின்பற்றுவேன் ஆனாலும் முன்பு நான் போய் வீட்டிருக்கிறவர்களிடத்தில் அனுப்புவித்துக்கொண்டுவரும்படி

எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான். இந்த வேண்டுகோளை அப்படியே எடுத்துக்கொள்ளவோமென்றால், இதில் தவறு ஒன்றுமில்லை என்றுதான் நாம் கூறத் துணிவோம். தன் சொந்த ஜனத்தாரிடம் விடைபெற்றுக்கொண்டு வருவது இயல்பான மரபும், மரியாதையுமாகும். அப்படியானால் இவன் பரீட்சையில் எங்கு தோற்றுப்போனான்? அவன் கிறிஸ்துவுக்குக் கொடுக்கவேண்டிய முதலிடத்தை தன் உற்றார் உறவினருக்கும், இயற்கைப் பாசத்திற்கும் கொடுத்துவிட்டதுதான் அவனுடைய தவறு. அவனும் இயேசுவைவிட்டு துக்கத்துடன் பிரிந்து சென்றிருக்க வேண்டும்.

"கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல" என்று அவனுடைய இருதயத்தின் உள்நோக்கத்தை ஊடுருவிப்பார்த்து கர்த்தர் தீர்ப்பளித்தார். வேறுவிதமாகக் கூறினால், "என்னுடைய சீஷர்கள் நீ வெளிப்படுத்தினதுபோல சுயத்தை மையமாகக் கொண்டு திடனற்று நிற்கும் பேதையர் அல்லர். குடும்பப் பாசத்தையும், உறவு உணர்ச்சிகளையும் உளமாற உடைத்தெறிந்துவிட்டு தங்கள் வாழ்க்கையில் என்னையே மேலானவராக மதிக்கும் பண்புடையோரே எனக்கு வேண்டும்."

"மிகச் சொகுசானவனின் நப்பாசையும் தவிடுபொடியாகி துயரத்துடன் பின்வாங்கிப்போனான் என்று நாம் நிச்சயமாக யூகிக்கலாம். ''உன்னைப் பெற்றவளின் உள்ளத்தை உடைத்துவிட்டு, நீ தூரதேசத்திற்கு அருட்பணியாளனாக போகப்போகிறாயா, என் அருமை மகனே!'' என்று அவனுடைய தாய் தேம்பித் தேம்பி அழுது புலம்பியிருக்கலாம். இவனைப்பற்றி நாம் வேறென்ன கூறுவது? சலனபுத்தியுள்ள இம்மனிதன் திரும்பிச் சென்றுவிட்டதால் தன் வாழ்க்கையில் மாபெரும் வாய்ப்பினை நஷ்டப்படுத்திவிட்டு "தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவன் அல்ல" என்ற கல்லறை வாசகத்தை சம்பாதித்துக் கொண்டான்.





## சுருக்கவுரை

மெய்யான சீஷத்துவத்திற்கு இடையூறுகளாக இருக்கும் மூன்று குறிப்புகளை இங்கே கண்டோம். இவை மூன்றுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்ற மூன்று நபர்களையும் பார்த்தோம். இவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுடன் கடைசிவரை பயணம் செய்வதற்கு மறுத்துவிட்டனர். இவர்களின் குணாதிசயங்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

திரு. மிகத் துரிதமானவன் - உலக உல்லாசங்களில் நாட்டம் கொள்ளுதல்

திரு. மிகத் தாமதமானவன் - கடமை அல்லது தொழிலுக்கு முதலிடம் கொடுத்தல்

திரு. மிகச் சொகுசானவன் - இனிய குடும்பப் பாசங்களுக்கு முதலிடம் அளித்தல்

அன்றுபோல் இன்றும் வீராவேசத்தோடும், தியாக சிந்தையோடும் தம்மைப் பின்பற்றும்படி ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆண்டவராகிய இயேசு அழைப்பு விடுக்கிறார். "அதிகச் சிரமப்பட வேண்டாம், இது உனக்கு நேரிடக் கூடாதே" என்று கூறும் நயவஞ்சக வார்த்தைகள் தப்பியோடும் பாதைகளில் தொனித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு சிலரே செவிமடுக்கின்றனர்.

*''இயேசுவே, என் சிலுவையை எடுத்தேன்*
*எல்லாம் விட்டு உம்மைப் பின்செல்வேன்,*
*நிர்வாணம், நிந்தை, ஏழ்மை எதுவாயினும்,*
*இன்றுமுதல் நீரேதான் எல்லாம் எனக்கு,*
*நான் நாடின, நம்பின, நன்கறிந்த,*
*நம்பிக்கை நாசமாயினும்,*
*என்னே ஐசுவரியம் என் நிலைமை,*
*தேவனும் மோட்சமும் இன்னமும் என் சொந்தம்.*

*''உலகம் என்னை வெறுத்துவிட்டதால்,*
*என் இரட்சகரையும் அவர்கள், தள்ளிவிட்டனர்;*

மெய்யான சீஷத்துவம்

மனிதனின் இருதயமும் பார்வையும் என்னை வஞ்சித்தாலும்
என் தேவன், எனக்கு, உண்மையுள்ளவர்;
ஓ! ஞானம், அன்பு, வல்லமையின் தேவனே,
நீர் என்னில் புன்னகை புரிகிறீர்,
எதிரிகள் வெறுத்தாலும், நண்பர்கள் எதிரியானாலும்,
உம் முகம் காணுங்கால், எல்லாம் பிரகாசமே."

- எச். எஃப். லைட்



## சீஷர்கள் உக்கிராணக்காரர்

லூக்கா 16:1-13 ஐ. வாசிக்கவும்

அநீதியுள்ள உக்கிராணக்காரனைப்பற்றியுள்ள உவமை சீஷர்களுக்குத்தான் சொல்லப்பட்டது. எல்லாக்காலத்திலுமுள்ள சீஷர்களுக்கும் பொருந்தக்கூடிய கோட்பாடுகளை மீட்பர் இங்கு தொகுத்துக் கூறியுள்ளார். கிறிஸ்துவின் சீஷர்கள் அடிப்படையில் உக்கிராணக்காரர்தான். இவ்வுலகிலுள்ள ஆண்டவரின் உடமைகளும் உரிமைகளும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன

இந்த உவமையில் சில சிக்கல்கள் இல்லாமலில்லை. நாணயமற்ற, நேர்மையற்ற தன்மையும், சூதுவாதும் மற்றும் ஏமாற்றும்பண்பும் இங்கு பாராட்டப்படுவது போலக் காணப்படுகிறது. ஆனால் நாம் சரியான பின்னணியில் இதை சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது இது நமக்கு முக்கியமான போதனைகளைத் தருகின்றது என்று உணரலாம்.

கதையின் சுருக்கம் இதுதான். செல்வந்தன் ஒருவன் தன் உடைமைகளையும், வாணிபத்தையும் கவனித்துக் கொள்ளுமாறு சம்பளத்திற்கு ஒரு ஆளை நியமித்திருந்தான். காலப்போக்கில் தன் தொழிலாளியின் நாணயமற்ற தன்மையை முதலாளி அறிந்து கொண்டான். உடனே தணிக்கையாளர்களை ஏற்படுத்தி கணக்குகளைச் சரிபார்க்கச் சொன்னான். அவனுடைய கள்ளத்தனம் வெளிப்பட்டபொழுது அவனை வேலைநீக்கம் செய்யக் கட்டளையிட்டான்.

அந்தக் கணக்குப்பிள்ளைக்கு அவனுடைய எதிர்காலம் இருள்மயமாகக் காணப்பட்டது. அவனுக்கு வயதாகிவிட்டதால் கடின உடலுழைப்புக்கு இயலாதவனாகிவிட்டான்.

பிச்சையெடுக்கவும் அவன் வெட்கப்பட்டான். அவன் எதிர்நோக்கியிருந்த கஷ்டகாலத்தில் தனக்குச் சகாயம் செய்யும் ஆட்களைச் சம்பாதிப்பதற்கு ஒரு தந்திரமான வழி வகுத்தான். தனது முதலாளியின் ஒரு வாடிக்கைக்காரரிடம் சென்று, "நீர் என் முதலாளிக்கு எவ்வளவு பாக்கி தரவேண்டும்?" என்று கேட்டான். அதற்குக் கிடைத்த பதில், "நூறு குடம் எண்ணெய் என்பதாகும்." "அதில் பாதிக்குரிய தொகையை மட்டும் இப்பொழுது செலுத்தும், நாம் கணக்கை முடித்துக் கொள்வோம்!" இன்னொரு கடன்காரரிடம் சென்று, "நீர் எவ்வளவு கடன்பட்டிருக்கிறீர்?" என்று கேட்க, "அவன் நூறு கலம் கோதுமை" என்று பதிலுரைத்தான். அப்பொழுது அவன், "நீ உன் சீட்டை வாங்கி எண்பது என்று எழுது என்றான் "உம்முடைய கடன் தீர்ந்து விட்டதாக நான் பதிந்து கொள்ளுகிறேன் என்றான்." இவ்விதமாக அவன் மற்ற வாடிக்கையாளர்களிடமும் நடந்து கொண்டான்.

நேர்மையற்ற இந்த வேலைக்காரன் நடந்து கொண்டதைப் பார்க்கிலும் அருள்நாதரின் விமர்சனம் கதையைவிட அதிக ஆச்சரியமும் அதிர்ச்சியும் தருகிறது.

"அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய் செய்தான் என்று எஜமான் கண்டு அவனை மெச்சிக்கொண்டான். இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளைப்பாக்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்." (வ.9)

இத்தகைய நேர்மையற்ற வாணிப நடவடிக்கைகளை 'சரி' என்று ஒப்புக்கொள்வதுபோல காணப்படுகிறதே, இதை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது?

ஒன்றுமாத்திரம் நிச்சயம். இந்த நாணயமற்ற நடத்தையை அவனுடைய ஆண்டவனோ, அல்லது நமது ஆண்டவரோ உண்மையில் பாராட்டவோ அல்லது அங்கீகரிக்கவோ இல்லை. அவன் வேலைநீக்கம் செய்யப்படுவதற்கே அதுதான் காரணம். நீதிநியாயத்தை விரும்பும் எந்த மனிதனும் இப்படிப்பட்ட





விசுவாச துரோகத்தையும், வஞ்சகத்தையும் பணக்கை யாடலையும் சரி என்று ஏற்றுக்கொள்ளவே மாட்டான். எனவே இந்த உவமையின் படிப்பினை அநீதியை ஆதரிப்பதல்ல என்று நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இந்த அநீதியான உக்கிராணக்காரனை ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும் பாராட்டலாம். அது என்னவென்றால், தன்னுடைய எதிர்காலத்திற்காக ஞானமுள்ள ஒரு திட்டத்தைக் வகுத்தான். அவன் தன் வேலையை இழந்தபிறகும் தனக்கு நண்பர்கள் இருக்கும்படி அவன் சாமர்த்தியமான முறைகளைக் கையாண்டான். 'இப்பொழுது' என்று நிகழ்காலத்தைக் குறித்தல்ல, "அப்பொழுது" என்று எதிர்காலத்தை எண்ணித் திட்டம் தீட்டினான்.

இதுதான் இந்த உவமையின் பிரதான படிப்பினையாகும். எதிர்காலத்திற்குத் தேவையானவற்றை ஈட்டி வைக்க உலகமக்கள் வெகுபாடுபடுகின்றனர். தங்கள் பணியிலிருந்து ஓய்வுபெறுகிற முதுமைப்பருவம்தான் அவர்கள் கவலைப்படுகிற ஒரே எதிர்காலம் ஆகும். வருவாய் ஈட்டும் பணியில் ஈடுபடமுடியாத ஓய்வுக்காலத்தில் சுகமாக வாழ்வதற்கு அவர்கள் அயராது உழைக்கின்றனர். சமுதாயத்தில் பாதுகாப்பாக வாழ்வதற்கு அவர்கள் எதையும் செய்யத்தவறுவதில்லை.

இவ்விதமான கணோட்டத்துடன் நாம் பார்க்கும் பொழுது, தங்கள் எதிர்காலத்திற்காகப் பாடுபடுகிறதில் கிறிஸ்தவர்களைவிட இரட்சிக்கப்படாதோர் புத்திமான்கள் என்று நாம் அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய எதிர்காலத்திற்காக இப்படிப் பிரயாசப்படுகிறோமா என்பதுதான் கேள்விக்குறியாகும். ஏனெனில், ஒரு கிறிஸ்தவனின் எதிர்காலம் உலகப் பணியிலிருந்து ஓய்வு பெறும் முதுமைப்பருவமல்ல. ஒரு கிறிஸ்தவனின் எதிர்காலம் எவ்விதத்திலும் இவ்வுலகத்தைச் சார்ந்ததல்ல; அது பரலோகத்தைச் சார்ந்தது

என்பது நாம் அறிந்த உண்மைதானே. ஒரு அவிசுவாசிக்கு எதிர்காலம் என்பது இப்பொழுதிலிருந்து மயானம் செல்லும் வரைதான். ஆனால் தேவனுடைய பிள்ளைக்கோ கிறிஸ்துவுடன் வாழும் நித்தியகாலம்தான் எதிர்காலம் ஆகும்.

மேலும், இந்த உவமையின் முக்கியமான அறிவுரை என்ன? பரலோகத்தில் தாங்கள் அனுபவிக்கப்போகும் நித்திய மாட்சிமைக்காக விசுவாசிகளின் உழைப்பையும் ஆயத்தத்தையும் பார்க்கிலும், மறுபிறப்படையாத அவிசுவாசிகள் தங்கள் அநித்தியமான எதிர்காலத்திற்காக அதிக ஞானததோடும் உறுதியோடும் உழைக்கின்றனர்.

இந்த சிந்தனையை மனதில் கொண்டவராக, அதைச் செயல்படுத்தும் நல்வழியைக் கர்த்தர் காண்பிக்கிறார்:

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்." (லூக்கா 16:9)

மம்மோன், என்றால் அநீதியான உலகப்பொருள், மற்றும் பணத்தையும் குறிக்கும். ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்கென்று நாம் ஆதாயப்படுத்த இவற்றைத் தாராளமாகப் பயன்படுத்தவேண்டும். இங்ஙனம் நமது பணத்தை உண்மையாகவும் உத்தமமாகவும் செலவுபண்ணி நாம் ஆதாயப்படுத்துகின்ற மக்கள்தான் "சிநேகிதர்" என்று கர்த்தர் அழைக்கிறார். நாம் மாளும் நாள் ஒன்று வருகிறது, (அல்லது கிறிஸ்துவுடன் மறுரூபமாக்கப்பட்டு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் நாள்), அதுவரை நமது பொருட்களை ஞானமாகப் பயன்படுத்தி நாம் சம்பாதிக்கும் நண்பர்கள்தான் நாம் பரலோகம் செல்லும்பொழுது நம்மை வரவேற்கும் 'கமிட்டியாக' செயல்படுவர்.

இவ்வாறுதான் புத்தியுள்ள உக்கிராணக்காரர் தங்கள் எதிர்காலத்திற்காகத் திட்டமிட்டுச் செயல்படுகின்றனர். கானல்நீராக காணாமற்போகும் பொருள்பற்றின்மீதுள்ள





வீணான மயக்கத்தில் தங்கள் குறுகின வாழ்நாட்களை வீணாக்குவதில்லை. அதற்குப் பதிலாக, தாங்கள் பரலோக வீட்டை அடையும்பொழுது தங்களைச்சூழ நண்பர்குழாம் இருக்குமாறு இப்பொழுதே பார்த்துக் கொள்கின்றனர். வேதாகமங்களாக, புதிய ஏற்பாடுகளாக, திருமறைப் பகுதிகளாக, நற்செய்தி கைப்பிரதிகளாக அல்லது கிறிஸ்தவ நூல்களாக பணம் மாற்றப்படுகிறது. கிறிஸ்தவ ஊழியர்களைப் பராமரிப்பதில் செலவிடப்படுகிறது. கிறிஸ்தவ வானொலி நிகழ்ச்சிகளுக்காகவும் இன்னபிற மேலான அருட் பணிகளுக்காகவுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது, நற்செய்தியைப் பரப்புவதற்காக அநேக இடங்களிலும், வழிகளிலும் செலவிடப்படும் தொகையை இது குறிக்கும். "பரலோகத்திற்கு செல்லக்கூடிய காரியத்தில் நாம் முதலீடு செய்வதே நாம் பரலோகத்தில் பொக்கிஷம் சேர்க்கும் ஒரே வழியாகும்.

விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துவதற்காக தங்கள் உடல்-பொருள்-செல்வம் பயன்படக்கூடும் என்பதை ஒரு கிறிஸ்தவன் அறிந்தவுடன், அவனுக்கு பணம் மற்றும் பொருட்களின் மீதுள்ள ஆசை அறவே அற்றுப்போகிறது. ஆடம்பர வாழ்க்கையையும் மற்றும் படாடோபங்களையும் அவன் வெறுத்து அருவருக்கிறான். பரலோக இரசாயன சாஸ்திரத்தின் மூலமாக அநீதியான மம்மோனைக் கொண்டு ஆட்டுக்குட்டியானவரைத் தொழுதுகொள்ளுகிறவர்களின் கூட்டத்தைப் பெருகச் செய்கிறான். மனிதனுடைய ஜீவியங்களில் தேவனுக்கு நித்திய மகிமையையும் மக்களுக்கு மாறாத ஆசீர்வாதங்களையும் கொண்டுவரக்கூடிய இந்த மறுரூபமாக்கும் பணியினால் கிறிஸ்தவன் கவர்ச்சிப்படுகிறான். ருதர்ஃபோர்டு என்பவரின் தீராத தாகத்தில் ஒரு பகுதியை உணருகிறான்:

*"ஓ அன்வர்த்திலிருந்து ஒரு ஆத்மா*

*தேவனின் வலதுபக்கத்தில் என்னைச் சந்திக்குமானால,*
*ஓ இம்மானுவேலின் தேசத்தில்*
*என் மோட்சம் இரண்டு மோட்சங்களாகி விடும்''*

- அனி ஆர் கஸின்

எனவே ஒரு கிறிஸ்தவனுக்கு வைரங்களும், வைடூரியங்களும், முத்துக்களும் இரத்தினங்களும், வங்கிச் சேமிப்புகளும், ஆயுள்காப்பு நிதிகளும், மாளிகைகளும், உல்லாசப் படகுகளும், ஆடம்பரக் கார்களும், மற்றவை யாவும் அநீதியான உலகப் பொருளேயன்றி வேறல்ல. அவற்றைச் சுயநலம் நிறைந்த சொகுசான வாழ்க்கைக்கே பயன்படுத்தினால் அவை அவனோடு அழிந்து ஒழியும். ஆனால் கிறிஸ்துவுக்காக அவற்றைச் செலவிடுவானென்றால் அவை நித்தியகாலமும் அவனுக்குப் பலமடங்கு இலாபத்தைத் தந்துகொண்டே யிருக்கும்.

உலகப் பொருட்களை நாம் பயன்படுத்தும் விதமும், அவற்றின்மீது நமக்கிருக்கும் ஆசையின் அளவும் நமது குணநலன்களைச் சோதித்துப்பார்க்கும் உரைகல்லாகும். இதனையே நமது ஆண்டவர் 10-ம் வசனத்தில் தெளிவுபடக் கூறுகிறார்:

"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்."

இதன் கருத்துரையை இவ்வாறும் கூறலாம்:

''மிகச் சிறிய ஒன்றில் நம்பப்படக்கூடியவன், மிகப் பெரியவற்றிலும் நம்பிக்கைக்குப் பாத்திரவானாயிருப்பான்; மிகச்சிறிய ஒன்றில் நம்பப்படக்கூடாதவனை மிகப்பெரிய எதிலும் நம்பமுடியாது."

இங்கே கூறப்படும் "கொஞ்சம் அல்லது மிகச்சிறிய ஒன்று" என்பது உலகப்பொருட்களுக்கு உக்கிராணக்காரராயிருப்பதே.





தேவனுடைய மகிமைக்காகவும் தம்முடன் வாழும் மக்களின் ஆசீர்வாதத்திற்காகவும் இவற்றைப் பயன்படுத்துவோரே நம்பிக்கைக்குப் பாத்திரராவர். தங்கள் வசதிக்காகவும் தன்னயம் நிறைந்த சொகுசான வாழ்க்கைக்காகவும் தங்கள் செல்வத்தைப் பயன்படுத்துவோர் நேர்மையில்லாதவர்கள். ஒரு சிறிய காரியத்தில் - அதாவது உலகப் பொருட்களில் ஒருவனை நம்ப முடியாவிட்டால் பெரியகாரியத்தில் - ஆவிக்குரிய உக்கிராணத்துவத்தில் - அவனை எப்படி நம்ப முடியும்? அநீதியான, அற்பமான உலகப் பொருட்களைப்பற்றி ஒருவன் உண்மையற்றவனாயிருந்தால், அவன் எப்படி தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக் காரணாக இருக்கமுடியும்?
(1 கொரி. 4:1)

ஆதலால் நமதாண்டவர் இதைச் சற்று அதிகமாக வற்புறுத்திப் பேசுகிறார்:

*''அநீதியான உலகப்பொருளைப்பற்றி*
*நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார்*
*உங்களை நம்பி உங்களிடத்தில்*
*மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?'' (வ. 11)*

உலக ஐசுவரியங்களெல்லாம் அநித்தியமானவைகள், இம்மைக்குரியவைகள், நிலையற்றவைகள் என்பதுடன் அவற்றின் மதிப்பும் மங்கிப்போகக்கூடியவை என்ற உண்மையை நாம் அறிவோம். ஆனால் ஆவிக்குரிய ஐசுவரியங்களோ மெய்யான செல்வங்கள் என்பதுடன், அவற்றின் மதிப்பையும் நம்மால் அளவிட முடியாது, அது மாறிப்போவதுமில்லை. உலகப்பொருட்களைப் பயன் படுத்துவதில் ஒருவன் நம்பிக்கைக்குப் பாத்திரவானாக இருந்தால்தான், தேவன் அவனை நம்பி இந்த வாழ்க்கையில் ஆவிக்குரிய செழிப்பையும், வருங்காலத்தில் விண்ணுலகப் பொக்கிஷத்தையும் அருளமுடியும்.

கர்த்தர் தமது வாதத்தைத் தொடர்ந்து விரிவுரை செய்கிறார்:

*''வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால் உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?''(வ.12)*

இன்னொரு உண்மையையும் நாம் அறியாமலிருக்கக் கூடாது. அதாவது, உலகப்பொருட்கள் நமக்குச் சொந்த மானவை அல்ல; அவை அனைத்தும் தேவனுக்கே சொந்தமானவை. எனவே நமது உடைமைகள் ஒவ்வொன்றும் தேவனால் நமக்கருளப்பட்டுள்ள புனிதமான பொறுப்பு ஆகும். நமக்குரியவை என்று நாம் உரிமை பாராட்டக்கூடியதெல்லாம் இம்மையில் நமது உண்மையான, ஊக்கமான, விடாமுயற்சியான உழைப்பின் பலனாக கிடைக்கும் அறிவும் ஆற்றலும் எனக்கூறலாம். அத்துடன் உண்மையுள்ள உக்கிராணக் காரராயிருப்பதினால் பரலோகத்தில் கிடைக்கும் பெலனும் நமது சம்பாத்தியம் எனக் கருதலாம். கடவுளுடைய உடைமைகளைக் கையாளுவதில் நாம் உண்மையற்றவர்கள் என்று நிரூபிக்காப்பட்டால், நாம் தேவனுடைய வார்த்தையில் அடங்கியிருக்கும் ஆழமான உண்மைகளையும் மறை பொருட்களையும் இம்மையில் புரிந்துகொள்ள'முடியாது. அப்படியே மறுமையிலும் பிரதிபலனை எதிர்பார்க்க முடியாது. என்ன பரிதாபம்! இந்த உவமை சுட்டிக்காட்டும் போதனையின் உச்சநிலையை நமதாண்டவர் இந்த வசனத்தில இரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறார்.

"எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் (மம்மோனுக்கும்) உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களாலே கூடாது." (வ. 13)

உண்மையான பக்தி அல்லது பற்றினை பிரிக்கமுடியாது. இரு உலகங்களுக்காக எந்தவொரு சீஷனும் வாழ முடியாது. ஒன்று, அவன் தேவனில் அன்பு கூறுகிறான், அல்லது





மம்மோனை நேசிக்கிறான். மம்மோனை நேசிக்கிறவன், கடவுளைப் பகைக்கிறான் என்பது உறுதி. அன்பரே, இதனை நீர் உமது சிந்தையில் இருத்துவீர்: இவை இரட்சிக்கப்படாதோருக்கல்ல, சீஷர்களுக்கே எழுதப்பட்டது.

# வைராக்கியம்

ஒரு சீஷனுக்கு மிக்க அறிவாற்றலும் மன உறுதியும் இல்லாவிட்டாலும் அவனை மன்னித்துவிடலாம். திடகாத்ரமான சரீரமும் வீரமும் பலமும் அவனிடம் காணப்படாமற்போனாலும் அவனை மன்னித்துவிடலாம். ஆனால் வைராக்கிய வாஞ்சை இல்லாத எந்த சீஷனையும் மன்னிக்கவே முடியாது. தன் இரட்சகர் மீது கொழுந்துவிட்டு எரியும் பற்றும் பாசமும் ஒரு சீஷனிடம் காணப்படாவிட்டால் அவன் குற்றவாளி என்று தீர்க்கப்படுகின்றான்.

அதேனென்றால், கிறிஸ்தவர்கள் பின்பற்றுகின்ற ஒப்பற்ற தலைவர் யாரென்றால், "உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது" (யோவான் 2:17) என்று பறைசாற்றினவராகும். அவர்களுடைய ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிறவர் தமது பிதாவாகிய தேவனுக்கடுத்த காரியங்களில் பற்றியெரிகிற அக்கினியாகத் திகழ்ந்தார். எனவே கோழைகளுக்கும், அறைகுறை மனதுடன் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் அவருடைய தொண்டர்களின் வரிசையில் இடமில்லை.

கர்த்தராகிய இயேசு எப்பொழுதுமே ஆவிக்குரிய பிரகாரம் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். இதனை அவர்தாமே பின்வரும் வசனத்தில் வெளிப்படுத்தினார்:

*"நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு. அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகின்றேன்."*

(லூக்கா 12:5)

மேலும் ஒரு வசனம் இக்கருத்தை உணர்த்துகிறது:

"பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பின





வருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது." (யோவான் 9:4)

யோவான் ஸ்நானகனின் பக்திவைராக்கியத்தைப்பற்றி காத்தரே இவ்வாறு சாட்சி கூறுகின்றார்:

"அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்." (யோவான் 5:35)

பவுல் அப்போஸ்தலனும் மிகுதியான பக்தி வைராக்கியம் உள்ளவர் என்பது நாம் அறிந்த உண்மை. பக்தி வைராக்கியத்தில் அவர் ஒரு பெரிய தீவிரவாதி என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. அவருடைய வாழ்க்கையையும், வைராக்கிய வாஞ்சையையும் பசுமரத்தாணிபோல் நமது மனதில் நிலைமாறாமல் பதியக்கூடியவாறு விமர்சிக்கிறார்.

"நண்பர்களைச் சம்பாதிக்க வேண்டுமே என்ற அக்கறையே இல்லாத மனிதர் பவுல். உலகத்தில் செல்வத்தைச் சேர்க்கவேண்டுமே என்ற ஆசையோ, நம்பிக்கையோ இல்லாதவர்; அதே நேரத்தில் உள்ளதையும் இழந்து பக்கிரியாக அலையநேரிடுமே என்ற பயமும் இல்லாதவர். அவசியமில்லாத மரணபயமும் இல்லாதவர். அவருக்கு அந்தஸ்து, தாய்நாட்டுப் பெருமை அல்லது செல்வாக்கு என்று எதுவும் கிடையாது. கிறிஸ்துவின் நற்செய்தி என்ற ஒரே எண்ணத்தால் ஆட்கொள்ளப்பட்டிருந்த ஒரு தேவமனித ராயிருந்தார். அவருக்கு ஒரே ஒரு நோக்கம்தான் இருந்தது- அது தேவனுடைய மகிமை. தான் ஒரு பைத்தியக்காரனாகக் காட்சியளித்தார். கிறிஸ்துவுக்காக பைத்தியக்காரன் என்றும், பித்துப்பிடித்தவன் என்றும் அழைக்கப்படுவதில் மகிழ்ச்சி கொண்டார். அவரைத் தீவிரவாதி என்றும், வெறிபிடித்தவர் என்றும், வாயாடி என்றும், இவ்வுலகத்தில் வாழ்கிறதற்கு லாயக்கற்றவர் என்றும் பல பட்டப்பெயர்களை அவருக்குச் சூட்டினபோதிலும், அவற்றிலெல்லாம் அவர் பெருமிதம் கொண்டாரேயன்றி மனம் இளக்கரித்துப் போகவில்லை. ஒரு சிலர் அவரை உலகத்தான் என்றும், கல்வி நிபுணர் என்றும்

நல்ல குடும்பவாசி, சிறந்த குடிமகன் அல்லது பொதுஅறிவு நிறைந்தவர் என்றெல்லாம் புகழ்ந்தாலும் அதையும் அவர் பொருட்படுத்தவில்லை. அவர் பேசவேண்டும் அல்லது சாகவேண்டும்; அப்படியே சாகிறதாயிருந்தாலும் அவர் பேசிக்கொண்டேதான் சாவார். அவருக்கு ஓய்வே கிடையாது. நிலத்திலும் நீரிலும், காடுமேடுகளிலும், பாதையற்ற பாலைவனங்களிலும் அவர் வேகமாகப் பயணம் செய்து கொண்டேயிருந்தார். அவர் உரத்த சத்தமாகப் பேசினார். எங்கேயிருந்தாலும் அவர் சத்தம் கேட்டுக்கொண்டேயிருக்கும். சிறைகளிலும் அவர் சத்தம் கேட்டது. கடலின் கடும்புயல்களின் நடுவிலும் அவர் அமைதியாயிருப்பதில்லை. மற்றவர்கள் அணுகுவதற்கு அஞ்சும் அரண்மனைகளிலும் அரசர்கள் முன்பும் சத்தியத்தைக் குறித்து சாட்சி பகர்ந்து கொண்டிருந்தார். சாவேயன்றி வேறொன்றும் அவர் குரல்கொடுப்பதைத் தடுக்கமுடியாது. மரணதண்டனை விதிக்கப்பட்டபின்னரும், சிரச்சேதம் செய்யப்படும் வரைக்கும் அவர் பேசிக்கொண்டுதானிருந்தார். சத்திய சாட்சியாகவே சுற்றித் திரிந்தார். சாவிற்கு முன்பும் அவர் பேசுகிறார், அறிக்கையிடுகிறார், வேண்டிக்கொள்கிறார், போரிடுகிறார், முடிவில் கொடிய எதிரிகளையும் ஆசீர்வதிக்கிறார்.

பவுலைப்போன்றே தேவனைப்பிரியப்படுத்தவும், தேவனுக்கென்றே அக்கினிப்பொறியாக விளங்கவும் வாஞ்சித்த விசேஷமான மனிதர்கள் அநேகருண்டு.

சி.டி. ஸ்டட் இவ்விதமான தீர்மானத்துடன் வாழ்ந்தவர்.

*''ஆலயமணியின் ஓசையிலேயே*
*அசையாது வாழ்வோர் அநேகருண்டு*
*நானோ நரகத்தின் வாயிலில் மீட்பு நிலையத்தினை*
*நிறுவிட ஆசிக்கின்றேன்''*

என்று எழுதி வைத்தார்.

நாத்திகன் ஒருவன் நாளிதழில் எழுதிய ஓர் கட்டுரையே ஸ்டட் தம்மை முற்றிலும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கக்





காரணமாயிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. நாத்திகனின் சவால் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

"கோடிக்கணக்கான கிறிஸ்தவர்கள் 'நம்புகிறோம்' என்று தம்பட்டம் அடிக்கின்ற சத்தியத்தை நானும் உறுதியாக நம்பி ஏற்றுக்கொள்வேனென்றால் இந்தப் பெயர்க் கிறிஸ்தவர்களைப் போல நான் வாழவே மாட்டேன். ஒரு சில மாதாபிமானங்களை இவ்வுலகில் அறிந்து கடைப்பிடிப்பது, இனிமேல் வரும் உலகத்திலுள்ள நம் நிலைமையைப் பாதிக்கிறது என்று இவர்களைப் போல நம்புவேனென்றால் கடவுள் பக்தியே எனக்கு எல்லாமுமாக இருக்கும். அப்பொழுது உலகச் சிற்றின்பங்களையெல்லாம் உதறித் தள்ளுவேன்; உலகக் கவலைகளை மதியீனம் என்று மறந்து விடுவேன்; உலக எண்ணங்களையும், உணர்ச்சிகளையும், பற்றுகளையும் மாயை என்று விலக்குவேன். துயில்நீங்கி விழிக்கையில் என் முதல் நினைவு இறைவனைப்பற்றியதாகவே இருக்கும். பகலெல்லாம் இதைப் பரப்புவதற்காகவே சிந்திப்பேன், செயல்படுவேன். இரவு கண்ணயர்ந்து, என்னை மறந்து, படுக்கைக்குச் செல்லுமுன் எனது கடைசித தரிசனம் இதுவாகவே இருக்கும். அடுத்து வரும் நாளுக்காக நான் எவ்வளவேனும் கவலைப்பட மாட்டேன். நித்தியம் என்னும் நாளைக்காகவே கரிசனையுடன் திட்டமிடுவேன். வாழ்நாள் முழுவதும் துன்பப்பட்டும் ஒரு ஆத்துமாவை ஆதாயம் செய்வதையே பெரிதென்று மகிழ்ச்சியடைவேன். உலகப்பிரகாரமான காரியங்கள் எதுவும் என் கரத்தைத் தடுத்து நிறுத்தவும் முடியாது, அல்லது என் வாயை மூடவும் முடியாது. நித்தியத்தின் பேரில் மட்டுமே என் பார்வையைச் செலுத்துவேன். நித்தியமகிழ்ச்சியை அல்லது நித்திய அழிவை அடையப்போகும் அழிவற்ற ஆத்துமாக்களே என் முழு கவனத்தையும் ஈர்ப்பர். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் உலகத்தினுள் சென்று எத்தடையையும் மேற்கொண்டு அதைப் பிரசங்கிப்பேன்.

*''மனுஷன் உலகமுழுமையும் ஆதாயப்படுத்திக்*
*கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு*
*லாபம் என்ன?''*

எனபதே என் பிரசங்க வாக்கியமாயிருக்கும். (இது ஒரு விசுவாசியின் தீர்மானம் போலிருக்கிறதல்லவா?)

வைராக்கிய வாஞ்சை நிறைந்த இன்னொரு மனிதர் ஜான்வெஸ்ஸி. "தேவனிடத்தில் முழுமனதோடும் அன்புகூர்ந்து பாவத்தைத் தவிர வேறொன்றிற்கும் அஞ்சாத நூறுமனிதர்களை எனக்குத் தாருங்கள்; நான் உலகத்தையே அசைத்துவிடுவேன்" என்று வெஸ்ஸி முழக்கமிட்டார்.

ஈக்குவேடர் நாட்டின் ஒரு மலைப்பிரதேசத்தில், தனது நான்கு சகாக்களுடன் இரத்த சாட்சியாக மரித்த ஜிம் எலியட் கிறிஸ்துவுக்காக எரிகின்ற ஒரு நெருப்புப் பந்தமாக இருந்தார். "தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்" (எபி 1:7) என்ற வசனத்தின் மீது ஒரு நாள் ஜிம்எலியட் தியானித்துக் கொண்டிருக்கும் பொழுது, அவருக்கு உதயமானதைத் தனது நாட்குறிப்பேட்டில் எழுதிவைத்ததாவது:

"நான் நெருப்புப்பற்றிப் பிடிக்கக் கூடியவனா? அல்லது நான் உமக்கென்று எரிந்து பிரகாசிக்க முடியாதபடி கல்நார் போன்றவனா? 'மற்றவைகளை' என்னைவிட்டு தேவனே, நீங்கச் செய்யும். நான் அக்கினி ஜுவாலையாக இருகக்கும்படி, ஆவியானவரின் எண்ணெயால் நான் முற்றிலும் நனைக்கப்படட்டும். ஆனால் அக்கினி ஜுவாலை என்பது தோன்றி சீக்கிரமாக மறையக்கூடியது. இது குறுகிய ஆயுளைக் குறிக்கிறது. என் ஆத்துமாவே, இதை நீ ஏற்றுக்கொள்ள முடியுமா? தேவனுடைய வீட்டைக்குறித்துண்டான பக்திவைராக்கியத்தால் எரிக்கப் பெற்ற இயேசுவானவரின், குறுகிய ஆயுள் கொண்டவரின், ஆவி என்னில் வசிக்கிறார். தீபத்திற்கும் மற்றும் ஜுவாலைக்கும் தேவையான எண்ணெயாக என்னை மாற்றும் என் தேவனே."





இந்தக் கடைசி லாக்கியம் ஏமி கார்மைக்கேல் அம்மையாரின் பாடல் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டது. இதிலிருந்து ஜிம் எலியட் ஆக்கமும் ஊக்கமும் பெற்றார் என்பதில் ஆச்சரியமும் உண்டோ?

*''உம்மீது அடிக்கின்ற கடும்புயலை என்னை விட்ட*
*கற்றுமென்று*
*ஏறெடுக்கும் விண்ணப்பத்தை என்னைவிட்டகற்றி,*
*மேல்நோக்கிச் செலலநான் வாஞ்சிக்கைகயில் விழாமல்காக்க,*
*அஞ்சா நெஞ்சம தருவீர்; சொகுசான வாழ்வை நாடும்*
*வஞ்சக வலையினின்று என்னை விடுவியும், என் ஆண்டவா,*
*உமதடியேன் உம்மைப் பின்செல்ல வாஞ்சிக்கிறேன்.*

*''நயவஞ்சகமான சுகபோக வாழ்வளிக்கும் பொருட்கள்,*
*இலகுவான தெரிவுகள், நெழிவு சுழிவுகளினின்றும்,*
*சிலுவைநாதர் சென்ற பாதை இதுவல்ல,*
*எமதாவிகள் பலப்படுவதற்கும்,*
*கல்வாரிக் காட்சியை மழுங்கச்செய்யும் யாவினின்றும்,*
*ஓ தேவாட்டுக்குட்டியே, என்னை இரட்சியும்.*

*''தேவா, வழிகாட்டும் நின் அன்பைத் தாரும்,*
*எதையும் கண்டு பின்வாங்காத விசுவாசமும்,*
*இடர்கண்டு தளராத நம்பிக்கை வாழ்வையும்,*
*அக்கினியாய்ப் பற்றியெரியும் ஆர்வமதையும்*
*மண்ணாங்கட்டியாய் மாற்றிடும்; பின்மாற்றமுமின்றி:*
*எரிந்திடும் எண்ணெயாய் என்னை மாற்றும், தெய்வீக*
*ஜுவாலையே''*

இன்றைய இருபதாம் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் மேல் சுமந்துள்ள நிந்தையாவது, இன்றையக் கிறிஸ்தவர்களைக் காட்டிலும் கம்யூனிஸ்டுகளும், தப்புக்கொள்கையினரும், வேதப்புரட்டர்களும் கிறிஸ்தவர்களை விட அதிக வைராக்கியம் பாராட்டுகின்றனர்.

1903-ஆம் ஆண்டில் ரஷ்யாவில் ஒரு மனிதன் தன்னைப்

பின்பற்றும் பதினேழுபேரோடு கூட உலகத்தைத் தாக்கத் தொடங்கினான். அவன் பெயர் லெனின் 1318-ஆம் ஆண்டிற்குள் அவர்களின் எண்ணிக்கை நாற்பதாயிரமாக உயர்ந்தது. இந்த நாற்பதினாயிரம் பேரைக் கொண்டு ரஷ்யாவின் பதினாறு கோடி மக்களையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தான். அந்த இயக்கம் தொடர்ந்து செயலாற்றி வருகிறது. இன்று உலகத்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அதன் குடைக்குள் இருக்கிறது. அவர்களுடைய கொள்கைகளை நாம் எவ்வளவுதான் வெறுத்தாலும், அவர்கள் வைராக்கியத்தை வியந்து பாராட்டாமலிருக்க முடியாது.

பின்வரும் கடிதத்தை பில்லிகிரஹாம் முதலாவதாக ஒரு பொதுக்கூட்டத்தில் வாசித்தபொழுது பல கிறிஸ்தவாகள் மனச்சாட்சியில் கடிந்துகொள்ளப்பட்டனர். இக்கடிதம் அமெரிக்க நாட்டுக் கல்லூரி மாணவன் ஒருவனால் எழுதப்பெற்றது. அவன் மெக்ஸிகோவிலிருந்தபொழுது ஒரு கம்யூனிஸ்டாக மாறிவிட்டான். அதினால் அவன் திருமணம் செய்துகொள்ளும்படி நிச்சயித்திருந்த தன் காதலியின் உறவை முறிக்க வேண்டியதாயிற்று. அதன் காரணத்தை அவளுக்குத் தெரிவிக்கவே அவன் இக்கடிதத்தை அவளுக்கு எழுதியிருந்தான்:

*''கம்யூஸ்டுகளாகிய எங்களுக்குள் மரணவிபத்துவிகிதம் அதிகமாயிருக்கிறது. எங்கள் நடுவில் சுட்டுக்கொல்லப்படுகிறவர்களும், தூக்கிலிடப்படுகிறவர்களும், விசாரணையின்றிக் கொல்லப்படுகிறவர்களும், உயிரோடே வைத்துக் கொல்லப்படுகிறவர்களும், உடம்பில் தார் பூசப்பட்டு பறவைகளின இறகுகள் ஒட்டிவைக்கப்படுகிறவர்களும், சிறையிலடைககப்பட்டும் கேவவமாகப் பேசப்படுகிறர்களும், மற்றும் வேலைநீக்கம்*





*செய்யப்படுகிறவர்களும் ஏராளம், ஏராளம். இன்னும் பல விதங்களில் நாங்கள்''*

துன்புறுத்தப்படுகிறோம், ஒடுக்கப்படுகிறோம், அச்சுறுத்தப் படுகிறோம், அநேக இம்சைகளுக்கும் ஆளாகிறோம்.

*மெய்யாகவே நாங்கள் வறுமைக்கோட்டின் எல்லையில் வாழ்கிறோம். உயிரும் உடலும் ஒன்றாக இருப்பதற்குத் தேவையான தொகைக்கு மிஞ்சி நாங்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு பைசாவையும் எங்கள் கட்சிக்குக் கொடுத்துவிடுகிறோம். பற்பல பொழுது போக்குகளாகிய படக்காட்சிகள், சங்கீதக் கச்சேரிகள், நடன விடுதிகள், ஆகியவற்றிற்குச் செல்ல நேரமோ பணமோ எங்களுக்குக் கிடையாது. ஆடம்பர உணவு இன்னது என்று அறியோம். நேர்த்தியான வீடுகளோ, புதிய கார்களோ எங்களுக்கு இல்லை. மற்றவர்கள் எங்களை வெறியர் என்கிறார்கள். ஆம் உலகத்தாரின் பார்வையில் நாங்கள் வெறியர்களும் பைத்தியக்காரர் களும்தான்! உலகம் முழுவதும் கம்யூனிச மயமாக வேண்டும் என்ற ஒரே பெரிய இலட்சியத் திற்காகவே நாங்கள் உயிர் பிழைத்திருக்கிறோம். கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு ஒரு வாழ்க்கைத் தத்துவம் இருக்கிறது; அதை எவ்வளவு தான் பணம் கொடுத்தாலும் விலைக்கு வாங்கமுடியாது. வாழ்க்கையில் நாங்கள் போராடுவதற்கான ஒரு பெரிய நோக்கமும், இலட்சியமும் எங்களுக்கு உண்டு அதனை அடைவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக எங்களுடைய சிறிய, குறுகின தனிப்பட்ட சுயத்தை அடக்கிக் கட்டுப்படுத்துகிறோம். எங்களது தனிப்பட்ட வாழ்க்கை கடினமாகக் காணப்பட்டால், அல்லது எங்கள் கட்சிக்கும், கொள்கைக்கும் நாங்கள் அடங்கி நடப்பதினால், எங்கள் சுயம் பாடுபடுவதாகத் தோன்றினால், அதைச் சிறிதளவேனும் பொருட்படுத்தாமல், நாங்கள் ஒவ்வொருவரும்*

எங்கள் சிறுசிறு வழிகளில் மனுக்குலத்திற்கு முன்னேற்றமளிக்கும் மாபெரும் உண்மைக்காகப் பாடுபடுகிறோம். இதுவே எங்கள் தியாகத்திற்குப் போதுமான நஷ்ட ஈடாகும். நான் எனது உயிரினும் மேலாக வாஞ்சிப்பது எனது கம்யூனிசக் கொள்கையின் வளர்ச்சியே. எங்களது கட்சிக் கொள்கையின் இலட்சியமெல்லாம் என் தொழில், என் மதம், என் பொழுதுபோக்கு, என் காதலி, என் மனைவி, என் உணவு - இவையும் இன்னபிறவும் தான் எங்கள் கட்சிக்கொள்கையின் இலட்சியமே. என் மீதுள்ள இதன்பிடி நாளுக்கு நாள் இறுகுகிறதேயன்றி தளருவதில்லை. எனவே எனது காதலையோ, நட்பையோ அல்லது கலந்துரையாடுவதையோ இதனோடு சம்பந்தப் படுத்தாமல் நான் வாழமுடியாது. இது ஒன்றே என்னைத் தூண்டி வழிநடத்துகின்ற வாழ்க்கை விதியாக இருக்கிறது. நான் தொடர்பு கொள்ளும் மக்களையோ, நூல்களையோ, கருத்துக்களையோ, திட்டங்களையோ அல்லது செயல்பாடுகளையோ எப்படி மதிப்பிடுகிறேனென்றால், அவற்றால் கம்யூனிசத்திற்கு என்ன லாபம் அல்லது அது கம்யூனிசத்தின் மீது என்ன தாக்கம் உண்டாக்குகிறதென்று சீர்தூக்கிப்பார்க்கிறேன். இதினிமித்தம் நான் இப்பொழுதே சிறைவாசம் செய்கிறேன்; துப்பாக்கி முனையில் என்னைப் பலியாக்கவும் இப்பொழுதே ஆயத்தமாயிருக்கிறேன்.''

கம்யூனிஸ்டுகள் இவ்வாறு தங்கள் கட்சிக்காகவும் கொள்கைக்காகவும் எதை வேண்டுமானாலும் செய்வதற்கும், உயிரைப் பணையம் வைத்தும் தங்கள் நிலைமாறும் இலட்சியத்தை வளர்ப்பதற்கு முயற்சிப்பார்களென்றால், கிறிஸ்தவர்கள் தங்கள் மகிமையான ஆண்டவருக்காகவும், நிலைமாறாத உண்மைக்காகவும் எவ்வளவு அதிக அன்புடனும்





மகிழ்ச்சியுடனும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்! கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நாம் எதையாகிலும் கொடுப்பதற்கு அவர் தகுதி பெற்றிருப்பாரென்றால், எல்லாவற்றையும் அவருக்கு நாம் கொடுத்துவிடல் வேண்டும். "கிறிஸ்தவ விசுவாசம் கொஞ்சமாவது நம்பத்தகுந்ததென்றால், நாம் அதை முழுமையாக நம்பி வீரத்தோடும் துணிவோடும் அதற்காகச் செயல்படலாம்'' என்று ஃபின்டுலே என்பவர் கூறுகிறார்.

''உண்மையாகவே கடவுள் கிறிஸ்து இயேசுவில் நிறைவேற்றியிருக்கிற ஒரு காரியம் உலக இரட்சிப்புக்கு ஆதாரமாக இருக்கிறது; அதை அவர் தெரியப்படுத்தி யிருக்கிறார்; அதை அலட்சியப்படுத்தவோ, மறுதலிக்கவோ கூடாது என்றால் அதை அனர்த்தப்படுத்தக்கூடிய எதையும் வெறுத்துத் தள்ளுவதே கிறிஸ்தவரின் கடமையாகும் என்றுணர்தல் வேண்டும்."

- ஜேம்ஸ் டென்னி

பரிசுத்த ஆவியானவரின் பூரண ஆளுகைக்குத் தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுத்திருப்போரே தேவனுக்கு வேண்டும். பிறர் பார்வையில் இவர்கள் மதுபான போதையில் வெறித்திருக்கிறவர்களைப்போலக் காணப்படலாம்; ஆனால் நன்கு அறிந்தவர்கள் இவர்களுடைய உண்மை நிலையைப் பாராட்டுவார்கள். ஏனெனில் தேவன் பேரில் ஆழமான, அளவிட முடியாத, தொடர்ச்சியான தணிக்கப்படமுடியாத 'தாகம்' கொண்டவர்களென்று உணர்ந்து கொள்வார்கள்.

இயேசுகிறிஸ்துவுக்கு சீஷனாகும் ஆர்வம் கொண்ட எவருக்கும் வாழ்க்கையில் வைராக்கியம் முதலிடம் பெற வேண்டும் என்பதைக் கருத்தில் இருத்துவார்களாக. பிஷப் ரைல் கொடுக்கும் விளக்கத்திற்கு அத்தாட்சியாக வாழ்வதற்கு முற்படுவார்களாக.

''சத்தியத்தின் மீது நாட்டமுள்ள ஒரு மனிதன் எல்லாவற்றிற்கும் மேலான ஒரே ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ள மனிதனாவான். அவன் ஆர்வமுள்ளவன்,

இருதயப் பூர்வமாக ஈடுபடுகிறவன், விட்டுக்கொடாதவன், முழுமனதுடன் முடிவுமட்டும் செயலாற்றுகிறவன், ஆவியில் அனலுள்ளவன் என்றெல்லாம் வர்ணித்தாலும் அது போதாது. அதற்கும் மேலாக, அவன் ஒன்றை மட்டுமே பார்க்கிறான்; ஒன்றைக் குறித்தே கவலைப்படுகிறான்; ஒன்றிலேயே மூழ்கிக் கிடக்கிறான். அந்த ஒன்று தேவனைப் பிரியப்படுத்துவதுதான் அவன் இருந்தாலும், இறந்தாலும் - சுகமாக இருந்தாலும், சுகவீனமாக இருந்தாலும் - அவன் ஏழையாயினும் பணக்காரனாயினும் - அவன் மனிதரைப் பிரியப்படுத்தினாலும் பிரியப்படுத்தாவிட்டாலும் - அவன் அறிவுள்ளவன் என்று கருதப்பட்டாலும் அல்லது அறிவிலி என்று எண்ணப்பட்டாலும் - புகழப்பட்டாலும், இகழப்பட்டாலும், - கனமடைந்தாலும் கனவீனமடைந்தாலும் இவை எதைக் குறித்தும் ஒரு இலட்சியவாதி அல்லது வைராக்கியம் மிகுந்த மனிதன் கவலைப்படுவதே இல்லை. ஒன்றே ஒன்றிற்காக மட்டும் அவன் நெருப்பாய் எரிகிறான். அந்த ஒன்று தேவனைப் பிரியப்படுத்தி, அவரது மகிமையை வளரச்செய்வதேயாகும். எரிவதில் அவன் சாம்பலாய்ப்போனாலும் அதைப்பற்றி அவனுக்கு அக்கறை இல்லை. அதற்குப் பதிலாக அதில் அவன் மனநிறைவடைகிறான். ஒரு விளக்கைப்போல எரியவே தான் உண்டாக்கப்பட்டவன் என்பதை அவன் உணருகிறான். அவன் எரிந்து பிரகாசிக்கையில் சாம்பலாகிவிட்டாலும், பரவாயில்லை, அதுதான் அவன் செய்து முடிக்கும்படி தேவன் அவனுக்கு நியமித்த வேலை என்று அறிந்து, அதில் மகிழ்ச்சியடைகிறான். இப்பேர்ப்பட்டவன் எப்படியாகிலும் தனது வைராக்கியத்தை வெளிப்படுத்தும் வாய்ப்புகளைப் பெறுவான். அவன் செய்தி கொடுக்கவோ, உழைக்கவோ அல்லது ஊழியத்திற்கென்று பணம் கொடுக்கவோமுடியாவிட்டால் அவன் அழுவான், பெருமூச்சு விடுவான், விண்ணப்பம் செய்வான். அல்லது அவன் பரம ஏழையாயிருந்தாலும், படுத்தபடுக்கையாய் நோயுற்றிருந்தாலும்; பாவத்திற்கு விரோதமாக அவன் போராடிக்கொண்டேயிருப்பான். தன்னைச் சுற்றி நெருங்கி





நிற்கும் பாவத்தின் முன்னேற்றத்தைத் தடுப்பான். இடைவிடாமல் ஜெபம் செய்து இடையூறுகளையெல்லாம் அகற்றிவிடுவான். யோசுவாவுடன் சேர்ந்து பள்ளத்தாக்கிலே, போர்முனையிலே அவன் யுத்தம்செய்ய முடியாவிட்டாலும், மலைமேல் அமர்ந்து மோசே, ஆரோன், ஊர் என்பவர்கள் செய்த வேலையைச் செய்வான். (யாத் 17:9-13). அவன் நேரடியாக செயல்பட முடியாவிட்டால் வேறொரு இடத்திலிருந்து ஒத்தாசை வருமட்டும் அவன் தேவனுக்கு ஓய்வு கொடுப்பதில்லை. எப்படியும் அவனால் அந்த வேலை நிறைவுபெறுகிறது. இதைத்தான் கிறிஸ்தவ வாழ்க்கையில் வைராக்கியம் என்கிறேன்.

# விசுவாசம்

ஜீவனுள்ள தேவன்மேல் ஆழ்ந்த, அழுத்தமான, கேள்வி கேட்காத விசுவாசம் இருந்தாலன்றி, மெய்யான சீஷத்துவம் இருக்கமுடியாது. தேவனுக்காக பலத்த பராக்கிரமச் செயல்களை செய்ய ஆசிக்கிறவன் எவ்விதச் சந்தேகமும், சலனமுமின்றி அவரையே நம்பியிருக்க வேண்டும். "தேவனுடைய பலத்த மனிதர் யாவரும் பலவீனமான மனிதர்களாகவே இருந்தனர். சாதாரணமான இம்மனிதர் அசாதாரணமான செயல்களைச் செய்தார்கள் என்றால் அதற்குக் காரணம், தேவன் தங்களோடு இருக்கிறார் என்ற அவர்களது அசைக்கமுடியாத நம்பிக்கையே" என்று ஹட்சன் டெய்லர் கூறுகிறார்.

மெய்யான விசுவாசம் எப்பொழுதும் தேவனுடைய வாக்குறுதியை அல்லது வசனத்தின் ஒரு சிறுபகுதியைச் சார்ந்திருக்கும் இது இன்றியமையாத ஒன்றாகும். ஒரு விசுவாசி முதலாவது கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை வாசிக்கிறான், அல்லது கேட்கிறான். பின்னர் மிகத் தனிப்பட்ட ஒரு விதத்தில் அதனைப் பரிசுத்த ஆவியானவர் அவன் இருதயத்திலும், மனசாட்சியிலும் ஒரு விசேஷித்த விதத்தில் நடைமுறைப் படுத்துகிறார். இப்பொழுது தேவன் தன்னுடன் நேரடியாகப் பேசிவிட்டார் என்ற நிச்சயத்தை அந்தக் கிறிஸ்தவன் பெற்றுக்கொள்கிறான். இவ்வாறு தனக்கு வாக்கருளினவரை முழுமையாக நம்பலாம் என்ற அசைக்கமுடியாத நிச்சயத்தோடும் நம்பிக்கையோடும் அந்தக் கிறிஸ்தவன் தனக்குக் கிடைக்கும் என்று சொல்லப்பட்டதை மனுஷீகப்பிரகாரம் நடக்கமுடியாது என்றபோதிலும், அது நிறைவேறிவிட்டதாகவே எடுத்துக்கொள்கிறான்.





அல்லது அதுபோல் வாக்குத்தத்தமாக இல்லாமல், ஒரு கட்டளையாக இருக்கலாம். விசுவாசம் இந்த வித்தியாசத்தைப் பார்ப்பதில்லை. தேவன் கட்டளைகொடுத்துவிட்டால் அதை நிறைவேற்றும் சக்தியையும் அருளுவார். நீரின் மேல் நடப்பதற்கு அவர் பேதுருவுக்குக் கட்டளையிட்டால், அதற்குத் தேவையான அற்புதத்தையும், ஆற்றலையும் கூடவே அருளுவார் என்று பேதுரு நிச்சயமாக நம்பக்கூடும் (மத். 14:28). அங்ஙனமே, சகல சிருஷ்டிக்கும் சுவிஷேத்தைக் கூறி அறிவிக்க அவர் நமக்குக் கட்டளைகொடுத்தால், அதற்குத் தேவையான கிருபையும் நமக்கு அருளப்படுமென்று நாம் நிச்சயமாக நம்பலாம் (மாற். 16:15).

"கூடும் அல்லது செய்யமுடியும் என்ற இடத்தில் விசுவாசம் செயல்படுவதில்லை. மனிதனால் செய்து முடிக்கக் கூடுமென்றால், அங்கு தேவனுக்கு வேலையுமில்லை, மகிமையுமில்லை. மனிதனின் சக்தி முடிவுபெறும் இடத்திலும், தரிசனம் தோல்வியடையுமிடத்திலும் செய்யக்கூடும் என்ற சாத்தியக்கூறுகள் முடிவடையும் இடத்திலும்தான் விசுவாசத்தின் அதிகாரம் துவங்குகிறது" என்று ஜார்ஜ் முல்லர் கூறுகிறார்.

"இயலாது, சாத்தியமில்லை என்பதுதான் ஒரே மறுப்புச் சொல்லாக இருக்குமானால், அது முடியும் என்று விசுவாசம் கூறுகிறது!"

"விசுவாசமானது தேவனை நமது காட்சியின் எல்லைக்குள் கொண்டுவருகிறது; எனவே அதற்கு இடர்ப்பாடுகள் எதையும் பற்றி ஒன்றும் தெரியாது - முடியாதவைகள் என்பதைப் பார்த்து விசுவாசம் எள்ளி நகையாடுகிறது. விசுவாசத்தின் மதிப்பீட்டில் ஒவ்வொரு கேள்விக்கும், பிரச்சனைக்கும் தேவனே மாபெரும் பதிலாக இருக்கிறார். - ஒவ்வொரு சிரமத்திற்கும் மிகப்பெரிய விடை தேவனே. எந்தவொரு பிரச்சனையாக இருந்தாலும், விசுவாசம் தேவனையே அணுகுகிறது. ஆதலால், பணத்தேவை ஆறு இலட்சமாக இருந்தாலும் சரி, ஆறாயிரம் கோடியாக இருந்தாலும் சரி, தேவன் எல்லாவற்றிற்கும் போதுமானவர்

என்பது அதற்குத் தெரியும். தனக்குத் தேவையான சாதனங்கள் அனைத்தையும் அது கர்த்தரில் கண்டடைகிறது. 'இதெல்லாம் எப்படி நடக்கும்?' என்று அவிசுவாசம் ஐயப்படுகிறது. 'எப்படி எப்படி' என்பதே அதன் கேள்வி. இவ்வாறு பதினாயிரம் தடவை 'எப்படி' என்று கேட்டாலும், விசுவாசம் ஒரே பதிலை அளிக்கிறது. அது தேவன் என்பதே" என்று சி. எச். மக்கின்டோஷ் கூறுகிறார்.

மனிதப்பிரகாரமாக நோக்கினால், ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் பிள்ளை இருக்கக்கூடும் என்பது முற்றிலும் அசாத்தியமான காரியம். ஆனால், குழந்தை இருக்கும் என்று தேவன் வாக்களித்துவிட்டார். இச்சூழலில், ஆபிரகாமைப் பொறுத்தவரையில் 'தேவன் பொய்சொல்வார்' என்பதுதான் முற்றிலும் அசாத்தியமாக இருந்தது.

உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப் பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். அவன் விசுவாசத்திலே பலவீனமா யிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனா யிருக்கும்போது, தன் சரீரம் செத்துப் போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணா திருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். (ரோமர் 4:18-21)

*"விசுவாசம், வல்ல விசுவாசம் வாக்கை*
*நம்பும் தேவனை நோக்கும்;*
*செய்ய முடியாததைச் செய்யும்*
*முழக்கமிடும் 'எல்லாம் முடியுமென்று!"*

கூடாதவைகள் என்று நாம் ஓரங்கட்டுகிறவைகளை,





நிறைவேற்றுகிறதில் நம் தேவன் சிறப்புத் தேர்ச்சிப் பெற்றவர். (லூக்கா 1:37).

அவரால் ஆகாதது ஒன்றுமேயில்லை. (ஆதியாகமம் 18:14)

"மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்." (லூக்கா 18:27)

"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்." (மாற்கு 9:23) என்ற வாக்குறுதி நிறைவேறுவதை விசுவாசம் உரிமை பாராட்டிக் கேட்பதுடன், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு". (பிலிப்பியர் 4:13) என்று பவுலுடன் சேர்ந்து பெருமகிழ்ச்சியடைகிறது.

*"சந்தேகம் தடுக்கல்லைப் பார்க்கிறது-*
*விசுவாசம் திறவுகோலைப் பார்க்கிறது!*
*சந்தேகம் நள்ளிரவினால் அஞ்சுகிறது-*
*விசுவாசம் நண்பகலாக்கி மிஞ்சுகிறது!*
*சந்தேகம் ஓரடியும் முன் வைக்காது-*
*விசுவாசம் நேரடியாய் முன்னேறுகிறது!*
*சந்தேகம் 'யார் விசுவாசிப்பார்?' என வினவ*
*விசுவாசம் 'நானே' என்றுரைக்கிறது!"*

விசுவாசம் இயற்கைக்கு மேலான ஊனக்கண்களுக்குப் புலனாகாத தெய்வீக காரியங்களில் ஈடுபாடு கொள்வதால், அது சொல்வது விவேகம் உள்ளதாக எப்பொழுதும் காணப்படுவதில்லை.

கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஆபிரகாம் தான் போகும் இடம் இன்னதென்று தெரியாமல் புறப்பட்டுச் சென்றான் என்பது "பகுத்தறிவுக்கு முரண்பாடானதாகும். (எபிரேயர் 11:8). பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு யோசுவா எரிகோவைத் தாக்க முற்படாமல், வெறுமனே இஸ்ரவேல் புத்திரர் அணிவகுத்துச் சுற்றி சுற்றி வந்தது "புத்திசாலித் தனமல்ல" (யோசுவா 6:1-20). இது "சுத்தப் பைத்தியக் காரத்தனம்" என்று உலகத்தார் எள்ளி நகையாடுவர். ஆனால்

தேவனைப்பற்றும் விசுவாசம் ஜெயத்தைக் கொடுத்தது!

உண்மையில் விசுவாசம் மிக விவேகமானது, நியாயமானது, சிருஷ்டிக்கப்பட்டது. தன்னைச் சிருஷ்டித்தவரை நம்புகிறதைப் பார்க்கிலும் அதிக புத்திசாலித்தனமானது வேறு எதுவுண்டு? பொய் சொல்லக்கூடாத, ஏமாற்றக் கூடாத, தவறு செய்யக்கூடாத ஒருவரை நம்புவது மதியீனமா? தேவனைச் சார்ந்திருப்பதுதான் ஒரு மனிதன் செய்யக்கூடிய ஆரோக்கியமான, பகுத்தறிவுள்ள விவேகமான செயல். அது இருளுக்குள் தாவிச் செல்லுவதல்ல. மிக உறுதியான சான்று வேண்டும் என்று கேட்கிற விசுவாசம், அதைத் தேவனுடைய மாறாத, தவறாத வார்த்தையில் கண்டுகொள்கிறது. ஒருவராகிலும் தேவனிடத்தில் விருதாவாக நம்பிக்கை வைத்ததில்லை; இனிமேலும் வைக்கப் போவதில்லை. காலத்தில் விசுவாசம் வைப்பதில் எவ்வித இடர்ப்பாடும் இல்லை.

விசுவாசம் மெய்யாகவே தேவனை மகிமைப் படுத்துகிறது. அவர் ஒருவரே முற்றிலும் நம்பிக்கைக்குப் பாத்திரர் என்று அவருக்குரிய தகுதியான இடத்தைத் தருகிறது. ஆனால், அதற்கு மாறாக அவிசுவாசம் தேவனைக் கனவீனப் படுத்துகிறது; அவர் பொய்யுரைக்கிறார் என்றும் குற்றம் சாட்டுகிறது. (1யோவான் 5:10) இஸ்ரவேலரின் பரிசுத்தரை அது மட்டுப்படுத்துகிறது. (சங்கீதம் 78:41).

மேலும் விசுவாசமானது மனிதனுக்கும் அவனுக்குரிய சரியான இடத்தைக் கொடுக்கிறது; ஏனென்றால், எல்லாம் வல்ல இறைவனுக்கு முன்பாகஅவன் மண்டியிட்டு, பணிந்து மன்றாடுகிறான் - தனது இயலாத் தன்மையை அறிக்கை செய்கிறான்.

விசுவாசம் கண்களால் கண்டு - தரிசித்து - நடப்பதற்குநேர் மாறானது. "நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" (2கொரிந்தியர் 5:6) என்று பவுலும் நினைப்பூட்டுகிறார். தரிசித்து நடத்தல் என்றால் என்ன? வாழ்க்கைக்கு ஆதாரமாகப் புலனாகும் உடைமைகள், எதிர்காலத்துக்குப் போதுமான





சேமிப்புகள், எதிர்பாராத இடர்ப்பாடுகளைச் சந்திப்பதற்குச் சாமர்த்தியமான ஆயுள் காப்பீடுகள் முதலானவை இதிலடங்கும். இதற்கு முற்றிலும் எதிரிடையானது விசுவாச ஜீவியமாகும்; நொடிக்கு நொடி கர்த்தரையே சார்ந்திருப்பதாகும். நெருக்கடிகள் தொடர்ந்து வந்திடினும் கர்த்தர் மீதுள்ள பார்வையைத் திருப்பாமலிருப்பதாகும். கண்களுக்குப் புலனாகாத, ஆவியாக, அரூபியாக இருக்கிற கடவுளையே முற்றிலும் சார்ந்திருப்பது மாம்சத்துக்கு முடியாத ஒரு காரியம். அது ஒரு சாய்மானத்தைத் தேடுகிறது. தான் போகும் இடத்தை அது அறிய முடியாவிட்டால் அது சோர்ந்து போவதுடன் நரம்பு தளர்ச்சியடைந்துவிடும். ஆனால் விசுவாசமோ, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு மேலாக எழும்பிப் பறக்கிறது. தேவையான யாவும் அளிக்கப் படுவதற்குத் தேவனையே சார்ந்திருக்கிறது.

விசுவாசத்தில் நடக்கத் தீர்மானிக்கும் எந்த ஒரு சீஷனும் சோதிக்கப்படுவான் என்பது நிச்சயம். கூடிய சீக்கிரம் அவன் நம்பியிருக்கும் மனித ஆதாரங்கள் அவனை விட்டு அகற்றப்படும். வேறுவழியின்றி, பிறர் உதவியை நாடும்படி சோதிக்கப்படுகிறான். ஆனால், அவன் உண்மையில் கர்த்தரைச் சார்ந்திருந்தால், தனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக மட்டுமே தன் கண்களை ஏறெடுப்பான்.

''என்னுடைய தேவைகளை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒரு மனிதனுக்குத் தெரியப்படுத்துவது விசுவாச வாழ்க்கையிலிருந்து வழிவிலகிச் செல்வதும், தேவனை நிச்சயமாகவே அவமதிப்பதுமாகும். உண்மையில், அது அவரைக் காட்டிக் கொடுப்பதாகும். கடவுள் என்னைக் கைவிட்டு விட்டார், இனிமேல் நீங்கள்தான் எனக்கு உதவ வேண்டும் என்று மனிதரிடம் கையேந்துவதற்கு ஒப்பாகும். ஜீவதண்ணீர் ஊற்றாகிய (தேவனை) விட்டு விட்டு, வெடிப்புள்ள தொட்டிகளை உண்டாக்கிக் கொள்வதாகும். (மாம்சத்தை

நம்புவதாகும்). (எரேமியா 2:13) எனக்கும் எனது சிருஷ்டிகருக்கும் நடுவே, ஒரு மனிதனை - சிருஷ்டியை நிறுத்தி அவனை நம்புவேனென்றால், என் ஆத்துமாவுக்குக் கிடைக்கும் வளமான ஆசிர்வாதங்களை நான் களவாடிக் கொள்வதுடன், என் தேவனுக்கும் அவருக்குரிய மகிமையைச் செலுத்தாதவனாயிருப்பேன். - சி. எச். மேக்கின்டோஷ்.

தனது விசுவாசம் அதிகரிக்கவேண்டும் என்று ஆசிப்பதே ஒரு சீஷனின் சரியான மனப்பான்மையாகும். (லூக்கா 17:5). அவன் தனது இரட்சிப்புக்காக ஏற்கெனவே கிறிஸ்துவை நம்பியிருக்கிறான். இப்பொழுது கர்த்தருடைய ஆட்சி தனது வாழ்க்கையின் அநேக பகுதிகளில் விரிவடைய வேண்டுமென்று வாஞ்சிக்கிறான். நோய்கள், பரீட்சைகள் துன்ப துயரங்கள், ஆபத்துகள் ஆகியவற்றைச் சந்திக்கும்போது அவன் தேவனை புதிய விதத்தில், அதி நெருக்கமாக அறிந்து கொள்கிறான். அவனுடைய விசுவாசமும் ஸ்திரப்படுகிறது. 'அப்பொழுது நாம் அறிவடைந்து, கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்.' (ஓசியா 6:3) இந்த வாக்குறுதியின் உண்மையை அந்த சீடன் நிருபித்துக் காட்டுகிறான். எவ்வளவுக்கதிகமாக கடவுள் நம்பப்படத்தக்கவர் என்று அறிகிறானோ அவ்வளவுக்கதிகமாக அவன் பெரிய பெரிய காரியங்களுக்கும் கர்த்தரை முழுவதுமாக நம்புகிறான்.

விசுவாசம் கேட்பதினால் வருகிறது; கேட்பது தேவனுடைய வசனத்தினால் வருகிறது. எனவே சீஷனானவன் திருவசனத்தில் ஊறிப்போகிறதினால், அதைக் கற்றறியவும், மனனம் செய்யவும், இரவும் பகலும் அதில் தியானமாயிருக்கவும் மிகவும் வாஞ்சிக்க வேண்டும். அதுவே அவனுக்கு திசைகாட்டும், வழிகாட்டும் கருவி, ஆறுதல், விளக்கு மற்றும் வெளிச்சமாகும்.

விசுவாச வாழ்க்கையில் ஒருவர் எப்பொழுதுமே வளர்ச்சியடைந்து, முன்னேறுவதற்கு இடமுண்டு. விசுவாசத்தினால் நமது முன்னோர் சாதித்திருப்பதை வாசிக்கும் பொழுது, நாமோ ஒரு மகாசமுத்திரத்தின் ஓரத்தில் விளையாடிக்





கொண்டிருக்கும் சிறுபிள்ளைகளைப்போல இருக்கிறோம். விசுவாசச் சாகசச் செயல்களை எபிரேயர் 11-ம் அதிகாரம் முழுவதிலும் வாசிக்கிறோம். 32 முதல் 40 வரையுள்ள வசனங்களுக்கு வரும்பொழுது நாம் மகா உன்னதமான மலைச்சிகரத்தை அடைகிறோம்:

"பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கததரிசிகளையும் குறித்து நான் விவரம் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது. விசுவாசத்தினாலே அவர்கள ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்ளைப் பெற்றார்கள் சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக் கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந் திருக்கப் பெற்றார்கள். வேறுசிலர் மேன்மையான உயிர்த் தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சை பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும், உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள். உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக

நியமித்திருந்தார்." (எபி. 11:32-40).

முடிவானதொரு வார்த்தை! விசுவாசித்து நடக்கிற ஒரு சீடனை உலகத்தார் சொப்பனக்காரன் என்றோ அல்லது வெறியன், பித்தன் என்றோ விமர்சிப்பது சகஜமே என்று கண்டோம். ஏனைய கிறிஸ்தவர்களும் கூட அவ்வாறு கருதினால் ஆச்சரியமில்லை! "தேவனோடு சஞ்சரிப்பதற்கு வழி வகுக்கும் விசுவாசத்தைக் கொண்டு அவன் மனிதருடைய கருத்துக்களுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுக்கிறான் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்."

சி.எச்.மேக்கின்டோஷ்



# ஜெபஜீவியம்

ஜெபத்தைக் குறித்து திருப்திகரமான முறையில் விளக்கமாகவும் முழுமையாகவும் எழுதப்பெற்றுள்ள ஒரே நூல் பரிசுத்த வேதாகமம் தான். இப்பொருளின்பேரில் பரிசுத்தவான்கள் எழுதியுள்ள பல நூல்களும் சிறந்தவை என்றபோதிலும் அவை குறைவுடையனவே. அவற்றை நாம் படிக்கையில் நாம் அடையக்கூடாத ஆழங்களும், அளக்கமுடியாத சிகரங்களும் உள்ளன என்ற உணர்வையே அவை உண்டாக்குகின்றன. ஆதலால், பிறருடைய பிரயாசங்களைக் காட்டிலும், அதிகமாக இச்சிறு நூலில் எழுதிவிடமுடியாது என நம்புகிறோம். நாம் செய்யக் கூடியதெல்லாம் முக்கியமான ஜெபக்கோட்பாடுகளை முறைப்படுத்தி சுருக்கமாகக் கூறுவதுதான். அதிலும் கிறிஸ்தவ சீஷத்துவத்தோடு தொடர்புடையனவற்றை மட்டும் தொகுத்துக் கூற முற்படுவோம்.

1. உள்ளத்தில் எழும் பலத்த தேவையினின்றே சிறப்பான ஜெபம் பிறக்கும். நாமெல்லாரும் இதை உண்மை என்று நிரூபித்திருக்கிறோம். நம் வாழ்க்கையில் கொந்தளிப்பு இல்லாமல் அமைதி நிலவும் போது நம் ஜெபங்கள் மந்தமானவையாகவும், வழக்கமானவையாகவும் இருக்கும். ஒரு நெருக்கடியான நிலைமைக்குள் நாம் வரும்போது, அல்லது ஆபத்து நெருங்கும்போது, அல்லது கொடிய நோயால் நாம் வருந்தும்போது, அல்லது நமக்கருமையான வர்களை இழந்து தவிக்கும்போது நமது ஜெபங்களெல்லாம் உயிர்த்துடிப்புள்ளவைகளாக, ஊக்கமுள்ளவைகளாக மாறிவிடுகின்றன. "உங்கள் அம்பு பரலோகத்திற்குள் நுழைய வேண்டுமானால், அது நன்கு வளைக்கப்பெற்ற

வில்லினின்று செலுத்தப்படவேண்டும்" என்று ஒரு பக்தன் கூறுகிறார். மிக அவசரமான நிலைமை, உதவி ஏதுமற்ற சந்தர்ப்பம், தேவையின் தீவிரம் ஆகியவற்றினின்று பிறக்கும் ஜெபங்கள்தான் மிகச் சிறப்பாக இருக்கின்றன.

ஆனால், துர்அதிர்ஷ்டவசமாக, நம்மைநாமே பாதுகாத்துக்கொள்வதற்கும், நமது அவசரத்தேவைகளை நமது முயற்சிகளாலேயே நிறைவு செய்வதற்கும் நம் வாழ்க்கையின் பெரும்பகுதியை செலவிடுகிறோம். நாம் எண்ணிப் பார்க்கக்கூடிய எதிர்கால நெருக்கடிகளையெல்லாம் சமாளிப்பதற்காக நாம் சாமர்த்தியமான வியாபார முறைகளைக் கையாண்டு போதுமான சம்பாத்தியங்களையும், சாதனங்களையும் உருவாக்கிக் கொள்கிறோம். அலாதி மனுஷீகத் திறமைகளினால் நாம் குறைவற்ற செல்வந்தர்களாகவும், உடைமையஸ்தர்களாகவும் நம்மை வளர்த்துக் கொள்கிறோம். இவ்வாறு ஒரு சுயநிறைவு நிலையை அடைந்த பின்னர் ஏன் நம் ஜெபவாழ்க்கை ஆழமற்று, அனலற்று, உயிரற்று காணப்படுகிறது என்று ஆச்சரியப்படுகிறோம். வானத்திலிருந்து அக்கினி ஏன் விழவில்லை என்றும் அதிசயிக்கிறோம். உண்மையாகவே நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடந்தால் நமது ஜெபவாழ்க்கையில் ஒரு புரட்சியே ஏற்பட்டுவிடும்.

2. வெற்றிகரமான ஜெபத்திற்கு ஒரு நிபந்தனை என்னவென்றால், "நாம் உண்மையுள்ள இருதயத்தோடு கிருபாசனத்தண்டை கிட்டிச்சேரவேண்டும்" (எபி 10:22). இதன் பொருள் என்னவென்றால் நாம் கர்த்தர் முன்னிலையில் யதார்த்தமும் உண்மையுமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும் என்பதுதான். கர்த்தருக்கு முன்பாக எவ்விதமான மாய்மாலமும் காணப்படக்கூடாது. இந்த நிபந்தனையை நிறைவேற்றுவோமானால், நாமே செய்யக்கூடியதொன்றை தேவன் செய்யுமாறு கேட்கமாட்டோம். எடுத்துக்காட்டாக, நம்மிடம் நிறையப்





பணம் இருக்கும்பொழுது, வேறொரு கிறிஸ்தவ ஊழியத்திற்கு அல்லது பின்தங்கினோர் மத்தியில் திருப்பணி சிறப்பாக நடைபெறுவதற்கு, தேவனிடம், ''பணம், பணம்'' என்று அலட்டிக்கொண்டே இருக்கமாட்டோம். நாம் ஏறெடுத்த அல்லது ஏறெடுக்கப்போகிற ஜெபத்திற்குரிய விடை நம்மிடமே இருக்குமானால், நாம் அதைச் சரிவர பயன்படுத்த மனிதில்லாதிருந்தால் தேவன் எவ்வாறு அந்த ஜெபத்திற்குப் பதிலளிப்பார்?

நாமே பணித்தளத்திற்குச் செல்ல மனமற்றிருக்கும்போது ஊழியத்திற்குப் பிறரை அனுப்பும் என்று நாம் எப்படித் துணிகரமாக விண்ணப்பம் செய்யலாம்? இந்துக்கள், முஸ்லீம்கள் மற்றும் பல இரட்சிக்கப்படாதோர் சார்பில் ஆயிரக்கானக்கான மன்றாட்டுகள் ஏறெடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், அந்த மக்களை அணுகுவதற்கு தாங்களே உபயோகிக்கப்பட முன்வந்திருப்பார்களென்றால், கிறிஸ்தவ மிஷனரிப் பணியின் வரலாறு வேறுபட்டதாகவும், அதிக ஊக்கமளிப்பதாகவும் இருந்திருக்கும்.

3. நம்முடைய ஜெபமானது கேள்வி கேட்காத உள்ளதை உள்ளபடி விசுவாசிக்கும் எளிதான ஜெபமாக இருத்தல் அவசியம். ஜெபத்தைக் குறித்த இறையியல் பிரச்சனைகளில் அல்லது விளக்கங்களில் நாம் மூழ்கிவிடக்கூடும். இதன் விளைவு ஆவிக்குரிய மந்த நிலையாகும். ஜெபத்தோடு தொடர்புடைய இரகசியங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதைக் காட்டிலும், நேரடியாக ஜெபிப்பதே உத்தமம். வேதசாஸ்திர பண்டிதர்கள் வேண்டுமானால் ஜெபத்தைப் பற்றிய தங்கள் கொள்கைகளையும், இலக்கணங்களையும் வகுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஏழை விசுவாசியோ பரலோகத்தின் கதவுகளைக் குழந்தையைப்போல பலமாய்த் தட்டிக்கொண்டிருக்கிறான். "அதிகக் கல்வியறிவு இல்லாதோர் பரலோகத்தைப் பலவந்தமாகப் பிடித்துக்

கொள்கின்றனர். நாமோ நமது அதிகப்படிப்புடன் மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் மேலாக உயர்ந்து எழுவதில்லை", என்று அகஸ்டின் கருதுகிறார்.

*"அவர் செயல்படும் முறையை நானறியேன்,*

*ஆனால் எனக்குப் பதிலளிக்கிறார் - நானறிவேன்.*

*"ஊக்கமான ஜெபம் கேட்கப்படுகிறது அதன்*

*நேரத்தையும பதிலையும் நானறியேன;*

*"இன்றோ என்றோ பதில் நிச்சயம்,*

*நான் ஜெபித்துக் காத்திருப்பேன்.*

*"நான் ஆசீர்வாதத்தைத் தேடினேன்*

*கிடைக்குமா கிடைக்காதோ நானறியேன்*

*"ஒப்படைத்தேன என் ஜெபங்கள் அனைத்தும,*

*அவர் சித்தமே என் பாக்கியம்"*

- லோலா சி. ஹென்சன்

4. உண்மையான ஜெபத்தின் முழுப்பலனையும் நாம் பெறவேண்டுமானால், ஒன்றையும் நாம் நமக்கென்று வைத்திருக்கக்கூடாது. என் முழுமையும் அவருக்கே என்று சமர்ப்பிக்காமல், எதையாகிலும் நமக்கென்று பிடித்துவைத்துக்கொள்வோமென்றால் நமது ஜெபம் நிறைவான பலனைத்தராது. எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டுக் கர்த்தரைப் பின்பற்றி, கிறிஸ்துவையே ஈடு இணையற்ற இராஜாதி இராஜாவாக முடிசூட்டுகின்ற பக்தியே அவர் கனப்படுத்த விரும்பும் பக்தியாகும்.

5. ஜெபத்திற்காக நாம் ஒரு கிரயத்தைச் செலுத்த முன்வருவோமானால் அந்த ஜெபத்தை தேவன் சிறப்பாக மதிக்கிறார். தம்முடைய பிதாவோடு ஐக்கியம் கொண்டு, அன்றன்றுள்ள ஊழியத்திற்கான உத்தரவுகளைத் தம் பிதாவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக அதிகாலை இருட்டோடே எழுந்து, தனிமையில் போய் ஜெபித்த





வருடன் ஐக்கியம்கொண்டு மகிழவேண்டுமானால், நாமும் அதிகாலையில் நேரப்பட எழுந்திருந்து ஜெபிக்க வேண்டும். அப்படியே இரவுமுழுவதும் விழித்திருந்து விண்ணப்பம் பண்ணுவோரும், விண்ணப்பத்தில் விழித்திருப்போரும் எவரும் மறுக்கமுடியாத தேவபலனைப் பெற்றனுபவிக்கின்றனர். கிரயமில்லாத ஜெபம், மதிப்பில்லாத ஜெபமாகவும், கிறிஸ்தவ மதத்தின் மலிவான உபபொருளாகவும் இருக்கும்.

புதிய ஏற்பாடு உபவாச ஜெபத்தையும் அதிகமாக வலியுறுத்துகிறது. உணவைத் தவிர்த்தால் ஊக்கமான ஜெபத்தில் ஈடுபடலாம். சரீரப்பிரகாரமாகப் பார்த்தாலும், வயிற்றில் மந்தம் இல்லாவிட்டால் அது மனத்தெளிவையும், மனோவாஞ்சையையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. அதேபோன்று ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு பார்க்கும்பொழுதும், நமது அத்தியாவசியமான ஆகாரத்தைப் பார்க்கிலும், ஜெபத்திற்கு முதலிடம் கொடுக்கும்போது, அந்த ஜெபத்திற்குக் கர்த்தர் மகிழ்ச்சியாய் பதிலளிக்கிறார்.

6. தன்னயமான ஜெபத்தைத் தவிர்க்கவேண்டும். "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பமபண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக் 4:3). கர்த்தருக்கடுத்த காரியங்களே நம் ஜெபங்களில் முதன்மையான பாரமாயிருக்கவேண்டும். "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்பது நமது ஜெபத்தில் முதலிடம் பெறவேண்டும். பின்புதான், "அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்" என்று கேட்க உரிமை பெறுகிறோம்.

7. தேவன், நமது புத்திக்கு எட்டாத பெரிய தேவனாயிருக்

கிறதினால் பெரிய விண்ணப்பங்களை ஏறெடுத்து அவரைக் கனம்பண்ணவேண்டும். தேவனிடமிருந்து பெரியகாரியங்களை எதிர்பார்ப்பதற்கான விசுவாசமும் நம்மிடம் காணப்படவேண்டும். "கர்த்தருக்காகப் பெரிய காரியங்களைச் செய்; அவரிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்'', என்று வில்லியம் கேரி கற்றுக்கொடுத்தார்.

*''மாமன்னர் முன் வருகிறாய்*
*மாபெரும் மனுக்களோடே*
*மாபெரும் அவர் அன்பிற்கும் ஆற்றலுக்கும்*
*முன்வைக்கும் உன் வேண்டுதல் அற்பந்தானே!''*

- ஜான் நியூட்டன்

அநேக சந்தர்ப்பங்களில் நாம் கர்த்தரிடம் மிகக் குறைவானதையே கேட்டு அவரைத் துக்கப்படுத்துகிறோம். வெகு அற்பமான வெற்றிகள், குறைந்த சாதனைகள், பலவீனமான ஏக்கங்கள், மேலானவற்றில் குறைந்த நாட்டம் ஆகியவற்றோடு நாம் திருப்தியடைந்துவிடுகிறோம். நம்முடைய குறைவான ஜெபங்களினால், நம்முடைய தேவனை நாம் மட்டுப்படுத்துவதுமன்றி, அவர் மிகப்பெரிய தேவன் என்ற உண்மையை நம்மைச் சூழ இருக்கும் மக்களுக்கு உணர்த்தத் தவறிவிடுகிறோம். ஆண்டவரை அறியாதவர்கள், "உங்கள் தேவன் எவ்வளவு பெரியவர்!" என்று அதிசயத்தோடு நம்மிடம் விசாரியாததின் மூலம் தேவனை மகிமைப்படுத்தாமற் போனோம் அல்லவா?

''அவர்கள் என் மூலமாய்த் தேவனை மகிமைப் படுத்தினார்கள்'' என்று அப்போஸ்தலனைக் குறித்து சொல்லப்பட்டதுபோல, நம்மைப்பற்றிச் சொல்லப்படுவது எவ்வளவு அரிதாயிருக்கிறது!" - இ. டபிள்யு. மூர்.

8. நாம் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்கிறோமா என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். பின்பு அவர் செவி சாய்த்துப் பதிலளிப்பார் என்று





விசுவாசிக்க வேண்டும். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானல், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்."

(1 யோவான் 5:14-15).

கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் ஜெபம பண்ணுவது என்பது அவருடைய சித்தத்தின்படி ஜெபிப்பதைக் குறிக்கிறது. நாம் உண்மையாகவே அவருடைய நாமத்தில் ஜெபிப்போமானால் அது நமது மனுவை கிறிஸ்துவே தமது பிதாவினிடத்தில் சமர்ப்பிப்பது போலாகிறது. "நீங்கள் என் நாமத்தினாலே எதைக்கேட்பீகளோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்". (யோவான் 14:13-14). "அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்க மாட்டீர்கள். மெய்யாகவே, மெய்யாகவே; நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்." (யோவான் 16:23). "அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக்காரியத்தைக் குறித்தாகிலும் பூமியில் ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன், என்றார்." (மத்தேயு 18:19-20)

"அவருடைய நாமத்தில் கேட்பது" என்பது அவர் நமது கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, நமதருகில் அவரும் நம்முடன் முழங்கால் படியிட்டிருக்க, அவருடைய வாஞ்சைகள்,

விருப்பங்கள் எல்லாம் நம்மிருதயத்தின் மூலம் தேவனிடத்திற்குப் பாய்ந்து செல்லுகிறது என்பதாகும். அவர் 'நாமம்' என்பது அவருடைய தன்மையைக் குறிக்கிறது, அவர் எவ்வாறிருக்கிறாரோ அதைக் குறிக்கிறது. எனவே கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிப்பது என்றால், அவருடைய பாத்தியமான சித்தத்தின்படி வேண்டுதல் செய்வதாகும். தீமை உண்டாகும்படி - தீய நோக்கத்தோடு - நான் தேவ குமாரனின் நாமத்தில் ஜெபிக்கலாமா? நான் மன்றாடுவது மெய்யாகவே அவர் தன்மையின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும். ஜெபத்தில் நான் அதைச் செய்யக் கூடுமா? நம்முடைய ஜெபம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையும், கிறிஸ்துவின் சிந்தையையும், நம்மிடத்திலும், நமக்காகவும் கிறிஸ்துவின் அவாக்களை சுவாசிப்பதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு நாம் மேன்மேலும் அவருடைய நாமத்தில் ஜெபிக்கக் கர்த்தர் கற்றுக் கொடுப்பாராக. கண்டிப்பாக, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஸ்தோத்தரிக்கப்பட்ட நாமத்திலே ஜெபிக்கிறேன்." என்று தான் முடிக்க வேண்டும் என்பதில்லை; ஆனால் அதற்குப் பதிலாக விண்ணப்பம் முழுவதிலும் இயேசுகிறிஸ்துவின் ஆசிர்வதிக்கப்பட்ட நாமம் ஊடுருவி, பரந்து, நிறைந்து இருக்க வேண்டும் - ஜெபம் முழுவதுமே அந்த நாமத்தின் பண்புகளுக்கு இசைந்தே இருக்க வேண்டும்."

- சாமுவேல் ரிடுட்

9. நம் ஜெபவாழ்க்கை மெய்யாகவே வல்லமை நிறைந்ததாக இருக்கவேண்டுமென்றால், உடனுக்குடன் நாம் நமது குறைகளையும், தவறுகளையும் கர்த்தரிடத்தில் அறிக்கை செய்து ஒப்புரவாகி விடவேண்டும். அதன் அர்த்தமாவது நம் வாழ்க்கைக்குள் பாவம் நுழைந்துவிட்டது என்ற உணர்வு ஏற்பட்ட உடனே, அதை அறிக்கை செய்து விட்டு விடவேண்டும். "என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச்செவி கொடார்." (சங்கீதம் 66:18). அடுத்ததாக, நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். "நீங்கள் என்னிலும், என்





வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்.'' (யோவான் 15:7) கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறவன் அவருக்கு வெகு அருகில் தங்கியிருப்பதால், அவன் கர்த்தருடைய சித்தத்தின் அறிவால் நன்றாகவே நிறைந்திருக்கிறான். எனவே அவன் ஞானமுடன் ஜெபம் செய்ய முடியும்; பதிலும் தவறாமல் கிடைக்கும் என்ற நிச்சயத்துடனும் இருக்க முடியும். மேலும் அவரில் நிலைத்திருப்பது என்றால், அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்திருப்பது என்றும் அர்த்தமாகும். "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குமுன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்கிறது எதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்கிறோம்." (1 யோவான் 3:22). இவற்றின் மூலமாக நாம் அறிகிறதாவது, நம் ஜெபங்களுக்குப் பதில் கிடைக்க வேண்டுமானால், நமது ஆத்துமா கர்த்தருடன் சரியான ஐக்கியத்திலிருக்க வேண்டும். (1 யோவான் 3:20) என்பதே.

10. ஒரு நாளின் குறிப்பிட்ட சில நேரங்களில் மட்டும் ஜெபிக்கவேண்டும் என்று நாம் முடிவு செய்து விடக் கூடாது. எப்பொழுதும், இடைவிடாது ஜெபசிந்தனையுடன் இருக்க வேண்டும். தெருவில் நடக்கும்போதும், கார் ஓட்டிக் செல்லும் போதும் அலுவலகத்தில் அமர்ந்து வேலை செய்யும் போதும், அல்லது வீட்டிலிருந்து பணிபுரியும் போதும் நாம் கர்த்தரை நோக்கிப் பார்த்து ஜெபித்துக் கொண்டிருக்கலாம். இந்த இயல்பான ஜெப ஜீவியத்திற்கு நெகேமியா ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறான். (நெகேமியா 2:4) "உன்னதமானவரின் உயர் மறைவுக்குள்" சிற்சில வேளைகளில் சென்றுவருவதைவிட, அங்கேயே வசிப்பது எத்தனை நல்லது!

11. இறுதியாக நமது ஜெப விண்ணப்பங்கள் தெளிவாகவும்,

திட்டவட்டமாகவும் இருத்தல் வேண்டும். திட்டவட்டமாகச் செய்யப்படும் ஜெபங்களுக்கே திட்டவட்டமான பதில் கிடைக்கிறது.

ஜெபிப்பது ஒரு மாபெரும் சிலாக்கியம். இம்முறையினால் தேவனைக் கொண்டு மனிதனை அசைக்கிறோம் என்று ஹட்சன் டெய்லர் கூறுகிறார். "ஆச்சரியமான இந்த ஜெபப் பிரதேசத்தில் நமது கரங்களின் மூலமாக எண்ணில்லாத அற்புதங்களையும், அதிசயங்களையும் செய்யும் ஊழியங்கள் பல காத்திருக்கின்றன. குளிர்ந்து தளர்ந்து போன இடங்களுக்கும், மக்களுக்கும் மகிழ்ச்சியாக சூரிய ஒளியைக் கொண்டு செல்லுகிறோம்.

மனமடிவு எனும் சிறைக் கூடங்களுக்குள் நம்பிக்கை எனும் அணையா விளக்குகளை ஏற்றி வைக்க முடியும். சிறைப்பட்டோரின் கட்டுகளை அவிழ்த்து அவர்களை விடுதலை செய்து, சுதந்திரப் பறவைகளாகப் பறந்து செல்ல விடுகிறோம். வீடுவாசலற்று இல்லற இன்பம் இழந்து வெளிநாடுகளில் வாடுவோரையும் ஒளிமயமான வாழ்வுக்குள் அழைத்து வருகிறோம். ஒடுங்கின ஆவியுள்ளோருக்குத் துதியின் உடையையும், மனமுடைந்து போனவர்களுக்குக் காயங்கட்டுதலையும், ஆனந்ததைலத்தையும் கொடுத்துத் தேற்றுகிறோம், ஆற்றுகிறோம். கப்பல் ஏறிக் கடல் தாண்டிப் போய் நற்செய்தி அறிவிப்போரும், ஆத்தும ஆதாயஞ் செய்வோரும் சபை கட்டுவோரும் நமது ஜெபங்களையே நம்பியிருக்கின்றனர். ஜெபத்தின் பலனாக பணித்தளத்தில் மட்டுமல்ல, எங்கும் அற்புதங்கள் நிகழ்கின்றன! தேவ நாமம் மகிமைப்படுகிறது." என்று ஜே.எச்ஜோவே வர்ணிக்கிறார்.

இதனுடன் தமது சாட்சியையும் சேர்த்துக் கொள்கிறவர் வென்ஹாம் என்ற தேவ எழுத்தாளர். "பிரசங்கம் செய்தல் ஒரு அரிய வரம்; அதனிலும் அரியது ஜெபவரம். வாள் போன்று அருகிலிருப்போரைத் தாக்குவது பிரசங்கம்; ஆனால்





சுரத்திலிருப்போரை எது அல்லது எப்படி தாக்கும்? அதற்குத் துப்பாக்கி தேவை; ஜெபமே அந்த துப்பாக்கி, பீரங்கி போலச் செயல்படுகிறது. சில வேளைகளில் பிரசங்கவரத்தை விட அதிக பயன்பாடுள்ளதாக ஜெபம் விளங்குகிறது."

*"கர்த்தாவே, உமது சமுகத்தில் செலவிட்ட ஒரு மணி நேரத்தில்*
*என்னே மாறுதல் எங்கள் உள்ளத்தில்,*
*மழைத்துளியால் வறண்ட நிலம் புதுமையடைவதுபோல்,*
*இருதய பாரங்கள் உருண்டோட, புத்துணர்ச்சியடைகிறோம்!*
*நாங்கள் முழங்காற்படியிட எங்களருகில் யாவும் தாழ்ந்திட,*
*நாங்கள் எழும்பிட தூரமும் சமீபமும் உயர்ந்து நிமிர்ந்து அஞ்சாதிருக்க,*
*பெலனிழந்து, மண்டியிடுகிறோம்! சத்துவமடைந்து, எழும்புகிறோம்!*
*எனவே, ஜெபம் எங்களிடத்தில் இருக்கும் போதும்,*
*உமது சந்தோஷம், பெலன், தைரியமும் இருக்கும் போதும்,*
*பின்னை ஏன், நாங்கள் பெலனற்றவர்களாகவும்,*
*எங்கள் பாரங்களை நாங்களே சுமந்து கொண்டும்,*
*சத்துவமற்றும் உணர்வற்றும்,*
*சஞ்சலத்துடனும், வருத்தத்துடனும் இருக்கின்ற*
*இந்தத் தீங்கைச் செய்ய வேண்டும்?"*

– ட்ரென்ச்

# போர்

கிறிஸ்துவின் செயல்பாட்டுத் திட்டத்தை வர்ணிக்கையில் புதிய' ஏற்பாட்டில் பல இடங்களில் அது 'போர்' அல்லது போராட்டம் என்ற உருவக அணியில் கூறப்பட்டுள்ளது. மேலெழுந்தவாரியாக வேதத்தைப் படிப்போரும் இதைக் கவனிக்காமல் இருக்கமுடியாது. உண்மைக் கிறிஸ்தவத்திற்கும் இக்காலத்துப் போலியான, உல்லாசத்தை நாடும் கிறிஸ்தவ உலகிற்கும் வெகுதூரம். இக்காலத்தில் பெருவாரியாக விரும்பப்படும் ஆடம்பர வாழ்க்கையோடும், சிற்றின்ப நாட்டத்தோடும் மெய்க் கிறிஸ்துவத்தைக் குழப்பிக் கொள்ளக் கூடாது. யதார்த்தமாக நோக்குமிடத்து மெய்க் கிறிஸ்தவம் என்பது மரணமட்டும் உள்ள போராட்டம்; மரணமேயன்றி வேறொன்றும் இவற்றைப் பிரிக்க முடியாது. நரகத்தின் சேனைகளோடு இடைவிடாமல் நடக்கும் யுத்தமாகும். இப்போரினை ஒரு கிறிஸ்தவன் பார்வையாளர் வரிசையில் அமர்ந்து பார்த்து இரசிக்க முடியாது; போரிலிருந்து பின் வாங்கும் மார்க்கமுமில்லை. முற்றிலுமாக, நேரடியாக இப்போரில் ஈடுபடத்தான் வேண்டும்.

எந்தவொரு யுத்தத்திலும் வீரர்களுக்குள் ஐக்கியமும், ஒற்றுமையும், ஒருமனப்பாடும் நிலவ வேண்டும். பிரிவினைகள் இருந்தால் தோல்வி நிச்சயம். சண்டை சச்சரவுகளுக்கும், போட்டி பொறாமைகளுக்கும், கொள்கைப் பேதங்களுக்கும் இது நேரமல்ல. அவையனைத்தும் தேச விரோத சக்திகளாகும். தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருக்கும் எந்த வீடும் நிலைநிற்காது. எனவே கிறிஸ்துவின் வீரர்கள் ஒருமித்திருந்து போர்புரிய வேண்டும். மனத்தாழ்மையே ஐக்கியத்திற்கு வழிவகுக்கும். பிலிப்பியர்-





2-ம் அதிகாரத்தில் இது தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ளது. உண்மையாகவே மனத்தாழ்மையுள்ள மனிதனிடம் வம்பு இழுக்க முடியாது; அவனை சண்டைக்கும் இழுக்க முடியாது. சண்டையிடுவதற்கு இருவர் வேண்டும். "பெருமை அல்லது படிப்பிற்குரிய தகுதியைப் பெறுவதற்காக எத்தனையோ பக்க வழிகள் பின்பற்றப்படுகின்றன. பெருமை இல்லாத இடத்தில், எவ்வித போட்டிக்கும், சண்டைக்கும் இடமிராது. யுத்த காலத்தில் ஒருக்காலும் இல்லாத கடினமான உழைப்பும், மிகுந்த தியாகமும், அதிகச் சிக்கனமான, வாழ்க்கையும் தேவைப்படுகிறது. யுத்தங்களில் ஈடுபட்டிருக்கும் எந்த நாட்டிலும் 'ரேஷனிங்' என்ற பங்கீட்டு முறை உடனடியாக அமுலுக்கு வருகிறது. உலகத்தார் எப்படி ஆடம்பரச் செலவுகளை மிச்சப்படுத்தி, எல்லா சாதனங்களையும் போர்த்தளவாடங்களாக மாற்றி போராட்டச் செலவுகளுக்கென்று அனுப்பி வைக்கின்றனர் என்பது நாமறிந்த உண்மை. அப்படியே கிறிஸ்தவர்களாகிய நாமும் ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாலும், நமது எதிரியாகிய சாத்தான் அதிக அறிவும் அனுபவமும் ஆற்றலும் மிக்கவனாக இருப்பதாலும், நமது சக்திகளையும், சேமிப்புகளையும் ஒருமுகப்படுத்தி இந்தப் போரில் வெற்றி காணவேண்டும் என்பதை இதற்குள் கிறிஸ்தவர்கள் நன்கு உணர்ந்திருக்கவேண்டும்.

இம்மாபெரும் சத்தியத்தை இளைஞனான ஒரு சீஷன் எளிதாகவும், தெளிவாகவும் கண்டு கொண்டான். அவனைப் போல எல்லாரும் அதைக் கண்டுகொண்டால் எவ்வளவு நலமாயிருக்கும்! அவன் பெயர் ஆர்-எம்- என்பதாகும். 1960-ல் அவன் அமெரிக்காவிலுள்ள கிறிஸ்தவக் கலாசாலை ஒன்றில் இளங்கலை வகுப்பின் மாணவர் தலைவனாக இருந்தான். அவனுடைய பதவிக்காலத்தில் வழக்கமாக நிலவுகின்ற வகுப்பு விருந்துகளுக்கும், மேற்சட்டைகளுக்கும், வகுப்பு அன்பளிப்புகளுக்கும் மரபுப்படி பணம் செலவிடப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கப்பட்டது. நேரடியாக

நற்செய்தியைப் பரப்புவதற்கு முதலிடம் கொடாமல் இவ்வாறு வீணான செலவுகள் செய்வதை, அங்கீகரிக்காத அந்த இளைஞன் தன் பதவியை ராஜினாமா செய்து விட்டான். தன் உடன் மாணவர்களுக்கு கீழ்க்கண்ட கடிதத்தின் நகல்களை வழங்கினான். "அன்பார்ந்த உடன் மாணவர்களே,

"வகுப்பு விருந்துகள், மேற்சட்டைகள், மற்றும் வகுப்பு அன்பளிப்புகள் ஆகியவை பற்றிய விவாதம் வகுப்பு மந்திரிசபை முன் கொண்டுவரப்பட்ட நேரத்திலிருந்தே வகுப்புத் தலைவனான நான் இவற்றிற்கும் கிறிஸ்தவ சித்தாந்தங்களுக்கும் உள்ள தொடர்பைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

"நம்மையும், நம் பொருளையும், நம் காலத்தையும் முற்றிலுமாக கிறிஸ்துவுக்காகவும் பிறருக்காகவும் கொடுப்பதில் நாம் மட்டில்லா மகிழ்ச்சி பெறுவோம் என்று எண்ணுகிறேன். 'என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான்' என்ற அருள்நாதரின் வார்த்தைகளின் உண்மைத் தத்துவத்தை இங்கே நாம் கண்டு கொள்ளலாம்"

"நாள்தோறும் ஏழாயிரம் பேர் பட்டினிச் சாவு அடையும்பொழுதும், உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேலானோர் மனிதனின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாகிய இயேசுவைப்பற்றிக் கேள்விப்படாமலிருக்கும்பொழுதும், கிறிஸ்தவர்களாகிய நாம் அவிசுவாசிகளின் நடுவில் திடமான சாட்சியை வைத்தும் மற்றும் தேவபிள்ளைகள் கிருபையில் வளருவதற்குப் பயன்படாதவற்றிற்காகப் பணத்தையும் நேரத்தையும் செலவிடுவது எப்படி நியாயமாகும் என்று கருதுகிறேன் நாம் ஒரு சிறு குழுவாகச் சேர்ந்து நமது உல்லாசத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட பணத்தை, நற்செய்தியைக் கேட்டறியாத மீதமுள்ள 60% உலக மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கப் பயன்படுத்தினால் எவ்வளவு நன்மையாகவும் தேவனுக்கு மகிமையாகவும் இருக்கும்

"இயேசு கிறிஸ்துவின் மகிமைக்காக நம் நாட்டிலேயும்,





வெளிநாடுகளிலேயும் உள்ள நம் நண்பர்களுக்கு நமது பணத்தை அதிகப் பயனுள்ள முறையில் செலவிடக் கூடுமென்று அறிந்திருக்கிறேன். ஆதலால் வகுப்புப் பணத்தை நமக்காகவே, தன்னயமாக செலவு செய்வதை என்னால் அனுமதிக்க முடியவில்லை. என்னை அவர்களுடைய இடத்தில் வைத்துப் பார்க்கிறேன். அவர்களில் ஒருவனாக, தேவை மிக்கவனாக, நான் இருந்தால் எனக்கு மற்றவர்கள் சுவிசேஷத்தின் வாசனையையும், பொருளுதவியையும் அளிக்க வேண்டுமென்றே விரும்புவேன். மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.

"ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடையவனாயிருந்து ஏன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால் அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?

"கிறிஸ்துவானவர் தமக்குண்டான எல்லாவற்றையும் நமக்குக் கொடுத்து விட்டார் (2 கொரி-8:9) என்பதை நீங்கள் காண வேண்டுமென்று ஆசித்து, அன்போடும் ஜெபத்தோடும், 1963-ஆம் ஆண்டின் வகுப்புத் தலைவனின் பதவியை விட்டு விலகிக் கொள்கிறேன்."

அவருக்குள் உங்கள் அன்பான, ஆர்.எம்.

போர்க்காலத்தில் துன்பங்களையும் நஷ்டங்களையும் அனுபவித்தே ஆக வேண்டும். இன்றைக்கும் தங்கள் நாட்டிற்காகத் தங்கள் உயிரைத் துறக்க வாலிபர் முன் வரும் பொழுது, கிறிஸ்துவின் நிமித்தமும் சுவிஷேத்தின் நிமித்தமும் உயிரைக் கொடுக்க கிறிஸதவர்கள் எவ்வளவு அதிகமாக முன் வர வேண்டும். செலவு இல்லாத விசுவாசம் எந்த விலையும் பெறாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நாம் கொஞ்சம் மதிப்புக் கொடுக்கலாம் என்றால், நம்முடைய எல்லா மதிப்புக்குமே அவர் பாத்திரர் என்று உணர்ந்து கொள்ள வேண்டும். அவருடைய சேவையில் நமது உயிருக்குப்

பாதுகாப்பு வேண்டும், நாம் துன்பம் அனுபவிக்கக் கூடாது என்ற சிந்தனைக்கே இடமில்லை.

பவுல் அப்போஸ்தலனின் அப்போஸ்தல ஊழியத்தைச் சந்தேகித்து, கேள்வி கேட்டு, குற்றம் கண்டுபிடித்துக் கொண்டிருந்த அற்பர்களுக்குப் பதிலளிக்க பவுல் முன்வந்த பொழுது, அவர் தமது குடும்பப் பின்னணியையோ, பெருமையையோ அல்லது படிப்பையோ - பட்டத்தையோ அல்லது உலகச் சாதனைகளையோ சார்ந்திராமல் அல்லது பக்க பலமாகக் கொள்ளாமல், கிறிஸ்துவினிமித்தம் தாம் அனுபவித்த பாடுகளையும், உபத்திரவங்களையுமே சுட்டிக் காண்பிக்கிறார். அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிப்பட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன். மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன். ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளல்லாமல், எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது. (2கொரி 11:23-28)

விசுவாசத்தில் தமக்கு உத்தம குமாரனாகிய தீமோத் தேயுவுக்கு மேன்மையான அறைகூவல் அளித்து, துரிதப்படுத்தும்பொழுது, நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல





போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. (2தீமோ 2:3) என்று எழுதுகிறார்.

போர் என்றாலே அங்கு கேள்வி கேட்காத பூரண கீழ்ப்படிதல் இருக்கும். நல்லதொரு போர்ச் சேவகன் தனது மேலதிகாரிகளின் ஆணைகளுக்குக் கேள்வி கேட்காமல், தாமதம் பண்ணாமல் உடனே கீழ்ப்படிவான். அப்படியானால், கிறிஸ்து இதைவிடக் குறைவான கீழ்ப்படிதலில் திருப்தியடைவார் என்பது அறிவுடைமையாகாது. சிருஷ்டி கராகவும் மீட்பராகவும், தம்மைப் பின்சென்று வருகிற தம் தொண்டர்கள் தம்முடைய ஆணைக்கு உடனடியாகவும், முழுமையாகவும் கீழ்ப்படியும்படி அவர் எதிர்பார்ப்பது அவருடைய உரிமைவரம்புக்குட்பட்டதேயாகும்.

போர் என்றாலே, போராயுதங்களைத் திறமையுடன் பயன்படுத்தும் ஆற்றல் வேண்டும். ஜெபமும் வேத வசனமுமே கிறிஸ்தவனின் பேராயுதங்கள். அவன் விசுவாசத்தோடும், விடாமுயற்சியோடும், ஊக்கத்தோடும் ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். சத்துருவின் கோட்டைகளைத் தகர்க்க இதைத் தவிர வேறொரு வழியும் இல்லை. தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தைக் கையாளுவதிலும் அவன் கைதேர்ந்தவனாக இருக்க வேண்டும். இந்த ஆவியின் பட்டயத்தைக் கீழே போட்டு விடும்படி கிறிஸ்தவனை ஏமாற்றப் பகைவன் தன்னால் ஆனதையெல்லாம் செய்வான். வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பெற்றது என்ற உண்மையைச் சந்தேகிக்கச் செய்வான். வேதத்தில் பல முரண்பாடுகள் இருக்கிறதாகச் சொல்லப்படுகிறவற்றைக் கோடிட்டுக் காண்பிப்பான். மேலும் அறிவியல், தத்துவம், மனிதப் பாரம்பரியம் என்பனவற்றிலிருந்து எதிர்த்துப் பேசும் தர்க்கங்களைக் கொண்டுவருவான். ஆகிலும் கிறிஸ்துவின் போர்வீரன் சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் தன் ஆயுதத்தைப் பயன்படுத்தி, அதன் வலிமையை நிரூபித்துத் தன் நிலையிலே உறுதியாக நிற்க வேண்டும்.

கிறிஸ்தவனின் போராயுதங்கள் உலகத்தானின் பார்வையில் அற்பமானவைகளும், நகைக்கப்படத்தக்கவைகளாகவும் இருக்கின்றன. எரிகோவின் மேல் வெற்றி தந்த திட்டத்தை இன்றைய இராணுவத் தளபதிகள் எவரேனும் ஏற்றுக் கொள்வாரா? எள்ளி நகையாட மாட்டார்களா? அஃதே போன்று கிதியோனின் அற்பமான இராணுவமும் பரியாசம் பண்ணப்படும். சிம்சோனின் தாடை எலும்பும், தாவீதின் கவணும் கல்லும், சம்காரின் தாற்றுக்கோலும், மற்றும் பரியாசத்திற்கும், பரிதாபத்திற்முரிய பல அற்பமான, அறிவில் குறைந்த தேவ சேனைகளைப் பற்றி என்ன சொல்லுவோம்? தேவன் பெரிய இராணுவத்திற்கு ஆதரவாக இருக்கிறவர் அல்லர் என்றும், அற்பமானவற்றையும்; பலவீனமான வற்றையும், தள்ளப்பட்டவற்றையும் எடுத்து உபயோகித்து அவற்றின் மூலம் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தவே விரும்புகிறார் என்பதையும் ஆவிக்குரிய மனம் அறிந்து கொள்ளும்.

போர் என்றாலே சத்துருவைப் பற்றியும், அவனது போர்த் திட்டங்களைப் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். கிறிஸ்தவப் போரிலும் அதுவே உண்மையாகும். "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு." (எபே 6.12). "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்." (2கொரி 11:14,15).

நல்ல பயிற்சியும் அனுபவமும் பெற்ற ஒரு கிறிஸ்தவ வீரன், தனக்கு வரும் மிகக் கசப்பான எதிர்ப்பு ஒரு குடிவெறியனிடமிருந்தோ, கொள்ளைக்காரனிடமிருந்தோ





அல்லது வேசியிடமிருந்தோ வராமல், பெரிய கிறிஸ்தவ ஊழியர்கள் என்று அழைக்கப்படுவோரிடமிருந்தே வருகின்றது என்று அறிந்திருக்கின்றான். தேவனின் கிறிஸ்துவை சிலுவையில் அறையக் காரணமாயிருந்தவர்கள் யார்? சமயத் தலைவர்கள் தானே. மேலும் வெறிபிடித்த சமயத் தலைவர்கள்தானே ஆதிச்சபையை உபத்திரவப்படுத்தி ஒழித்துவிடப் பார்த்தார்கள். தேவனின் ஊழியக்காரரென்று தங்களை அழைத்துக் கொண்டவர்கள் தான் பவுலை மிருகத்தனமாகத் தாக்கினார்கள். எல்லாக் காலங்களிலும் இப்படியே இருந்து வந்திருக்கிறது. சாத்தானின் தொண்டர்கள் நீதியின் ஊழியர்களைப் போலக் காட்சியளிக்கின்றனர். அவர்கள் பேசுவது பக்திப்பாஷை. அவர்கள் அணிவது சமயச்சீருடைகள். உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பக்தியின் வேஷம் போடுகிறார்கள். அவர்கள் வாயைத் திறந்தாலே பக்திப் பரவசம் மடைதிறந்த வெள்ளமாகப் புறப்பட்டு வருகிறது. ஆனால் ... ஆனால் அவர்கள் இருதயங்களோ கிறிஸ்துவையும் அவருடைய நற்செய்தியையும் அறவே வெறுக்கிறது.

போர் என்றாலே அங்கு கவனச்சிதறல் இருக்கக்கூடாது. "தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளமாட்டான்". (2 தீமோ 2:4). கிறிஸ்துவின் சீஷன், தன் ஆத்துமாவிற்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடம் அவன் வைத்திருக்கும் நிறைபக்திக்கும் நடுவில் வரும் எந்த இடையூறையும் சகித்துக் கொள்ளமாட்டான்; அத்தடைகளின் மீது தயவுதாட்சண்யம் காண்பிக்கவுமாட்டான், ஆனால் அவன் மூர்க்கனல்ல; நற்பண்பை இழக்காமல் உறுதி மனதுடன் செயல்படுகிறவன்.

போர் என்றாலே அபாயம் மற்றும் ஆபத்தைக் கண்டு அஞ்சாதிருக்க வேண்டும். "ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு,

தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.. நில்லுங்கள்". (எபே 6:13-16). இப்பகுதியில் கூறப்பட்டுள்ள வசனங்களில் கிறிஸ்தவனின் போர்க் கவசங்களில், முதுகைப் பாதுகாப்பதற்கென்று ஒன்றும் (கொடுக்கப்படவில்லை) கூறப்படவில்லை. ஏனென்றால், கிறிஸ்தவன் ஏன் சத்துருவுக்கு முதுகைக் காட்ட வேண்டும்? "நம்மில் அன்புகூருகிறவராலே நாம் முற்றும் ஜெயங்கொள்ளு கிறவர்களாய்" இருப்பதாலும், தேவன் நம் பக்கத்தில் நமக்கு அனுகூலமாக இருப்பதாலும், நம்மை எதிர்த்து வெற்றிகாண எவராலும் முடியாது. போர் துவங்கும் முன்பே வெற்றி நமக்கே என்று உறுதியளிக்கப்பட்டிருப்பதால், பின்வாங்குவதைப் பற்றிய அல்லது புறமுதுகு காட்டுவதைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லை.

*"நான் வெற்றி வீரர்களோடு நின்றாலென்ன*
*அல்லது மாளுவோரோடு மாண்டாலென்ன?*
*போர்முகத்தில் அநேகர் போரிட,*
*கோழைகள் மட்டுமே பாவிகள்.*
*முன்னேறி வரும் பலமான எதிரி,*
*என் வாளை உடைத்துவிட்டாலும், ஓ கர்த்தாவே;*
*அவன் பெருமையாகக் கொடிகட்டிப் பறந்தாலும்-*
*என் வாளின் கைப்பிடி நீண்டிருக்க எனக்கு உதவும்."*

-ஏமி கார்மைக்கேல் அம்மையாரின் மேற்கோள்.



# உலக ஆளுகையும் உலக வழிகளும்

உலகத்தை ஆளுகை செய்வதற்காகத் தேவன் நம்மை அழைத்திருக்கிறார். "மனிதனாகப் பிறந்து, பெட்டிக் கடை வியாபாரி" யாக மரிப்பது தான் நம்முடைய தலைவிதியாக இருக்கவேண்டும் என்பது ஒருபோதும் தேவனுடைய நோக்கம் அல்ல. அழிந்து போகிற நிறுவனங்களில் அற்பமான சிப்பந்திகளாக நமது பொழுதைப் போக்குவதும் அவருடைய சித்தமல்ல.

ஆதியிலே கடவுள் மனிதனைப் படைத்த பொழுது, இந்த பூமி முழுவதையும் ஆளுகை செய்யும்படி அவனை நியமித்தார். மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டி .... சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார். (சங்கீதம் 8:5-6). மனிதனுக்கு ஆட்சியையும் அதிகாரத்தையும் கொடுத்து, தேவ தூதரிலும் சற்று சிறியனவாகப் படைத்திருந்தார்.

ஆதாம் பாவம் செய்த பொழுது இறையாணையால் தான் பெற்றிருநத ஆளுகையை அநேகமாக இழந்துவிட்டான். மறுப்போர், எதிர்ப்போரின்றி சம்பூரணமாக ஆட்சி செய்கின்ற பாக்கியத்தை இழந்து, ஆட்டங் கொடுக்கிற இராஜ்யத்தில் நிலையில்லாத ஆட்சியை அமைத்துள்ளான்.

இழந்து போன ஆளுகையை மீண்டும் பெறுவதைக் குறித்துச் சுவிசேஷம் சூசகமாகத் தெரிவிக்கிறது. நம்மைக் கண்டு குலைக்கும் நாய்களையும், சீறிப்பாய வரும் சர்ப்பங்களையும் அடக்கியாளுவதைப் பற்றி நறசெய்தி கூறாமல், கர்த்தரை அறியாத ஜாதிகளை நமக்கு சுதந்திரமாகவும், பூமியின் எல்லைகளை நமக்குச் சொந்த

மாகவும் பெற்றுக் கொள்வதைப் பற்றிக் கூறுகிறது. "மெய்யான ஏகாதிபத்தியம் என்பது சன்மார்க்கத்தாலும், ஆவிக்குரிய மேலாண்மையாலும் நிறுவப்பெற்ற பேரரசாகும். அது தூய்மையான பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு வாழ்க்கையின் கவர்ச்சியால் இழுத்துக் கொள்ளப்படுவதாகும்."

- ஜே.எச். ஜோவேட்.

உண்மையில், இந்த கிறிஸ்தவ அழைப்பின் அந்தஸ்த்தை ஆதாம் சிறிதேனும் அறிந்திருக்கவில்லை. தேவனுடைய உலக மீட்பின் திட்டத்தில் நாம் கடவுளுக்குப் பங்காளிகள். "அரச வாழ்விற்கு ஆண்களையும் பெண்களையும் கர்த்தருடைய நாமத்தில் அபிஷேகிக்கவும் அவர்கள் சுயத்தை முற்றிலும் அடக்கி ஆளவும், ராஜரீக சேவையில் அவர்களை ஈடுபடுத்தவும் நாம் அனுப்பப்பட்டுள்ளோம்."

- டின்ஸ்டேல் டி. யங்.

இந்த உன்னத அழைப்பை மதிக்கத் தவறிவிட்டதே அநேகரின் வாழ்க்கையிலுள்ள சோகச் சம்பவமாகும். "அடிமைப்பபடுத்தவேண்டியதை அணைத்துக் கொள் வதிலும் அற்பமானவற்றில் சிறப்பு ஆற்றல் பெறுவதிலும்" திருப்தி அடைந்திருக்கிறோம். விண்ணில் பறக்க வேண்டியவர்கள் மண்ணில் ஊர்ந்து கொண்டிருக்கிறோம். நாம் அரசர்களாக வாழ்வதற்குப் பதிலாக, அடிமைகளாக இருப்பதில் மகிழ்ந்திருக்கிறோம். தேசங்களை கிறிஸ்துவுக்காகச் சொந்தமாக்கும் தரிசனம் ஒரு சிலருக்கே கிடைத்திருக்கிறது.

இதற்கு ஸ்பர்ஜன் ஒரு விதிவிலக்கு. தம் மகனுக்கு எழுதிய கடிதத்தில், பின்வரும் உயிரூட்டும் செய்தியை எழுதினார்.

"நீ ஒரு கிறிஸ்தவ பணியாளனாக இருக்க வேண்டுமென்று தேவன் சித்தம் கொண்டிருந்தால், நீ ஒரு கோடீஸ்வரனாக மரிப்பதை நான் விரும்ப மாட்டேன்."

"ஒரு மிஷனரி ஊழியனாகத் தூர தேசத்தில் நற்செய்தியை அறிவிக்கும் தகுதி உனக்கிருந்தால் நீ ஒரு அரசனாகும் தாழ்ந்த நிலைக்குப் போவதை நான் ஒருக்காலும் சம்மதிக்கமாட்டேன்."





"கிறிஸ்துவுக்குள்ளாக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் மேன்மைக்கும், கிறிஸ்துவின் சபையினைக் கட்டும் விசேஷித்த மதிப்புக்கும், வேறொருவருடைய அஸ்திபாரத்தின் மீது கட்டாமல், கிறிஸ்து அறிவிக்கப்படாத தொலைவிடங்களுக்குச் சென்று அறிவிக்கும் சிறப்புக்கும் முன்பாக உன்னத மன்னர்களும், மணி மகுடங்களும், பிரபுக்களும் அவர்கள் அந்தஸ்துகளும் எம்மாத்திரம்?"

ஜான் மோட் என்ற வேறொரு பிரபலமான மிஷனரித் தலைவர் இன்னொரு விதிவிலக்காகும். அமெரிக்க ஜனாதிபதி கூலிட்ஜ் இவரை ஜப்பானுக்கு அமெரிக்க தூதுவராகச் செல்லும்படி அழைப்பு விடுத்தார். "மதிப்புக்குரிய ஜனாதிபதி அவர்களே, கடவுள் என்னைத் தமது தூதுவராகத் தெரிந்து கொண்டு, அழைத்து, அனுப்பியிருக்கிறபடியால், பிற அழைப்புகளுக்கு என் காதுகள் செவிடாகி விட்டன", என்று மோட் பதிலளித்தார்.

விதிவிலக்காக விளங்கிய வேறொரு மிஷனரியைப் பற்றி பில்லிகிரஹாம் கூறுகிறார். தூர கிழக்கு நாடுகளில் தங்கள் முகவராயிருக்கும்படி ஸ்டான்டர்ட் ஆயில் கம்பெனியார் ஒரு மிஷனரிக்கு அழைப்புக் கொடுத்தனர். அவருக்குப் பத்தாயிரம் டாலர் சம்பளம் கொடுப்பதாகவும் வாக்களித்தனர். அவர் முடியாது என்று கூறி விட்டார். இருபத்தையாயிரம் டாலர் என்று ஊதியத்தை உயர்த்தினார்கள்; அப்பொழுதும் "மாட்டேன்" என்றார். ஒரு வேளை அதிக ஊதியத்தைப் பெறுவதற்காகத்தான் 'அடி போடுகிறார்' என்று எண்ணி, அந்தப் பதவிக்கு ஐம்பதினாயிரம் டாலர் என்று ஏலமிட்டனர்; அதனையும் அவர் நிராகரித்தார். "ஏன் என்ன குறை?" என்று கம்பெனியார் கேட்ட பொழுது: "உங்கள் சம்பளம் கவர்ச்சியாகத்தானிருக்கிறது, நான் இப்பொழுது பெறுவது மிகக் குறைவு தான்! ஆனால் கடவுள் எனக்குத் தந்திருக்கும் உத்தியோகம் மிகப் பெரியது, நீங்கள் எனக்குக் கொடுப்பது மிகச் சிறிய பதவிதான்" என்றார்,

கிறிஸ்தவனின் அழைப்பு மிக உயர்ந்தது. உன்னதமானது. இதை நாம் உணர்ந்தால் நம் வாழ்க்கை புதிய பொலிவுடன் விளங்கும். "நான் ஒரு கொத்தனாக, தச்சனாக, எழுத்தராக, ஆசிரியராக, டாக்டராக அழைக்கப்பட்டிருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கமாட்டோம். "அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன்" என்று நாம் ஒவ்வொருவரும் காண்போம் - மற்றத் தொழில்களெல்லாம் அனுதின பிழைப்புக்காகவேயன்றி வேறல்ல என்று உணர்வோம்.

சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, சகல ஜாதிகளையும் சீஷராக்க, இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக்கட்ட நாம் அழைப்புப் பெற்றிருக்கிறோம்.

இந்தத் தலைமுறையில் உலகம் முழுவதையும் கிறிஸ்துவின் நற்கந்தத்தால் நாம் எப்படி நிறைக்கப் போகிறோம்? என்ற கேள்விக்குப் பதில், தேவனிடத்தில் தங்கள் முழு இருதயத்தோடும் அன்பு கூர்ந்து, தங்களைப் போல பிறரிடத்திலும் ஆண்களாலும பெண்களாலுமே அவர்களுடைய மாறாத, மருளாத அன்பினின்று தோன்றும் பக்தியும், அர்ப்பணிப்புமே இவ்வேலையை நிறைவேற்றி முடிக்க முடியும்.

கிறிஸ்துவின் அன்பினால் நெருக்கி ஏவப்படுகிறவர்கள் அவருக்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயங்க மாட்டார்கள். உலக ஆதாயத்திற்காகச் செய்யாத எந்த வேலையையும், ஆண்டவர் மீதுள்ள அன்பினிமித்தம் நிறைவேற்ற முன்வருவார்கள். தங்கள் உயிரையும் அருமையாக, பாதுகாத்துக் கொள்ள வேண்டுமே என்று எண்ணமாட்டார்கள். மக்கள் நற்செய்தியைக் கேளாததினால் மடிந்து கிறிஸ்துவற்ற கல்லறைகளுக்குச் செல்லாதபடி தடுக்க தாங்கள் செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் தயங்கமாட்டார்கள்.





*"சிலுவையில் ஜீவனைக் கொடுத்தவரே, உம்மைப் போன்ற*
*இருதயத்தை எனக்குத் தாரும்!*
*அழிந்து போகும் ஆத்துமாக்களை நேசிக்க எனக்குக்*
*கற்றுத்தாரும்*
*என்னிருதயத்தை எப்போதும் உம்முடன் நெருக்கமாக*
*வைத்திருக்க எனக்கு உதவும்*
*அன்பை எனக்குத்தாரும்- கல்வாரியின் தூய அன்பை*
*கெட்டழிகின்ற மாந்தரை உம்மிடம் சேர்க்க."*

- ஜேம்ஸ். ஏ. ஸ்டீவர்ட்.

அன்பு, தேவஅன்பு, கல்வாரியின் அன்பு ஒன்றுதான் தூண்டுதலாக இராவிட்டால், இத்திட்டம் ஒன்றுக்கும் உதவாது. இதினால் இலாபம் ஒன்றுமில்லை. பயனற்றதுமாகும்! இந்த ஊழியம் எல்லாம் சத்தமிடுகிற வெண்கலமாகவும், ஓசையிடுகிற கைத்தாளமாகவும் மாறிவிடும். ஆனால் அன்பே வழிகாட்டும் நட்சத்திரமாக விளங்குமானால், கிறிஸ்துவின் மீதுள்ள பக்தி பாசத்தால் அக்கினி ஜுவாலையாக மனிதர் பாய்ந்து சென்றால், நற்செய்தியின் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் ஒரு சக்தியாலும் தடுக்க முடியாது.

இப்போது முழுமையாகத் தங்களைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்துள்ள ஒரு சீஷர் குழுவை உங்கள் மனக்கண்களால் பாருங்கள். அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குத் தங்களை விற்றுப்போட்டவர்கள். கிறிஸ்துவின் அன்புதான் அவர்களை வழி நடத்துகிறது; ஏன் விரட்டுகிறது என்று கூட சொல்லலாம். இந்த மகிமையின் நற்செய்தியைச் சுமந்து கொண்டு காடுமேடாக மட்டுமல்ல, நிலத்தையும் சமுத்திரத்தையும் சலிப்படையாமல் கடந்து செல்கின்றனர். தாங்கள் தொடர்பு கொள்கிற ஒவ்வொருவரையும் கிறிஸ்து ஜீவனைக் கொடுத்துச் சம்பாதித்த விலையேறப் பெற்ற ஆத்துமாவாக, மீட்கப்பட்ட ஆத்துமாவாக, நித்தியமெல்லாம் தேவனைத் தொழுது கொள்ளுகிறவராகக் காண்கிறார்கள். மேலோகநாட்டங் கொண்ட இம்மனிதர் கிறிஸ்துவை அறிவிக்க இவர்கள் கையாளும் முறை யாது?

கிறிஸ்துவின் நற்செய்தியினால் உலகத்தைச் சந்திப்பதற்கும், அதனை ஆதாயப்படுத்துவதற்கும் புதிய ஏற்பாடு இரு முக்கிய முறைகளைச் சுட்டிக் காட்டுவதாகத் தோன்றுகிறது. சபைகளிலும், பொது இடங்களிலும் பகிரங்கமாகச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் ஒரு முறையாகும். மற்றது தனித்தனியாக மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதாகும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவரது சீஷர்களும் முதல் முறையை அதிகமாகப் பயன்படுத்தினர். மக்கள் கூடுகின்ற இடங்களில், அவர்கள் நற்செய்தியைப் பறைசாற்றும் வாய்ப்புகளைப் பெற்றிருந்தனர். எனவே சந்தை வெளிகளிலும், ஜெப ஆலயங்களிலும், சிறைச்சாலைகளிலும், கடற்கரைகள் மற்றும் நதியோரங்களிலும் சுவிசேஷக் கூட்டங்கள் நடைபெற்றதாகக் காண்கிறோம். செய்தியின் சிறப்பும், அவசரமும் குறிப்பிட்ட சம்பிரதாயமான இடங்களில் தான் கொடுக்கப்பட வேண்டும் என்ற நியதியை எடுத்துப் போட்டு, எங்கும், எப்பொழுதும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும் என்பது உறுதியாயிற்று.

சுவிசேஷத்தைப் பரப்பும் இரண்டாம் முறையாவது, தனித்தாள் ஊழியம் செய்தலாகும். தமது பன்னிரண்டு அப்போஸ்தலரையும் கண்டு பிடித்துக் கர்த்தர் பயிற்றுவித்தது இந்த முறையில் தான். அந்தச் சிறு குழுவினர் தம்மோடு இருக்கவும், தாம் அவர்களை அனுப்பவும் அவர் அவர்களை அழைத்திருந்தார். நாள்தோறும் இடைவிடாமல், தமது முன் மாதிரியின் மூலமும், போதனையின் மூலமும் அவர்களைப் பயிற்றுவித்து வந்தார். அவர்கள் நிறைவேற்ற வேண்டிய ஊழியம் அவர்கள் முன் வைக்கப்பட்டது. அவர்களை எதிர்நோக்கியிருக்கும் அபாயங்கள், இன்னல்கள் மற்றும் இடர்ப்பாடுகளைப் பற்றி முன்னதாகவே அவர்களை விரிவாக எச்சரித்தார். இறைவனின் இரகசிய ஆலோசனைகள் மற்றும் திட்டங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி, தம்முடைய மகிமையான, ஆனால் சிரமமும் சிக்கலும் நிறைந்த தெய்வீகத்





திட்டத்தில் அவர்களையும் பங்காளிகளாக்கிக் கொண்டார். பின்னர் ஓநாய்களுக்குள்ளே ஆடுகளை அனுப்புவது போல அவர்களை அனுப்புவதாகக் கூறினார். பரிசுத்த ஆவியானவரால் பெலனடைந்தவர்களாக அவர்கள் புறப்பட்டுச் சென்றனர். மரணத்தை வென்று உயிர்த்தெழுந்து, பரலோகம் சென்றிருக்கும் தங்கள் மகிமையின் இரட்சகரையும் ஆண்டவரையும் உலகிற்கு அறிவிக்கத் தங்கள் எண்ணிக்கையில் ஒருவனாகிய யூதாஸ் துரோகஞ்செய்து அவர்களை விட்டு விலகி விட்டபோதிலும் அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்கென்று உலகத்தைத் தலைகீழாக மாற்றி விட்டார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தாம் இம்முறையைக் கையாண்டதோடு, தம்மைப் பின்பற்றும்படி தீமோத் தேயுவையும் துரிதப்படுத்தினார். "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி" (2தீமோத்தேயு 2 :2) உண்மையுள்ள மனிதரை கவனத்தோடும், ஜெபத்தோடும் தெரிந்து கொள்வதே முதலாவது செய்ய வேண்டிய வேலையாகும். அவர்கள் இந்த மகிமையான தரிசனத்தைக் காண வைப்பது இரண்டாவது படியாகும். மூன்றாவதுபடி, பிறரைச் சீஷர்களாக்கும்படி அவர்களை அனுப்புவதாகும்,

எண்ணிக்கையையும், மாபெரும் பொதுக் கூட்டங் களையும் நாடுவோருக்கு இம்முறை கவர்ச்சியற்றதாகவும், களைப்புறச் செய்வதாகவும் காணப்படும். ஆனால் தாம் செய்வது இன்னது என்பதைத் தேவன் நன்கு அறிவார், ஆதலால் அவர் முறைகள் சிறந்தவையே. சுயதிருப்தி கொள்ளும் மதவாதிகளைக் காட்டிலும், தங்களை முற்றிலுமாகக் கர்த்தருக்கென்று கையளித்துக் கொடுத் திருக்கிற சில தேர்ச்சி பெற்ற சீஷர்களே தேவனுக்காக அதிகம் செய்ய முடியும்,.

கிறிஸ்துவின் நாமத்தில் இந்த சீஷர்கள் புறப்பட்டுச் செல்கையில் திருவசனத்தில் வரையறுக்கப்பட்டுள்ள சில அடிப்படைச் சட்டத்திட்டங்களை இவர்கள் பின்பற்றுகிறார்கள். முதலாவதாக, அவர்கள் பாம்பைப்போல வினாவுள்ளவர்களாகவும், புறாவைப்போலக் கபடற்றவர்களாகவும் இருக்கிறார்கள். தாங்கள் செல்லும் கடினமான பாதையில் தங்களுக்குத் தேவையான ஞானத்தையும், வழிநடத்துதலையும் திரியேக தேவனிடமிருந்தே பெற்றுக் கொள்கின்றனர். அதே வேளையில் மக்களுடன் தொடர்பு கொள்கையில் சாந்தமாகவும், மனத்தாழ்மையாகவும், பண்பாகவும் நடந்து கொள்கின்றனர். அவர்களிடமிருந்து ஏதாவது பலாத்காரம், அல்லது பலவந்தம் வந்து விடுமோ என்று எவரும் அவர்களுக்கு அஞ்ச வேண்டியதில்லை.

இவ்வுலக அரசியல் நடவடிக்கைகள் மற்றும் குழப்பங்களினின்று இவர்கள் விலகி நிற்கின்றனர். எந்தவிதமான அரசையோ, அரசியல் கொள்கையையோ எதிர்த்துப் போராடுவதற்காகத் தாங்கள் அழைக்கப் பட்டிருப்பதாக அவர்கள் கருதுவதில்லை. எந்தவிதமான அரசு ஆட்சி செய்தபோதிலும் அவர்கள் சமாதானமாக செயலாற்ற முடியும் என்று நம்புகிறார்கள். அந்த அரசுக்கு அடங்கியிருக்கவும் கூடும் என்கிறார்கள். ஆனால் தங்கள் ஆண்டவரை மறுதலிக்கவோ அல்லது தங்கள் சாட்சியை விட்டுக்கொடுக்கவோ வற்புறுத்தப்படாத வரையிலும் எந்த அரசாங்கத்திற்கும் ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள். தேவனுக்கு விரோதமாகச் செயல்படத் துன்புறுத்தப்பட்டால் மட்டும், பின்விளைவுகளைக் கவனியாமல் அவர்கள் அந்த ஆசைகளுக்கு மனஉறுதியுடன் எதிர்த்து நிற்கின்றனர். ஆனால் அதே சமயம், ஒரு அரசைக் கவிழ்ப்பதற்கோ, கொடுங்கோல் சர்வாதிகாரியை ஒழித்துக்கட்டுவதற்கோ ஜெபமாகிய பேராயுதத்தையன்றி, வேறு எந்தச் சதித்திட்டங்களிலோ, புரட்சி நடவடிக்கைகளிலோ அவர்கள் ஈடுபடுவதில்லை. "எனது இராஜ்யம் இவ்வுலகத்துக் குரியதானால்... எனது ஊழியக்காரர்





போராடியிருப்பார்களே" என்று இயேசு சுவாமி சொல்லவில்லையா? பரலோகத்தின் ஸ்தானாபதிகளாகிய இம்மனிதர் இவ்வுலக யாத்திரையில் அந்நியர்களும் பரதேசிகளுமாகவே இருக்கின்றனர்.

தங்கள் நடவடிக்கைகளில் அவர்கள் முற்றிலும் உண்மையும், நாணயமும் நேர்மையுமாக இருக்கிறார்கள் கபடும், சூதுவாதுமான எந்த முறையையும் வெறுக்கிறார்கள் உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுகிறார்கள். நல்ல முடிவைப் பெறுவதற்கு வழிமுறைகள் எப்படியிருந்தாலும், பரவாயில்லை, கவலைப்பட வேண்டாம் என்று உலகம் பரவலாகக் கையாளும் முறையை அறவே தவிர்க்கிறார்கள். தீமை செய்வதினால் நன்மை பிறக்கும் என்பதை அவர்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்கிறதில்லை. பாவம் செய்வதைக் காட்டிலும், சாவதே மேல் என்று அவர்கள் ஒவ்வொருவரும் நல்மனச் சாட்சியின் உருவமாகவே விளங்குகின்றனர்.

இம்மனிதரைக் குறித்து நாம் சான்று பகரக் கூடிய மேலான காரியம் என்னவென்றால், இவர்கள் உள்ளூர் சபையுடன் இணைந்து செயல்படுவதைத் தங்கள் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் உலகமெல்லாம் சுற்றித் திரிந்து சுவிசேஷத்தை அறிவித்தாலும், இரட்சிக்கப்படுகிறவர்களை உள்ளூர் சபையில் அங்கமாகவே சேர்க்கிறார்கள். அங்குதான் புதிய விசுவாசிகள் தேவனுடைய ஒழுங்கை அறிந்து கைக்கொள்ள முடியும். விசுவாசத்தைப் பரப்பவும், தேவன் நினைத்திருக்கும் உறுதியான வேலைப்பாட்டை தேவனுடைய சிறு அலகு ஆகிய உள்ளூர்ச் சபையின் மூலமாகத்தான் நிறைவேற்றுகிறார் என்ற உண்மையை, மெய்யான சீஷர்கள் அறிந்து உணர்ந்திருக்கின்றனர்.

பலவிதமான சிக்கல்களில் அக்கப்பட்டுக் கொள்ளாதபடி பலருடனும் சமரசம் செய்து கொள்ளாமலும் ஐக்கியங்

கொள்ளாமலும் இருக்க ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். இவ்வுலக ஸ்தாபனங்கள், சபைகளில் தலையிடுவதையும் சபைகளைக் கட்டுப்படுத்துவதையும், வழி நடத்துவதையும் கடுமையாக எதிர்க்கிறார்கள். விண்ணுலகிலுள்ள தங்கள் தலைமை நிலையத்திலின்றே தங்கள் உத்தரவுகளை நேரடியாகப் பெற்றுக் கொள்கின்றனர். ஆகிலும் உள்ளூர்ச் சபையில் உள்ள மூப்பர்கள், கிறிஸ்தவர்களை விட்டுவிட்டுச் சுயாதீனமாக செயல்படுகிறார்கள் என்று பொருளாகாது. தங்கள் ஸ்தல சபையின் நம்பிக்கையையும், நற்செய்தியையும் பெற்று, அத்தகைய நற்சாட்சியை தங்கள் ஊழியத்திற்கான தேவ அழைப்பின் உறுதிப்பாடாக கருதுகின்றனர். ஆனால் அவர்கள் கிறிஸ்துவின் வசனத்திற்கும், வழிநடத்துதலுக்கும் கீழ்ப்படிந்து அவருக்கு ஊழியம் செய்வதை வலியுறுத்துகின்றனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தச் சீஷர்கள் விளம்பரத்தை விரும்பாதவர்கள். மறைந்திருந்து செயல் படுவதையே நாடுகின்றனர். கிறிஸ்துவை மகிமைப் படுத்துவதும் அவரை அறிவிப்பதுமே அவர்கள் நோக்கம். தங்களுக்காகப் பெரிய காரியங்களை அவர்கள் தேடுவதில்லை. தங்கள் போர்முறைகளை எதிரிக்கு வெளிப்படுத்தவும் அவர்கள் விரும்புவதில்லை. எனவே, அமைதியாக, ‘பந்தா’ பண்ணாமல், மனிதரின் புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் கண்டு கொள்ளாமல் பணிபுரிகின்றனர். தங்கள் உழைப்பின் பலனை அறிந்து கொள்வதற்குரிய ஒரே சிறந்த இடம் பரலோகமே என்பதும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.



# சீஷத்துவமும் திருமணமும்

“பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர் களாக்கிக் கொண்டவர்களும் உண்டு ; அதாவது, விவாகமில்லாது இருப்பவர்களும் உண்டு - இதை ஏற்றுக் கொள்ள வல்லவன் ஏற்றுக்கொள்ளக் கடவன் என்றார்.” (மத்தேயு 19:12)

இல்லற வாழ்க்கையா அல்லது பிரம்மச்சாரிய வாழ்க்கையா, எதற்குத் தேவன் தன்னை அழைத்திருக்கிறார் என்பது ஒவ்வொரு சீஷனுக்கும் ஏற்படும் ஒரு பெரிய கேள்வி. இதற்குரிய பதில், ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் கர்த்தரிடம் விசாரித்து, கர்த்தர் நடத்துகிறபடி தீர்மானிக்க வேண்டிய விஷயம். ஒருவர் எவ்வளவு பெரியவராய் இருந்தாலும், அவர் மற்றவருக்குச் சட்டம் வகுக்க முடியாது. இந்த மிக முக்கியமான வாழ்க்கைப் பிரச்சினையில் வேறொருவர் தலையிடுவது ஆபத்தாக முடியும்.

இறைவன் இல்லற வாழ்கையை மனுக்குலத்திற்காகப் பலநோக்கங்களனைத்தும் மனதில் கொண்டு ஏற்படுத்தினார் என்பது திருமறையின் பொதுவான போதனையாகும்.

1. நட்பிற்காகவும், இன்பத்திற்காகவும் அது ஏற்படுத் தப்பட்டது. “மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல” (ஆதியாகமம் 2:18) என்று தேவன் கண்டார்.
2. மனுக்குலம் அழிந்து போகாமல், வளர்ந்து பெருகுவதற்காக அது திட்டமிடப்பட்டது. “நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்” (ஆதியாகமம் 1: 28) என்பது கடவுளிட்ட கட்டளையில் வெளிப்படுகிறது.

3. குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒழுக்கக் கேடில்லாமல் தூய்மையைக் காத்துக் கொள்வதற்காக கர்த்தர் இந்த நல்ல ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். "வேசித்ததனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியை உடையவனாயிருக்கக் கடவன்." (1 கொரிந்தியர் 7:2)

குடும்பமாக வாழ்வதற்கும், கிறிஸ்தவ ஜீவியத்திற்கும் எவ்வித இடையூறும் இல்லை என்று எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். பரிசுத்த ஜீவியத்துக்கும், கிறிஸ்துவின்பால் காட்டும் அன்புக்கும் பக்திக்கும் இல்லற வாழ்க்கை ஒரு முட்டுக்கட்டை என்று தேவனுடைய வார்த்தை எங்கும் போதிக்கவில்லை. ஆனால், "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக" (எபிரேயர் 13:4) என்று மாத்திரம் ஞாபகப்படுத்தப்படுகிறோம். மேலும் "மனைவியைக் கண்டடைகிறவன், நன்மையானதைக் கண்டடைகிறான்." (நீதிமொழிகள் 18:22) என்ற பாராட்டுதலைப் பார்க்கிறோம். "ஒண்டியாய் இருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்." (பிரசங்கி 4:9) என்ற பிரசங்கியின் பொன்மொழி திருமணத்தைக் குறிப்பதாகப் பலரும் எடுத்துக் கொள்கின்றனர். அதிலும் சிறப்பாக, அவர்கள் இருவரும் கர்த்தருடைய சேவையில் தங்களை இணைத்துக் கொள்வார்களென்றால் அது மிகவும் வரவேற்கத்தகுந்தது. கூட்டுச் செயல்பாட்டில் அதிக ஆற்றல் விளங்குகிறதென்ற உண்மையை உபாகமம் 32:30 ஐயந்திரிபறக் கூறுகிறது: "...ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்தி, இரண்டு பேர் பதினாயிரம் பேரைத் துரத்து" வார்கள்.

இவ்வாறு திருமணமும், இல்லற வாழ்கையும் மனுக்குலத்தைப் பற்றி தேவனுடைய பொதுவான சித்தமாக இருந்தாலும், அது ஒவ்வொரு நபருக்கும் விதிவிலக்கின்றி கட்டாயமான நியதியாக இருக்க வேண்டியதில்லை. மாற்ற முடியாத அல்லது விட்டுக் கொடுக்க முடியாத ஒரு உரிமையாகத் திருமணம் இருந்தபோதிலும், கர்த்தராகிய இயேசுவின் சீஷன், அவரது பணியில் கவனம் சிதறாதவாறு





ஈடுபடுவதற்காக அந்த உரிமையைத் துறந்து விடுகிறான்.

தமது இராஜ்யத்தில் தமது நிமித்தம் ஒருசிலர் தனிமையாகவே (அண்ணகர்களாக) இருந்து விடுவார்கள் என்று கர்த்தராகிய இயேசு குறிப்பிட்டார். "தாயின் வயிற்றிலிருந்து அண்ணகர்களாய்ப் பிறந்தவர்களும் உண்டு; மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்களும் உண்டு; பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்களும் உண்டு, இதை ஏற்றுக் கொள்ள வல்லவன் ஏற்றுக் கொள்ள கடவன் என்றார்." (மத்தேயு 19:12)

கீழ்க்காணும் இரண்டு காரணிகளின் பலனாக ஒருவர் தன்னார்வத்தின்படியே செய்து கொள்ளும் பொருத்தனையே இது.

1. திருமணம் செய்து கொள்ளாமலிருக்கத் தேவனுடைய வழி நடத்துதலின் உணர்வு.

2. குடும்ப வாழ்க்கையின் பொறுப்புகள், பாரங்கள் இல்லாமல் தன்னை முற்றிலும் கர்த்தருடைய ஊழியத்துக்கே ஒப்புக் கொடுத்துவிட வேண்டுமென்ற வாஞ்சை,

இதற்குத் தேவ அழைப்பு மற்றும் தேவ நடத்துதலில் முழு நிச்சயம் இருத்தல் வேண்டும். (1 கொரிந்தியர் 7:7ஆ) இது நிறைவேறினால், தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வதற்கான கிருபையைக் கர்த்தர் தந்தருளுவார் என்ற நிச்சயத்துடன் இருக்கலாம்.

இரண்டாவதாக, இது, தன் விருப்பப்படியே தீர்மானிக்கிற காரியம். திருமணமின்மை எங்கே சபையின் சட்டமாக, கட்டுப்பாடாக இருக்கிறதோ, அங்கெல்லாம் தூய்மையின்மையும், கற்பின்மையும், ஒழுக்கக் கேடும் பரவலாகக் காணப்படும் வாய்ப்புண்டு.

விவாகமில்லாதிருக்கும் ஒருவர் ராஜாவின் திருப்பணிக்குத் தன்னை முழுவதுமாகப் படைக்கலாம் என்று பவுல் அப்போஸ்தலன் வலியுறுத்தினார்

"இவ்வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத் தகாத விதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்க வேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே. நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க விரும்புகிறேன். விவாக மில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலா மென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான்."

(1 கொரி 7:32-33)

"மேலும், சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், இனிவரும் காலம் குறுகினதானபடியால், மனைவிகளுள்ள வர்கள் மனைவிகளில்லாதவர்கள் போலவும், அழுகிறவர்கள் அழாதவர்கள் போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்கள் போலவும், கொள்ளுகிறவர்கள் கொள்ளாதவர்கள் போலவும், இவ்வுலகத்தை அனுபவிக் கிறவர்கள் அதைத் தகாதவிதமாய் அனுபவியாதவர்கள் போலவும் இருக்க வேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம் கடந்து போகிறதே." (1 கொரிந்தியர் 7:29-31)

அந்தக் காரணத்தை முன்னிட்டே, திருமணமாகா தவர்களும், விதவைகளும் அப்படியே தனிமையாக இருந்து விட்டால் நல்லது என்ற கருத்தையும் அப்போஸ்தலன் வெளியிட்டார். (1 கொரி 7:7-8)

திருமணமானவர்களுக்கும் அப்போஸ்தலருடைய அவசரமான ஆலோசனை என்னவென்றால், கர்த்தருடைய வருகை மிகச் சமீபமாக இருப்பதால், உலகத்திற்குக் கிறிஸ்துவை அறிவிக்கும் மகா பெரிதான பணியினிமித்தமாக தங்கள் ஆசை இச்சைளைக் கட்டுப்படுத்தி வாழவேண்டும் என்றுரைத்தார்.

ஒருவர் தன் குடும்பப் பொறுப்புகளைத் துறந்து தம் மனைவி மக்களைக் கைவிட்டு விட்டு உடனடியாக ஒரு மிஷனரியாகச் சென்று விட வேண்டும் என்பது இதன் அர்த்தமாகாது. ஆனால் ஒருவர் இல்லற இன்பங்களுக்காகவும், குடும்பம் தரும் மனநிறைவுக்காகவும், சுகத்திற்காகவும்





வாழக்கூடாது என்பது தான் இதன் பொருளாகும். மனைவி மக்களைக் காரணங்காட்டி, கிறிஸ்துவுக்கு இரண்டாவது இடத்தைக் கொடுக்கும் இழிநிலைக்குச் சென்று விடக்கூடாது.

தாம் மணக்கவிருந்த தமது காதலி தன்னைப் பற்றியே அதிகமாக நினைத்துக் கொண்டிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முதலிடம் இல்லாமற் போய் விடுமோ என்று பயந்து, சி.டி.ஸ்டட் ஒரு பல்லவியை அவளுக்கு எழுதி அனுப்பினார். அதைத் தினமும் அடிக்கடி சொல்லிக் கொள்ள வேண்டுமென்று பணித்தார்.

*இயேசுவே நான் உம்மை நேசிக்கிறேன்*
*எனதருமைச் சார்லியைக் காட்டிலும்*
*எப்பொழுதும் நீர் எனக்கு*
*அருமையானவர்.*

உலகம் முழுவதையுமே தங்கள் கொள்கைக்கு அடிமைப்படுத்தும் ஒரே பெரிய உத்தரவாதத்திற்காக, கம்யூனிஸ்டுகள் தங்கள் சொந்த வாழ்க்கையையும், குடும்ப வாழ்க்கையையும் கீழ்ப்படுத்தினர். கார்டன் அர்னால்டு லான்ஸ்டேல் என்ற ஒரு கம்யூனிஸ்ட் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ரஷ்ய நாட்டின் ஒற்றன் என்று 1960-ல் இங்கிலாந்தில் கைது செய்யப்பட்டான். அவன் மனைவி அவனுக்கு எழுதிய ஒரு கடிதமும், அவன் எழுதி வைத்திருந்த ஆறு பக்கங்கள் கொண்ட பதிலும் போலீசாரால் கைப்பற்றப்பட்டன. அவன் மனைவி இவ்வாறு எழுதியி ருந்தாள்: "வாழ்க்கை எவ்வளவு அநீதி நிறைந்ததாக உள்ளது! உங்களை இழந்து நான் எவ்வளவாகத் தவிக்கிறேன். நீங்கள் செய்து கொண்டிருக்கும் வேலையையும், அது உங்கள் கடமை என்பதையும் நான் நன்கு அறிவேன். உங்கள் கடமையில் உங்களுக்கிருக்கும் அலாதிப்பற்றும், அதை நிறைவேற்ற முழுமுச்சுடன் பாடுபடுகிறீர்கள் என்பதும் எனக்கு நன்றாகவே தெரியும். இருப்பினும், எனது பெண்புத்தி, பின்புத்தி என்பது போல குறுகிய நோக்கத்துடன், குடும்பப் பாசத்துடன், நோக்கிப்

பார்க்கிறேன். என்னை எவ்வளவாக நேசிக்கிறீர்கள் என்று சில வரிகள் எழுதுவீர்களென்றால், ஒரு வேளை நான் சற்று ஆறுதலும் தைரியமும் அடைவேன்.

லான்ஸ்டேலின் பதிலின் ஒரு பகுதியை இங்கே எடுத்தியம்புகிறோம்: "நான் சொல்லக்கூடியதெல்லாம் என்னவென்றால், எனக்கு ஒரே ஒரு வாழ்க்கை தான் இருக்கிறது. அதுவும் எளிதான ஒன்றல்ல. ஆதலால், நான் எனது குறுகிய வாழ்க்கையை செலவிடும் விதத்தில், நான் திரும்பிப் பார்க்கும் பொழுது, நான் வெட்கப்படக்கூடிய ஒன்றும் இல்லாதபடி வாழ விரும்புகிறேன்... சீக்கிரத்தில் எனக்கு 39 வயது நிறைவடைந்து விடும்; இன்னும் அதிகமாக என்ன மீந்திருக்கிறது?"

"இனி வரும் காலம் குறுகினதானபடியால் மனைவிகளுள்ளவர்கள், மனைவிகளில்லாதவர்கள் போலவும் இருக்க வேண்டும்" என்பது பவுலின் ஆலோசனை.

அநேகக் கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் நேரிடும் சோக நிகழ்ச்சியாவது, துரிதமாக அல்லது தவறாக வழிகாட்டப்பட்டு திருமணத்தில் ஈடுபடுவதால், இளம் சீஷன் ஒருவனை கர்த்தருக்கு மிக அதிகமாக பயன்படக்கூடிய பாதையினின்று திசை திருப்புவதற்குப் பிசாசு கையாளும் கருவியாக இது அமைகிறது. அநேக ஆவிக்குரிய முன்னோடிகளாக விளங்க வேண்டியவர்கள், கிறிஸ்துவை மட்டும் தங்கள் இலக்காக வைத்து சேவை செய்யக்கூடியவர்கள், தவறான திருமண இணைப்பில் பலிகடாவாகி விட்டனர்.

"கிறிஸ்துவைப் பற்றி அனைவரும் கேள்விப்பட வேண்டும் என்ற அவருடைய சித்தத்தை நிறைவேற்றாதபடித் தடுக்கும் ஒரு கசப்பான சத்துரு திருமணம் ஆகும். இப்படிச் சொல்வதற்காக நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்! திருமணம் தேவனால் அருளப்பட்டதுதான் என்றாலும் கடவுளுடைய சித்தத்திற்கு அது தடையாக அமைந்து விடுமென்றால் அது நல்லதல்ல, தீமை என்று தானே சொல்ல வேண்டும்.





வெளிநாடுகளுக்குச் சென்று கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாக இருக்க அழைப்பு பெற்றவர்கள் அநேகர் அந்த அழைப்புக்கு இணங்காமற்போனதை நாம் நன்கு அறிவோம். இதற்குக் காரணம் தவறான சம்பந்தமும், ஆலோசனையும் தான். எனவே தேவன் அருளும் பெரிய ஆசீர்வாதமாகிய வாழ்க்கைத் துணையைத் தெரிந்து கொள்வது தேவனுடைய நோக்கத்திற்கும், ஊழியத்திற்கும் இடையூறாக அல்லது தடுக்கல்லாக மாறிவிடுமென்றால் அதை என்னென்று சொல்வது?... இன்று கடவுளுடைய சித்தத்திற்கு மேலாக அன்புக்குரியவர்கள் முதலிடத்தை ஆக்கிரமித்துக் கொள்வதால், கிறிஸ்துவை அறியாமல் அநேக ஆத்துமாக்கள் நித்தியத்திற்குள் சென்று விட்டார்கள்." - வெஸ்லி குஷ்டால்சன்.

வேறொருவரும் சென்றிராத புது இடங்களுக்கு செல்லத் தீர்மானித்தவர்களைப் பொறுத்த வரையில், திருமணம் செய்யாதிருப்பதே அவர்களுக்கு நல்லது. "முன்னணியில் செல்லும் ஆண்களும் பெண்களும், தாங்கள் நியாயமாய் அனுபவிக்கக்கூடிய இன்பங்களை மட்டுமல்ல, வாழ்வதற்குத் தேவையானவைகளையும் கூட வெறுக்க வேண்டியதாயிருக்கலாம். கஷ்டங்களை உவகையுடன் சகிப்பதும், நல்ல சிலுவைப் போர் வீரராயிருப்பதும், எவ்வித பாரத்தாலும் தடைபடாமல் பந்தயத்தில் ஓடுகிறவர்களாயிருப்பதும் அவர்களது தலையாய கடமை. அதுபோல் உத்தியோகம், ஒரு அழைப்பு, ஒரு சிறப்பான சேவைக்கு நியமன அபிஷேகமாகும்."

இந்த அழைப்பைக் கேட்டு இணங்குவோருக்கு நிச்சயமான பலனுண்டு. என்னை விசுவாசியுங்கள் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிவுடன் கூறினார். ''மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்வான்.' (மத்தேயு 19.28-29)

# செலவைக் கணித்தல்

கர்த்தராகிய இயேசு மனிதரிடம் இனிமையாக நயந்து பேசி அவர்களை விசுவாசத்திற்குள் கொண்டு வருவதற்கு ஒருபோதும் தந்திரமாக முயற்சிக்கவில்லை. எல்லோரும் எதிர்ப்பின்றி ஏகமனதுடன் ஏற்றுக் கொள்ளக்கூடியதும், இலகுவாக தம்மைப் பின்பற்றக்கூடியதுமான பிரியமான செய்தியை அவர் கொடுக்கவுமில்லை.

உண்மை என்னவென்றால், திரள்கூட்டமாக மக்கள் அவரைத் தொடர்ந்து வந்தபோதெல்லாம், அவர்களிடமாய்த் திரும்பி, சீஷத்துவத்தின் மிகக் கடுமையான விதிகளை அவர்கள் முன் வைத்து அவர்களைச் சோதித்துப் பார்ப்பார்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் ஒன்றில், தம்மைப் பின்பற்றுவோர் செலுத்த வேண்டிய கிரயத்தைக் கணக்கிட்டுப் பார்க்கவேண்டுமென்று எச்சரித்தார்.

"உங்களில் ஒருவன் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்து, அஸ்திவாரம் போட்ட பின்பு முடிக்கத் திராணியில்லாமற் போனால், பார்க்கிறவர்களெல்லாரும், இந்த மனுஷன் கட்டத் தொடங்கி, முடிக்கத் திராணியில்லாமற் போனான் என்று சொல்லித் தன்னைப் பரியாசம் பண்ணாதபடிக்கு, அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் தனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு அவன் உட்கார்ந்து செல்லுஞ்செலவைக் கணக்குப்பாராமலிருப்பானோ? அன்றியும் ஒரு ராஜா மற்றொரு ராஜாவோடே யுத்தஞ்செய்யப் போகிற போது, தன்மேல் இருபதினாயிரம் சேவகரோடே வருகிற அவனைத் தான் பதினாயிரம் சேவகரைக் கொண்டு





எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணாமலிருப்பானோ? கூடாதென்று கண்டால், மற்றவன் இன்னும் தூரத்திலிருக்கும்போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி,சமாதானத்துக்கானவைகளைக் கேட்டுக்கொள்வானே." (லூக்கா 14:29-32)

இப்பகுதியில் பொதுவாகக் கிறிஸ்தவ வாழ்க்கையையும், குறிப்பாக சீஷத்துவத்தையும் கோபுரம் கட்டுவதற்கும், போர் தொடுப்பதற்கும் ஒப்பனையாகக் கூறுகிறார். ஒரு கோபுரத்தைக் கட்டத் தொடங்குவதற்கு முன்பாகவே, அதைக் கட்டி முடிப்பதற்குத் தேவையான நிதி வசதி தனக்கு உண்டா என்று ஒருவன் கணித்துப்பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அதைத் தொடங்குவதைவிட மதியீனம் வேறு எதுவும் இருக்க முடியாது. அறைகுறையாக நின்றுவிடும் கட்டடம், அதன் உரிமையாளரின் அறிவீனத்திற்கு நிலையான நினைவுச் சின்னமாக விளங்கும்.

கிறிஸ்தவ வாழ்க்கையிலும் இது எவ்வளவு உண்மை! பெரிய பெரிய நற்செய்திக் கூட்டங்களில் மக்களலைகளைப் பார்த்து மயங்கியும், ஆடல்-பாடல் மற்றும் கவர்ச்சிகரமான செய்தியின் மூலமாக உணர்ச்சி வசப்பட்டும் ஒருவர் கிறிஸ்துவைப் பின்பற்றத் தீர்மானிக்கலாம். ஆனால், அதற்குப் பின்னுள்ள காரியங்களை ஆராய்ந்தறியாமல் தீர்மானிப்பது தடுமாற்றத்தில் கொண்டு போய்விடும். ஏனென்றால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது அல்லது கிறிஸ்துவுக்காகத் தீர்மானிப்பது என்பது ஒன்று - ஆனால் தன்னைத்தான் வெறுத்து சிலுவையை தினமும் எடுத்து கிறிஸ்துவைப் பின்பற்றுவது முற்றிலும் வேறொன்று. ஒரு கிறிஸ்தவனாகத் தீர்மானிப்பதற்குக் கிரயம் ஒன்றும் இல்லாவிட்டாலும், இந்த விசுவாசத்தில் உறுதியாகக் கடைசிவரை நிலைத்திருப்பதும் வேறொன்றாகும். தியாகம், பிரிந்து நிறறல், கிறிஸ்துவினிமித்தம் பாடுபடுதல் ஆகியவற்றாலான கரடுமுரடான பாதையில் விடாமுயற்சியுடன் முன்னேறுவதற்குக் கிரயம் அதிகமுண்டு என்பதை முன்கூட்டியே நமது ஆண்டவர் எச்சரிப்புக்

கொடுத்துவிடுகிறார். கிறிஸ்தவ வாழ்க்கையைத் துவங்குவது எளிதான ஒரு காரியம்; ஆனால் நாடோறும், இன்பத்திலும் துன்பத்திலும், நல்ல காலத்திலும் பொல்லாக் காலத்திலும் தொடர்ந்து ஓடுவதும் ஓட்டத்தை முடிப்பதும் வேறொன்றாகும்.

குற்றம் கண்டுபிடிக்கும் உலகம் நம்மைக் கவனித்துக் கொண்டே இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கைக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிடவேண்டும், அல்லது அது அர்த்தமற்ற வாழ்க்கை என்பதை இவ்வுலகம் ஏதோ ஓர் உள்ளுணர்வால் அறிந்திருக்கின்றது. முற்றிலுமாகத் தன்னைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்திருக்கிற கிறிஸ்தவனை அது காணும்பொழுது, அது அவனைக் குற்றஞ்சாட்டலாம், அவமதிக்கலாம் அல்லது பரியாசம் பண்ணலாம் - ஆனாலும் அவனுடைய துணிச்சலான, பூரண அர்ப்பணிப்பை உலகம் பாராட்டிக் கொண்டுதான் இருக்கின்றது. அவன்மீது அலாதி மதிப்பைத் தன் உள்ளத்தில் வைத்திருக்கிறது. ஆனால் அவன் தவறும்பொழுது, மிகுந்த அவமதிப்பைச் சம்பாதித்துக் கொள்கிறான். உலகம் அவனை இவ்வாறு இகழுகிறது: இந்த மனிதன் கட்டத் தொடங்கினான். ஆனால் முடிக்க முடியவில்லை. இவன் குணப்பட்டபொழுது, பெரிய அமர்க்களம் பண்ணினான். ஆனால் இப்போதோ நம்மைப் போல் தான் இருக்கிறான். அவன் ஆரவாரமெல்லாம் அடங்கி ஒடுங்கிப் போயிற்று. இப்பொழுது அவனில் ஒரு முன்னேற்றத்தையும் காணவில்லை; இருந்த இடத்திலேயே சுற்றிக் கொண்டிருக்கிறான்.

ஆனால் இரட்சாபெருமான், "செல்லும் செலவைக் கணித்துப் பார்த்து செயலில் இறங்குவது நல்லது", என்று ஆலோசனை கூறினார். அவருடைய இரண்டாவது எடுத்துக்காட்டு, போர் புரியப்புறப்பட்ட ஒரு அரசனைப் பற்றியது. தன்னிடமுள்ள பதினாயிரம் வீரரைக் கொண்டு, அதைப் போல இரட்டிப்பான எதிரியின் சேனையை வெல்லமுடியுமா என்று ஆராய்ந்து பார்ப்பது அறிவுடைமை அல்லவா? போரில் குதித்த பின்னர் தன்னுடைய பலவீனமான





நிலைமையைப் பற்றி சிந்திக்கத் துவங்குவது எத்தகைய அறிவின்மை! இப்பொழுது அவன் செய்யக்கூடியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டு, எதிரியிடம் சரணடையும் குழு ஒன்றை அனுப்பவேண்டும். புழுதி மட்டுமாகத் தன்னைத் தாழ்த்தி சமாதானம் செய்வதற்கான நிபந்தனைகளைப் பணிவுடன் கேட்க வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கையை போரில் இறங்குவதற்கு ஒப்பிட்டுப் பேசுவது மிகையாகாது. நமக்கு முன்பாக உலகம்-மாம்சம்-பிசாசு என்ற முக்கொடிய சத்துருக்கள் உள்ளனர். சோர்வுகளும், இரத்தம் சிந்துதலும், பாடுகளும் உண்டு. எப்பொழுது விடியுமோவென்று ஆவலுடன் இரவெல்லாம் கண்ணயராது கவலையுடன் காத்திருக்கும் பலமணி நேரங்கள் உண்டு. கண்ணீரும் கடும் உழைப்பும், கொடிய சோதனைகளும் உண்டு. அனுதினமும் சாவைச் சந்தித்தது போலவே காலச் சக்கரம் சுழலும்.

கிறிஸ்துவைப் பின்பற்றத் தீர்மானித்த எவரும் கெத்சமனே, கபத்தா, கொல்கதா ஆகியவற்றை நினைப்பூட்டிக் கொண்டே இருத்தல் வேண்டும். அத்துடன் கிரயத்தைக் கணக்கிட வேண்டும். ஒன்று கிறிஸ்துவுக்காகப் பூரணமாக அர்ப்பணித்து விடவேண்டும். இல்லாவிடில் மாயமான ஒப்புக் கொடுத்தலின் விளைவாக அவமானம், நிந்தை, இகழ்ச்சியைத் தழுவ நேரிடும்.

கர்த்தராகிய இயேசு இந்த இரண்டு உதாரணங்களையும் காட்டி, அவசரப்பட்டு, உணர்ச்சிவசப்பட்டு தமக்கு சீஷராக முன்வராதபடிக்கு தம்மைக் கேட்டுக்கொண்டிருந்தோரை செவ்வனே எச்சரிக்கிறார். அவரைப் பின்பற்றுவோர்க்கு உபத்திரவங்கள், பாடுகள், துன்பங்கள் உண்டு. இவைதான் அவர்களுக்கு ஏற்படும் கிரயமாகும். அந்தக் கிரயத்தைப் பற்றி அடுத்த வசனம் இன்னும் தீர்க்கமாக விளக்குகிறது. "அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டான வைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச்

சீஷனாயிருக்க மாட்டான்." (லூக்கா 14:33).

எனவே எல்லாவற்றையும் கொடுத்து விடுவதுதான் அந்தக் கிரயமாகும். அதாவது, அழைப்பு பெற்ற மனிதனும் அவனுக்குண்டான யாவும் அந்தக் கிரயமாகும். இரட்சகரும் அதே கிரயத்தைத்தான் செலுத்தியிருக்கிறார்; அவரைப் பின்பற்றுவோருக்குச் செலவு இதைவிடக் குறைவாக இருக்க முடியாது. விவரிக்கமுடியாத மற்றும் அளக்க முடியாத மற்றும் மதிப்பிடமுடியாத மிகப்பெரிய செல்வந்தராக இருந்த இயேசு சுவாமி தம் விருப்பப்படியே ஏழையாக அவதரித்தாரென்றால், அவருடைய சீஷர்கள் ஏதோ ஒரு குறைந்த கிரயம் செலுத்திப் பொற்கிரீடத்தைப் பெற்றுவிட முடியுமா?

அவருடைய பிரசங்கத்தின் முடிவுரையாக, இன்னொரு உண்மையையும் கூறி முடிக்கிறார்.

"உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?" (லூக்கா 14:34)

வேதாகமக் காலத்தில், மக்களுக்கு நன்றாகச் சுத்திகரிக்கப்பட்ட உப்பு கிடைக்கவில்லை போலும். அவர்கள் உப்பில் மணல் மற்றும் பல அசுத்தங்கள் கலந்திருந்தன. ஆகவே அவர்கள் காலதது உப்பு சீக்கிரத்தில் சாரமிழந்து போய்விட்டது. அதை நிலத்திலேயும் கொட்டமுடியாது, உரமாகவும் உபயோகிக்க முடியாது. சில வேளைகளில் ஒற்றடிப்பாதையிலுள்ள குண்டு குழிகளை நிரப்புவதற்கு அது பயன்பட்டது. "வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது." (மத்தேயு 5:23)

இப்பொழுது இந்த எடுத்துக்காட்டின் படிப்பினை மிகத்தெளிவாயிருககின்றது. ஒரே ஒரு முக்கிய நோக்கத்திற் காகவே கிறிஸ்தவன் இருக்கிறான். முற்றிலுமாகத் தேவனுக்கென்று ஊற்றப்பட்ட வாழ்க்கையால் அவரை மகிமைப்படுத்துவதே அப்பெரும் நோக்கம். பூமியிலே





செல்வத்தைச் சேர்த்துக் கொண்டிருப்பதாலும், தன் வசதிகளையும் இன்பத்தையும் பெருக்கிக் கொண்டிருப் பதாலும், உலகத்தில் பேரும் புகழும் சம்பாதிக்க உழைப்பா னென்றால் அவன் ஏசா தனக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள சேஷ்டபுத்திர பாகத்தை அப்பிரயோ ஜனமான இவ்வுலக பயற்றங்கூழுக்காக விற்றுப் போட்டதைப் போலாகும். ஒரு விசுவாசி தான் இருப்பதின் முக்கிய இலட்சியத்தைத் தவற விடுவானென்றால், அவன் எல்லாவற்றையுமே தவற விட்டு விட்டான். அவன் பயன்பாடுள்ள சீஷனுமல்ல, அலங்காரமான அணிகலனுமல்ல. அவன் தலைவிதியும் சாரமிழந்த உப்பைப்போல மனுஷரின் பழிச்சொல்லுக்கும், பரியாசத்திற்கும் ஆளாகி, அசட்டை பண்ணப்படுவதாகும்.

நமதாண்டவரின் இறுதியான வார்த்தைகள் "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்பதாகும். நமது கர்த்தர் கண்டனத் தொனியுடன் பேசிய சமயங்களிலெல்லாம், இச்சொற்றொடரையும் சேர்த்தே பேசினார். தான் சொல்லுவதை எல்லோரும் அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். அவருடைய தெளிவான வார்த்தைகளுக்குப் பலவாறு அர்த்தங்கூறி, அவற்றின் கூர்மையை மழுக்கிவிட முற்படுவர் என்பது அவருக்குத் தெரியும்.

அதே சமயத்தில் திறந்த உள்ளங்கள் இருக்கும் என்பதும் அவருக்குத் தெரியும். அவருடைய கோரிக்கைகள் மற்றும் உரிமைகளை நன்கு மதித்து அவைகளுக்குத் தலைவணங்கி, தாழ்மையுடன் தம்மைச் சேவிக்க முன்வரும் வாலிபரும் வயோதியரும் இருப்பர் என்பதையும் அவர் நன்றாகவே அறிந்திருந்தார்.

எனவே, அவர்களுக்குத் தமது வாசலைத் திறந்து வைத்தார். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன். செல்லும் செலவைக் கணித்துப் பார்த்த பின்பும்,

"இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்,
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்
சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே,
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்
நண்பர் கைவிட்டாலும், பின் செல்வேன் உம்மை
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்."

என்போரே ஆண்டவரின் பாசறையில் உருவாக்கப்படும் எஃகு மனிதர் ஆவர்.



# இரத்தசாட்சியாகும் சிலாக்கியம்

உண்மையாகவும், முற்றிலுமாகவும் தன்னை இயேசு கிறிஸ்துவுக்குத் தத்தம் செய்திருக்கிற மனிதன் இந்த அற்பகால வாழ்க்கையில் ஜீவனோ, மரணமோ எதுவாயினும் அதை முக்கியப்படுத்துவதில்லை. அவனுடைய குறிக்கோள் எல்லாம் கர்த்தர் மகிமைப்பட வேண்டும் என்பதே.

"ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும, கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவார்..." (பிலிப்பியர் 1:20) என்ற வாசகம் அடிக்கடி வருகிறதை நீங்கள் "ஜான் மற்றும் பெட்டி ஸ்டாமின் வெற்றி" என்ற நூலைப் படிக்கையில் நீங்கள் காணலாம்.

அதுவே ஜிம் எலியட்டின் எழுத்துக்களில் தொனிக்கிறது. வீட்டன் கல்லூரியில் இன்னும் மாணவராயிருக்கும் போதே, "நான் 'ஆக்கா' இனத்தவருக்காக உயிரைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன்" என்று தனது டைரியில் எழுதி வைத்தார்.

வேறொரு சந்தர்ப்பத்தில் அவர் எழுதி வைத்திருந்ததாவது: "பிதாவே, நீர் விரும்பினால் எனதுயிரையும், ஆம், என் இரத்தத்தையும் எடுத்து உமது அக்கினியால் சுட்டெரித்துப் போடும். நான் பாதுகாத்து வைப்பதற்கு அது எனக்குரியதல்லவே. ஆண்டவரே, எடுத்துக் கொள்ளும், எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளும் உலகிற்காக அதனைப் பலியாக்கிவிடும். உமது பலிபீடத்தில் ஓடும்போது மட்டுமே இரத்தத்திற்கு மதிப்பு உண்டு."

கடவுளின் வெற்றி வீரர்களில் அவரோடுள்ள இடைபாடுகளில் இதே இடத்தை அடைந்தார்கள் என்று தெரிய

வருகிறது. "கோதுமை மணியானது நிலத்திலே விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" (யோவான் 12:24) என்ற உண்மையை நன்கு உணர்ந்திருந்தார்கள். அந்தக் கோதுமை மணியாக இருக்க ஆவலுடன் விரும்பினார்கள். இதே மனப்பான்மை தான் தம்முடைய சீஷர்களுக்கு வேண்டும், "என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான்" (லூக்கா 9:24) என்று போதித்தார்.

இதைப்பற்றி அதிகமாகக் கருத்தூன்றி சிந்திக்குங்கால், இது முற்றிலும் நியாயமாகவே தோன்றுகிறது.

முதற்கண், நமது ஜீவன் நமக்குச் சொந்தமானதல்ல. தமது விலை மதிக்கமுடியாத இரத்தத்தைச் சிந்துமளவிற்கு அவர் நம்மீது மதிப்பு வைத்துள்ளார். எனவே நமது ஜீவன் அவருக்கே சொந்தமானது. வேறொருவருக்குச் சொந்தமானதை நாம் தன்னயமாக நமக்குரியது என்று உரிமை பாராட்டலாமா?

இதற்கு சி.டி. ஸ்டட் தமக்குத் தாமே கூறின பதிலாவது: "கர்த்தராகிய இயேசு எனக்காக மரித்தார் என்பதை அறிந்திருந்தேன்; ஆனால் அப்படி அவர் எனக்காக உயிர் நீத்திருந்தால் நான் எனக்குச் சொந்தமானவனல்ல என்பதை அறியாமலும், உணராமலும் இருந்தேன். "மீட்பு" என்றால் 'திரும்ப வாங்குவதாகும்'; எனவே நான் அவருக்குரியவ னென்றால், எனக்கு சொந்தமல்லாத ஒன்றை வைத்திருப்ப தினால் நான் ஒரு திருடனாக இருக்க வேண்டும், அல்லது உடனே அவருக்குரியதை எல்லாம் அவரிடம் ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு இந்த உண்மையை - இயேசு கிறிஸ்து எனக்காகவே மரித்தார் என்று அறிந்த பின்னர், அவருக்கு எல்லாவற்றையும் காணிக்கையாக்குவது எனக்குக் கடினமாகத் தோன்றவில்லை."

இரண்டாவது பேருண்மை என்னவென்றால், கர்த்தரின் வருகை தாமதிக்குமென்றால், நாம் எல்லாரும் எப்படியும் சாகத்தானே போகிறோம். எது நல்லது? மன்னரின் பணியில்





மரிப்பதா, அல்லது எல்லாரையும் போலத் தற்செயலாகச் சாவதா? எனவே ஜிம் எலியட்டின் பொன்மொழி எவ்வளவு கருத்துச் செறிவுள்ளதாக இருக்கிறது: "தான் தக்க வைத்துக் கொள்ள முடியாத ஒன்றை இழப்பதினால், இழக்க முடியாத ஒன்றைப் பெற்றுக் கொள்கிறவன் முட்டாள் அல்ல."

மூன்றாவதாக, கர்த்தராகிய இயேசு நமக்காக மரித்திருந்தால் அவருக்காக நாம் நமது உயிரைக் கொடுப்பது தான் மிகச் சிறிய பிரதியுபகாரச் செயலாகும்.* இது எதிர் பேச முடியாத நியாயமுமாகும். வேலைக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல என்பது உண்மையானால், ஆண்டவராகிய இயேசு சென்ற வழியைக் காட்டிலும் சொகுசான ஒரு வழியில் பரலோகம் செல்ல நமக்கு என்ன உரிமையுண்டு? இவ்வுண்மைதான் ஸ்டட்டை இவ்வாறு முடிவு செய்யத் தூண்டினது. "இயேசு தேவனாக இருந்தும் எனக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்து விட்டாரென்றால், அவருக்காக நான் செய்யக் கூடிய எந்தத் தியாகமும் அதைவிடப் பெரிதாகி விட முடியாது."

இறுதியாக, எனதுயிரையும், உடைமைகளையும் துறந்து விடுவதன் மூலம் என் உடன்பிறவா மனிதர்களுக்கு நித்தியமான ஆசீர்வாதங்கள் கிடைக்குமென்றால், நான் அவற்றைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொண்டிருப்பது விசாரிக்கப்பட வேண்டிய கடும் குற்றமல்லவா? ஒரு சிலர் மருத்துவர் ஆய்வுக்காகத் தங்கள் உடலையும், உயிரையும் பலவிதமான பரிசோதனைகளுக்கும் ஒப்புக் கொடுக்கின்றனர். நெருப்புப் பற்றி எரியும் வீடுகளில் சிக்கித் தவிக்கும் தங்கள் அன்புக்குரியவர்களைக் காப்பாற்றச் சென்ற பலர் தங்கள் உயிரைப் பலி கொடுத்திருக்கின்றனர். மேலும் தாய் நாட்டைக் காக்கப் போர் முனையில் மடிந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்கா. மனிதர்களின் ஜீவனுக்கு நாம் கொடுக்கும் மதிப்பு என்ன? மையர்ஸ் என்பவருடன் சேர்ந்து நாமும் இவ்வாறு கவி பாட முடியுமா?

*மெய்யான சீஷத்துவம்*

*“ஆத்துமாக்களையே நான் அங்கே காண்கின்றேன்,*
*வெற்றி பெற வேண்டியவர்கள் கட்டப்பட்டு,*
*அரசாள வேண்டியவர்கள் அடிமைகளாக,*
*அவர்கள் ஒரே நம்பிக்கையும் வெறுமையாகி*
*வெளித்தோற்றமாகி தங்களில் சோர்ந்தனர்”*

*“அடக்கமுடியா ஏக்கம் எழுந்தது என்னில்,*
*எக்காளதொனி எழுப்பியது என்னை -*
*ஓ, இவர்களை மீட்க! மீட்க நான் மடிய,*
*அவர்கள் வாழ நான் தாழ, ஈந்தேன் என் எல்லாம்.”*

எல்லாரும் இரத்தசாட்சிகளாக மரிக்கும்படி கர்த்தர் அழைக்கவில்லை. கழுமரமும், ஈட்டியும், (கில்லட்டினும்) சிரச்சேதமும் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு சிலருக்கே வைக்கப்பட்டுள்ளன. ஆனால் நாம் ஒவ்வொருவரும் இரத்த சாட்சிகளின் வைராக்கியம், சிந்தை, பக்தி ஆகியவற்றுடன் எப்பொழுதும் வாழ வேண்டும். நாம் ஒவ்வொருவரும் நமதுயிரை ஏற்கெனவே துறந்தவர்களாக இழந்தவர்களாக வாழ வேண்டும்.

*“நன்மையோ, தீமையோ, சிலுவையோ, சிங்காசனமோ*
*கிடைக்கட்டும்,*

*வானவில்லோ இடிமுழக்கமோ ஏற்படட்டும்*
*என் ஆத்துமா சரீரத்தை மண்ணில்எறிந்தேன்*
*என் தேவன் அதை உழுது உரமாக்கிட”*



# மெய்யான சீஷத்துவத்தின் வெகுமதிகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குத் தன்னை முற்றிலும் அர்ப்பணிப்பதற்கு நிச்சயமாகவே மிகுதியான பலனுண்டு. முதற்கண் கிறிஸ்துவை பின்பற்றுவதற்கே சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமான இன்பமும் மகிழ்ச்சியும் உண்டு. வாழ்க்கை நிறைவுள்ளதாக, பொருளுள்ளதாக இருக்கிறது. “என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்” (அதை முழுமதிப்புடன் கண்டு கொள்வான்) என்று மீட்பர் மீண்டும் மீண்டும் கூறினார். நான்கு சுவிசேஷங்களிலுமே இவை அடிக்கடி காணப்படுகின்றன. மத்தேயு 10:39; 16:25; மாற்கு 8:35; லூக்கா 9:24: 17:33; யோவான் 12:25. ஏன் இதை நம் ஆண்டவர் வலியுறுத்திக் கூறுகிறார்? ஏனெனில், மக்கள் இயல்பாக தங்கள் சுய வாழ்க்கையையே நாடுகின்றனர். ஆனால் சுயநல வாழ்வுக்காகவே ஜீவனை அரவணைத்துக் கொண்டிருந்தால், அது சீக்கிரம் காணாமற்போகும். கிறிஸ்துவுக்காக வார்க்கப்பட்ட ஒரு ஜீவன், பரிபூரண ஜீவனையும், நித்திய ஜீவனையும் பெறுவதுடன், இம்மையில் சந்தோஷம், சமாதானம், பூரண மனநிறைவையும் பெறுகிறது. வாழ்க்கையின் இந்த அடிப்படைத் தத்துவத்தை எடுத்துக் காண்பிக்கவே இச்சொற்றொடரைக் கர்த்தர் மீண்டும் மீண்டும் பயன்படுத்துகிறார்.

அரைகுறைக் கிறிஸ்தவனாயிருப்பது அல்லது முழுமையாகத் தன்னை தத்தம் செய்யாதிருப்பது நிம்மதியற்ற, நிர்ப்பந்தமான வாழ்க்கைக்கு வழிவகுப்பதாகும். எனக்கென்று ஒன்றுமே வேண்டாம்; எல்லாம் என் ஆண்டவருக்கே உரியது என்று சமர்ப்பணம் செய்த ஒருவர் நிச்சயமாகவே வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்கிறார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கொத்தடிமையாக இருப்பதே மெய்யான விடுதலையாகும். அவருக்கு ஆற்றும் சேவையே மெய்ச்சுயாதீனமாகும். "நான் என் ஆண்டவரில் முழு மனதுடன் அன்பு கூறுகிறேன்; ஆதலால் நான் விடுதலை பெற்று வெளியேறிப்போக விரும்பவில்லை" என்று உத்தம இருதயத்துடன் கூறுபவர்களே மெய்யான விடுதலை அடைந்து விடுகின்றனர்.

அற்பமானவற்றை முக்கியப்படுத்தியும், அநித்தியமானவற்றைக் கட்டித் தழுவிக் கொண்டும், அநாவசியமானதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டும் ஒரு சீஷன் தன் அழைப்பை மறந்து உளையில் சிக்கிக் கொள்ளமாட்டான். நித்தியமான காரியங்களிலேயே அவன் கரிசனைமிக்கவனாக இருக்கிறான். மிகச் சொற்பமான பொருட்கள் இருப்பதால், தான் உல்லாசமாக வாழ்வதாக ஹட்சன் டெய்லர் சான்று பகர்ந்தார்.

"அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்." (2 கொரிந்தியர் 6:9-10)

இவ்வுலகில் மிகுந்த மனநிறைவைக் கொடுக்கக்கூடியது மெய்யான சீஷத்துவ வாழ்க்கையென்றால், இனிவரப்போகும் உலகில் அதிக பயனளிக்கப்போவதும் அதுவேதான் என்று உறுதியாகக் கூறமுடியும். "இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு, உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும்? என்று கவலையுடன் வினவின பேதுருவுக்கு, "மறுஜென்ம காலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும்போது





என்னைப் பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின் மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 19:27 28) என்று ஆண்டவர் ஆணித்தரமாகக் கூறுகிறார். "மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின்" மகிமை பொருந்தினவராய் தம்முடைய தூதரோடும் கூட வருவார் அப்பொழுது, அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்." (மத்தேயு 16:27)

எனவே இம்மையிலும் மறுமையிலும் மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன், ஏல் பட்டணத்து போர்டன் என்ற பரிசுத்தவானோடு சேர்ந்து ஆண்டவரோடு இவ்வாறு பொருத்தனை செய்து கொள்வான்: "கர்த்தராகிய இயேசுவே என் வாழ்க்கையை நான் பிடித்து வைத்துக் கொள்ளாதபடி என் கைகளை எடுத்து விடுகிறேன். என் இதயத்தின் அரியணையை உமக்குக் கொடுக்கின்றேன். உம் சித்தப்படியே என்னை மாற்றும், சுத்திகரியும், பயன்படுத்தும்."

# இயேசுவுக்கு விருப்பமில்லை

"ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்புகிறார்..." (2 பேதுரு 3 :9)

*"எவரும் அழிவது இயேசுவின் விருப்பமல்ல;*
*ஏசு மகிமையின் சிம்மாசனம் வீற்றிருக்க,*
*விழுந்து போன உலகம், துயர், தரித்திரம் கண்டார்,*
*விம்மினார் நம் துக்கங்களுக்காய்*
*ஊற்றினார் தம் ஜீவனை நமக்காய், ஒப்பற்ற அன்பிதுவே!*
*மாய்கின்றனர், மடிகின்றனர்! நம்முன்னே பல்லாயிரம்,*
*இதயம் வெடிக்கிறது தாங்கொணா பாரத்தால்:*
*இயேசு இரட்சிக்கிறார், இதைச் சொல்ல ஆள் இல்லை,*

*பாவ அழிவிலிருந்து தூக்க ஆளில்லை.*
*"எவரும் அழிவது இயேசுவின் விருப்பமல்ல,*
*பாவ மாம்ச சாயலில், பாடு நிறைந்தவராய்,*
*இழந்து போனதைத் தேடிட, இன்னலுற்றோரைத் தேற்றிட,*
*துக்கத்தால், வெட்கத்தால் துவண்டோரை*
*துயர் நீக்க, குணமாக்க, இரட்சிக்க இயேசு வந்தார்.*
*மாய்கின்றனர், மடிகின்றனர். காலமும் செல்லாது,*
*அறுப்பு மிகுதி, ஆட்களோ கொஞ்சம், அந்தகாரமும் வந்தது:*
*அன்பர் இயேசுன்னை அழைக்கிறார், அறுவடைக்குத் தீவிரி,*

*அருமையான ஆத்துமாக்கள், உண்டு உனக்கு ஊதியமாய்.*
*"இன்பத்திற்காய் வாழ்வோர் ஏராளம், இயேசுவுக்காய்*
*வாழ்பவரோ, சொற்பம்;*
*உபத்திரவப்படுத்தும் உலக வேலைக்கும், உல்லாசத்துக்கும்*
*நேரமுண்டு*
*உலக இரட்சகரின் வேலைக்கோ நேரமில்லை, பசித்தோரைப்*
*போஷிக்க*





*விழுந்தோரைத் தூக்கி, நித்திய இன்பம் நல்க ஆள் இல்லை!*
*மாய்கின்றனர், மடிகின்றனர்! அவர்கள் கூக்குரல்*
*கேட்டிடுவீர்;*
*அறிவியுங்கள் அவரன்பை எங்களுக்கு, பாரஞ்சுமந்து*
*களைத்துப் போனோம்,*
*அழுது அழுது கண்கள் மங்கி இளைத்துப் போனோம்.*

*"எவரும் அழிவது இயேசுவின் விருப்பமல்ல";*
*அவரைப் பின்செல்லும் நானோ, ஆத்துமாக்கள் அழிகையில்*
*அதிக காலம் ஓய்வெடுத்து, ஓய்யாரமாய் வாழ்ந்து,*
*அவர்களுக்கு உதவ முடியாமலிருப்பேனோ, நான்?*
*மாய்கின்றனர், மடிகின்றனர்! உமக்கோ அது பிரியமில்லை;*
*ஆண்டவரே, எங்களை மன்னியும், ஏவி, எழுப்பி எங்களைப்*
*புதுப்பியும்;*
*உலக நேசத்தை எம்மிலிருந்து விரட்டி, மங்கா நித்ய மதிப்பை*
*உணர்ந்து உமக்காய் என்றும் வாழ உதவிடும், ஆமென்"*

- லூசி ஆர். மேயர்

# உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறது?

## உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறது?

பூமியிலே... உங்களுக்குப் பொக்கிஷங்களைச்... சேர்த்துவைக்க வேண்டாம்... பரலோகத்திலே... உங்களுக்குப் பொக்கிஷங்களைச்... சேர்த்து வையுங்கள்... உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் (மத்தேயு 6:19-21).

பொக்கிஷம் இருக்கிற இடத்தில்தான் இருதயமும் இருக்கும். அது வீட்டுக்குள் அல்லது நிலவறையில் அல்லது வங்கியிலிருக்கும் பாதுகாப்பு பெட்டகத்துக்குள் இருக்கலாம்! அல்லது பரலோகத்தில் இருக்கலாம்! ஆனால் ஒரே நேரத்தில் இவ்விரண்டு இடங்களிலும் இருக்கமுடியாது.

"ஒரு கிறிஸ்தவன் தனது ஆஸ்தியை விட்டுச் செல்கிறான், அல்லது ஆஸ்தியினிடத்திற்குச் செல்கிறான்!" என்று ஒருவர் நேர்த்தியாகக் கூறியுள்ளர்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது அடியார்கள் பூமியிலே ஆஸ்தியைச் சேர்த்து வைப்பதைத் தடைசெய்துள்ளார். அவர்களுடைய இருதயங்கள் பரலோகத்திலே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

ஆகிலும் கிறிஸ்துவின் இந்த உபதேசம் மிகத் தீவிரமானதாக அல்லது மிகக்கடினமானதாக இன்று நம்மால் கருதப்படுகிறது. மெய்யாக அவர் இவ்விதமாகத்தான் அர்த்தம் கொண்டாரா? நாம் நமது அந்தியகாலத்துக்குத் தேவையான பொருள் சேர்த்து வைக்க வேண்டுமென்று பொது அறிவே நமக்குப் போதிப்பதில்லையா? நாம் விவேகமாக நடந்து கொண்டு எதிர்கால இடாப்பாடுகளைச் சமாளிக்க ஆவன செய்ய வேண்டாமென்று கூறுகிறாரோ? நாம் அன்பு பாராட்டுகிற நமது குடும்பத்தினருக்காகக் கொஞ்சம் சேமித்து வைக்க வேண்டாமா?

**உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறது?**

கிறிஸ்துவைப் பின்பற்றும் தொண்டர்கள் எனப்படுவோர் தட்டிக் கழிக்கமுடியாமல் நேரடியாகவும், நேர்மையாகவும் பதிலளிக்க வேண்டிய முக்கியமான கேள்விகள் இவை.

இவற்றிற்கு விடைகள் என்ன? ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் செல்வத்தைப்பற்றித் திருமறை போதிப்பது என்ன? தனிநபர்கள் செல்வம் சேர்ப்பது தவறா? ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கைத்தரம் எவ்வாறிருக்கவேண்டும்?

## வாணிபத்திலே, தொழிலிலே சிரத்தை

பொருளீட்டுவதை வேதாகமம் தடை செய்வதில்லை என்பதை முதற்கண் நாமனைவரும் ஏற்றுக்கொள்வோம். பவுல் அப்போஸ்தலனும் தனது சுய தேவைகளை நிறைவு செய்ய கூடாரத் தொழிலில் ஈடுபட்டிருந்தார் என்றறிகிறோம். (அப்18:1-3;2தெச 3:8) ஒருவனுக்கு வேலைசெய்ய விருப்பமில்லாவிட்டால் அவனைப் பட்டினிபோடவேண்டும் என்று தெசலோனிக்கேயா சபையாருக்குப் போதித்தார். ஆதலால் சந்தேகத்திற்கிடமின்றி ஒவ்வொருவரும் கருத்துடன் உழைத்துச் சம்பாதித்துத் தனது தேவைகளையும் தனது குடும்பத்தாரின் தேவைகளையும் சந்திக்கவேண்டும் என்று திருவசனம் ஐயந்திரிபறக் கட்டளையிடுகிறது.

அப்படியென்றால், ஒரு விசுவாசி தன்னாலியன்றவரை அதிகபட்சம் பணம் சம்பாதிக்கலாம் என்று கூறுவோமோ? இல்லை; இக்கூற்றை நிபந்தனையுடன்தான் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். கீழ்காணும் சில முக்கியமான நிபந்தனைகளைத் தழுவி ஒருவிசுவாசி எவ்வளவு வேண்டுமானாலும் பொருளீட்டலாம்:

1. ஒருவருடைய தொழிலில் உள்ள ஈடுபாடு அவருடைய கர்த்தருக்குரிய உத்தரவாதங்களுக்கு இடையூறாக அமையக்கூடாது ஏனெனில் அவருடைய முதற்பொறுப்பு தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும்





தேடுவதுதான் (மத்தேயு 6:33). தொழில் மற்றும் வேலையின் நெருக்கத்தினால் தொழுகையோ மற்றும் நற்செய்திப்பணியோ எவ்விதத்திலும் பாதிக்கப் படக்கூடாது.

2. ஒருவர் தனது குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய கடமையில் பாதிப்பு உண்டாகக்கூடாது (1 தீமோத்தேயு 5:8). ஒருவர் அதிகமாகச் சம்பாதிக்கத் தொடங்கும் பொழுது, அவருடைய மனைவி-பிள்ளைகளுக்கு அதிகநேரம் கொடுக்க இயலாமற்போவது இயல்பு. இதை ஈடுசெய்ய அவர்களுக்கு அதிக ஆடம்பரங்களையும் வசதிகளையும் வாங்கிக் கொடுத்தால் அது போதாது. இவை அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையையும், நல்லொழுக்க நடவடிக்கைகளையும் அதிகமாகப் பாதிக்குமேயன்றி வேறெவ்வித நன்மையையும் தராது. தேவனுக்குப் பயந்திருக்கும் கணவன் மற்றும் தகப்பனின் உறவும் வழிகாட்டுதலும்தான் அவர்களுக்குத் தேவையே அன்றி பெருகிவரும் செல்வமும் செருக்குமல்ல.

3. நாணயமும் பராட்டுக்குமுரிய தொழில் செய்து தான் ஒரு விசுவாசி பொருளீட்டவேண்டும் (நீதிமொழிகள் 10:16) என்பதனை நாம் சொல்லாமலே விளங்கிக்கொள்கிறோம். மக்களின் சுகத்திற்கும் பண்பாடுகளுக்கும் தீங்கிழைக்கும் எந்தப் பொருள் உற்பத்திக்கும் அதன் விநியோகத்துக்கும், விளம்பரத்துக்கும் ஒரு விசுவாசி நேரத்தையும் பணத்தையும் விரயமாக்கக்கூடாது. மேலும், மனந்திரும்ப நாட்டமின்றி, நரகத்துக்குச் செல்லும் மனிதர்களை உபசரிப்பதில் ஒரு விசுவாசி தனது வாழ்க்கையை நஷ்டப்படுத்தக்கூடாது. பொது நலத்தை வளர்க்கும் ஆக்கபூர்வமான வேலையில் மாத்திரம் ஒரு விசுவாசி ஈடுபடவேண்டும்.

4. இவை தவிர, ஒரு விசுவாசி உண்மையும் நாணயமுமான முறையில் தான் செல்வமீட்டுகிறாரா என்று நிச்சயப்படுத்திக்

கொள்ள வேண்டும். (நீதிமொழிகள் 20:17). ஒருவரின் தொழில் நன்றாகக் காணப்பட்டாலும், அவரின் முறைகள் வஞ்சகமுள்ளதாக இருக்குமானால், அதுவும் பாவமுள்ளதாகிறது. எடுத்துக்காட்டாக:

(அ) பொய்க்கணக்குகளைக் காண்பித்து வருமான வரி ஏய்ப்புச் செய்வது(நீதிமொழிகள் 12:22).

(ஆ) கள்ளத்தராசும், கள்ளப்படிக்கற்களும் கொண்டு ஏமாற்றுவது (நீதி 11:1).

(இ) மேலதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துக் காரியங்களைச் சாதிப்பது (நீதி 17:23).

(ஈ) தனது பண்டமே சிறந்தது என்று பொய்யாக விளம்பரம் செய்வது (நீதி 20:6).

(உ) போலியான மிகையான செலவுக் கணக்குகள் தயாரிப்பது (நீதி 13:5).

(ஊ) பொதுவான சந்தையிலும், பங்கு அங்காடிகளிலும் ஊகவாணிபம் செய்து இலாபம் தேடுவதும், லாட்டரிச் சீட்டுகள் வாங்கி பரிசுபெற ஏங்குவதும் சூதாட்டமேயன்றி வேறல்ல. (நீதி 13:11).

(எ) தொழிலாளிகளுக்குத் தகுதியான ஊதியம் வழங்காமல் இருப்பதும், வேறெவ்வகையிலும் அவர்களைச் சுரண்டிப் பிழைப்பதும் கர்த்தருக்கு அருவருப்பு ஆகும். (நீதி 22:16). இத்தீயசெயல்களுக்கு எதிராகத்தான் யாக்கோபு இவ்வாறு முழக்கமிடுகிறார்: "இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது" (யாக்கோபு 5:4).

5. தனக்குச் சுகக்கேடு உண்டாகுமளவிற்கு ஒரு கிறிஸ்தவன் பாடுபட்டுப் பணமீட்டத் தேவையில்லை. ஏனெனில். அவனுடைய சரீரம் பரிசுத்த ஆவியானவரின்





ஆலயமன்றோ! (1 கொரிந்தியர் 6:19). தனது சரீரசுகத்தைப் பலியாக்கிச் சீக்கிரமாகச் செல்வந்தனாகப் பிரயாசப் படக்கூடாது.

6. இறுதியாக, ஒரு கிறிஸ்தவன் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் சம்பாதிக்கலாம் - ஆனால் பொருளாசைக் காரனாகிவிடக்கூடாது. அவன் ஒருபோதும் பணத்திற்கு அடிமையாகிவிடக்கூடாது (மத்தேயும் 6:24). பொருள் சேர்க்கலாம்; ஆனால் பொருளாசை கூடாது.(சங்கீதம் 62:10).

மேற்கூறியவற்றின் சாராம்சமாவது: ஒரு கிறிஸ்தவன் தேவனுக்கே முதலிடம் கொடுத்து, குடும்பப் பொறுப்புகளை நன்றாக நிறைவேற்றி, ஆக்கபூர்வமாகப் பணி செய்து, நாணயமாக நடந்துகொண்டு, தனது சுகத்தைப் பேணி, பொருளாசை இல்லாதவனாக இருந்தால், அவன் தாராளமாகப் பொருளீட்டலாம்.

**பெற்றுக்கொள்ளலாம்; ஆனால் வைத்துக் கொள்ளக்கூடாது**

"பணத்தைப் பதுக்கிவைப்பது தவறா?" என்பதுதான் நம்மை எதிர்நோக்கியிருக்கும் அடுத்த கேள்வி "ஆம், அது தவறுதான்" என்பதுவே புதிய ஏற்பாடு நமக்களிக்கும் தெளிவான பதிலாகும்.

செல்வந்தராக இருக்கும் ஒருவரையும் திருமறை கண்டனம் செய்யவில்லை. ஓரேநாளில் ஒருவர் திரளான ஐசுவரியத்துக்குச் சுதந்தரவாளியாகி விடலாம். ஆனால் பெற்ற ஆஸ்திகளைப் பயன்படுத்தும் முறைகளைப்பற்றி விவிலியம் ஏராளமாகக் கூறுகிறது. அவை முறையே:

1. முதலாவதாக, நாம் தேவனுடைய உக்கிராண ஊழியக்காரர் (1கொரிந்தியர் 4:1-2). அதன் பொருள் என்னவென்றால், நமக்குண்டானவைகளெல்லாம் நமக்குரிய வைகள் அல்ல, தேவனுக்கே சொந்தமானவை. தேவனுடைய பணத்தை அவருடைய மகிமைக்காகச் செலவிடுவதே நமது பொறுப்பும் கடமையுமாகும். பத்து

விழுக்காடு மட்டுமே அவருக்குரியதாகும். மீதமுள்ள தொண்ணூறு பங்கும் நமதிஷ்டம் போலச் செலவிடுவதற்கு நமதுடைமையாகும் என்பதுதான் புதிய ஏற்பாட்டு உக்கிராணத்துவம் என்பது மிகத்தெற்றான கொள்கையாகும். நூற்றுக்கு நூறு, எல்லாமுமே தேவனுக்கே சொந்தமாகும்.

2. இரண்டாவதாக, தேவையான உணவும் உடையும் பெற்றிருப்பதுடன் நாம் திருப்திகொள்ள வேண்டும். "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போது மென்றிருக்கக் கடவோம் (1 தீமோத்தேயு 6:8). இங்கு 'உடுக்கவும்' என்ற பதம் உடையுடன் நாம் வசிப்பதற்குத் தேவையான இருப்பிடத்தையும் அல்லது கூரையையும் குறிக்கும். எனவே இவ்வசனத்தின்படி நமது இன்றியமையாத் தேவைகளான உணவு-உடை-உறையுளுடன் நாம் திருப்தியாக இருக்கவேண்டும் என்று உணர்த்தப்படுகிறோம். இயேசுவுக்குக் கிடைத்திராத ஒன்று நமக்குக் கூட அருளப்படுகிறது அதாவது, அவர் உலகத்திலிருக்கையில் அவருக்குத் தலைசாய்க்க இடமில்லாதிருந்தது." (மத்தேயு 8:20)

தொழிலதிபராக இருக்கும் ஒரு கிறிஸ்தவருக்கு நிலையான மூலதனமும் சுழல் மூலதனமும் அவசியம் தேவைப்படுகிறது. நாளுக்கு நாள் தோன்றும் செலவினங்களாகிய மூலப் பொருட்களைக் கொள்ளுதல், தொழிலாளர்களின் கூலிகள், போக்குவரத்துச்செலவுகள் போன்றவற்றிற்காக அதிகப்பணம் தேவைப்படுகிறது. இவற்றை வேதாகமம் அநுமதிக்கிறது.

3. மூன்றாவதாக, நாம் மிகச் சிக்கனமாக வாழவேண்டும்; அநாவசியமான ஆடம்பரச் செலவுகளையும், பணம் எவ்விதத்திலும் வீணாவதையும் தவிர்க்க வேண்டும். ஐந்தப்பம் இரண்டு மீன் கொண்டு ஐயாயிரம் புருஷரைப் போஷித்தபிறகும், மீதமான துணிக்கைகளை வீணாக்காமல், கூட்டிச் சேர்க்கும்படி இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (யோவான் 6:12). அவருடைய முன் மாதிரியிலிருந்து நாம் எங்கெல்லாம் சிக்கனப்படுத்திச் சேமிக்கக்கூடுமோ அங்கெல்லாம் நாம் கவனமாக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கப்படுகிறோம்.





தேவையற்றபொருட்களை நாம் எவ்வளவோ வாங்குகிறோம். முக்கியமாக, கிறிஸ்மஸ் போன்ற விசேஷ காலங்களில் நமது வருவாயில் ஒருபெரும்பகுதியையே மதிப்பும் பயனுமில்லாத அநேக அன்பளிப்புகளில் செலவிடுகிறோம். பின்னர் அவைகள் மூலைகளில் வைக்கப் படுகின்றன; அல்லது குப்பைத் தொட்டிக்குச் செல்கின்றன. அவற்றால் யாருக்கும் எந்த நன்மையுமில்லை!

அநேக சந்தர்ப்பங்களில் விலையேறப்பெற்ற பொருட்களைவிட, அதே பயன்பாடுடைய விலைகுறைந்த பதிலிகளே போதுமானது. இதையெல்லாம் நாம் கணித்துப் பார்ப்பதில்லை. வீண் பகட்டுக்காக நாம் அடிக்கடி அதிகச் செலவு செய்கிறோம். எனினும் சில சமயங்களில் விலையுயர்ந்த பொருட்கள் தான் தரமானவையாக இருக்கும். எனவே, விலை, தரம், உழைப்பு, நேர மிச்சம் ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து வாங்கவேண்டும்.

கண்ணில் படுவதையெல்லாம் வாங்காமலும், கவர்ச்சி விளம்பரங்களையும் (உ-ம் ஒரு சேலை வாங்கினால் இன்னுமொரு சேலை இலவசம்; இரண்டு உடுப்புகளுக்கு மூன்றாவது இலவசம் போன்றபல அன்பளிப்புகளும், பரிசுக் கூப்பன்களும், இனாமாக தங்கம், வெள்ளி சிறிது கிடைக்கும் என்பதையும்) கண்டு ஏமாறாமலும் இருக்க நம்மைநாமே கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். மனுஷகுமாரன் நிமித்தமாக நாம் சிக்கனமாகவே ஜீவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

4. நமது தேவைகளுக்கு மிஞ்சினதையெல்லாம் கர்த்தருடைய சேவையில் நாம் ஈடுபடுத்தவேண்டும் (1 தீமோத்தேயு 6:8). என்பதை நினைவிலிறுத்திக்

கொள்ளுங்கள்! நம்மிடமிருப்ப தெல்லாம் அவருக்கே சொந்தம். நாம் அவருடைய பொருள் நிர்வாகிகள் மட்டுமே. நமது சக்திக்கேற்ப கர்த்தருடைய காரியத்தை முன்னேற்றுவதுதான் நமது வேலையாகும்.

இவ்வாறு கூறினவுடன் இதற்கு மறுப்பும் தெரிவிக்கப்படும்! நமது அத்தியாவசியத் தேவைகளுக்குப் போக எஞ்சியதை யெல்லாம். கர்த்தருடைய ஊழியத்துக்கென்றே கொடுத்து விடுவது அர்த்தமற்றது. குறுகின பார்வையுள்ள விவேகமற்ற மடமைச் செயலாகும் என்ற எதிர்வாதம் கிளம்பும். நல்லது! ஆகிலும் ஒருவர் இங்ஙனம் செய்ததுண்டு என்ற குறிப்பையும் நாம் காண்கின்றோம். அவள் ஒரு விதவை தன்னிடமிருந்த இரண்டு காசுகளையும் ஆலய உண்டியலிலே போட்டுவிட்டாள். இதனைக் கவனித்துக் கொண்டிருந்த இயேசு அவளைக் கடிந்துகொள்ளவில்லை. "இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (செல்வந்தர்களாகிய) அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததை யெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்."

(லூக்கா 21:3-4)

5. நாம் பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதற்குக் கர்த்தர் தடையுத்தரவு போட்டிருக்கிறார் என்பது நமக்கு தெரியுமல்லவா! வேதவாக்கியங்கள் இவ்விஷயத்தில் மிகவும் திட்டமும் தெளிவுமாக இருக்கின்றன.

"பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத்





திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்தேயு 6:19-21).

இந்த வசனங்கள் வேதாகமத்தில் இல்லாதிருந்தால் நலமாயிருக்குமே என்று எண்ணுகிறவர்களும் நம்மில் பலருண்டு. இயேசுவே இவைகளைப் பேசினார் என்று நம்புகிறோம். தேவ ஆவியானவரால் இவைகள் ஏவி எழுதப்பட்டுள்ளன என்றும் விசுவாசிக்கிறோம். ஆனால் அவைகள் நமக்குப் பொருந்தாது என்று எப்படியோ நம்மை நாமே தேற்றிக் கொள்ளுகிறோம். ஏனெனில் நாம் அவற்றிற்குக் கீழ்ப்படிவதில்லை. நம்மைப் பொறுத்தவரை கர்த்தர் இவ்வசனங்களைக் கூறாதது போலவே நடந்து கொள்கிறோம். இல்லையா!

எப்படியானாலும் சரி, பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பது பாவம் என்பதுதான் உண்மை. அவ்வாறு செய்வது திருவசனத்துக்கு நேர்முரணானதாகும். விவேகம் என்றும் சிறந்த முன் யோசனை, ஞானம் என்றும் நாம் கூறுவதெல்லாம் உண்மையில் கலக புத்தியும், பாவச்செயலும், அஞ்ஞானமும் ஆகும்.

நமது பொக்கிஷம் எங்கேயோ, அங்கேதான் நமது இருதயமும் இருக்கும். ஒருமுறை மிகச்சீருடன் வாழ்ந்த ஒரு பிரபுவின் அரண்மனை போன்ற மாளிகை, அதனைச்சுற்றியுள்ள கவர்ச்சியான பூந்தோட்டம் மற்றும் பண்ணை, வயல்வெளிகள் யாவையும் அறிஞர் ஜான்சனுக்குச் சுற்றிக்காண்பிக்கப் பட்டபொழுது, அவர்தமது நண்பர்களைப்பார்த்துக் கூறினதாவது, 'இவைகளெல்லாம் மரண வேளையில் அவற்றின் உரிமையாளரின் ஆவிபிரியாமல் இழுத்துக் கொண்டிருக்கச் செய்கின்றன.' என்று கூறினாராம்!

6. முடிவாக, எதிர்காலத்துக்காக நாம் முற்றிலும் கடவுளையே சார்ந்திருக்கவேண்டும். பூரண விசுவாசஜீவியத்துக்கும், முழுவதுமாக அவரையே சார்ந்திருப்பதற்கும் தேவன்

நம்மை, தமது பிள்ளைகளை, அழைக்கிறார். "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத்தேயு 6:11) என்று ஜெபிக்கத்தான் கர்த்தர் நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். மன்னாவின் அற்புதத்தினால், நாம் அனுதினமும் நமது தேவைகள் எல்லாவற்றிற்கும் கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும் என்று போதிக்கிறார். (யாத்திராகமம் 16:14-22) அவரே நமது பொக்கிஷமும், பாதுகாப்புமாவார்; இவ்வுலகின் நெரிந்த நாணல்களை நாம் நம்பியிருப்பதுதான் அறிவீனமாகும்.

## இதில் கெடுதி என்ன இருக்கிறது?

செல்வத்தைச் சேர்த்துவைப்பதும், பணத்தைப்பதுக்கி வைப்பதும் ஒருகிறிஸ்தவனுக்கு ஏன் அடாத செயலாகும்?

1. முதலாவதாக, அது தவறு, கெடுதி, பாவம் என்று விவிலியம் கூறிவிட்டது (மத்தேயு 6:19); அதுவே போதுமான காரணமாகும். சான்றாக, நன்மைதீமை அறியத்தக்க மரத்தின் கனியை ஆதாமும் ஏவாளும் புசிப்பதில் என்ன தவறு இருக்கின்றது? ஏனெனில் தேவன் அவ்வாறு கூறிவிட்டார். நம் ஒவ்வொருவருக்கும் இதுவே போதுமான பதிலாகும். இதற்கு மேல் விளக்கம் தேவையில்லை.

2. மேலும் இப்பழக்கம் இப்பரந்த உலகின் உடனடியான ஆவிக்குரிய தேவையை உணராமலிருப்பதால் இது தவறு ஆகும். (நீதிமொழிகள் 24:11-12) தேவனுடைய கிருபையின் நற்செய்தியைக் கேட்டு அறிந்திராத கோடானு கோடி ஆண்களும், பெண்களும், பெரியோரும் சிறியோரும் இருக்கின்றனரே. வேதாகமம் கிடைக்கப்பெறாதோரும், நற்செய்தி நூல்களும், விளக்க உரைகளும் கிடைக்காமல் தவிக்கும் எண்ணிறந்த மக்களும் உண்டே! தேவனற்றவர் களாகவும், கிறிஸ்து இல்லாதவர்களாகவும், நம்பிக்கை யற்றவர்களாகவும் இவ்வுலகைவிட்டுக்கடந்து செல்வோர்





ஏராளம். இவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு முறையாவது இயேசுவின் நாமத்தைக் கேட்க நாம் உதவவேண்டாமா?

சுவிசேஷத்தைப் பரப்ப பணவசதி இருக்கையில் அதைப் பயன்படுத்தாதிருப்பதை ஆவிக்குரிய சகோதரப்படுகொலை என்றே அழைத்தல் வேண்டும் (எசேக்கியேல் 33:6).

பணத்தை மூட்டைகட்டி வைத்திருப்போருக்குத் தேவ அன்பு இல்லை என்று குறிப்பிடத்தக்க வகையில் இது சத்தமாகச் சாட்சியிடுகிறது. "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடைய வனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவஅன்பு நிலைகொள்கிறதெப்படி?"

(1 யோவான் 3:17)

கடும்பஞ்சத்தில் அடிபட்டு பல நாட்களாகப் பட்டினியாகக்கிடந்த நாலு குஷ்டரோகிகள் ஏராளமான உணவு மற்றும் கொள்ளைப் பொருட்களின் மீது தடுமாறி விழுந்த வேளையில் தாங்கள் திருப்தியாகப் புசித்துக்குடித்த பின்னர், தாங்கள் கண்டடைந்ததை மற்றவர்களும் பெற வேண்டு மென்று ஆவலாய் ஓடி அந்த நற்செய்தியை அறிவித்தார்கள் என்பதாக வாசிக்கிறோமல்லவா? கிருபையின் கீழ் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம் நியாயப்பிரமாணத்தின் கீழ்வாழ்ந்த குஷ்டரோகிகளைவிட அன்பும், அநுதாபமும், இரக்கமும் உருக்கமும் மனிதாபிமானமும் குறைந்தவர்களா?

3. உலகின் கண் வாழும் சுமார் 600 கோடிமக்களின் இம்மைக்குரிய அனுதின தேவைகளும் பற்றாக்குறையாக இருக்கும்பொழுது நாம் நம்முடைய பணத்தை முடக்கிவைத்திருப்பது அநீதியும், கொடுமையுமல்லவா? (நீதிமொழிகள் 3:27-28; 11:26). லூக்கா 16-ம் அதிகாரத்தில் காணும் ஐசுவரியவான் தன் வாசலருகே கிடந்த நோயுற்ற பரம ஏழையைப் பற்றி எவ்வித அக்கறையுமின்றி தன் சுகபோகத்தில் மிதந்து கொண்டிருந்தான்! தன் ஜன்னலைத்திறந்து வெளியே எட்டிப்பார்த்திருப்பான்

என்றால் அந்த ஏழை லாசரு படும்பாட்டைக்கண்டு, அங்கு உண்மையிலேயே தன் செல்வத்தில் ஒரு சிறு துளியைப் பெறத் தகுதியுள்ள ஒருவனைக் கண்டிருப்பான்! ஆனால் அவனுக்கோ ஈவு இரக்க மில்லாமற்போயிற்று.

உலகம் லாசருக்களால் நிறைந்திருக்கிறது. அவர்கள் நமது வாசற்படிகளிலே காத்திருக்கிறார்கள். நாமோ பாராமுக முடையவர்களாயிருக்கிறோம்! "உன்னிடத்தில் நீ அன்பு கூருவதைப் போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" என்று இயேசு நம்மிடம் கூறிக் கொண்டேயிருக்கிறார் (மத்தேயு 22:39). இப்பொழுது நாம் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடா தவர்களாக இருப்போமென்றால், பின்னொருநாளிலே அவருடைய வார்த்தைகள் இவ்வாறு நமது காதுகளிலே பலமாய்த்தொனிக்கும்: "பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை... மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்." (மத்தேயு 25:42,45)

4. கிறிஸ்தவர்கள் தங்கள் பொக்கிஷங்களைப் பூமியிலே சேர்த்து வைப்பதினால், தேவனுடைய சத்துருக்கள் அவரைத் தூஷிப்பதற்குக் காரணமாகிவிடுகிறது (ரோமர் 2:24) "பணத்தைப் பொறுத்தவரையில் எல்லாமனுஷரும் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் தான்!" என்று நாத்திகனான வால்டேர் கூறுவதற்குத் துணிவுகொண்டார்.

இரட்சிக்கப்படாத எண்ணிறந்த மக்களுக்கு இயேசுவின் போதனைகள் தெரியும். நமக்கு அடுத்தவர்களை நாம் நேசிக்க வேண்டும் என்று அவர் கட்டளையிட்டிருப்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். ஆனால் அநேக கிறிஸ்தவர்கள் எனப்படுவோரின் ஆடம்பரமான மாளிகைகளையும், கார்களையும், சிறந்த உணவுவகைகளையும், ஆடைகளையும், அணிகலன்களையும், டாம்பீகமான வாழ்க்கையையும் காணும்பொழுது, இயேசுவின் போதனைக்கும் அவரைப்பின் பற்றுவோரின் வாழ்க்கைக்கும் உள்ள பெரியமுரண்பாட்டைப் பார்த்துத் திகைக்கிறார்கள்.





சபையே, நீ விழித்தெழும்பு! அறிவு படைத்த அனைத்துலகக் கிறிஸ்தவர்களிடமும் பறைசாற்றுங்கள். கிறிஸ்தவத்தை விமர்சிப்போரின் குற்றச்சாட்டுகளைக் கேளுங்கள்! இயேசுவின் நற்போதனைகளுக்கு அவர்கள் எதிர்த்து நிற்கவில்லை! அவற்றைப்புறக்கணிக்கும் நம்மைத்தான் எதிர்க்கிறார்கள்! கொடுமையான தரித்திரத்தில் வாடும் ஏழைஎளியவர்களின் முன்னிலையில் சபையின் செல்வத்தையும், கிறிஸ்தவர்களின் செருக்கையும், மிடுக்கையும்தான் கடுமையாகக் குறைகூறுகிறார்கள்.

''பொன்மயமான காலணிகள் அணிந்தவர்களின் பின்னாலே பீத்தச் செருப்பணிந்தவர்களின் காலடிச்சத்தம் கேட்கிறது. சபை கவனித்துக்கேட்கவும்!" என்று ஒருவர் பகர்ந்துள்ளார்.

5. நமது நவநாகரீகமான உல்லாச வாழ்க்கை முறை அவிசுவாசிகளிடம் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதோடு கூட, இளங்கிறிஸ்தவர்களிடம் என்ன விளைவை ஏற்படுத்துகிறது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். தங்களுக்கு முன்னோடிகளாக விளங்கும் மூத்த கிறிஸ்தவர்களின் வாழ்க்கையைத்தான் அவர்கள் உற்றுநோக்குகிறார்கள். நமது வாழ்க்கைக்கு நாம்கொடுக்கும் முக்கியத்துவத்தை நமது அனலூட்டும் ஞாயிற்றுக்கிழமை மிஷனரிச் செய்தியைக் கேட்டு நம்பிவிடாமல், திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை நாம் வாழும் வாழ்க்கையையும், நமது நடவடிக்கை களையும் பார்த்தே அவர்கள் மதிப்பிடுகிறார்கள்.

நாம் அந்நியர்களும், பரதேசிகளும், யாத்திரிகர்களும் என்று பெருமையடித்துக் கொள்கிறவேளையில், நமது "கூடாரம்" எப்படியிருக்கிறது என்று பார்த்து ஒரு முடிவுக்கு வருகிறார்கள். தங்கள் பேனாக்களை எடுத்து ஒருகையெழுத்து போட்டு விட்டாலே, அநேக தேவைகள் அமோகமாகச் சந்திக்கப்படும் சாத்தியக்கூறு இருக்கையில்,

தேவனுடையஊழியத்துக்காக அவர்களின் நிதிதிரட்டும் கோஷங்களைக் கேட்டு வியப்படைகிறார்கள். நமது செயல்கள் நாம் சொல்வதை அவர்கள் கேட்கவிடாமல் உரக்கப் பேசுகின்றன.

செல்வம் திரட்டுவதிலேயே நமது வாழ்க்கை முழுவதும் செலவிடப்படுமானால், நமது இளைஞர்களும் நமது முன் மாதிரியைப் பின்பற்றுவதைக்குறித்து நாம் ஆச்சரியப்படுவதில் அர்த்தமில்லை! நமது கர்த்தராகிய இயேசுநாதரின் எச்சரிப்பை நாம் ஒருபோதும் மறக்கவேண்டாம்: "... இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ! அவன் இந்தச்சிறுவரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறதைப் பார்க்கிலும், அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டு போவது அவனுக்கு நலமாயிருக்கும்." (லூக்கா 17:1-2)

6. ஐசுவரியத்தைச் சேர்த்துக் கொண்டேபோகிறது பாவம் என்பதற்கு மற்றுமொரு காரணம், அது தேவனைக் களவாடுவது ஆகும் (மல்கியா3:8). நமது ஆஸ்திகள் என்று நாம் கருதுகிற யாவற்றிற்கும் மெய்யான சொந்தக்காரர் கர்த்தர்தான் என்று ஏற்கனவே நாம் பார்த்தோம். நாமே நேரடியாக நற்செய்திப்பணியில் செலவிடமுடியா விட்டாலும், அத்திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களிடம் கொடுத்துச் செலவிடும்படி கூறலாம். சீலையில் பணத்தைச் சுற்றிவைத்திருப்பது மன்னிக்கப்படமுடியாத குற்றமாகும். (லூக்கா19:20-26)

பண விஷயங்களிலும், நமது உக்கிராண ஊழியத்திலும் நாம் ஆண்டவரையும் அவரது வார்த்தையையும் அசட்டை செய்வோமென்றால், அவருக்குக் கீழ்ப்படியாமல் இருப்போமென்றால், திருமறையின் சில பகுதிகளையே நாம் மூடிவிடுகிறோம் (மத்தேயு 6:22-23). மிகத் தெளிவான சில வேத வாக்கியங்களைப் பாராதபடி குருடராகி விடுகிறோம். நமது வீழ்ச்சியடைந்திருக்கும் ஜென்ம சுபாவத்தின் விபரீத போக்குதான் இது.





"நமது வாழ்க்கைகளின் மையத்தையும், பொறுப்புகளையும் விட்டு நமது ஆராய்ச்சி தூரமாக இருக்குமானால் - அதாவது இயற்பியலிலும், கணித இயலிலும் இருப்பதைப் போல - பாவத்தினால் குன்றிக் குறுகிப் போயிருக்கும் நமது சுபாவம் நாம் பெறும் முடிவுகளைக் குறைந்த அளவிலேயே பாதிக்கும். ஒரு ஆய்வு நமது சிருஷ்டி கர்த்தருக்கு நாம் பொறுப்புள்ளவர்கள் என்று அவருக்குச் சமீபமாக நம்மைக் கொண்டு வரும்பொழுது, நாம் நம்புவதற்கு விரும்பாத சத்தியங்களுக்கு நமது மனம் இடங்கொடுப்பதில்லை, நமது பாவசுபாவம் நமது மனக்கண்களைக் குருடாக்கிவிடுகிறது!

அத்துடன் நமக்கு ஆறுதலையும், துணிவையும் அளிக்கக்கூடிய உண்மைக்குப்புறம்பான அநுமானங்களை நம்புவதினால் நமது பொறுப்புகளிலிருந்து விடுதலை பெறுவது போன்ற தப்பெண்ணெத்தை நமக்களிக்கிறது." (இம்மேற்கோள் பிரடரிக்ஃபில்பீயின் வெளிப்படும் சிருஷ்டிப்பு என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

இத்துடன் தொடர்புடைய ஹாரிங்டன் சி.லீஸ் என்பாரின் பொன் மொழியையும் நாம் கவனித்தல் வேண்டும்:

"நாகரீகம் நிறைந்திருக்கும் மனிதனின் உணர்ச்சிமிக்க பகுதி அவனது பணப்பையாகும். ஒரு ஊழியர் சந்திக்க வேண்டிய கடுமையான போராட்டமும் அவருடைய பிரசங்கம் கேட்போரின் பணப்பைகளைத் தொடும்பொழுதுதான்!"

சீயோனிலே சுகபோகமாய், நிர்விசாராமாய் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது சுயவெறுப்புப் போதனைகள் சம்பந்தமற்றவை ஆகிவிடுகின்றன. நாம் கீழ்ப்படியாதிருக்கும் வேதவசனங்களை மற்றவர்களுக்குப் போதிக்கும் பொழுது நம்மால் பயனுள்ள முறையில் விளக்கிக் கூறமுடிவதில்லை.

ஆதலால், இதரபகுதிகளில் இருப்பதைப்போலவே, கீழ்ப்படியாமையின் பல சாபங்களில் ஒன்று, சிதைக்கப்பட்ட வேதபுத்தகம்தான் நம்மிடமுள்ளது (மத்தேயு 13:14-15).

8. மேலும், திரளான செல்வத்தை நாம் சேர்த்து வைத்திருக்கும் பொழுது விசுவாச வாழ்க்கை என்பது முற்றிலும் இயலாததாகிவிடுகிறது. ஏன்? காரணம் என்ன? ஐசுவரியத்தை நம்புவதை விட்டு விடுவது சாத்திய மற்றதாகிவிடுகிறது. ஐசுவரியவான் தன் பணத்தை எவ்வளவாக நம்பியிருக்கிறான் என்று அவனுக்கே தெரியாது!

"ஐசுவரியவானுடைய பொருள் அவனுக்கு அரணான பட்டணம்; அது அவன் எண்ணத்தில் உயர்ந்த மதில் போலிருக்கும்." (நீதிமொழிகள் 18:11).

அவன் தனது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தன் பணத்தையே சார்ந்திருக்கிறான்; தனது நிகழ்கால இன்பவாழ்வுக்கும், வருங்காலப் பாதுகாப்புக்கும் தனது பணமே பலத்தஅரண் என்று நம்பியிருக்கிறான். திடீரென்று அவன் தனது செல்வத்தை இழந்து விடுவானென்றால், தனது கைக்கோல்களையும், ஆதாரத்தையும் இழந்தவன் போல, தனது கால்களுக்கடியிலிருந்த பூமியே அகன்று விட்டது போல, கதிகலங்கிப் போய்விடுகிறான். உண்மை என்ன வென்றால், நாம் காணமுடியாத தேவனை நம்புவதைப் பார்க்கிலும், நம் கண்கண்ட வங்கிக் கணக்கின் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறோம். கடவுளைத் தவிர வேறெவரையும் அல்லது வேறு எதனையும் நம்பியிருக்க வேண்டுமென்றால், அநேகருக்கு அது மீளமுடியாத அதிர்ச்சியையும், நரம்புத்தளர்ச்சியையும் கொண்டுவந்து விடும். அது அவர்களுக்கு காற்றை நம்பியிருப்பது போலாகும்!

> *அவருடைய கரங்களில் விட்டுவிடப்படும் பொழுது, நாம் பாதுகாப்பற்றவர்களாக இருப்பதைப் போல் உணருகிறோம் அல்லது அதில் பாதுகாப்பு இருக்கமுடியாதென்றே எண்ணுகிறோம். ஆனால் அதற்குப்பதிலாக நமது செல்வம் நமது கரங்களி லிருப்பதுடன், பொருளாதார ஏற்றதாழ்வுகளுக்கும் உத்தரவாதமளிக்கக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களும் கைவசம் இருக்குமென்றால், மிகுந்த மனநிறைவுடன் கூடிய பாதுகாப்பு உணர்ச்சி ஏற்படுகிறது. இது உலகமளாவிய பொதுவான ஒரு குணாதிசயமாகும். நாம் அனைவருமே பிதாவின் அரவணைப்பையும் அன்பாகக் காக்கும் கரங்களையும் சார்ந்திருப்பதை விட்டு, மெல்லநழுவி நமது செல்வம் எனும் துரும்பின் மீதுள்ள நமது நம்பிக்கையையும் பிடியையும் விடாதிருக்கும் அபாயத்துக்குள்ளாக இருக்கிறோம்."*
>
> - சாமுவேல்காக்ஸ்.





"அவரையே நாம் இடைவிடாமல் சார்ந்திருக்கும் ஒரு தொடர்ச்சியான நெருக்கடிநிலைமைக்குள்ளாக எப்பொழுதும் நாமிருக்கவேண்டும்" என்பதுதான் நமது ஜீவியங்களைக் குறித்து தேவசித்தமாக இருக்கிறது. நாம் பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கத் தொடங்கினவுடன் நமது ஜீவியங்களிலுள்ள அவருடைய சித்தத்தை முறியடிக்கிறோம்.

விசுவாசஜீவியம் ஒன்றே தேவன் பிரியப்படுகிற வாழ்க்கையாகும். ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்." (எபிரேயர் 11:6).

விசுவாச ஜீவியத்தில்தான் மெய்யான பாதுகாப்பு இருக்கிறது. ''ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது... அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது." (ரோமர் 4:16)

ஏனென்றால் தேவனுடைய வாக்குத்தத்தத்தைவிட அதிக ஸ்திரமானது வேறொன்றுமில்லை. அப்படியானால் அதன் அர்த்தம் விசுவாச வாழ்க்கை கவலையற்ற வாழ்க்கையாகும். மனக்கோளாறுகளும், நரம்புத்தளர்ச்சியும் பொருளைச் சார்ந்திருக்கும் உலோகாயதத்தினால் வருகிறதே அன்றி, தேவனோடு வழிநடக்கும் விசுவாச ஜீவியத்தினால் தோன்றுவதில்லை.

எல்லா மகிமையையும் தேவனுக்கே அளிக்கும் ஒரே வழி விசுவாச வாழ்க்கையே ஆகும். நாம் தரிசித்து நடக்கும் பொழுது மனித ஆற்றலையும், சாமர்த்தியத்தையுமே புகழுகிறோம். விசுவாச வாழ்க்கை அவிசுவாசிகளுக்கும், ஏனைய கிறிஸ்தவர்களுக்கும் சத்தமாகச் சவாலிடுகிறது. ஜெபத்திற்குப் பதிலளிக்கும் ஜீவனுள்ள தேவன் பரலோகத்திலிருக்கிறார் என்பதற்கு அத்தாட்சியாக அமைந்திருப்பது விசுவாசஜீவியமே.

பணத்தைச்சேர்த்துப் பதுக்கிவைப்பது விசுவாச வாழ்க்கையை செயலற்றதாக்கிவிடுகிறது. ஒருவன் கிறிஸ்தவனாகும் பொழுது தானாக அல்லது இயல்பாக இந்த விசுவாச வாழ்க்கை ஏற்பட்டுவிடுவதில்லை. மனதார, வேண்டுமென்றே கிறிஸ்தவன் தனது வாழ்க்கையில் பயிற்சிக்கவும், நடைமுறைப்படுத்தவும் வேண்டும். செல்வந்தர்களின் சமுதாயத்திலே இது முற்றிலும் உண்மையாகும். தேவனை மாத்திரம் சார்ந்திருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையில் ஒரு விசுவாசி தன்னைக் கட்டாயமாக வைத்துக் கொள்ளவேண்டும். இதற்குரிய ஒரே உபாயம், அவன் தனக்குண்டானதையெல்லாம் விற்று ஏழை எளியவர்களுக்குக் கொடுத்துவிடுவதாகும். நெருக்கடிகாலங்களில் ஆதரவாயிருக்கும் என்று நம்புகிற பொய்யான ஆதாரங்களையும், சாய்மானங்களையும் விட்டுவிட்டால்தான் அவன் ஆழத்திற்குள் உண்மையாகவே செல்லக்கூடும்.

9. நமதாண்டவர் அலட்சியப்படுத்தப்பட்டும், அவருடைய ஊழியக்காரர் உபத்திரவப்படுத்தப்பட்டும் இருக்கிற இவ்வுலகில் நாம் அரசர்களைப் போல வாழ்ந்து கொண்டிருப்பது அவரை அவமதிப்பதாகாதா? கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் பட்டாடைகள் அணிந்து, கிரீடங்கள் தரித்து விளையாட்டு அரங்கங்களிலுள்ள சோபாக்களில் அமர்ந்திருக்க, அப்போஸ்தலர்களோ அந்த மைதானத்தில் துஷ்டமிருகங்களால் விழுங்கப்படப் போகிற காட்சியை பவுல் சித்தரித்துக் காண்பிக்கிறார்





(1 கொரிந்தியர் 4:8-13). ஜே.பி. பிலிப்ஸின் மொழிபெயர்ப்பு இவ்வாறு (அர்த்தமுள்ளதாக) இருக்கிறது.

*"ஓ, கொரிந்தியரே, நீங்கள் எல்லாரும் செல்வத்தில் புரண்டு கொண்டிருக்கிறீர்கள்! நாங்கள் இங்கில்லாத காலத்தில் நீங்கள் அரசர்களைப் போல வாழ்ந்து வந்திருக்கிறீர்கள் உங்கள் செருக்கு என்ன? மிடுக்கு என்ன? கடவுளுடைய பார்வையில் மெய்யாகவே நீங்கள் அரசர்களாகி விட்டீர்களே என்றால், நாங்களும் உங்களுடன் சேர்ந்து ஆட்சி செய்வோமே!*

*எங்களைப்பற்றி கடவுள் வைத்திருக்கும் எண்ணம் இவ்வாறு இருப்பதாக உணருகிறேன். "மனுக்குலத்தின் பவனியில் நாங்கள் தான் கடைசி வரிசையில் இழுத்துக் கொண்டு செல்லப்படுகிறவர்களைப்போலவும் - அதுவும் விளையாட்டு அரங்கத்தில் சிங்கம் போன்றதுஷ்ட மிருகங்களுக்கு இரையாகப் போகிறவர்களைப் போலவும் இருப்பதாகக் - காண்கிறேன். பரலோகத்தின் தூதர்களின் பார்வையிலும், பூலோகத்தின் மனிதர்களின் மதிப்பிலும் நாங்கள் விளையாட்டு அல்லதுவேடிக்கைப் பொருட்களாகக் காட்சியளிக்கிறோம். கிறிஸ்துவின் நிமித்தம் நாங்கள் முட்டாள்களாகக் காட்சியளிக்கையில், கொரிந்தியராகிய நீங்களோ கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தில் அறிவாளிகளாகவும், ஆற்றலுள்ளவர்களுமாயிருக்கிறீர்கள். நாங்கள் பலவீனரென்று மதிப்பிடப்படுகையில் நீங்கள் பலசாலிகள். நீங்கள் கனமடைகிற வேளையில் நாங்களோ கனவீனமடைகிறோம். அது மட்டுமல்ல, எங்களை துச்சமாக மதிக்கிறார்கள். இந்நிமிடம் வரை நாங்கள் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளுமாக இருப்பதுடன், வீடுவாசலற்றவர்களைப்*

*போலவும், வேலையற்றவர்களைப் போலவும் இருக்கிறோம். எங்கள் கைகளால் வேலை செய்தால் தான் பிழைக்கமுடியும் என்ற நிலையில் இருக்கிறோம். மனிதர்கள் எங்களைச் சபிக்கின்ற வேளையில் நாங்கள் அவர்களை ஆசீர்வதிக்கிறோம்.*

ஏன் தான் பிறந்தோமோ என்று எண்ணுமளவிற்கு அவர்கள் எங்கள் வாழ்க்கையைக் கசப்பாக்குகிற வேளையில், நாங்கள் எல்லாவற்றையும் நீடிய பொறுமையுடன் சகிக்கிறோம். எங்கள் நற்பெயரை இழந்து தூஷிக்கப்படுகிற வேளையில், நாங்கள் அவர்களைத் தேவனுக்கென்று ஆதாயப்படுத்தவே பாடுபடுகிறோம். நாங்கள் உலகத்தின் குப்பையைப் போலவும், துர்நாற்றம் பிடித்த புண்களைத் துடைத்துப்போடுகின்ற அழுக்கான கந்தைத் துணிகளைப் போலவும் இந்நேரம் வரை இருக்கிறோம்." (1 கொரிந்தியர் 4:8-13-பிலிப்ஸ்).

கிறிஸ்து முடிசூட்டப்படுவதற்கு முன்னதாகவே கொரிந்தியர்கள் அரசர்களைப் போல ஆட்சி செய்து வந்தார்கள். அரசர்களின் முடி சூட்டு விழாக்களில், அரசரின் தலையில் கிரீடம் வைப்பதற்கு முன்பாக எவராகிலும் தனது தலைப்பாகை அல்லது தொப்பியையும் தனது தலை மீது வைத்திருப்பது பயங்கரமான அரச அவமதிப்புக் குற்றமாகும்.

10. திரளான செல்வத்தைச் சேர்த்துவைப்பது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரிக்கு நேர் எதிரிடையானதாகும். தமது ஏழ்மையின் மூலமாக தரித்திரரான நம்மைச் செல்வந்தர்களாக்கும்படி அளவிடமுடியாத, எல்லையில்லாத ஐசுவரிய சம்பன்னரான இயேசு கிறிஸ்து நமக்காக ஏழையானாரே. (2 கொரிந்தியர் 8:9)

புதிய ஏற்பாட்டு மூலமொழியிலே ஏழ்மையைக்குறிக்கும் இரண்டு பதங்கள் உண்டு. ஒரு பதம் ஒரு ஏழைத் தொழிலாளி தான் பெறும் அற்பக் கூலியைக் கொண்டு அன்றன்றுள்ள தனது அத்தியாவசியத் தேவைகளையும் சந்திக்கமுடியாத வறுமையைக்குறிக்கும். மற்றொரு சொல் அநாதைபோல





ஆதரவற்ற பரம ஏழையைக்குறிப்பிடுவதாகும். இந்த இரண்டாவது பொருளில்தான் பவுல் கிறிஸ்துவை வர்ணிக்கிறார்.

நம்மில் எத்தனை பேர் கடைசி மட்டும் நமதாண்டவராகிய இயேசுவையே பின்பற்றிச்செல்லத் தயாராயிருக்கிறோம்?

11. ஆஸ்திகளினால் ஏற்படும் இன்னொரு கேடு நமது ஜெபஜீவியம் வெகுவாகப் பாதிக்கப்படுவதாகும். நமது ஒவ்வொரு பொருளாதாரத் தேவைக்கும் ஏற்ப நம்மிடமே பணவசதி இருக்கும் பொழுது நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?

நமக்கு நாமே உதவி செய்து கொள்ளும் சக்தி நம்மிடம் இருக்கும் பொழுது, தேவனிடம் கேட்பது வெட்கக்கேடான மாய்மாலமல்லவா! எடுத்துக்காட்டாக, சிலதிட்டங்களை காலதாமதமின்றி நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதிவசதி நம்மிடமே இருக்கையில், தேவனிடம் கெஞ்சி மன்றாடிக் கொண்டிருக்கிறோமல்லவா? அநேக சந்தர்ப்பங்களில் கர்த்தருடைய பணமே அவருடைய உபயோ கத்துக்குக் கிடைக்காமல் நம்மிடம் முடங்கிக் கிடக்கிறது!

12. முடிவாக, கிறிஸ்தவர்கள் பண மூட்டைகளாகிற முன்மாதிரியைக் கண்டு, கிறிஸ்தவர்களானால் தாங்களும் துரிதமாகப் பணக்காரராகிவிடலாம் என்ற நப்பாசை அநேகரைத் தூண்டுவதற்கு நாம் தவறான முன்மாதிரியாகவும் காரணகருவிகளுமாகிவிடுகிறோம்!

பூர்வீகக் கிறிஸ்தவாகளின் வறுமை அவர்களுக்கு நஷ்டமாக அல்ல, இலாபமாகவே இருந்தது:

*ஒரு சில மதப்பிரச்சாரகர்கள் எல்லாரும் ஏழைகளாக இருக்கும்பொழுது அம்மதம் உலகத்தையே தலைகீழாக மாற்றிவிட்டதென்றால் அது பரலோகச் செயலேயன்றி வேறல்ல. அப்போஸ்தலர்களிடம் அதிக நிதிவசதியிருந்து தங்களைக் கேட்போருக்*

*கெல்லாம் தாராளமாகப் பொருளுதவி செய்திருந்தாலோ, அல்லது படைபலத்தால் கேட்போரை அச்சுறுத்திப் பணிய வைத்திருந்தாலோ அது அற்புதம் என்று எந்த நாத்திகனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஆனால் எந்தப் பகுத்தறிவுவாதியும் தர்க்கம் செய்வதற்கு இடமின்றி நமதாண்டவரின் சீஷர்கள் எல்லாருமே வறியவர்களாயிருந்தார்கள். அவர்களின் உபதேசமோ ஜென்மசுபாவ இருதயத்துக்கு எட்டிக் காயாக கசக்கின்ற வேளையில், வஞ்சகமோ, லஞ்சமோ, பயமுறுத்தலோ இன்றி, ஒரு சில ஏழைப்பாமர கலிலேயர்கள் உலகத்தையே அசைத்து, ரோமப்பேரரசின் தோற்றத்தையே அடியோடு மாற்றிவிட்டனர் என்றால் இதற்கு ஒரே ஒரு வழிதான் அல்லது பதில்தான் இருக்கமுடியும். இவர்கள் பிரசங்கித்த கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவனின் சத்தியமாக இருந்தது.* - ஜே.சி.ரைல்.

மங்கோலியாவைச் சோந்த கில்மோர் ஒரு முறை இவ்வாறு குறிப்பிட்டார்:

*நான் செல்வந்தனாக அவர்கள் மத்தியில் சென்றிருப்பேனென்றால், அவர்கள் என்னிடம் எப்பொழுதுமே பிச்சை கேட்டிருப்பார்கள். நான் ஒரு நல்ல கொடைவள்ளல் என்று மாத்திரமே எண்ணியிருப்பார்கள் ஆனால் சுவிசேஷத்தை யல்லாமல் வேறொன்றையும் நான் எடுத்துச் செல்லாமலிருந்தால், சொல்லிமுடியாத சுவினின்று அவர்கள் கவனம் சற்றேனும் சிதறாது.*

பேதுருவும் யோவானும் ஒரு சப்பாணியான பிச்சைக்காரனை எருசலேமின் அலங்கார வாசலில் சந்தித்தார்கள். அவர்களிடமிருந்து பிச்சைக்காசை எதிர்பார்த்துக் கையேந்தினான். பேதுருவின் பதில் என்ன? "வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்துநட... அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான் ..." (அப்போஸ்தலர் 3:6,8).





ஒருவேளை பிரசங்கிமார்கள் எல்லாரும் ஏழைகளாகத்தான் இருக்கவேண்டும் என்று ஒருசிலர் கூறலாம். ஆனால் கிறிஸ்தவர்கள் (விசுவாசிகள்) எல்லாரும் அப்படித்தானிருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை என்று அவர்கள் கூறலாம். ஆனால் விவிலியம் இவ்விதமாக இரண்டு வேறுபட்ட பொருளாதார அளவுகோல்களைப் பற்றி எங்கே கூறுகிறது? ஊழியர்களுக்கு ஒன்றும் மற்றவர்களுக்கு வேறொன்றும்; அல்லது மிஷனரிகளுக்கு ஒரு வாழ்க்கைத்தரமும் தங்கள் இல்லங்களில் வசிப்போருக்கு வேறொரு உயர்ந்த வாழ்க்கைத்தரமும் இருக்கலாம் என்று சிபாரிசு செய்யவில்லை!

## முடக்கிவைக்கப்பட்ட சொத்துக்களின் காரியம் என்ன?

ஒரு கிறிஸ்தவன் செல்வம் சேர்ப்பது தவறு என்பதற்கான பல காரணங்களை ஆராய்ந்து விட்டோம். தங்களின் வருங்கால வைப்புநிதி போல இருப்பதற்காகவும், தங்களின் குடும்பத்தினர் அல்லலுராமலிருப்பதற்காகவும் சில விசுவாசிகள் ஏற்கனவே சேமித்து வைத்திருக்கும் சொத்துக்களைப்பற்றி பல நியாய வாதங்கள் கூறலாம்.

1. முதல் வாதமாவது: நமது முதிர்வயதுக்கென்று கொஞ்சம் பணத்தை ஒதுக்கி வைப்பது நியாயமும் நல்லதுமாகும். இனியும் உழைத்துச் சாப்பிடமுடியாது என்ற நிலையை அடையும் பொழுது நமக்கு என்ன நேரிடும்? எதிர்பாராத கஷ்டகாலத்திற்கென்று சிறிது ஆயத்தமாக இருக்க வேண்டாமா? நமது பொது அறிவைப் பயன்படுத்துவதைத் தேவன் எதிர்பார்க்கிறார்.

இந்த வாதமும் விளக்கமும் மிகவும் நியாயமாகத் தோன்றினாலும், இது விசுவாச பாஷையல்ல. ஏனெனில் சேமிப்புகளும், ஆதாரங்களும் ஊன்றுகோல்களைப் போலிருப்பதால், அவை கர்த்தரின் பேரில் வைக்கும் விசுவாசத்துக்கு ஒரு மாற்று ஏற்பாடாகி விடுகிறது. நாம் பார்க்கக் கூடுமென்றால் விசுவாசிக்க முடியாமற் போய்விடுகிறது.

எதிர்காலத்துக்கென்று சேமிப்பு ஏற்பாடுகளைத் துவங்கினால் சில பிரச்சனைகள் எதிர்ப்படுகின்றன. எவ்வளவு தேவைப்படும்? எவ்வளவுகாலம் நாம் வாழுவோம்? நாட்டில் பொருளாதார மந்தம் ஏற்படுமா? அல்லது பணவீக்கம் தோன்றி, நமது பணத்தின் மதிப்பு தேய்ந்து போகுமா? அல்லது மருத்துவச் செலவுகள் அதிகம் ஏற்படுமா?

இவ்விதமாக நோக்குங்கால், எவ்வளவு சேர்ப்பது போதுமானது என்ற கேள்வி மறுபடியும் மறுபடியும் தோன்றுகிறது. இதற்கு விடைநம்மிடமில்லை. ஒய்வுபெறும் காலத்தில் வாழப்போகிற ஒரு சில குறுகின ஆண்டுகளுக்காக நாம் செல்வத்தைக் குவித்து வைக்கிறோம். இதற்கிடையில், தேவன் களவாடப்படுகிறார்; மேலும் கானல்நீராக மாயையான கண்டுபிடிக்கமுடியாத பாதுகாப்புக்காக நமது ஆயுள் காலம் முழுவதையும் செலவிடுகிறோம்.

ஆதலால் இவற்றையெல்லாம் விடச் சிறந்தது நாம் நமது தற்காலத் தேவைகளுக்காக உழைப்பதும், நம்மாலியன்றவரை கர்த்தருக்கு ஊழியம் செய்வதும், மிஞ்சினதையெல்லாம் கர்த்தருடைய வேலையில் செலவிடுவதும், எதிர்காலத் தேவைகளுக்காகக் கர்த்தரையே சார்ந்திருப்பதுமாகும். அவரையே தங்கள் வாழ்க்கையில் முதலாவதாக வைப்போருக்கு "...இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33) என்பது பொய்யுரையாதவரின் வாக்குறுதியாகும்.

கர்த்தருடைய பணத்தை அவருடைய சத்தியத்தைப் பரப்புவதற்காகச் செலவிட்ட பிலிப்பியருக்குப் பவுல் எழுதினதாவது:





*"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்."* (பிலிப்பியர் 4:19)

விவரிக்கமுடியாத சோக செய்தி என்னவென்றால், ஒருவருடைய வாழ்நாள் முழுவதையும் ஆஸ்தியைச் சேர்ப்பதிலேயே கவனமாகச் செலவு செய்து விட்டு, ஓய்வுபெறும் அந்திய காலத்தை கர்த்தருக்குக் கொடுக்கலாம் என்ற துர்உபதேசம் தான் இன்றைய கிறிஸ்தவ தத்துவமாக இருக்கிறது. அதன் பொருள் என்னவென்றால் வாலிபத்தின் மற்றும் வாழ்க்கையின் சிறந்த பகுதியை (சாரத்தையெல்லாம்) ஒரு தொழில் நிறுவனத்திற்கு அர்ப்பணித்து விட்டு, சக்கை போன்று ஓய்ந்து போன முதுமைப் பருவத்தைக் கர்த்தருக்குக் கொடுத்தால் போதுமானது என்பதாகும். ஆனால் இந்த ஓய்வுவாழ்க்கை நமக்குக் கிடைக்குமா என்பதை நாம் அறியோம். அநேகர் தங்கள் பைபிள்கள் மீது படிந்த தூசியைத்தட்டி, எடுப்பதற்குள்ளாக அவர்கள் ஜீவன் முடிந்து விடுகிறது.

எதிர்பாராமல் ஏற்பட்டு விடக்கூடிய சங்கடகாலத்திற்காக ஏற்பாடு செய்து வைப்பது பொது அறிவின்படி நியாயமும், நல்லதுமாகத் தோன்றுகிறது. ஆனால் இக்காரியத்தின் உண்மை என்னவென்றால், கேமரோன் தாம்சன் துலாம்பரமாகக் கூறியுள்ளது போல: "தங்கள் கைகளில் ஒன்றும் ஒட்டிக்கொள்ளாதபடி ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்கிறவர்களுக்கு தேவன் தமது உன்னதமான ஆசீர்வாதங்களைப் பொழிகிறார். ஆனால் இப்பொழுது உலகம் படும் அவதியைக்கவனியாதபடி தங்கள் எதிர்கால நெருக்கடிக்கு அதிக முக்கியத்துவம்கொடுக்கிற பேர்வழிகள் ஒரு ஆசீர்வாதத்தையும் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ளமாட்டார்கள்."

2 1 தீமோத்தேயு 5:8ஐ மேற்கோள்காட்டி அநேகர் பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறார்கள்: "ஒருவன் தன்

சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.'' இந்தப்பகுதியில், சபையிலுள்ள விதவைகளைக் கவனிப்பது எப்படி என்பதற்குப் பவுல் உபாயங்களைச் சொல்லுகிறார். தன் இனத்தவரான விதவையை கிறிஸ்தவ விசுவாசிகள் தான் பொறுப்புடன் கவனிக்க வேண்டும். அப்படிப் பொறுப்புடன் கவனிக்கத்தக்க இனத்தவர் இல்லாவிடில் சபைதான் அந்த விதவையான சகோதரியைப் பராமரிக்க வேண்டும்.

இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய குறிப்பு என்னவெனில், இக்காரணத்தை முன்னிட்டுப் பொருளைத் தேடிச் சேர்த்து வையுங்கள் என்று பவுல் ஆலோசனை கூறவில்லை. அதற்கு மாறாக, நிகழ்காலத் தேவைகளைப் பற்றிதான் பேசுகிறார். ஆதரவற்ற உறவினர்களை அனுதினமும் கவனிப்பது விசுவாசிகளின் கடமை, அப்படிச் செய்யத் தவறினால் நடைமுறைக் கிறிஸ்தவ விசுவாசத்தை மறுதலிப்பதாகும். ஏனெனில் அன்பும், தாராளமும், தயாளமும் தான் கிறிஸ்தவப் பண்பு ஆகும். அவிசுவாசிகளும் நல்லெண்ணத்துடன் நிறைவேற்றும் இப்பணியைச் செய்யத் தவறினால் கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளிலும் குறைந்தவர்களாகி விடுகின்றனர்.

எனவே இந்த வேதவசனம் பொருளீட்டுவதைப்பற்றியும், சேமிப்புகளைப்பற்றியும், எதிர்காலத்திற்காக பங்குப்பத்திரங்களை வாங்கிவைப்பதைப் பற்றியும் சிறிதேனும் கூறவில்லை. தினசரித் தேவைகளை நிறைவுசெய்வதைப்பற்றி பவுல் கரிசனையாயிருக்கிறாரேயன்றி, தூரத்திலுள்ள எதிர்கால உத்திரவாதங்களைப்பற்றி அவர் பேசவில்லை.

3. மூன்றாவது விவாதம் இரண்டாவதுடன் தொடர்புடையதே. அநேகக் கிறிஸ்தவப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கணிசமான செல்வம் வைத்துப்





போகிறது தங்கள் கடமையென்று உணருகிறார்கள். இவ்வசனத்திலுள்ள 'தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால்' என்ற சொற்றொடரின் அர்த்தம் அவர்களுடைய எதிர்காலத்திற்காக ஏற்பாடு செய்வது அல்லது சேர்த்துவைப்பது என்று நினைக்கின்றனர். தங்கள் பிள்ளைகள் கர்த்தருக்குள் வந்திருக்கிறார்களோ, இல்லையோ, அவர்களுக்குத் தங்கள் உபகாரமாக ஏதாவது வைத்துப் போகவேண்டுமென்ற ஒரு கடமையுணர்ச்சி இயற்கையாகவே எல்லா மனிதரிடமுமிருக்கின்றது.

இதற்கு ஆதரவாக, 2 கொரிந்தியர் 12:14ஐயும் அடிக்கடி மேற்கோள் காண்பிக்கின்றனர். ஆனால் சந்தர்ப்பத்தைக் கவனிக்கவேண்டும்.

*"... பெற்றாருக்குப் பிள்ளைகளல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றார்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டும்''*

இவ்வசனமும் பவுல் அப்போஸ்தலனை ஆதரிப்பதைப் பற்றியும், அவரது உடனடித் தேவைகளை யார் சந்திப்பது என்பதைப்பற்றியும் பேசுகிறது. அவர் கொரிந்துவிலிருந்த பொழுதும் அவருடைய பொருளாதாரத் தேவைகள் மற்ற சபையார்கள் அனுப்பின அன்பளிப்புகளைக் கொண்டே நிறைவு செய்யப்பட்டன. (2 கொரிந்தியர் 11:7-8). இப்பொழுது மறுபடியும் கொரிந்துவுக்குச் செல்லுவதற்கு முன்பு, கொரிந்தியருக்கு எவ்வளவும் தான் பாரமாயிருக்கப் போவதில்லை என்று உறுதியளிப்பதைத்தான் 2 கொரிந்தியர் 12:14ல் வாசிக்கிறோம். அவர்களுடைய பொருளாதார நன்மைகளை நாடினவராக அல்ல அவர்களுடைய ஆவிக்குரிய நலன்களிலேயே அக்கறையுள்ளவராயிருந்தார். இவ்வாறு விளக்கிக்கூறுகிற சந்தர்ப்பத்தில் தான் இக்கருத்தை வெளியிடுகிறார்.

கொரிந்து சபையார் தமது பிள்ளைகள் என்றும் பவுல் அவர்களுக்குத் தந்தை என்பதாகவும் கூறுகிறார் (1 கொரிந்தியர்

4:15). இங்கு வஞ்சகப் புகழ்ச்சி அணியைப்பயன்படுத்திப் பவுல் கிண்டலாகப் பேசுகிறார். தந்தையே பிள்ளைகளை ஆதரிக்கவேண்டும்; பிள்ளைகள் தந்தையை அல்ல. ஆனால் மெய்யாக ஆராய்ந்து பார்க்கும்பொழுது, சபையார் தான் ஊழியக்காரனாகிய பவுலை முழுவதும் தாங்கியிருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 9:11,14). ஆனால் இங்கு பவுல் தமது உரிமையை முழுவதுமாக விட்டுக் கொடுத்துவிட்டார்.

இதிலுள்ள முக்கியமான கருத்து எதிர்காலத்துக்காகச் செல்வம் தேடிவைப்பதல்ல. சர்ச்சைக்குரிய விஷயம் அதுவல்ல. பவுலின் உடனடித் தேவைகளை எப்படி, யார் நிறைவு செய்வது என்பதுதான். 'பொதுவாகப் பிள்ளைகள் தங்கள் பெற்றோரைப் போஷிப்பதில்லை; பெற்றோர்தான் பிள்ளைகளைப் போஷித்துப் பராமரிக்க வேண்டும் - இது தானே உலக வழக்கு'.

பிள்ளைகளுக்காகப் பெற்றோர்கள் சொத்து சேர்த்து வைக்கவேண்டும் என்ற ஒரு உலகநியதிக்குப் புதிய ஏற்பாட்டில் எந்த ஆதரவும், ஆதாரமும் காணப்படவில்லை என்பது நிச்சயம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லக்கூடிய மிகப்பெரிய பாரம்பரியச் சொத்து அல்லது சுதந்திரம் உண்டானால் அது ஆவிக்குரிய தன்மை கொண்ட ஒன்றாகும். ஆனால் பணத்தைச் சேர்ப்பதிலேயே முழுமூச்சாக ஈடுபட்டிருப்பது ஆவிக்குரிய சுதந்தரத்தை வளர்ப்பதற்குத் தடையாகவும், முட்டுக்கட்டையாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்பொழுதோ கிறிஸ்தவப் பெற்றோர்கள் விட்டுச் செல்லும் பொருட்செல்வம் எனும் சுதந்தரம் அவர்கள் பிள்ளைகளுக்கு இழைத்திருக்கும் தீமைகளுக்கு அளவேயில்லை!

அ. திடீரென்று தங்கள் மீது செல்வம் திணிக்கப்பட்டவுடன் அநேக இளைஞர்கள் நாசமடைவதற்கு அது காரணமாயிருக்கிறது. பொருளாசை மற்றும் உல்லாச வாழ்க்கை என்ற போதையில் மூழ்கி கிறிஸ்துவின் சேவைக்குப் பயனற்றவர்களாகி விடுகின்றனர்.





ஆ. மற்றப்படி இதுவரை அமைதிப்பூங்காவாக விளங்கின இல்லங்களிலும் குடும்பங்களிலும் உயில்கள், பண்ணைச் சொத்துக்கள், வழக்குகள் முதலானவை தலைகாட்டி னவுடன் தோன்றுகின்ற வேதனையான போராட்டங்களைச் சற்று எண்ணிப்பாருங்கள். உடன்பிறந்த இரத்தத்துக்கு இரத்தமான சகோதர சகோதரிகளிடையே உண்டாகும் பொறாமைகளும், பூசல்களும், பிரிவினைகளும் பின்னர் ஜென்மகாலமெல்லாம் நீடிக்கின்றன. மெய்தானே!

லூக்கா 12:13-14ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துத் தகராறில் இயேசு சம்பந்தப்படச் சட்டென்று மறுத்து விட்டார். இவ்வித பணிக்காக தாம் உலகிற்கு வரவில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். இதைக்கூறின உடன்தானே அங்கு பெயர்குறிப்பிடப்படாத நபரைக் கருத்தில் கொண்டவராகப் பொருளாசையைக் குறித்து கடுமையாக எச்சரித்தார்.

இ. அடுத்ததாக, இந்தச்சூழ் நிலையையும் காண்கிறோம். பிள்ளைகளுக்குச் சொத்து வைத்துப் போகவேண்டுமே யென்று வாழ்நாளெல்லாம் பாடுபட்டுத்தேடிவைக் கிறார்கள். அதேபெற்றோர் தங்களது தள்ளாத முதிர்வயதிலே குடும்பத்துக்குப் பாரமாகத் தோன்று கிறார்கள். நன்றியில்லாத அவர்கள் பிள்ளைகள் தங்கள் பெற்றோர் சீக்கிரமாக கண்களை மூடமாட்டார்களா, அந்தச் செல்வத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாமே என்று அவசரப்படுகிறதைப் பார்க்கிறோம். அல்லது, அவர்களை முதியோர் இல்லங்களிலே சேர்த்துவிட்டு, தாங்கள் சுகமாக வாழவும், தங்கள் பாரத்தைக் குறைக்கவும் வகை தேடுகிறார்கள்.

ஈ. இரட்சிக்கப்படாத பிள்ளைகளுக்கோ, அல்லது இரட்சிக்கப்படாதோரைத் திருமணம் செய்கின்ற மக்களுக்கோ அந்தப்பணம் சேரும்பொழுது அது சுவிசேஷத்தைப் பரப்புவதற்குப் பயன்படுவதற்குப்பதிலாக அதைத்தடைசெய்கிற சபைகளுக்கும், உபயோகங்

களுக்கும் போய்ச் சேருகின்றன. சற்று சிந்தித்துப் பாருங்கள், விசுவாசிகளின் பணம் சத்தியத்தை எதிர்ப்பதற்குச் செலவு செய்யப்படுகிறது.

உ. எவ்வளவு பணம் சொத்துவரியாகவும், வழக்கறிஞர் கட்டணமாகவும் விரயமாய்ப் போய் விடுகிறது! இவையெல்லாம் ஏற்கனவே ஆத்தும ஆதாயப்பணியில் பயன்படுத்தப்பட்டிருக்கலாமே!

ஊ. இந்தச் சில வேதனைகளைத் தவிர்ப்பதற்காகத் தங்கள் காலத்திற்குப் பிறகு தங்கள் செல்வம் சில கிறிஸ்தவ நிறுவனங்களுக்குச் சேர வேண்டுமென்று உயில் எழுதிவைக்கிறார்கள். ஆனால் அது அந்த ஸ்தாபனங் களுக்குப் போய்ச்சேருமா என்ற நிச்சயம் இல்லை. ஏனெனில் அநேக உயில்களின் மீது வழக்குத்தொடுத்து நீதிமன்றங்களில் அவைகளைச் செல்லாதவையாக்கி விடுகின்றனர். மேலும் இம்முறைக்குத்திருவசன ஆதாரமுமில்லை, அல்லது அந்த உயில்கள் உயிர் பெறுகின்ற வேளையில் அந்தக் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும் உண்மையுள்ள வைகளாக இருக்குமா என்பதும் பெரிய கேள்விக்குறி.

உயில் எழுதிவைத்து விட்டுப் போகிறதற்காக விசுவாசிகளுக்குப் பிரதிபலன் கொடுக்கப்படமாட்டாது. அவர்களுடைய கடைசி மூச்சுக்குப் பிறகு அந்தப்பணம் அவர்களுடையதல்ல. அது பண்ணைச சொத்தாக மாறிவிடுகிறது.

மனிதர் ஐசுவரியத்தைச் சேர்க்கிறார்கள், ஆனால் ". யார் அதை வாரிக்கொள்ளுவான்'' (சங்கீதம் 39:6) என்று அறியாதிருக்கிறார்கள். நீங்கள் கர்த்தருக்குக் கொடுத்து விட்டோம் என்ற நிச்சயம் உங்களுக்கு வேண்டுமென்றால், நீங்கள் உயிருடன் இருக்கும்பொழுதே அப்படிச் செய்வதுதான் அதற்கு வழியாகும்.





கர்த்தராகிய இயேசுவின் வருகை மிகச்சமீபம் என்று விசுவாசிக்கிறோம். அப்படியென்றால் நாட்கள் கடந்து போகையில் நமது உலகப் பிரகாரமான சொத்துக்களின் மதிப்பும் கரைந்து போகிறது என்று நாம் அறியவேண்டாமா? கர்த்தர் வந்துவிட்டபிறகு நமது சொத்துக்கு ஒரு மதிப்புமில்லை, அவருடைய வேலைக்கும் அது தேவையில்லை. ஆதலால் இப்பொழுதே நமது உடைமைகளை இயேசுவின் பணியில் ஈடுபடுத்துவது தான் சாலச்சிறந்தது

4. இன்னொரு தர்க்கம் தலைதூக்குகின்றது. "ஒவ்வொருவரும் தங்கள் அத்தியாவசியத் தேவைக்கு மிஞ்சினதை யெல்லாம் தேவனுடைய ஊழியத்துக்குக் கொடுத்து விட்டால், நாம் எப்படி வாழ்வோம்? - அதாவது, அப்பொருட்களைக் காவல் காப்பது யார்!"

நாம் எப்படி வாழ்வோம்? அதற்கு விடை, "தரிசித்து அல்ல, விசுவாசத்தினால் வாழ்வோம்!"

இந்தத்திட்டம் சரியாக வேலை செய்யாது என்று வாதிடுவது பயனற்றது. ஏனென்றால், அது ஆதித்திருச்சபையில் செயல்பட்டது.

> *"விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்"* (அப்போஸ்தலர் 2:44-45).

> *''நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப் பட்டது! அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை"* (அப்போஸ்தலர் 4:34-35).

கொரிந்தியருக்கு எழுதும்பொழுது பவுல் அவர்களுக்குக் கற்பித்த பாடம் என்னவென்றால் நமது ஆஸ்திகளெல்லாம் நீர்மைத்தன்மை கொண்டதாக இருக்கவேண்டுமே அல்லாமல் பனிக்கட்டியாக உறைந்து போன நிலைமையில் காணப் படக்கூடாது. ஒரு யதார்த்தமான தேவை இருக்கிறது என்று உணரும்பொழுது, நமது பணம் அத்தேவையைச் சந்திக்கப் பாய்ந்தோடவேண்டும். அப்பொழுது நாமும் அவ்விதமான தேவையிலிருக்கும் பொழுது நமக்கும் எளிதில் நிதியுதவி கிடைக்கும். இவ்வாறு விசுவாசிகளின் மத்தியிலுள்ள மேடுபள்ளங்கள் எல்லாம் நிரப்ப்ப்பட்டு சமச்சீர்நிலை ஏற்படும்.

> *"மற்றவர்களுக்குச் சகாயமும் உங்களுக்கு வருத்தமும் உண்டாகும்படியல்ல, சமநிலையிருக்கும்படியாகவே சொல்லுகிறேன். எப்படியெனில், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை என்று எழுதியிருக்கிற பிரகாரம், சமநிலைப் பிரமாணத்தின் படியே, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்படிக்கு இக்காலத்திலே உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவுவதாக."*
> (2 கொரிந்தியர் 8:13-15)

வேறு வார்த்தைகளில் கூறினால், கர்த்தருக்காகவே தன்னைத் தத்தம் செய்து, தனது உடைமைகளை உண்மையுள்ள உக்கிராணக்காரனாகப் பயன்படுத்துகிற ஒரு விசுவாசிக்கு நெருக்கடிகள் ஏற்படும்பொழுது, மற்ற விசுவாசிகளும் மகிழ்ச்சியுடன் அவருக்கு உதவி செய்ய முன்வருவார்கள்.

நம்மை நாமே உண்மையாகச் சோதித்துப் பார்த்தால் நாம் பிறரைச் சார்ந்திருப்பதை மிகவும் வெறுக்கிறோம். நமது சுயாதீனத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிறோம். இது கிறிஸ்துவின் ஜீவன் நம்மில் இருப்பதற்குப் பதிலாக, நமது சுயவாழ்க்கையின் பிரதிபலிப்பாகிறது.





1 தீமோத்தேயு 5:3-13ல் விதவைகளின் பராமரிப்பைப் பற்றிய விளக்கமாவது: தேவ அன்பு நமதிருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறதென்றும், பரிசுத்தவான்கள் ஒருவரி லொருவர் பரஸ்பர அன்பு கொண்டு ஒருவரையொருவர் தாங்குகிறார்களென்றும், உண்மையான, தேவை இருக்கும் இடங்களுக்கெல்லாம் பணம் தடையின்றி பாய்ந்தோடுகிற தென்றும் யூகிக்கிறது.

ஆதிநாட்களில் அப்படிநடந்தது மெய்தான், ஆனால் இன்று அவ்வாறில்லை என்ற எதிர்வாதம் கிளம்புமானால் அதற்கு விடை மிகவும் எளிதானது: இன்றும் அவ்வாறு நடைபெறுகிறது: இவ்விதமான விசுவாச வாழ்க்கை நடத்தும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் விளங்கும் வல்லமையையும் கவர்ச்சியையும் இல்லை என்று நாம் மறுக்கமுடியாது.

5. ஆனால் ஒருசிலருடைய உள்ளங்களில் இந்த மறுப்புதோன்றலாம்: "தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்... பரிபூரண மடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்" (பிலிப்பியர் 4:12) என்று பவுல் கூறவில்லையா? இவ்வாறு கேள்வி கேட்பவர் பாதையில்லாத பாலைவனங்களில் பசியோடும், தாகத்தோடும், பலவீனமடைந்தவராய், போதுமான ஆடை மற்றும் காலணியில்லாதவராய் மேலும் கீழும் அலைந்து திரிந்த பவுலைத் தம் மனக்கண்களால் பார்க்கிறார். இவ்வாறு மெலிந்து நலிந்த பவுல் ஒருபுறமிருக்க, பரிபூரணமடைந்த வாலிபனான பவுல், நவநாகரீக ஆடைகள் அணிந்து, உயர்ந்தரகக் குதிரைகள் பூட்டின உல்லாச இரதத்தில் கடற்கரையோர ஆடம்பர விடுதிகளுக்குச் சவாரி செய்து சாங்கோபாங்கமாக சினிமா நாட்சத்திரம் போல வாழ்ந்ததையும் மனதில் சித்தரித்துப் பார்க்கிறார். வறுமையில் வாடும் பவுலையும் செழுமையில் புரளும் பவுலையும் ஏககாலத்தில் பார்க்கிறார்.

ஆனால் பவுலின் கூற்றுக்கு நேரடியானபொருள் இதுவல்ல. பவுலின் இக்கடிதம் சிறைச்சாலையிலிருந்து எழுதப்பட்டது என்பதை நாம் மறந்துவிடலாகாது; ஒய்யார மாளிகையிலிருந்து எழுதப்படவில்லை. இவ்வாறு சிறையிலிருந்து தான், பவுல் கூறுகிறார்:

> *"எல்லாம் எனக்குக் கிடைத்து, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவை களைச் சுகந்தவாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின்கையில் வரப்பற்றிக் கொண்டபடியால் நான் திருப்தியடைந் திருக்கிறேன்."* (பிலிப்பியர் 4:18)

சிறைவாழ்க்கை என்றால் பரிபூரணமானது என்று நாம் கருதாமல் பரிதாபமானது என்று கருதுவோம். ஆனால் பவுலோ அதை ஒரு பரிபூரணமான நிலைமையாகவே பார்த்து பரவசமடைந்தார். எனவே பிலிப்பியர் 4:12ஐக் கொண்டு ஆடம்பரமான வாழ்க்கையை நீதிப்படுத்தக்கூடாது. அந்தவசனம் போதிப்பது சுகபோக வாழ்க்கையை அல்ல.

6 "...நாம் அனுபவிப்பதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்..." (1 தீமோத்தேயு 6:17) என்ற வசனத்தைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள் என்று கேட்கலாம். "வாழ்க்கையின் சிறந்த நன்மைகளை" விசுவாசி அநுபவிப்பதற்கு ஆதரவாக இந்த வசனம் அடிக்கடி கையாளப்படுகிறது. இதைக்கொண்டு நவீன வசதிகளில் புரண்டு கொண்டிருப்பதற்கு உரிமை வழங்கப்பட்டிருப்பதாக நிர்ணயிக்கிறோம். தேவனே தம்முடைய பிள்ளைகளுக்கு இந்த சிறந்த நன்மைகளை வாரி வழங்குகிறார் என்று கோஷம் எழுப்புகிறோம்.

ஆனால் மறுபடியும் சந்தர்ப்பம் என்னவென்பதை மறந்துவிடுகிறோம். இந்த வாக்கியம் எவ்வாறு துவங்குகிறது என்று பார்ப்போமா? "இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள்





இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும் நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும்...நித்திய ஜீவனைப்பற்றிக் கொள்ளும் படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" (1தீமோத்தேயு 6:17-19). செல்வச் செருக்கில் புரளாமலிருப்பதற்கு இதை ஒரு சாக்காக வைத்துக் கொள்ளாமல், செல்வந்தர் களுக்குக் கொடுக்கப்படும் கடுமையான எச்சரிப்பாகவே இந்த வாக்கியங்கள் அமைந்திருக்கின்றன.

அப்படியென்றால் "நாம் அனுபவிப்பதற்குச் சகலவித நன்மைகளையும் சம்பூரணமாய்க் கொடுத்திருக்கிறார்" என்பதின் பொருள் என்ன? மற்றவர்களுடன் நாம் அவற்றைப்பகிர்ந்து அநுபவிக்க விரும்புகிறார் என்பதாகும். அடுத்து வரும் 18-19-ம் வாக்கியங்கள் இதனைத் தெளிவுபடுத்துகின்றன எனப்பார்த்தோம்.

ஐசுவரியங்களை அநுபவிக்கச் சிறந்த வழி என்ன? அவற்றைப்பதுக்கிவைப்பதல்ல, நாமே அவற்றை அநுபவிப்பது மல்ல, தேவனுடைய நாம மகிமைக்காகவும், மற்றவர்களின் நலனுக்காகவும் அவற்றைப்பயனுள்ளமுறையில் செலவிடுவது தான்.

7. இவைதவிர, ஆபிரகாம் மகாபெரிய ஐசுவரியவானாக இருந்தாலும் (ஆதியாகமம் 13:2), அவன் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்டானே (யாக்கோபு 2:23) என்று அடிக்கடி நினைப்பூட்டப்படுகிறோம். இது மறுக்க முடியாத உண்மையாக இருந்தாலும், இது பழைய ஏற்பாட்டுச் சம்பவமாகும். அப்பொழுதெல்லாம் உலக ஆஸ்தி குப்பை என்று எண்ணப்படாமல் தேவாசீர் வாதத்தின் அடையாளமாகக் கருதப்பட்டு வந்த காலம். கடவுள் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களை செல்வங்களினால் ஆசீர்வதிக்கிறார் என்று கருதப்பட்ட காலம். ஆகிலும் ஆபிரகாம் தன் ஐஸ்வரியத்தின் மேல் பற்றுக் கொள்ளாமல்,

தேவன் பேரிலேயே பற்றுதலாயிருந்தான், கூடாரத்தில் குடியிருந்தான், தனது ஒரே சுதந்தரவாளியாகிய ஈசாக்கையும் தன் தேவனுக்குச் சர்வாங்கதகன பலியிட முன்வந்தான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது

செல்வத்திரட்டுதான் தேவனின் ஆசீர்வாதம் என்பது புதிய ஏற்பாட்டுக் கிருபையின் காலத்துக்கும் பொருந்துமா? இல்லை; இடுக்கணும் இல்லாமையுமே இக்காலத்தின் ஆசீர்வாதம் என்றால் மிகப் பொருத்தமாயிருக்கும்.

ஐசுவரியவான் மற்றும் லாசருவின் உவமையில் (லூக்கா 16:19-31) பழைய ஏற்பாட்டு ஒழுங்கு மாற்றப்பட்டு விட்டதைப் பார்க்கிறோம். ஐசுவரியவான் தன் ஆஸ்தியைப் பிறர் நலனுக்காகப் பயன்படுத்தத் தவறினதால் ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டான். சுயநலமுள்ளவனாக சம்பிரமமாய் வாழ்ந்ததே அவன் குற்றம்.

8. எறும்பிடமிருந்து நல்ல பாடத்தைக் கற்றுக் கொள்ளும் படி அறிவுறுத்தப்படுகிறோமல்லவா?

*"சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும் கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்புக்காலத்தில் தனக்குத்தானியத்தைச் சேர்த்துவைக்கும்."*

(நீதிமொழிகள் 6:6-8)

எறும்பு தன் எதிர்காலத்தேவைக்காகச் சேர்த்துவைக் கிறதென்றும், நாமும் இந்த விஷயத்தில் எறும்பின் மாதிரியைப்பின்பற்ற வேண்டுமென்றும் இப்போதனை நமக்கு அறிவுறுத்தவில்லையா? ஆம், அதுமிகவும் உண்மைதான். ஆகிலும் எறும்பின் எதிர்காலம் இவ்வுலகத்திலிருக்கிற தென்றும், நமது எதிர்காலமோ பரலோகத்திலிருக்கிறதென்றும் நாம் அறிய வேண்டுமோ? ஒரு விசுவாசி இவ்வுலகிலே அந்நியனும், பரதேசியும், யாத்திரிகனுமாயிருக்கிறான் என்றும்,





அவனது வீடு மேலே இருக்கிறது என்றும் நாமறிவோம். ஆதலால் அவன் தனது எதிர்காலத்துக்காக (நித்தியத்துக்காக)க் கட்டாயம் சேமித்து வைக்கவேண்டும்.

ஆனால் இந்த உலக வாழ்க்கையைப் பொறுத்த வரை- என்னத்தை உண்போம், குடிப்போம், உடுப்போம் என்று - அவன் நாளைக்காக எவ்விதத்திலும் கவலைப்படவேண்டாம் என்ற கட்டளையைப் பெற்றிருக்கிறான். (மத்தேயு 6:25) அதற்குப் பதிலாக அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சட்டம் அவன் பறவைகளின் மாதிரியைப் பின்பற்றவேண்டும்- அவைகள் தங்கள் கூடுகளுக்கருகில் தானிய சேமிப்புக் கிடங்குகளைக் கட்டிவைக்கவில்லை; எனினும் நமது பரமபிதா அவைகளையும் போஷிக்கிறார். "அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா!" உங்களுக்காக அவர் கவலைப்படுவது அதிகமல்லவா?

9. செல்வந்தருக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல சில செல்வந்தர் தேவையல்லவா என்பது கடைசியான வாதமாகும். ஆனால் முதல்நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் இதை உணரவில்லை! "வரலாறு கூறுவதின்படி ஆதிக்கிறிஸ்தவர்களில் அநேகர் சுவிசேஷத்தை எங்கும், எல்லாருக்கும் எடுத்துச் செல்லவேண்டும் என்ற ஆத்திரத்தில் அநேகர் தங்களை செல்வந்தர்களின் அடிமைகளாக விற்றுவிட்டு, அஞ்ஞானிகளான குபேரர்களின் வீடுகளில் வசிப்பதற்காக அங்கு அடிமைகளைப் போல வேலை செய்து அங்குள்ள அடிமைகளையும், ஆண்டகைகளையும் இயேசு கிறிஸ்துவின் அன்பினாலும் நற்செய்தியினாலும் சந்திக்கும் வாய்ப்புகளைத் தேடிக் கொண்டார்கள்" (சற்றே அப்புறம் வாருங்கள் என்ற ஜே.ஆர்.மில்லர் நூலிவிருந்து).

# விவிலியம் விளம்புவது என்ன?

நெஞ்சை நெகிழவைக்கும் வறுமைப் பிணிநிறைந்த இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் செல்வச்சீமான்களாய் வாழ்வதில் தவறு இல்லை என்பதற்கு ஆதாரமாகக் கூறப்படும் முக்கியமான நியாயவாதங்களை விவரமாய் இதுகாறும் ஆராய்ந்தோம்.

ஆனால் தண்ணீர் நிற்காத இந்தப் பலவீனமான வாக்குவாதங்களுக்கு நேர் எதிர்மாறாக ஐசுவரியத்தின் ஆபத்துக்களைக் குறித்து நம்மை எச்சரிக்கின்ற அநேக வேதவாக்கியங்களைச் சற்று பார்க்கலாமா?

1. "உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவான்களாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத்தப்பான். வன்கண்ணன் செல்வனா கிறதற்குப் பதறுகிறான், வறுமை தனக்கு வருமென்று அறியாதிருக்கிறான்." (நீதிமொழிகள் 28:20,22)

தேவனுடைய சாயலிலும் ரூபத்தின் படியேயும் சிருஷ்டிக்கப்பட்ட ஒருவனுக்கு பணப்பித்துப்பிடித்து அலைவது தகுதியாகாது.

2. "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் மம்மோனுக்கும் (உலகப்பொருளுக்கும்) ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது. (மத்தேயு 6:24)

தேவனும் பணமும் இரண்டு எஜமானர்களாக இங்குச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர் எதிரிகள். ஒருவருக்குப் பிரியமானது மற்றவருக்குகந்ததல்ல. இவ்வாறிருப்பதால் இருவரையும் பிரியப்படுத்துவதோ, இருவருக்கும் சேவைசெய்வதோ இயலாதகாரியம். இது இரு உலகங்களில் வாழ முயலுவதற்கு மரண அடிகொடுக்கிறது:





இவ்வுலகிலும் சீரும் சிறப்புமாக வாழ்ந்து, அடுத்த உலகத்திலும் பேரின்பப்பெருவாழ்வு பெறநாடுவது அபத்தமானது! பூலோகச் சிற்றின்பம் பரலோக பேரின்பத்தைச் சம்பாதிக்காது. நீங்கள் இரண்டையும் தெரிந்துகொள்ளமுடியாது. ஏதாகிலும் ஒன்றைத்தான் தெரிந்து கொண்டு மற்றதை விட்டுவிட வேண்டும் என்று இயேசு திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

3. "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும்; ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு: அப்படியானால், யார் இரட்சிக்கப்படக்கூடும் என்றார்கள், இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும் என்றார்." (மத். 19:23-26)

இயேசுவின் இந்த வார்த்தைகளுக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்கிறோமா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது கடினமான காரியம் என்று கூறாமல், மனுஷீகப்பிரகாரமாக அது சாத்தியமே அல்ல என்றார்.

"ஊசியின் காது" என்பதற்கு ஒருசிலர் எருசலமிலுள்ள ஒரு மிகச்சிறிய நுழைவாயில் என்றும், அதன் வழியாக ஒட்டகம் பிரவேசிக்க வேண்டுமானால் அதன் முதுகிலுள்ள சுமைகளையெல்லாம் இறக்கி வைத்து விட்டபின்னர், அந்த ஒட்டகம் உட்கார்ந்து, மெதுவாக நகர்ந்து நகர்ந்து செல்லவேண்டும் என்றும் விளக்கம் தருகின்றனர். ஆனால் இங்கு கூறப்பட்டுள்ளது தையல் ஊசி எனவும், அதன் காது வழியாக ஒட்டகம் ஒருக்காலும் பிரவேசிக்கவே முடியாது என்பதைத்தான் ஆண்டவர் குறிப்பிட்டார்.

தெய்வாதீனமாக நிகழக்கூடிய ஒரு விசேஷித்த அற்புதம்தான் இதைச் சாத்தியமாக்கக்கூடும். நித்திய நல்வாழ்வுக்கு இவ்வளவு தடையாக இருக்கக் கூடிய ஐசுவரியத்துக்காக நாம் ஏன் இவ்வளவு வக்கலாத்து கோரவேண்டும்?

4. "ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ; உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்துதீர்ந்தது." (லூக்கா 6:24)

இங்கு தூய தேவகுமாரன் ஐசுவரியவான்கள் மீது "ஐயோ" கூறுகிறதைப்பார்க்கிறோம். இவ்வசனத்திற்கு வேறொரு அர்த்தம் இருக்கவே முடியாது. தேவன் ஆசீர்வதிக்காதவர்களை நாம் ஏன் ஆசீர்வதிக்க முற்படவேண்டும்?

5. "உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப்பிச்சைகொடுங்கள்; பழமையாய்ப்போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை; பூச்சி கெடுக்கிறதுமில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (லூக்கா 12:33-34).

இது ஆண்டவருடைய சீஷர்களுக்கு உரைக்கப்பட்டது (5.22). இவை நமக்குரியதல்ல என்று தட்டிக்கழிக்கப் பார்க்கிறோம். இங்ஙனம் நமக்குக்கிடைக்ககூடிய ஆசீர்வாதத்தைத் தடுக்கிறோம்.

நம்மிடமிருக்கும் விலையேறிய அரும்பொருள் சேர்க்கைகளாகிய - பொன் வெள்ளி ஆபரணங்கள், வைரம் வைடூரியங்கள், விலையுயர்ந்த ஓவியங்கள், சிற்பங்கள், பண்டையக் கலைத்திறனுள்ள ஆசனங்கள், அஞ்சல் தலை ஆல்பங்கள் - ஆகியவற்றை நல்ல விலை கிடைக்கும்போது விற்று வரும் தொகையைக் கொண்டு உலக முழுவதும் நற்செய்தியைப்பரப்பி, ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழிநடத்துவது இந்த கிருபையின் யுகத்துக்கு முற்றிலும் ஏற்புடையதாகும்.





நமதிருதயம் எங்கே இருக்கிறது? உள்ளூர் வங்கியின் பாதுகாப்புப் பெட்டக அறையிலிருக்கிறதா? அல்லது மோட்சத்திலிருக்கிறதா? உங்கள் பொக்கிஷமிருக்குமிடத்தில் தான் உங்கள் இருதயமும் இருக்கும் என்பது நிலைமாறாத உண்மை.

6. இயேசு அதைக்கேட்டு: "இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத்தரித்திரருக்குக்கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப்பின்பற்றி வா என்றார். அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால், இதைக் கேட்ட பொழுது மிகுந்த துக்கமடைந்தான்." (லூக்கா 18:22-23)

இந்த ஐசுவரியவானான வாலிபன் ஒரு அலாதியான விதிவிலக்கு என்று இடைவிடாமல் நாம் போதிக்கப்படுகிறாம். எல்லா மனிதரும் தங்களுக்குண்டானதை எல்லாம் உடனே விற்று தரித்திரருக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று பொதுவான கட்டளையாக இதை நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நமக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. ஆனால் நாம் முன்பு பார்த்த குறிப்பிலிருந்து (லூக்கா 12:33-34) இது அதிக வித்தியாசமாக இல்லை.

7. "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை

விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு." (1தீமோத்தேயு 6:6-11)

பவுல் இங்கு எச்சரிக்கிறபடி திரவியம் தேடுவோரும், பொருளாசைக்காரரும் அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொள்ளுகிறார்கள். அந்த வேதனைகளில் சிலவற்றை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் கூறலாம்.

அ. முதலாவதாக, செல்வத்துடனேயே சேர்ந்து வரும் கவலை. "...செல்வனுடைய பெருக்கோ அவனைத் தூங்க வொட்டாது" (பிரசங்கி 5:12). நமக்குப்பக்கபலமாக இருந்து பாதுகாப்பளிக்கும் என்று நாம் நமது முழுநம்பிக்கையையும் வைக்கிற ஐசுவரியம் உண்மையில் அதற்கு எதிரிடையான சூழ்நிலையை உருவாக்குகிறது. திருடுபோய்விடுமோ என்றபயம், பங்குச் சந்தையில் மதிப்புகள் வீழ்ச்சியடைந்து விடுமோ என்ற அபாயமும், அச்சமும், பணவீக்கத்தினால் சேமித்த பணத்தின் மதிப்பு குறைந்து, தேய்ந்து விடுமோ என்று பலவித பயங்களும், கவலைகளும் மனதை அரித்துக் கொண்டேயிருக்கும்.

ஆ. இவ்வுலகப் பொருட்கள் மிகுதியாவதினாலே, தங்கள் கண்களுக்கு எதிரிலேயே பிள்ளைகள் கெட்டுப் போகிறதைப் பார்த்துக் கண்ணீர் வடிக்கும் விசுவாசப்பெற்றோர் எத்தனை பேர்! உலகச்சம்பத்துப் பெருக்கினாலே வழிதவறாதிருக்கும் விசுவாசப் பிள்ளைகளின் எண்ணிக்கை மிகமிக குறைவுதான்.

இ. திரவியம் திரளாக இருந்தாலும் தேவைப்படும் நேரத்திற்குப் பயன்படாமற்போகிற வேதனையான சந்தர்ப்பங்களும் பல உண்டு.





ஈ. ஒரு செல்வந்தனுக்கு உண்மையில் எத்தனை நண்பர்கள் உண்டு என்று அறியான். இது நீதிமொழிகள் 14:20க்கு எதிர்மறையாகத்தோன்றுகிறது. "தரித்திரன் தனக்கடுத்தவனாலும் பகைக்கப்படுகிறான்; ஐசுவரியவானுக்கோ அநேக சிநேகிதருண்டு". ஆனால் அவர்களெல்லாரும் உண்மையான நண்பர்களா? அல்லது சுயநலமிக்க சந்தர்ப்பவாதிகளா?

உ. ஐசுவரியங்கள் எல்லாம் மெய்யான மனநிறைவைக் கொடுப்பதில்லை (பிரசங்கி 2:8,11); அதற்குப்பதிலாக ஒருபோதும் திருப்தியடையாமல், மேலும் வேண்டும், வேண்டும் என்கிற பேராசையையே வளர்க்கிறது. (பிரசங்கி 4:8;5:10).

ஊ. முடிவாக, செல்வம் ஒருவனுடைய நற்குணத்தை நிரந்தரமாகப்பாதிக்கிறது. பெருமை, அகந்தை, இறுமாப்பு, முற்கோபம் மற்றும் துர்க்குணங்களை வளர்க்கிறது. உதாரணமாக, நீதிமொழிகள் 28:11;18:23; யாக்கோபு 2:5-7 ஐப்பார்க்கவும்.

எபிரேயமொழியில் 'பணத்திற்கு' 'கனம்' 'பாரம்' என்ற அர்த்தமுமுண்டு என்று மேத்யுஹென்றி விளக்குகிறார். (தமிழிலும், "மடியில் கனமிருந்தால் வழியில் பயமுண்டு" என்றொரு முதுமொழி உண்டு). ஆம், ஐசுவரியங்கள் பெருகினால் பலவகையானபாரங்களும் கூடவே தோன்றிவிடும் முதலாவதாக, அவற்றைத் தேடிச்சேர்க்கும் பாரம், பின்னர் பாதுகாக்கும் பாரம், சோதனைகள் ஏற்படுமோ என்ற பாரம், அவற்றைப்பற்றிய கவலை எனும் பாரம் அவற்றின்முடிவு எவ்வாறிருக்குமோ என்ற துக்கமாகிய பாரம், முடிவில் இவை எல்லாவற்றிற்கும் கணக்கு கொடுக்க வேண்டுமே என்ற பாரம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

8. "இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்

மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிப்பதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும், நித்திய ஜீவனைப்பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" (1தீமோத்தேயு 6:17-19)

"ஐசுவரியவான்களுக்குக் கட்டளையிடு" என்று இந்த வசனங்களில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தாலும், எத்தனை தேவனுடைய ஊழியக்காரர் இதனை உண்மையாய் நிறைவேற்றுகிறார்கள்? அப்படி நீங்கள் எப்பொழுதாவது எந்தப்பணக்காரனுக்காவது கடிந்துரைத்தது உண்டா? அநேகர் இவ்வசனங்களின் மீது ஒரு நல்ல செய்தியைக்கூட கேட்டது கிடையாது. ஆனால் இந்தப்புரட்சிகரமான செய்தி இன்று தேவையாயிருப்பதுபோல வேறெப்பொழுதுமே இருந்ததில்லை.

ஆனால் இந்தச் செய்தியையும், இதுபோன்ற வேறெந்தச் செய்தியையும் நாம் பிரசங்கிப்பதற்கு முன்பாக, நாமே அதற்குக் கீழ்ப்படிந்திருந்தால்தான் அது அர்த்தமுள்ள செய்தியாகிறது. இல்லாவிட்டால் ஓசையிடுகிற கைத்தாளமாகவும், ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்களுமாயிருப்போம். நாமே விசுவாசித்து நடக்கிறதற்குப் பதிலாகத் தரிசித்து நடக்கிறவர்களாயிருந்தால், மற்றவர்களைப்பார்த்து பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வையாதிருங்கள் என்று சொல்லுவதற்கு என்ன அருகதை இருக்கிறது? நமது பொய்யான வாழ்க்கை நமது உதடுகளை மூடிவிடுகிறது!

பின்விளைவுகளைப்பற்றிப் பொருட்படுத்தாத அஞ்சா நெஞ்சம் படைத்த தீர்க்கதரிசிகளின் இனத்தைச் சேர்ந்த மனிதர்களைத் தேவன் தேடிக்கொண்டிருக்கிறார்.





ஆமோசைப்போலத் தங்கள் சத்தத்தை உயர்த்தி:

> *"சமாரியாவின் மலைகளிலுள்ள பாசானின் மாடுகளே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்: தரித்திரரை ஒடுக்கி, எளியவர்களை நொறுக்கி, அவர்களுடைய எஜமான்களை நோக்கி: நாங்கள் குடிக்கும்படிக் கொண்டு வாருங்கள் என்று சொல்லுகிறீர்கள். இதோ, கர்த்தராகிய ஆண்டவர் உங்களைத் துறடுகளாலும், உங்கள் பின் சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக் கொண்டுபோகும் நாட்கள் வருமென்று அவர்தமது பரிசுத்தத்தைக் கொண்டு ஆணையிட்டார். அப்பொழுது நீங்கள் ஒவ்வொருவனும் அரமனைக்குச் சுமந்து கொண்டு போவதை எறிந்து விட்டு, தனக்கு எதிரான திறப்புகளின் வழியாய்ப் புறப்பட்டுப் போவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*
>
> (ஆமோஸ் 4:1-3)

தீர்க்கத்தரிசனம் உரைக்கிறவர்களும், ஆகாயைப் போல முழக்கமிடுகிறவர்களும் வேண்டும்.

> *"இந்த வீடு பாழாய்க் கிடக்கும் போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும் படியான காலம் இதுவோ?"* (ஆகாய் 1:4)

இந்தத்தீர்க்கத்தரிசிகளுக்கெல்லாம் மக்களின் நன் மதிப்பும், வரவேற்பும் அதிகமிருந்ததில்லை. அவர்கள் முகத்தில் முழிப்பதே அநேகருக்குத் தர்மசங்கடமாக இருந்தது. மக்கள் வெறுப்பு ஒருபுறம், சமூக நீக்கம் மறுபுறம், அத்துடன் அவர்கள் வறுமையிலும் வாடியிருந்தனர். பல உபத்திரவங்களுக்கும், இன்னல்களுக்கும் ஆளானார்கள். மேலும் அவர்கள் வாயை அடக்க முடியாவிட்டால் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் இவைகளில் ஒன்றையும் பொருட்படுத்தாமல், பொய்யில் வாழ்வதைக்காட்டிலும் சத்தியத்தைச் சொல்லி மரித்தார்கள்.

பொருளாசையும் உலகசிநேகமும் சபையின் வளர்ச்சியையும் வல்லமையையும் அதிகமாகத் தடைசெய்கிறது. விசுவாசிகள் ராஜசம்போகத்தில் வாழும்வரை உயிர்மீட்சி ஒருபோதும் வரப் போவதில்லை. தேவஜனத்தை மறுபடியும் பூரண விசுவாசத்துக்குள்ளும், தியாகத்துக்குள்ளும் யார் எழும்பி வழிநடத்திக் கொண்டுவருவார்?

“மெய்வாழ்வுக்குள் கிறிஸ்தவ மக்களை யார் கொண்டு வருவார் (1தீமோத்தேயு 6:9,19)? நித்தியத்தின் வெளிச்சத்துக்குள் வாழ்வதே ஒரேமெய்யான வாழ்வு-நம்மையும் நமக்குண்டா னவைகளையும் தேவமகிமைக்காகப் பயன்படுத்துவதுடன், நித்தியமான மாளிகைகளின் தரிசனத்தை நஷ்டப்படுத்திக் கொள்ளாமல் வாழ்வதாகும். யதார்த்தமான, கரிசனையுள்ள வாழ்க்கை இதுவே!” – சி. எச். மேக்கின்டோஷ்

9. ‘‘ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப்போல் ஒழிந்துபோவான். சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும் போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்து போகும்; ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப் போவான்.” (யாக்கோபு 1:10-11)

செல்வந்தன் தன் செல்வப்பெருக்கத்திலும், செருக்கிலும் மகிழ்ந்து களிகூரும்படி சொல்லப்படவில்லை. ஏன் இவ்வாறிக்கிறது? ஏனென்றால் ஐசுவரியங்கள் எல்லாம் புல்லைப்போல அழிந்து போகிறதாயிருக்கிறது; ஆனால் மேலான ஆவிக்குரிய அநுபவங்களும், பாடங்களும் நித்திய தன்மையும், மதிப்பும் கொண்டவை.

10. “ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள் மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப் போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச்





சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசி நாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டது. பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத்தீர்த்துக் கொலை செய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை” (யாக்கோபு 5:1-6).

இங்கே (வசனம் 3-ல்) தேவனுடைய ஆவியானவர் செல்வத்தைத் திரட்டிப்பதுக்கி வைப்பதைப்பற்றி சத்தமாக எச்சரிக்கிறார். வேலைக்காரருக்கு நியாயமான கூலி கொடாமலும் (வ.4), ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தியும் (வ.5), எதிர்ப்பைவெளிப்படுத்தமுடியாமல் தவிக்கும் அப்பாவி மக்களைக் கொடுமையாய் நடத்தி, ஆதாயம் தேடியும் (வ.6) இன்ன பிறவழிகளிலும் ஐசுவரியத்தைத்தேடி மனம்போல் வாழ்கிறவர்களை கடுமையாக எச்சரிக்கிறார்.

இவை எல்லாம் விசுவாசிகளுக்காகவா அல்லது அவிசுவாசிகளுக்காகவா யாருக்கு எழுதப்பட்டது என்று தர்க்கிப்பது தேவையற்றது. கால்களுக்குச் செருப்புகள் சேர்ந்தால் போட்டுக்கொள்ள வேண்டியதுதான்!

11. “நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால், நான், நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்டபொன்னையும், உன்நிர்வாண

மாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன். நான் நேசிக்கிறவர்களெவர்களோ, அவர்களைக் கடிந்து கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு." (வெளிப்படுத்தல் 3:17-19)

இது சபைகளுக்குக் கர்த்தர் கொடுக்கும் கடைசிச்செய்தி, லவோதிக்கேயா சபைக்குக் கர்த்தர் கொடுக்கும் கத்திமுனை போன்ற கூர்மையான வார்த்தைகள். இவற்றிற்கு இதற்குமேல் சொல்விளக்கம் தேவையில்லை. அவற்றின் அர்த்தம் என்னவென்பது நமக்கு நன்றாகப் புலனாகிறது. இவை நமக்குச் சிறப்பான முறையில் பொருந்தும் - அல்லது நமக்கென்றே எழுதப்பட்டது போலிருக்கின்றது! நாம் அவற்றிற்குக் கீழ்ப்படிவதைத்தான் அவை எதிர்பார்க்கின்றன.

## சோம்பேறிகளுக்கு ஓர் எச்சரிக்கை

பொறுப்பற்றவர்களுக்கும், சோம்பேறிகளுக்கும் இப்படிபட்டதொரு நூல் தப்பித்துக் கொள்வதற்கு ஒரு சாக்காக இருக்கக் கூடும். வேலை செய்யக்கூடாது என்ற தீர்மானத்துடன் அதனைத்தட்டிக்கழிக்க விரும்புவோர் இதனை வாசித்தவுடன், "இது எப்பொழுதுமே நான் எதிர்பார்த்திருந்ததுதான்" என்ற பதிலுடன் வருவர்.

இந்தச் செய்தி உறுதியற்றவர்களுக்கும், பொறுப்பற்றவர்களுக்கும், உலகமும், சபையும் தங்களுக்கு வாழ்வுதரக் கடன்பட்டிருப்பதாகக் கருதுகிறவர்களுக்கும் அல்ல. "படுக்கையை விட்டு எழுந்து வேலைக்குச் செல்" (2 தெசலோனிக்கேயர் 3:6-12) என்ற வேறொரு செய்தியைத் தேவன் அவர்களுக்கு வைத்திருக்கிறார்.





கருத்துள்ளவர்களுக்கும், கடின உழைப்பாளிகளுக்கும், யதார்த்தவாதிகளுக்கும் உரிய செய்தி இதுவாகும். தங்களுக்கும், தங்கள் குடும்பங்களின் தற்காலத் தேவைகளுக்காகவும் கடினமாக உழைத்துச் சம்பாதிப்பதுடன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் காரியங்களில் மட்டும் அக்கறையாயிருப்பவர்கள் தங்கள் எதிர்காலத்தேவைகளையெல்லாம் தேவன் அருளிச் செய்வதற்கு நிச்சயமாக நம்பியிருக்கலாம்.

## நியாயந்தீர்க்குதலுக்கு எதிராக ஓர் எச்சரிக்கை

இன்னொரு அபாயத்தையும் நாம் தவிர்க்க வேண்டும். அது உலக ஆஸ்திகளை உடைய தனி நபர்களை கண்டனம் செய்கிறதான ஒரு அபாயமாகும். அவர்களை நியாயந்தீர்க்க முற்படுவது, அவர்கள் கர்த்தர் பேரில் வைத்திருக்கும் விசுவாசத்தையும் பக்தியையும் கேள்விகேட்பதாகும்.

ஐசுவரியத்தைப்பற்றி தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்று விளக்கம் கொடுப்பது ஒருகாரியம்; ஆனால் ஒரு கிறிஸ்தவருடைய இல்லத்தில் நுழைந்து அவருடைய விலையுயரிய உடைமைகளைப்பற்றி ஒரு மனக்கணக்குப் போட்டு, அவரைக் குற்றஞ்சாட்டக்கூடிய விதத்தில் விரல் நீட்டுவது வேறொரு (தவறான) காரியம்.

தேவன் கூறுவதையெல்லாம் கேட்டு, அதனை நமது வாழ்க்கைகளில் செயல்படுத்துவது நமது பொறுப்பு. ஒரு தனி நபரைவிட ஒரு பெரிய குடும்பத்தின் அனுதினத் தேவைகள் ஏராளமாயிருக்கலாம். ஆதலால் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து எவ்வளவு வைத்துக்கொள்ளலாம் என்று அவரவர்தான் தங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். உக்கிராணக்காரராக, ஒவ்வொருவரும் தன்னைக்குறித்துத்தான் கணக்குக் கொடுக்க வேண்டுமே தவிர, மற்றவர்களைக் குறித்தல்ல என்பதை நாம் மறந்து விடவேண்டாம்.

எனவே குரூரமான முறையில் மற்ற விசுவாசிகளை நமக்குள்ளேயோ, வெளிப்படையாகவோ குற்றம் பார்த்துக் குறைசொல்லிக் கண்டனம் பண்ணி, விமர்சிக்கிற கொடுஞ் செயலுக்குத் தேவன் நம்மைத் தப்புவிப்பாராக.

## முடிவுரை

தேவையான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றுடன் விசுவாசிகள் திருப்தியாக இருக்க வேண்டுமென்று திருவசனம் கட்டளையிடுகிறது என்பது தெளிவு. தங்களுடைய குடும்பங்களுக்கு இவற்றைச் சவதரித்துத் தற்காலத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்பதுடன், இவற்றிக்குப் போக எஞ்சியதெல்லாம் இறைப்பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்பதும் மிகத்தெளிவாகிறது. தங்களுடைய வருங்காலப் பாதுகாப்புக்காகப் பொருளீட்டிச் சேமித்து வைக்க முயற்சி எடுக்கக்கூடாது. அதற்கெல்லாம் கர்த்தரையே சார்ந்திருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையின் மகாபெரிய ஒரே வாஞ்சை கர்த்தரைச் சேவிப்பதாக இருக்க வேண்டும்; மற்றவையெல்லாம் இந்த நோக்கத்திற்குள் அடக்கமாக இருத்தல் வேண்டும்.

இவ்விதமான வாழ்க்கையே சுவிசேஷநூல்களில் கற்பிக்கப்பட்டு, அப்போஸ்தலரில் நடைமுறைப்படுத்தப்பட்டு, நிருபங்களில் வியாக்கியானம் செய்யப்படுகிறது. இதற்கு மிகச்சிறந்த முன்மாதிரி நமது கர்த்தராகிய இயேசுவேதான்,

அடுத்துவரும் கேள்வி: ''இதனை நான் எனது வாழ்க்கையில் செயல்படுத்துவது எப்படி?"

1. முதலாவதாக, நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியதுதான் நாம் செய்யவேண்டிய முதல் கடமையாகும். (2கொரிந்தியர் 8:5). நாம் அவருடையவர் களாகி விட்டால், பின்னர் நமது உடைமைகளும் அவருக்கு சொந்தமாகி விடுகின்றன என்பது நிச்சயம்.





2. அதன் பின்னர் கர்த்தர் தம்முடைய கரத்தை நம்முடைய வாழ்க்கையின் எந்தெந்தப்பகுதிகளில் வைக்கிறாரோ, அதற்கெல்லாம் நாம் உடனடியாக பிரதிக்கிரியையாக ஒத்துழைக்கவேண்டும். ஒருவேளை நாம் ஐந்து அல்லது மூன்று நட்சத்திர விடுதிகளில் தங்குவதையோ, உணவு அருந்துவதையோ குறித்து மனவருத்தத்தையோ, அமைதியின்மையையோ தருவார். அல்லது விலையுயர்ந்த விளையாட்டுச் சாதனங்களுக்காகப்பணத்தைச் செலவிடுவதில் மன உழைச்சல் ஏற்படும், விலையுயர்ந்த புதிய மாடல்காரின் மீது நமது பார்வை விழும்பொழுது, விலைகுறைந்த காரைவாங்கி விட்டு, அதன் வித்தியாசத்தை ஏன் சுவிசேஷ ஊழியத்துக்குக் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தைத் தருவார். அப்படியே நமது ஆடை அணிகலன்களுக்கு ஆகும் செலவுகளில் எல்லாம் பெரியமாறுதல் ஏற்பட்டு, அநேகரை இரட்சிப்பின் ஆடைகளினாலும், நீதியின் சால்வையினாலும் அலங்கரிக்க உந்தப்படுவோம். அதே போன்று நமது முழுநேரத்தையும் கவனத்தையும் செலுத்தத் தேவையில்லாத இலகுவான வேலை வாய்ப்புகளைத் தேடிக்கொள்வோம். மிகவும் ஆடம்பரமான வீடுகளிலிருந்து, கவர்ச்சியில்லாத சாதாரண வீடுகளுக்கு மாறிவிடுவோம்.

இந்தக் காரியங்களைப்பற்றி ஒவ்வொன்றாகக் கர்த்தர் நம்முடன் பேசும் பொழுது, அதை நாம் நிச்சயமாக உணருவோம். அது மிகத் தெளிவாக இருக்கும், ஆகையால் அதற்கு மறுப்பது திட்டவட்டமான கீழ்ப்படியாமையாகும்.

3. மூன்றாவதாக நாம் கவனிக்க வேண்டிய குறிப்பாவது, "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்!" (யோவான் 2:5). நண்பர்கள் உங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளலாம். உறவினர்கள் உங்களை நிந்திக்கலாம். பலவகையான நெருக்கடிகளும், எதிர்ப்புகளும் ஏற்படும். ஆனால் இயேசுவை மாத்திரம்

*உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறது?*

விடாமல் பின் செல்லுங்கள், பின்விளைவுகளை எல்லாம் ஆண்டவரிடமே விட்டு விடுங்கள்.

4. உடனடித் தேவைகளுக்கும், செலவுகளுக்கும் போக மீதமுள்ள யாவற்றையும் தேவனுடைய வேலைக்காகவே கொடுத்து விடுங்கள். எங்கே எந்த ஊழியத்துக்கு அனுப்ப வேண்டுமென்று அவரையே காண்பிக்கச்சொல்லுங்கள். அவர் நிச்சயம் காண்பிப்பார்.

நமது சந்ததியில் இவ்விதமான பூரணபக்தி வைராக்கியம் நிறைந்த கிறிஸ்தவ வாழ்க்கைக்குக் கர்த்தர் நம்மைத் திருப்புவாராக. ஜான்வெஸ்லி ஜெபித்த பிரகாரமாக:

*"நான் ஆசிக்கிறதைத் தேவன் எனக்கு அருளிச் செய்வாராக! நான் அக்கரைசென்று காணப்படாமற் போகுமுன்பு, முழுவதுமாகத் தங்களை ஆண்டவருக் கென்று அர்ப்பணித்து விட்ட ஒரு கூட்டத்தை நான் காண்பேனாக. அவர்கள் உலகத்திற்குச் சிலுவை யிலறையப்பட்டவர்களாகவும், உலகமும் அவர்களுக்குச் சிலுவையிலறைபப்பட்டதாகவும் இருக்கின்ற ஒரு சேனையாக இப்பார்களாக. தங்கள் ஆவி ஆத்துமா தேகம் மற்றும்யாவையும் கடவுளுக்கே கொடுத்து விட்டவர்களாக இருக்கட்டும்! அப்பொழுது நான் மனமகிழ்ச்சியுடன் ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போக விடுகிறீர்" என்று ஆர்ப்பரிப்பேனே!*



# கர்த்தாவே, என்னை உடைத்தருளும்!

"பிதாவின் கரத்திற்கு எதிர்ப்பும், மறுப்பும் தெரிவிக்காத நொறுங்குண்டு பணிந்த ஆவியின் தன்மை கொண்டவர்களின் ஆத்துமாக்களே அவர் செயல்படக்கூடிய செழிப்பான விளை நிலமாகும். நம்மிடமிருந்து பலத்தையும், வல்லமையையும் அவர் எதிர்பார்க்கவில்லை, ஆனால் பலவீனத்தை எதிர்பார்க்கிறார்; எதிர்க்கும் ஆற்றலை அல்ல, அவருக்கு இணங்கி செவிகொடுக்கும் சுபாவத்தையே தேடுகிறார். ஏனெனில், வல்லமையும் சத்துவமும் அவருடையதே. நமது பலவீனத்தில் அவருடைய பலம் பூரணப்படுகிறது."

- தெரிந்தெடுக்கப்பட்டது.

# முன்னுரை

"கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்" என்ற நூலை எழுதி சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு அன்ட்ரு முர்ரே இவ்வாறு கூறினார்:

> *"தான் அனுபவித்திருப்பதை விட அதிகமாகக் கூறுவதற்கு ஒரு கிறிஸ்தவ ஊழியரோ, நூலாசிரியரோ ஏவப்படுகிறார் என்று நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன். நானும் எனது மேற்கூறிய நூலை எழுதுகின்ற வேளையில் அதில் கூறின யாவற்றையும் அநுபவித்திருந்தேன் என்று கூற இயலாது. அது மாத்திரமல்ல, இப்பொழுதும்கூட எல்லாவற்றையும் அநுபவரீதியாக அறிந்திருக்கிறேன் என்று கூறத் துணிய மாட்டேன்."*

இதேவிதமான ஆவியோடும், உணர்வோடும் தான் அப்போஸ்தலனாகிய பவுலும் இதனை எழுதியிருக்க வேண்டும்:

> *"நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்."* (பிலிப்பியர் 3: 12).

"கர்த்தாவே என்னை உடைத்தருளும்!" என்ற கீழ்க்கண்ட கட்டுரையை இதேவிதமான சிந்தனையோடுதான் நான் எழுதுகிறேன்! இக்கருத்துக்களை எழுதும்படி





கர்த்தருடைய பாரம் என்னை அழுத்துகிறது. நான் இவற்றை முழுமையாக அநுபவிக்காமலிருக்கிறேன் என்பதற்காக இவற்றை எழுதாமலிருக்கமுடியாது. ஏனெனில் இந்த சத்தியங்கள் மிகவும் பயபக்திக்குரிய, மேலான, அவசரமானவைகளாகும். நான் எவற்றில் எல்லாம் தவறியிருக்கிறேனோ, அவற்றையெல்லாம் சீக்கிரம் பெற்றுக் கொள்ள என்னிருதயம் ஏங்குகிறது.

- வில்லியம் மேக்டொனால்ட்.

## உடைக்கப்பட்ட பொருட்களை தேவன் மதிக்கிறார்

சாதாரணமாக, ஒரு பொருள் உடைந்து விட்டால், அதன் மதிப்பு குறைந்து விடுகிறது அல்லது முற்றிலும் மதிப்பு அற்றுப் போகிறது என்கிறோம். பாத்திரங்கள், பாட்டில்கள், முகம் பார்க்கும் கண்ணாடிகள் ஆகியவை உடைந்து விட்டால் குப்பையில் தான் போட வேண்டும். ஒரு மேசை அல்லது நாற்காலி போன்றவற்றில் ஒரு சிறிய கீறல் ஏற்பட்டுவிட்டாலும், அல்லது புதுத்துணியில் ஒரு கிழிசல் ஏற்பட்டாலும் அதன் மறுவிற்பனை விலை மிகவும் குறைந்து விடுகிறது.

ஆனால் ஆவிக்குரிய உலகில் அவ்வாறில்லை. உடைந்த பொருட்களுக்கு, முக்கியமாக உடைக்கப்பட்ட மனிதர்களுக்குத் தேவன் அதிக மதிப்புக் கொடுக்கிறார். எனவே தான் இப்படிப்பட்ட வசனங்களை நாம் படிக்கிறோம்:

"நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்:" (சங்கீதம் 34: 18)

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்:

தேவனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." (சங்கீதம் 51: 17)

கர்வமும், பெருமையுள்ளவர்களுக்கு எப்படி எதிர்த்து நிற்பது என்று தேவன் அறிவார்; ஆனால் தாழ்மையும், நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களைத் தேவனால் எதிர்க்க முடியாது.

"...தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்..." (யாக்கோபு 4:6). நமது உடைக்கப்பட்ட நிலைமை அவருடைய இரக்கத்தையும், மன உருக்கத்தையும் கவர்ச்சிக்கும் ஆற்றலுடையதாயிருக்கிறது.

ஆதலால் அவருடைய அற்புதமான திட்டத்தில் நமது ஜீவியங்களில் உடைதலும், நொறுக்குதலும் ஒரு பங்காக இருக்கிறது - நமது இருதயத்தில் உடைவு, ஆவியில் உடைவு, சரீரத்திலும் நொறுக்குதல் அவருக்கு ஏற்றதாயிருக்கிறது. (2 கொரிந்தியர் 4. 6-18).

## மனந்திரும்புதலே ஒருவிதமான நொறுக்குதல்தான்

நாம் மனந்திரும்புவதற்கு அல்லது குணப்படுவதற்கு முன்பாகவே இந்த நொறுக்கப்படும் அநுபவத்தைப் பெறுகிறோம். பரிசுத்த ஆவியானவர் நமது பாவத்தைக் குறித்து உணர்த்தும் வேலையைத் துவங்கினவுடன் நாம் உடைக்கப்படும் அனுபவத்திற்குள் அறிமுகப்படுத்தப் படுகிறோம். நாம் நஷ்டப்பட்டுப் போனோம், தேவ சமூகத்தில் வருவதற்கு அருகதையற்றவர்கள், நரகத்துக்கே தகுதியான பாவிகள் நாம் என்று அறிக்கை செய்வதற்கு ஆவலுள்ளவர்களாகிற நிலைமைக்கு தூய ஆவியானவர் நம்மைக் கொண்டுவரவேண்டியதாயிருக்கிறது. இந்த வழியில் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு அடியிலும் நாம் மண்டியிட




மறுக்கிறோம், உண்மையில் உதைத்துத் தள்ளிப் போடுகிறோம். ஆனால் அவரோ கடைசி மட்டும் நம்முடன் போராடுகிறார். நமது பெருமை தவிடுபொடியாகும் வரைக்கும், நமது கொட்டம் ஒடுங்கி, நாவுகள் அமைதியாகி, எல்லா எதிர்ப்புகளும் ஓய்ந்து போகும் வரையும் போராடிக் கொண்டேயிருக்கிறார். சிலுவையினடியில் கிடந்து புழுவாகத் துடித்து, முடிவில், "ஆண்டவரே, என்னை இரட்சியும்" என்று கதறும் வரை ஆவியானவர் நம்மை விட மாட்டார். இறுதியாக துஷ்டன் கட்டப்பட்டான், பாவி மேற்கொள்ளப்பட்டான், குதிரைக் குட்டியின் கழுத்து முறிக்கப்பட்டாயிற்று!

ஆம், குதிரைக் குட்டி முறிக்கப்பட்டாயிற்று. இயற்கை சுபாவப்படி குதிரைக்குட்டி கட்டுப்பாடில்லாத காட்டு மிருகம். அதற்கு மூக்கணாங்கயிறு போடுவது, லகானிடுவது, சேணம் வைப்பது என்ற பேச்சையே எடுக்க முடியாது. உடனே அது பின்னோக்கிப் பலமாக உதைக்கவும், குதிக்கவும், ஓடிச்சாடவும் முற்படும். அது தோற்றத்தில் மிக அழகாக, நேர்த்தியாக, வடிவமைக்கப்பட்ட பிராணியாக இருந்தாலும், அது முறிக்கப்படாதவரை சவாரிக்கு உதவாத, உபயோகமற்ற மிருகமாகவே இருக்கிறது. அதை வசப்படுத்துவதற்காக எடுக்கும் முயற்சி தான் துன்பம் நிறைந்த நீண்ட கடும்பிரயாசமாக இருக்கிறது. இவ்வாறு அதை அடக்கிப் பழக்கப்படுத்துவதைத்தான் 'முறிப்பது' என்கிறோம். அதனுடைய சித்தத்தை மனிதனுடைய மேலான சித்தத்தால் கட்டுப்படுத்தி நுகத்தில் மாட்டும்பொழுது தான் அது பிறந்ததின் நோக்கமும், இருப்பதின் அவசியமும் நிறைவு பெறுகிறது.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து நாசரேத்தூரில் தச்சனின் மகனாகத் தச்சு வேலை செய்து கொண்டிருந்த பொழுது அநேக நுகக்கால்களைச் செய்திருப்பார் என்று இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருகிறோம். அவருடைய பட்டறைக்கு அல்லது கடைக்கு "எனது நுகங்கள் நன்றாகப் பொருந்துபவை" என்ற பெயர்ப்பலகையைத் தொங்க

விட்டிருந்தால் அதனை வரவேற்கலாம். அவர் இப்பொழுதும் நுகக்கால் செய்பவர்தான் என்பதை மறக்க வேண்டாம்.

ஏனெனில் "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்." (மத்தேயு 11:29-30)

எவ்வாறிருப்பினும், கழுத்து முறிக்கப்பட்டு-வசப்படுத்தப்பட்டு - அடங்கியிருக்கிறவர்களுக்குத்தான் நுகம் தேவைப்படுகிறது. நமது சித்தங்கள் எல்லாம் உடைக்கப்பட்டு அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தால் தான் அவரிடம் நாம் கற்றுக் கொள்ள முடியும். அவர் சாந்தமும் இருதய மனத் தாழ்மையும் உடையவராக இருந்தது போல நாமும் மாற வேண்டும். அப்பொழுதுதான் நமது இருதயங்களும் ஆத்துமாக்களுக்கும் இளைப்பாறுதல் கிடைக்கும்.

## உடைக்கப்படுதலின்/நொறுக்கப்படுதலின் அம்சங்கள்

"உண்மையான நொறுக்கப்படுதல் என்றால் என்ன? இந்த அடிப்படைக் கேள்விக்கு வருகிறோம். ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் இது எவ்வாறு பிரதிபலிக்கிறது? இதன் அடிப்படைக் கூறுகள் அல்லது அம்சங்கள் எவை?"

**1. மனந்திரும்புதல், அறிக்கையிடுதல், மன்னிப்புக் கோருதல்**

முதன்முதலில் நமது எண்ணத்தில் தோன்றுவது தேவனிடம் பாவத்தை அறிக்கை செய்வதுடன், யாருக்கு விரோதமாகக் குற்றம் புரிந்தோமா, அவர்களிடமும் அறிக்கை செய்து மன்னிப்புக் கேட்பதாகும். உடைக்கப்பட்ட மனிதன் உடனடியாக மனந்திரும்புகிறான். பாவத்தைப் பெருக்கி




பாய்க்கு அடியில் மறைத்து வைக்க அவன் முயற்சிப்பதில்லை. "காலம் எல்லாவற்றையும் குணமாக்கிவிடும்" என்ற சாக்கைச் சொல்லித் தனது பாவத்தை மறப்பதற்கும் முயற்சிப்பதில்லை. அவன் தேவசமூகத்திற்கு ஓடி, "நான் பாவம் செய்தேன்" என்று ஓலமிடுகிறான். பின்னர் அவன் தீங்கிழைத்தவர்களிடம் எல்லாம் ஓடிச்சென்று, "நான் தவறு செய்தேன்; நான் வருந்துகிறேன்; நீங்கள் என்னை மன்னிக்கும்படி மன்றாடுகிறேன்" என்று கெஞ்சிக் கேட்கிறான். இப்படித் தன்னைத் தாழ்த்தி மன்னிப்புக் கேட்பதிலுள்ள வெட்கத்தையும், வேதனையையும் ஒரு புறம் சகித்துக் கொண்டு, மறுபுறம் மன்னிப்புக் கேட்பதினால் மனதின் பாரம் நீங்கி, மனச்சாட்சி சுத்திகரிக்கப்பட்டு, அதினாலுண்டாகும் சந்தோஷம் சமாதானத்தை அநுபவிக்கிறவனாய், மகிழ்ச்சியுடன் ஒளியில் நடக்கிறான்.

மெய்யான மனஸ்தாபமும், மனந்திரும்புதலும் பாவத்தின் அகோரத்தை மழுப்பாமலும், பாராமுகமாக இருந்து விடாமலும் உண்மையை உண்மையாகவே ஏற்றுக் கொள்ளுகிறது. மனவருத்தம் எதுவில்லாமல் ஒரு விடுதித்தலைவி இவ்வாறு கூறினாள்: "நான் ஏதாவது தவறு செய்திருந்தால், நான் மன்னிக்கப்படுவதற்கு விரும்புகிறேன்." ஆனால் மெய் மனந்திரும்புதலோ: "நான் குற்றம் செய்து விட்டேன்; அதற்காக வருந்தி, மன்னிப்புக் கேட்கிறேன்" என்று கூறும்.

தாவீதுடைய வாழ்க்கையிலும் பாவமும், தோல்வியும் மேகமந்தாரமாகக் காணப்பட்டாலும், அவன் தனது வீழ்ச்சிக்கெல்லாம் மிகவும் மனமுடைந்தவனாகத் தேவனிடமே ஓடி வந்து ஆழமான அறிக்கை செய்தது தான் அவனைத் தேவனுடைய இருதயத்துக்குப் பிரியமுள்ளவனாக்கிற்று. 32 - மற்றும் 51-ஆம் சங்கீதங்களில் தாவீதினுடைய பாவங்கள், அக்கிரமங்கள், மீறுதல்களை அவனுடன் சேர்ந்து நாமும் திருப்பிப் பார்க்கிறோம். அவன் மனந்திரும்ப மறுத்தவனாகப் பாவத்தை அடக்கிக் கொண்டிருந்தவரையிலும் எவ்வளவாக

சரீரத்திலும், மனதிலும், ஆவியிலும் நொந்து போய் விட்டான் என்று பார்க்கிறோம். அவனுக்கு ஒரு காரியமும் சரியாகப் போகவில்லை. எல்லாம் நிலைகுலைந்து காணப்பட்டது.

இறுதியாக, தாவீது நொறுங்குண்டவனாக தேவசமூகத்தில் வீழ்ந்து அறிக்கை செய்த பொழுது மன்னிக்கிறதற்குத் தயை பெருத்த தேவன் அவனை மன்னித்துச் சேர்த்துக் கொண்டார். அப்பொழுது தாவீதின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியின் மணி ஒலித்தது; தாவீதும் தனது பாடல்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டான்.

புதிய ஏற்பாட்டிலும் பவுல் நொறுக்கப்படும் ஒரு அநுபவத்தைப் பெறுகிறதைப் பார்க்கிறோம். அப்போஸ்தலர் 23-ம் அதிகாரத்தில் பவுல் பிரதான ஆசாரியர்கள் முன்னிலையிலும், சனகரீம் எனும் ஆலோசனைச் சங்கத்திற்கு முன்னும் நியாயம் விசாரிக்கப்படுகையில், பவுல் தனது துவக்க உரையில், "எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சி யோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன்" என்று கூறினவுடன், பிரதான ஆசாரியனாகிய அனனியா, "இவன் வாயில் அடியுங்கள் என்று கட்டளையிட்டான்." பவுலும் படாரென்று, "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே! தேவன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப் பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா என்றான் (வ.3). இந்தக் கூற்று அங்கிருந்தவர்களை அதிர்ச்சியடையச் செய்தது. பிரதான ஆசாரியரோடு இவ்வாறு மரியாதையில்லாமல் பேசுவதா, அவர் பிரதான ஆசாரியன் என்று பவுலுக்குத் தெரியாதா என்று திடுக்கிட்டுப்போனார்கள். உண்மையில் பவுலுக்கு அது தெரியாது. ஒருவேளை அனனியா அந்த நேரம் பிரதான ஆசாரியனுடைய சீருடையில் இல்லாமலிருந்திருக்கலாம். அல்லது தனக்குரிய ஆசனத்தில் அமராமலிருந்திருக்கலாம். அல்லது பவுலின் கண் ஒளி மங்கிப் போயிருந்திருக்கலாம். என்ன காரணமாக இருந்தாலும், அப்போஸ்தலன் மனமறிய வேண்டுமென்று அவமரியாதை





யாகப் பேசவில்லை. உடனே பவுல் தனது குற்றத்தை உணர்ந்து அறிக்கை செய்ததைப் பார்க்கிறோம். "நியாயாதிபதிகளைத் தூஷியாமலும், உன் ஜனத்தின் அதிபதியைச் சபியாமலும் இருப்பாயாக" என்று யாத்திராகமம் 22:28 ஐ மேற்கோள் காட்டி மன்னிப்புக் கோரினார் (வ.5). தனது கடுஞ்சொல்லை நீதிப்படுத்த முற்படாமல், பவுல் உடனே தனது குற்றத்தை அறிக்கை செய்து அதற்காக வருத்தம் தெரிவித்தார். இவ்வாறு தனது ஆவிக்குரிய முதிர்ச்சி நிலையை வெளிப்படுத்தினார் பவுல்.

**2. திருப்பிக் கொடுத்தல்**

நொறுக்கப்படுதலின் முதல் அம்சத்துடன் நெருங்கின தொடர்புடைய அடுத்த குணாதிசயம் அநியாயமாக எடுத்துக் கொண்டதையெல்லாம் தவறாமல் திருப்பிக் கொடுப்பதாகும். நான் எதையாகிலும் திருடியிருந்தாலோ, கெடுத்திருந்தாலோ, சேதப்படுத்தியிருந்தாலோ, அல்லது எனது துர்நடக்கையினால் பிறருக்கு நஷ்டம் ஏற்படுத்தியிருந்தாலோ, நான் மன்னிப்பு கேட்பது மட்டும் போதாது. நஷ்டஈடு செலுத்தப்பட வேண்டுமென்று நீதி கோருகிறது. இது நான் குணப்படுவதற்கு முன்பும், அதன் பின்பும் பொருந்தும்.

சகேயு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவுடன், தான் வரி வசூலிப்பவனாக அநியாயமாக, நெறிகெட்ட முறையில் சம்பாதித்தவைகளெல்லாம் அவன் நினைவுக்கு வந்தது. அவனுடைய வாழ்க்கையிலுள்ள சீர்கேடுகளையெல்லாம் உடனே சரிசெய்ய வேண்டுமென்ற தெய்வீக உள்ளுணர்வு சகேயுவுக்கு வந்தது. "ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலததனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்." (லூக்கா 19:8) இங்கே அவனுடைய வாக்குமூலத்தில், "வாங்கினதுண்டானால்" என்ற வார்த்தை அவனுடைய தீர்மானத்தில் சந்தேகம் அல்லது பின்

வாங்குதலைக் குறிக்காது. அவன் நாலத்தனையாகத் திருப்பிக் கொடுக்கத் தயாராயிருந்தான். அவன் திருப்பிக் கொடுப்பது அவனுடைய மனமாற்றத்தின் கனியாகவும், நாலத்தனையாகத் திருப்பிக் கொடுப்பது அவனுடைய புதிய வாழ்க்கையின் தீவிரத்தையும் சுட்டிக் காண்பிக்கிறது.

சில சந்தர்ப்பங்களில் திருப்பிக் கொடுப்பது சாத்தியமாகாது. பெற்றதற்கான அத்தாட்சிகள் அழிந்து போயிருக்கலாம்; அல்லது காலப்போக்கில் சரியான தொகைகள் ஞாபகத்தில் இல்லாமலிருக்கலாம். தேவனுக்கு இவையெல்லாம் தெரியும். அவர் விரும்புவதெல்லாம், நமக்கியன்ற அளவு வஞ்சகமில்லாமல் திருப்பிக்கொடுக்க வேண்டியதை எல்லாம் கொடுத்திருக்க வேண்டும் என்பதுதான்.

இந்த நடவடிக்கையின் மூலமாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமமே மகிமைப்படவேண்டும். அவர் நிமித்தமாக இது நிறைவேற்றப்பட வேண்டும். "இதனை நான் திருடியிருந்தேன். அதற்காக வருந்துகிறேன். இப்பொழுது இதைத் திருப்பிக் கொடுக்கிறேன்" என்று மாத்திரம் சொல்லித் திருப்பிக் கொடுப்பதில் தேவனுக்கு மகிமையில்லை. நமது செயல் கிறிஸ்துவின் சாட்சியோடு இணைந்திருத்தல் வேண்டும். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து சமீபத்தில் நான் கிறிஸ்தவனாகி விட்டேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக உங்களிடமிருந்து நான் திருடின இந்தக் கருவிகள் (அல்லது பணம்) பற்றி உங்களிடம் மன்னிப்புக் கேட்டு அவற்றை உங்களிடம் திருப்பிக் கொடுக்கும்படி ஆண்டவர் என்னுடன் பேசினார். எனவே அவற்றைத் திருப்பிக் கொடுக்க வந்திருக்கிறேன்" என்ற அறிக்கையுடன் திருப்பிக் கொடுக்க வேண்டும். இவ்வாறு நற்கிரியைகளைச் செய்கிறதினால் மாத்திரமே மனிதனல்ல, தேவனே மகிமைப்படுகிறார்.

### 3. மன்னிக்கும் ஆவி

நொறுக்கப்படுதலின் மூன்றாவது குணம் நமக்கு விரோதமாகச் செய்யப்படும் தீங்குகளை உடனுக்குடன்





மன்னிக்கும் விருப்பமாகும். மன்னிப்பு கேட்பதற்கும், எடுத்ததைத் திருப்பிக் கொடுப்பதற்கும் எவ்வளவு கிருபை தேவைப்படுகிறதோ அவ்வளவு கிருபை இதற்கும் அநேக சந்தர்ப்பங்களில் தேவைப்படுகிறது.

மற்றவர்களை மன்னித்துவிடுவதைக் குறித்துப் புதிய ஏற்பாடு மிகவும் வெளிப்படையாகக் கூறுகிறது. முதலாவதாக, நமக்குப் பிறர் தீங்கிழைத்தவுடனே அவர்களை நம் உள்ளத்தில் மன்னித்துவிடவேண்டும் (எபேசியர் 4:32). அவர்களிடம் நாம் சென்று அவர்களை மன்னித்து விட்டதாகக் கூற வேண்டியதில்லை. நம்முள்ளத்தில் அவர்களை மன்னித்து விடவேண்டும்.

> *எனக்கு ஒருவர் தீங்கு செய்தவுடனேயே நான் அவரை மன்னித்துவிடவேண்டும். அப்பொழுது என் ஆத்துமா விடுதலையடைந்து விடுகிறது. அவர் எனக்குச் செய்த தீங்கை அவருக்கு எதிராக நான் பேணி வைத்துக் கொண்டே இருந்தால் நான் தேவனுக்கு விரோதமாகவும், அவருக்கு விரோத மாகவும் பாவஞ்செய்கிறேன். மேலும் தேவனிடத்தில் நான் மன்னிப்புப் பெறுவதற்கும் அது இடையூறாக இருக்கிறது. அந்த மனிதன் தன் தவறை உணர்ந்து, அதற்காக மனம் வருந்தித் தன்னைத் திருத்திக் கொள்கிறாரோ இல்லையோ, அது அவருக்கும் தேவனுக்கும் உள்ள காரியம். ஆனால் நான் தேவனுடைய பார்வையில் செம்மையாக இருக்க வேண்டும். அவர் மன்னிப்புக் கேட்டு, அதைப் பெறுவதற்கு மத்தேயு 18:15ன் படி நான் அவருக்கு உதவி செய்ய வேண்டும். இது பலனளிக்குமோ, இல்லையோ, இந்த நடவடிக்கை துவங்குவதற்கு முன்பே நான் அவரை மன்னித்து விட வேண்டும்.*
>
> -லென்ஸ்கி

எண்ணிறந்த தீமைகளையும், அநியாயங்களையும் நாம் உடனே மன்னித்து மறந்து விடலாம். அவ்வாறு செய்யக்

கூடுமானால், அதுதான் உண்மையான வெற்றியாகும். "சகலத்தையும் தாங்கும்... சகலத்தையும் சகிக்கும்" (1கொரிந்தியர் 13:7) என்ற வசனத்தை "அன்பானது தனக்கிழைக்கப்பட்ட தீங்கைக் கணக்கு வைக்காமலும், வஞ்சந்தீர்க்க வழி தேடாமலும், தனது சகிப்புத்தன்மையைப் பற்றி பெருமை பாராட்டாமலும் இருக்கும்" என்று ஜே.பி.பிலிப்ஸ் மொழிபெயர்த்திருக்கிறார்.

"அந்தப் பசப்புக்காரி உங்களைப் பற்றிக் கூறின கேவலமான காரியம் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?" என்று ஒரு கிறிஸ்தவப் பெண்மணியிடம் கேட்கப்பட்டபொழுது, அவர் கூறின பதிலாவது: "அது எனக்கு ஞாபகமில்லை; ஆனால் அப்பெண்ணை மன்னித்து விட்டது நிச்சயமாக எனது நினைவிலிருக்கிறது." என்றார்.

உங்களுக்குச் செய்யப்பட்ட தீமை கொடிதானதென்றும், அதனை அப்படியே பாராமுகமாய் விட்டுவிடுவது நல்லது அல்ல என்றும் நீங்கள் அறிவீர்களானால், அதைக் குறித்து அவரிடம் நேரில் சென்று பேசிவிடுவதே சிறந்தது என்று தேவனுடைய வார்த்தை போதிக்கிறது (மத்தேயு 18:15). அவர் மனந்திரும்பினால், உடனே நீங்கள் கட்டாயம் அவரை மன்னிக்க வேண்டும். "அவன் ஒரு நாளில் ஏழு தரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழு தரமும் உன்னிடத்தில் வந்து: நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக." (லூக்கா 17:4). இங ஙனம் கணக்கில்லாமல் ஆர்வத்துடன் மற்றவர்களை நாம் மன்னிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்; ஏனெனில் கர்த்தரிடத்தில் பெற்றிருக்கும் மன்னிப்புக்கு அளவுமுண்டோ!

பிறர் நமக்கு விரோதமாகச் செய்த தீமையை எல்லாரிடமும் போய் நாம் தம்பட்டம் அடிக்கக் கூடாது; ஆனால் பலமுறை நாம் அவ்வாறு செய்கிறோம். "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில்,





அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து" (மத்தேயு 18:15) என்பது தான் தேவன் ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்கு. சற்று அடக்கமாக இரு; எல்லாரிடமும் இதைச் சொல்லித் திரிய வேண்டியதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

குற்றஞ் செய்தவர் மனமுடைந்து மன்னிப்புக் கேட்டு விட்டால், அவரை ஏற்கனவே மன்னித்து விட்டதாக உடனே கூறுங்கள். ஆனால் அவர் மனஸ்தாபப்பட மனமில்லாதவராக இருந்தால், மத்தேயு 18:16-17-ன்படி, "இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக் கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற் போனால், அதை சபைக்கு (உள்ளூர் கிறிஸ்தவர்கள் ஐக்கியத்திற்கு)த் தெரியப்படுத்து." இவை எல்லாவற்றின் நோக்கமும் அவரைக் குற்றப்படுத்திப் பழி வாங்குவதல்ல, அவரை நல்மனச்சாட்சியுடன் சபையில் சேர்த்துக் கொள்ளுவதுதான்.

இந்தக் கடைசி முயற்சியும் தோல்வியடைந்து விட்டால், அந்த மனிதனை அஞ்ஞானியைப் போலவும், ஆயக்காரனைப் போலவும் நடத்தலாம் (வ.18). அதாவது, அவர் சபையின் ஐக்கியத்தில் இல்லாதவராகவே கருதப்படுகிறார். அவர் கிறிஸ்தவர் அல்லாதவரைப் போலவே நடந்து கொள்ளுவதால், அவரை அந்த நிலையில் வைத்து விடலாம். அவரை அவிசுவாசியாகவே நடத்த வேண்டும். ஆனால் அவர் உணர்வடைந்து, மன்னிப்புக் கேட்டு விட்டால், மீண்டும் சபை ஐக்கியத்தில் அவரைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மன்னிக்க விருப்பமில்லாத சுபாவத்தைத் தேவன் மிகவும் வெறுக்கிறார். கடந்தவைகள் கடந்து போகட்டும் என்று விட்டுவிடாமல், உட்பகைகளையும், மனச்சடவுகளையும் 'செத்தாலும் மன்னிக்கமாட்டேன், மறக்கவுமாட்டேன்' என்று மனதில் பேணி வைத்திருப்பதை தேவன் விரும்புகிறதில்லை. இதனை மத்தேயு 18:23-35லுள்ள திருஷ்டாந்தத்தின் மூலமாகக்

கர்த்தர் விளக்குகிறார். பல இலட்சம் ரூபாய் கடன்பட்டிருந்த அரசு அலுவலர், அரசனால் மன்னிக்கப்பட்டிருந்தும், தனது வீட்டு வேலைக்காரன் தனக்குக் கொடுக்க வேண்டிய சில நூறு ரூபாய்களை மன்னிக்க மனமில்லாமல், அவனைக் கடுமையாகத் தண்டித்தான். இதன் படிப்பினை மிகவும் தெளிவாகத் தெரிகிறது. நரகதண்டனைக்குப் பாத்திரராகிய நம்மைத் தேவன் மன்னித்து, பரலோகவாசிகளாக மாற்றியிருக்க, மற்றவர்கள் நமக்குக் கொடுக்க வேண்டிய அற்பமானவற்றை விட்டுக் கொடுக்க நாம் ஆவலுள்ளவர் களாயிருக்க வேண்டும்.

### 4. பதில் செய்யாமலும், பழி வாங்காமலும், பொறுமையுடன் சகிப்பது

உடைக்கப்படுதலின் வேறு சில குணநலன்களில் ஒன்று நன்மை செய்வதை நாடித் தீமையைப் பொறுமையுடன் சகிப்பதும், பழி வாங்காமலிருப்பதுமாகும். நமதாண்டவர்தான் இதற்குப் பிரதான எடுத்துக்காட்டு. தமக்கு விரோதமாய் எழும்பிய வன்செயல்களையும், வசைமொழிகளையும் பொறுமையாய்ச் சகித்ததுமன்றி, மன்னிக்கவும் செய்தார்.

"அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்." (1பேதுரு 2:23)

நாமனைவருமே இவ்விதமான வாழ்க்கைக்கு அழைக்கப் பட்டிருக்கிறோம்.

"ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சி யினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப்பாடுபட்டு உபத்திர வங்களைப் பொறுமையாய்ச்சகித்தால் அதுவே பிரீதியா யிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும் போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தி யுண்டு? நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமை யோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும்" (1பேதுரு 2:19-20).





கிருபையிலிருந்து மகிமைக்கு என்ற தமது நூலில் மர்டாக் கேம்பெல் நமக்கு நினைப்பூட்டுகிற முக்கியமான செய்திகளில் ஒன்று ஜான் வெஸ்லியின் மனைவி தனது கணவருக்கு மிகுந்த அக்கினிப் பரீட்சையைத் தந்து அவருக்கு வாழ்க்கையை கசப்பாக்கிக் கொண்டிருந்தார் என்பதாகும். அநேக மணி நேரங்களாக ஜான் வெஸ்லியின் தலைமுடியைப் பிடித்து அவரை அறை முழுவதும் இழுத்துக் கொண்டே அலைவார். ஆனால் மெதடிஸ்ட் சபையின் ஸ்தாபகரோ ஒரு கடினமான வார்த்தையும் எதிராகக் கூறாமல் பொறுமையோடே எல்லா வாதைகளையும் சகித்து வந்தார்.

வேறொரு ஸ்காட்லந்து நாட்டு தேவ ஊழியரும் இதே விதமான வாழ்க்கைத் துணைவியைப் பெற்றிருந்து படாதபாடு பட்டார். ஒரு நாள் அவர் தமது அறையில் அமைதியாகப் பைபிளைப் படித்துக் கொண்டிருந்தார். திடீரென்று கதவு திறக்கப்பட்டது; அவரது மனைவி அவர் கையிலிருந்த பைபிளைப் பிடுங்கித் தீயிலே போட்டார். உடனே அந்த ஊழியர் எந்தவிதக் கோபதாபமுமின்றி சாந்தமாக, "நல்ல அனலாக இருக்கிறது, இதுவரை இவ்வளவு உஷ்ணம் நான் அநுபவித்ததில்லை" என்றாராம். அதைக் கேட்டவுடன் அந்த உக்கிர கோபத்துடனிருந்த மனைவியின் மனம் இளகினது; அவருடைய திருந்திய கிருபையுள்ள வாழ்க்கைக்கு அதுவே ஆரம்பமாயிற்று. இதுவரை அவருக்கு யேசபேலாக இருந்தவள் ஒரு திவ்ய லீதியாளாக மாறிவிட்டாள். முள்ளாக இருந்தது லீலிப்புஷ்பமாக மாறிவிட்டது!

"ஒரு கிறிஸ்தவ மகான் இவ்வாறு கூறியுள்ளார்: நாம் காரணமில்லாமல் குற்றஞ்சாட்டப்பட்டு துன்புறுத்தப்படும் பொழுது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் அமைதியுட னிருப்பது தான் மெய்யான, ஆழமான தாழ்மையாகும். நாம நிந்திக்கப்பட்டு, கொடுமைப்படுத்தப்படுகிற வேளையிலும் பொறுமையுடன் சத்தமில்லாமல் இருப்பது நமதாண்டவரின் மாதிரியைப் பின்பற்றுவதாகும். ஓ என் கர்த்தாவே, எத்தனை எத்தனை வேளைகளில், நீர் ஒரு தவறும் செய்யாதிருந்தும

உமது மீது சுமத்தப்பட்ட அவமானங்களைப் பொறுமையோடே சகித்தீரே! ஆனால் நானோ எவ்வளவு தீவிரமாக என்னைத் தற்காக்கவும், நீதிப்படுத்தவும், சாக்குப் போக்குச் சொல்லவும் ஆத்திரப்படுகிறேன் என்று நினைக்கும்பொழுது எனக்கே வெட்கமாக இருக்கிறது! உம்மைப் பற்றி இத்தனை அவதூறான காரியங்கள் கூறப்பட்ட போதிலும், கயவர்கள் உம்மைக் கீழ்த்தரமாக மதித்து நடத்தின போதிலும் வாய் திறவாதிருந்தீரே, என் ஆத்ம நேசரே; அவ்வாறிருக்க மற்றவர்கள் என்னைப் பற்றிப் பெரிதாகப் பேசவேண்டும் என்று நான் எதிர் பார்ப்பது எவ்வளவு அபத்தம்."

- பொறுமையுடன் வாழ்வது என்ற ஜே.அலன் ப்ளேர் எழுதிய நூலிலிருந்து.

### 5. *தீமைக்குப் பதில் நன்மை செய்து விடுவது*

நொறுக்கப்பட்ட வாழ்க்கையில் தனக்கிழைக்கப்பட்ட அநீதிகளை மன்னித்து மறந்து விடுவது மாத்திரமல்ல, ஒவ்வொரு அநியாயத்திற்கும் ஒரு அன்பின் நற்செய்கையைச் செய்து விடுவது ஒரு முன்னேற்றப்படியாகும்.

"இன்னா செய்தாரை ஒருத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்ற தமிழ் நீதிமொழியும் இதற்கு இணையாக இருக்கிறது அன்றோ?

"ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" (ரோமர் 12:17,19,20).

இவ்விடத்தில் இந்தியாவில் நான் கண்ட ஒரு காட்சியைக் கூற உந்தப்படுகிறேன். ஒரு யானை மீது ஏறிச் சென்ற ஒரு பாகன் தன் அங்குசத்தினால் அந்தப் பிரமாண்டமான





மிருகத்தின் காதை வளைத்துக் குத்தி, தான் போக வேண்டுமென்று விரும்பின இடத்துக்கெல்லாம் நடத்திக் கொண்டிருந்தான். திடீரென்று அந்த அங்குசம் அவன் கையில் இருந்து தவறி 'தடால்' என்று ஓசையுடன் தரையில் விழுந்து விட்டது. நடந்தது என்ன? அந்தப் பொறுமைசாலியான யானை நின்று, திரும்பி தன் துதிக்கையால் கீழே விழுந்த அங்குசத்தை எடுத்துத் தன் மீது அமர்ந்திருந்த பாகனிடம் கொடுத்தது. யானைகள் கிறிஸ்தவர்களாகக் கூடுமென்றால், அதுவும் உறுதியாக ஒரு கிறிஸ்தவ யானை தான்!

### 6. *தன்னை விட மற்றவர்களை உயர்வாக எண்ணுவது*

மற்றவர்களைத் தன்னைவிட மேலாக எண்ணுவதும் ஒரு வகையான நொறுக்கப்படுதலாகும் (பிலிப்பியர் 2:3). ஆபிரகாமின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில் இதைத் தெளிவாகக் காண்கிறோம் (ஆதியாகமம் 13:1-13). ஆபிரகாமும் லோத்தும் எகிப்திலிருந்து நெஜிப் என்ற இடத்திற்கும் பின்னர் தங்கள் ஆடுமாடுகள், உடைமைகள், குடும்பங்கள் சகிதமாக பெத்தேலுக்கும் வந்து சேர்ந்தார்கள். இருவருக்கும் ஏராளமான கால்நடைகள் இருந்தபடியால் அவற்றிற்கு மேய்ச்சல் காண்பிக்கிற விஷயத்தில் இரு குழுவினருக்குமிடையில் வாக்குவாதமும் சண்டையும் ஏற்பட்டது. உடனடியாக ஆபிரகாம் முன்வந்து "லோத்துவே, சிறிதளவு புல்வெளிக்காக நாமிருவரும் பகைஞராக வேண்டியதில்லை. நீ உனக்கு வேண்டிய மேய்ச்சல் நிலங்களைத் தெரிந்து கொண்டால், நான் வேறிடம் பார்த்துச் செல்கிறேன்" என்றான். அதை நல்ல சந்தர்ப்பமாகக் கருதி, லோத்து சோதோமுக்கு அருகிலுள்ள செழிப்பான யோர்தான் நதிப்பாசனங்களைத் தெரிந்து கொள்ளவே, பெருந்தன்மையான ஆபிரகாம் கானானில் இருந்து விட்டான். இவ்வாறு அவர்கள் வழக்கு சுமுகமாகத் தீர்ந்தது. இவ்வாறு பெந்தேகோஸ்தே நாளுக்கு அக்கரையில் வாழ்ந்த ஒரு பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் பவுல் அப்போஸ்தலனின் போதனையை நடைமுறையில் வாழ்ந்து காண்பித்தார்:

*"சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக் கொருவர் முந்திக் கொள்ளுங்கள்."* (ரோமர் 12:10)

**7. உடனடிக் கீழ்ப்படிதல்**

இவை மாத்திரமல்ல; தேவனுடைய சித்தத்தை அறிந்தவுடன், அதை ஏற்றுக் கொண்டு மகிழ்வுடன் கீழ்ப்படிவதின் மூலமாகவும் நாம் உடைக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். சங்கீதக்காரன் இதனை இரத்தினச் சுருக்கமாக:

*"வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப் பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப் போலவும் கோவேறு கழுதையைப் போலவும் இருக்க வேண்டாம்."* (சங்கீதம் 32:9)

சுறுசுறுப்படைந்துள்ள ஒரு குதிரை அத்துமீறி துள்ளிக் குதித்து ஓட முயற்சிக்கும்; ஆனால் ஒரு கோவேறு கழுதையோ பிடிவாதமே உருவாக அசையாமல் நின்று கொண்டிருக்கும். எனவே தேவனுடைய சித்தத்தைப் பொறுத்தவரையில் ஒரு விசுவாசிக்கு முன்பாக இவ்விரண்டு அபாயங்களும் இருக்கின்றன: ஒன்று சரியான நடத்துதலில்லாமல், அனுப்பப்படாமல் ஓடுவதாகும். இரண்டாவது அபாயம் கர்த்தருடைய சித்தத்தைத் தெளிவாக அறிந்த பின்னரும் நிதானமாக நின்று எதிர்ப்பதாகும்.

உதாரணமாக, யோனாவை எடுத்துக்கொள்வோம். அவன் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை நன்றாகவே அறிந்திருந்தான். நினிவேக்குச் சென்று அங்குள்ளவர்களின் பாவத்தையும் அதற்கான ஆக்கினைத் தீர்ப்பையும் கண்டித்துப் பிரசங்கிக்கக் கட்டளை பெற்றிருந்தான். ஆனால் யோனா இன்னும் உடைக்கப் படவில்லை. எனவே எதிர் திசையில் போகக்கூடிய கப்பலைப் பார்த்து ஏறினான். தீக்கனவு போன்று திமிங்கிலத்தின் வயிற்றிலிருந்து திக்குமுக்காடுகின்ற வேளையில்தான் யோனா





நொறுக்கப்பட்டான்; அவனுடைய சுயசித்தம் முறிக்கப்பட்டது. அதற்குப் பிறகு தான், "நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான தேவசித்தம் இன்னதென்று" (ரோமர் 12:2) நிரூபிக்க முற்பட்டான்.

இயேசு கிறிஸ்துவும் எருசலேமுக்குள் பவனியாகச் சவாரி செய்து வந்த கழுதைக்குட்டி எவ்வாறு முறிக்கப்பட்டது அல்லது அடக்கப்பட்டது என்பதிலிருந்தும் உடைக்கப் படுவதின் ஒரு ஆச்சரியமான காட்சியைக் காண்கிறோம் (லூக்கா 19:29-35). அந்த நேரம் வரைக்கும் ஒரு மனிதனும் அந்தக் குட்டியின் மேல் ஏறினதில்லை. எனவே அதன்மீது எவரும் உட்கார்ந்து சவாரி செய்வதென்பது முற்றிலும் முடியாத காரியம். ஆனால் இரட்சகர் அதனருகில் வந்தவுடன், அது முறிக்கப்படுகின்ற புதிய அநுபவத்தை உடனடியாகப் பெறுக் கொண்டது. அக்குட்டியின் சித்தம் உடனடியாகச் சிருஷ்டிகரின் சித்தத்துக்கு உகந்ததாய் அடங்கிற்று.

உடைக்கப்படுதல் அல்லது நொறுக்கப்படுதல் என்ற நமது ஆய்வில் உயிருள்ள உருவகங்களை உதாரணமாகக் கொண்டு விளக்கி வருகின்ற வேளையில், களிமண் போன்ற உயிரில்லாத ஒரு பொருளையும் உதாரணமாக எடுத்துக் கொள்வது சற்று வியப்பளிக்கலாம். என்ற போதிலும், குயவன் கையிலுள்ள களிமண் கர்த்தரின் கையிலுள்ள உடைக்கப்பட்ட ஒரு பரிசுத்தவானுக்கு ஏற்புடையதாகவே இருக்கிறது - ஆண்டவருடைய சித்தத்துக்கு எளிதில் இணங்கி, வளைந்து கொடுக்கிற பாத்திரமாக இருக்கிறார். ஆதலால் கீழ்ப்படிந்து, விட்டுக் கொடுக்கிற ஒரு பரிசுத்தவானின் தினசரி ஜெபமாவது:

*உம் சித்தமே, ஆம், உம் சித்தமே!*
*நீர் என் குயவன் நான் களிமண்*
*உம் சித்தப்படி வனையும் என்னை*
*ஒப்புவித்தே நான் காத்திருப்பேன்*

*உம் சித்தமே, ஆம், உம் சித்தமே!*
*ஆராய்ந்து பாரும் நாதா என்னை*
*தூய்மையாகவே மாற்றும் இன்றே*
*உம் சமூகத்தில் ஜெபிக்கையில்*

*உம் சித்தமே, ஆம், உம் சித்தமே!*
*வேதனை மாற்றி குணமாக்கும்*
*வல்லமை யாவும் உமக்குண்டே*
*தொட்டு உடனே மாற்றும் தேவா!*

*உம் சித்தமே, ஆம், உம் சித்தமே!*
*முற்றிலும் என்னை ஆண்டருளும்*
*ஆவியால் முற்றும் நிரப்பியே*
*இயேசுவை என்னில் காணச் செய்யும்*

### 8. மக்கள் அபிப்பிராயத்துக்கு மரித்தல்

நொறுக்கப்படுதலின் வேறு பல அம்சங்களையும் நாம் கவனித்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, உலகத்தாரின் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் செத்துப் போன ஒரு நிலைமைக்கு வரவேண்டும். டபிள்யு.பி.நிக்கல்ஸன் என்பவர் இரட்சிக்கப்பட்டவுடன், ஒரு இரட்சண்ய சேனை அதிகாரியின் மேற்பார்வைக்குள் வைக்கப்பட்டார். ஒரு நாள் அந்த அதிகாரி அவரிடம் : "நீ தேவனுக்கென்று உருப்படியாக ஏதாவது சாதிக்க விரும்பினால், இந்த வாசகம் எழுதப்பட்ட பலகையை இந்த நகரத்தின் நடுவில் சில மணி நேரம் தொங்க வைத்து விட்டு வா" என்று பணித்தார். "மக்கள் அபிப்பிராயத்துக்கு மரித்து விட்டேன்" என்பது தான் அதில் எழுதப்பட்டிருந்தது. நிக்கல்ஸனின் வாழ்க்கை முழுவதும் கிறிஸ்துவுக்காகப் பயமின்றி ஊழியஞ்செய்ய இந்த ஆழ்ந்த அநுபவம் பெரிதும் உதவிற்று.

### 9. ஏனையோரின் பாவங்களையும் நமதாக அறிக்கையிடுதல்

இதர தேவபிள்ளைகளின் பாவங்களையும் நமதாகவே





கருதி நாம் தேவனிடத்தில் அறிக்கை செய்யுமளவிற்கு நாம் உடைக்கப்பட்டவர்களாயிருக்க வேண்டும். எஸ்றாவும் (9:6-15), தானியேலும் (9:13-19) இவ்வாறு தான் செய்தார்கள். இவர்களுடைய ஜெப அட்டவணையில் காணப்படும் அநேக பாவங்களில் ஒன்றிலாவது அவர்கள் குற்றவாளிகளாக இல்லாமலிருந்தும், தங்களையும் தங்கள் ஜனத்துடன் சேர்த்தே பாவ அறிக்கை செய்தார்கள். இஸ்ரவேலின் பாவம் அவர்களின் பாவமாயிற்று. "நம்முடைய பாவங்களையும், பாடுகளையும், துக்கங்களையும் தம்முடையவைகளாக ஏற்றுக் கொண்டவரை" நமக்கு நினைவூட்டுகிறார்கள். மற்றவர்களைக் குற்றஞ் சாட்டுகிற விதத்தில் நிபச்சொல்லையும், விமர்சிப்பதையும், விரல் நீட்டுவதையும் விட்டு விட்டு, அவர்களுடைய குற்றங்களையும், பாவங்களையும் நமதென அறிக்கை செய்யவும், பரிந்து மன்றாடவும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பது தான் இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிற பாடம்.

### 10. நெருக்கடி நேரங்களிலும் பதறாமலிருப்பது

வாழ்க்கையில் எதிர்ப்படும் நெருக்கடிகள், ஆபத்துக்கள், விபத்துக்கள் முதலான சந்தர்ப்பங்களிலும் சற்றும் சலனமின்றி, பதறாமல், பொறுமையுடனிருப்பது நொறுக்கப்பட்ட ஜீவியத்தின் ஒரு நிறைவான அம்சமாகும். ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஒன்று கிடைக்காமற்போனால், இயற்கையான மனிதசுபாவம் எரிச்சல், கோபம், வெறி மற்றும் சந்தடிகளை உண்டாக்கும். விரும்பினது கிடைக்கத் தாமதமானாலும் கூட ஆத்திரமும், படபடப்பும் காணப்படும். கார் விபத்து அல்லது காரில் கோளாறு அல்லது வேறு யந்திரங்களில் கோளாறு ஏற்பட்டாலும் முற்கோபம் பொத்துக்கொணடு வருகிறது. எல்லார் மீதும் எரிந்து விழுகிறோம். நிகழ்ச்சிகளில் மாற்றம் அல்லது ஏமாற்றம் நம்மிலுள்ள கீழ்த்தரமான குணங்களை வெளிப்படுத்துகிறது. 'ஹிஸ்டிரியா' வந்தது போல வெறி பிடித்து நாம் செய்யக்கூடிய அழிவுக்குரிய காரியங்கள் எல்லாம் நமது கிறிஸ்தவ சாட்சியை எவ்வளவாகப் பாதிக்கிறதென்று நாம் உணர்வதில்லை.

நமது வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலைமைகளிலும், அவை எவ்வளவு தான் நெருக்கடியாக இருந்தாலும், நாம் மிகவும் சாவதானமாக இருக்கலாம். ஏனெனில் தேவன் சிங்காசனத்திலிருக்கிறார், அவரையன்றி ஒரு அணுவும் அசையாது என்ற அறிவை நாம் பெற்றிருக்கிறோம்.

*"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."* (ரோமர் 8:28)

கார் டயரில் காற்று இறங்கி விட்டாலும் அதுவும் நன்மைக்காக இருக்கும்; ஏனெனில் அதிக தூரம் போய் கார் கவிழ்ந்து விடாதபடி கர்த்தர் முன்னெச்சரிக்கையாக அதனை அநுமதித்திருக்கிறார். அது மாறுவேடத்தில் வந்த ஆசீர்வாதமாகும். உங்கள் ஊழியத்துக்கு இடையூறாக வந்து விட்டாரே என்று நீங்கள் நினைக்கும் அழைக்காத விருந்தினர் ஒருவர் ஒரு வேளை உங்களை மிகச் சிறப்பான ஊழியத்துக்கு வழி நடத்தலாம். அல்லது உங்களுக்கு ஏற்பட்ட விபத்தினால் நீங்கள் அவதியுறும் பொழுதும், அதிகச் செலவுகள் ஆகிறதே என்று நீங்கள் வருந்தும் பொழுதும், உங்கள் படுக்கையே பிரசங்க பீடமாகி தூய ஆவியானவரின் துணையுடன் அநேகரை நீங்கள் இரட்சிப்புக்குள் வழி நடத்தும் வாய்ப்பாகி விடலாம். இவ்விதச் சூழ்நிலைகளிலெல்லாம் நாம் உடனடியாக மிகுந்த அமைதியுடனும், பொறுமையுடனும், ஆர்ப்பாட்டமின்றி நடந்து கொள்வதையும் தேவன் எதிர்பார்க்கிறார். கசந்து கொள்ளாமலும், கலகம் செய்யாமலும் இருப்பதே நொறுங்கின வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும்.

நொறுக்கப்படுதலின் பொருளை விளக்கும் அநுபவங்களில் சில எடுத்துக்காட்டுகளைப் பார்த்தோம். சூசகமாகச் சிலவற்றை தெரிவித்தோமேயன்றி தீர்க்கமாக எல்லாவற்றையும் விளக்கி விடவில்லை. நாம் கர்த்தருடைய ஐக்கியத்தில் நடக்கும் பொழுது, நம்முடைய வாழ்க்கையில் நாம் சிலுவையினடியில்





எந்தெந்த இடங்களில் நொறுக்கப்படத் தேவையாயிருக்கிறது என்பதைச் சுட்டிக் காண்பிப்பார். அந்த ஒவ்வொரு வெளிப்பாட்டுடன் நமக்குத் தேவைப்படுகிற கிருபையையும் அருளிச் செய்வார்.

*"ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்"*

(பிலிப்பியர் 2:13)

## எது நொறுக்கப்படுதல் அல்ல

நொறுக்கப்படுதலின் சில அம்சங்களைப் பார்த்திருக்கிற நாம் இப்பொழுது அப்பதத்தின் அர்த்தத்தின்படி எது நொறுக்கப்படுதல் அல்ல என்றும் அறிந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர் திருவாளர் வடிநீர் அல்வா அல்ல, அல்லது முதுகெலும்பு இல்லாத புழுவைப் போன்றவரும் அல்ல. அர்த்தமற்ற வெறும் பூஜ்யம் அல்ல. அருகில் இருப்பவர்களை எவ்விதத்திலும் பாதிக்காத சாட்சி அல்ல. அவருடன் தொடர்பு கொள்ளுகிறவர்களை நிச்சயமாகவே அவர் தொட்டு விடுவார். ஏனெனில் நொறுக்கப்பட்டவர் உரம் பெற்றவராவார். உடைக்கப்படாமலிருப்பதற்கு எந்தவிதப் பயிற்சியும், கட்டுப்பாடும் அவசியமில்லை. ஆனால் கிறிஸ்துவைப் போல் வாழ்வதற்கு எவ்வளவு தன்னடக்கம் தேவைப்படுகிறது. மனித சுபாவமும், உள்ளுணர்ச்சியும் அதற்கு எவ்வளவாக எதிர்த்து நிற்கிறது!

உடைபட்ட அப்பமாகத் திகழ்கிறவர்களே அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உரமும், பண்பும் நிறைந்தவர்கள். அவர்கள் அமைதியாக இனிவரும் உலகத்தன்மையை எவரும் உதறித் தள்ளாத முறையில் வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். அது மற்றவர்களுக்கு விளங்காத புதிராக இருக்கிறது. "உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும்" (சங்கீதம் 18:35).

எனினும் தவிர்க்க முடியாத தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் தங்கள் கோபத்தையும் வெளிப்படுத்தும் திறன் பெற்றவர்கள் தான். நமதாண்டவரின் வாழ்க்கையிலும் இதனையே நாம் காண்கிறோம். தேவலாயத்திலிருந்த மாய்மாலக்காரரான ஆடுமாடுகளை விற்பவர்களையும், காசுக்காரரையும் சவுக்காலடித்து இயேசு விரட்டியடிக்கவில்லையா? அவருக்குத் தனிப்பட்ட முறையில் தீங்கு செய்யப்பட்டதற்காக அவர் கோபிக்கவில்லை; ஆனால் அவருடைய பிதாவின் வீட்டை அவமதித்துப் பரிசுத்த குலைச்சலாக்கினதற்காக இயேசு அவ்வளவு வேதனையுடன் தமது வைராக்கியத்தை வெளிப்படுத்தினார். “தேவனுடைய காரியங்களில் சிங்கமாக விளங்கினவர், தமது சொந்தக் காரியத்தில் ஆட்டுக் குட்டியாகவே இருந்தார்”, என்று ஒருவர் நமதாண்டவரை வர்ணித்துள்ளார். அநேக இரத்தச் சாட்சிகளும், மதச்சீர்த் திருத்தவாதிகளும் உடைக்கப்பட்டவர்களாகவே இருந்தனர்; ஆனால் மற்றவர்கள் மீதும், உலகத்திலும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி கலங்கரை விளக்கமாக இருக்கின்றனர்.

## தலைமுறை இடைவெளி

பெற்றார்-பிள்ளை என்ற சம்பந்தத்தில் உடைக்கப்படும் அநுபவத்தைச் செயல் முறைப்படுத்துவது கடினமான பகுதிகளில் ஒன்றாகும். ஒரு புரியாத, விசித்திரமான காரணத்தை முன்னிட்டு பாவத்தினால் வீழ்ச்சியடைந்திருக்கும் மனிதப் பண்பில் நமக்கு மிகவும் நெருக்கமான உறவினர்களுடன் நாம் அதிக அன்புடன் நடந்து கொள்வதில்லை. அநேக கிறிஸ்தவ மகளிர் தங்கள் தாய்களின் மீது கொண்டிருக்கும் பகைமையுணர்ச்சி காரணமாகத் தங்கள் உள்ளத்திற்குள்ளேயே ஒரு இடைவிடாத போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர். அப்படியே கிறிஸ்தவ ஆண் மக்களும் தங்கள் தகப்பன்மாரிடம் மரியாதையுடன் நடந்து கொள்வதற்குப் பதிலாக அசட்டுத்தனமாகப் பழகுகிறார்கள். இதற்கு ஒரு முக்கிய காரணம் தலைமுறை இடைவெளி என்பதில்





ஐயமில்லை. உண்மையில் இது ஒரு பெரிய இடைவெளிதான். இளைஞர்களின் குற்றச்சாட்டு அல்லது ஆவலாதி என்னவென்றால் தங்கள் பெற்றோர் தங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை, அடக்குமுறையைக் கையாளுகிறார்கள், புராதன காலத்திலேயே அவர்கள் இருக்கிறபடியால் நவநாகரீகப் பழக்க வழக்கங்களுக்கு அந்நியர்களாயிருக்கிறார்கள். இவ்வாறு பல புகார்களைக் கூறினாலும், அநேகர் தாங்கள் சிறந்த கிறிஸ்தவர்களாக இந்த மட்டுப்பாடுகளுக்கு மேலாக எழும்பிப் பிரகாசிக்க முடியவில்லையே என்று வருந்துகிறார்கள். தங்களுக்குச் சமமான வாலிபர்களுடன் அன்பாகப் பண்பாகப் பழக முடிகிறது; மற்றப் பெரியவர்களிடமும் நற்சான்றிதழ் பெறுகிறார்கள்; ஆனால் வீட்டிலேயோ இவ்வளவு அன்பில்லாமல், அசிங்கமாக நடந்தப்படுவதைப் பெரிய தோல்வியாகக் கருதுகிறார்கள். தங்கள் பெற்றோர் செத்தாலும் "பரவாயில்லை" என்ற எண்ணம் தோன்றும்பொழுது உடனே தங்களைத் தாங்களே வெறுக்கிறார்கள்; ஆகிலும் அதற்காக உடைந்து நொறுங்குவதென்றால் அது வேப்பங்காயாகக் கசக்கிறது.

கடவுள் மோசேயின் மூலமாகப் பத்துக் கட்டளைகளைக் கொடுத்த வேளையில் முதல் நான்கும் மனிதனுக்கும் தேவனுக்குமுள்ள தொடர்பினைக் கூறின பின்னர், மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பில் முதல் கட்டளையாக,

> *“உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.”* (யாத். 20:12)

என்று கூறினதில் ஆச்சரியமில்லை. இது இந்த நுண்மையான பகுதியிலுள்ள தர்மசங்கடமான நிலைமைக்குச் சரியான தீர்வு அளிக்கிறது. பவுல் அப்போஸ்தலனும் புதிய ஏற்பாட்டில் இதே கட்டளையைத் திரும்பக் கூறுகிறார்:

*"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையா யிருக்கிறது."* (எபேசியர் 6:1-3; கொலோசெயர் 3:20 ஐயும் கவனிக்க).

பெற்றோரைக் கனம் பண்ணி, அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றால், அவர்கள் சொல்வதின்படி செய்வது மட்டுமல்ல, அவர்களிடம் அன்பாக, பட்சமாக, மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டு, தேவைப்படும் பொழுதெல்லாம் அவர்களைப் பராமரித்துப் பாதுகாக்கவும் வேண்டும் என்று அர்த்தம். பவுல் இதற்கு நான்கு காரணங்கள் தருகிறார்:

அது நியாயம். அது இளைஞர்களுக்கு நல்லது. அது திருமறை ஏற்பாடு. அது ஆயுளைப் பூரணப்படுத்துகிறது.

ஆனால் அநேக ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் என்ன எண்ணிக் கொள்ளுகிறார்கள், தெரியுமா? இந்த உபதேசம் மற்றவர்களுக்குப் பொருந்தலாம்; தங்களுக்குப் பொருந்தாது. தங்களுடைய பெற்றோர் அகங்காரமும், கர்வமுமுள்ளவர்கள், ஒரு வழிக்கும் ஒத்து வர மாட்டார்கள்.

ஆனால் தேவைப்படுவதெல்லாம், அவர்கள் உடைக்கப்பட வேண்டியதுதான். அதாவது, தகப்பனிடமோ, தாயிடமோ அல்லது இருவரிடமோ சென்று, "நான் மிகவும் வருந்துகிறேன், உங்களுடன் இணங்கி, கீழ்ப்படியாமல் இருந்து விட்டேன்; ஆனால் இப்பொழுது எனது தவறை உணருகிறேன். நமக்கிடையில் அநேக தடுப்புச் சுவர்களை வளர்த்து விட்டேன். இவையெல்லாவற்றிற்கும் என்னைத் தயவாக மன்னிக்கக் கோருகிறேன். கர்த்தரின் கிருபையால் இனிவரும் நாட்களில்





நமது உறவுகள் சீரடைய விரும்புகிறேன்" என்று அறிக்கை செய்யவேண்டும்.

காலத்தால் அழியாது, மங்காது நிற்கும் எடுத்துக்காட்டு கெட்டகுமாரன் சரித்திரம் ஆகும். தனது தந்தை மரிக்கும் வரை காத்திருந்து தனது சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளப் பொறுமையில்லாத நன்றி கெட்ட இளைய மகன், உடனடியாகத் தனக்கு வரும் பங்கைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று தந்தையை அலட்டிக் கொண்டேயிருந்தான். அவன் கேட்டது அவனுக்குக் கிடைத்தவுடன், எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு தன் தோழர்களுடன் தூர தேசம் சென்று விட்டான். பணத்தையெல்லாம் பாழாய்ப் போன பல வழிகளில் விரயமாக்கிவிட்டு, நண்பர்களையும் இழந்து விட்டு, பஞ்சத்தில் அடிபட்டு, பிச்சைக்காரன் போல் சுற்றியலைந்தான். பன்றி மேய்க்கும் தொழில் கிடைத்தாலும், பன்றியின் தீவனமும் இன்றித் தவிக்கும்பொழுதுதான் தனது தந்தையின் வீட்டு நினைவு வந்தது. அங்குள்ள வேலைக்காரர் எல்லாரும் எவ்வளவு சொகுசாக வாழ்ந்து வந்தார்கள் என்பதை எண்ணிப் பார்த்தான் தான் ஒரு மதிகெட்டவன் என்றுணர்ந்தான்! தன் வீட்டை விட்டுச் செல்வச் சீமானாக வெளியேறியவன் இப்பொழுது ஒட்டாண்டியாகத் திரும்புவதை உணர்ந்து உள்ளமுடைந்தான் நீதி கேட்டு வெளியேறினவன், இரக்கம் நாடித் திரும்புகிறான். தலை நிமிர்ந்து கம்பீரமாகப் புறப்பட்டவன் கர்வமடங்கி தலை கவிழ்ந்து செத்த நாயைப் போலப் பதுங்கிப்பதுங்கி வருகிறான்.

"அப்பா" என்று உணர்ச்சி பொங்கக் கூறுகிறான், "உங்களை அப்பா என்று அழைக்கவும் தகுதியற்றவன் கடவுளுக்கு விரோதமாகவும் உங்களுக்கு விரோதமாகவும் பாவஞ்செய்த பஞ்சமா பாதகன் நான்! உங்கள் பிள்ளை என்று அழைக்கப்பட நாதியற்றவன் ..." என்று பலவாறு கூறி, தன்னை ஒரு வேலைக்காரனாகச் சேர்த்துக் கொள்ளுமாறு மனுச்செய்யத் திட்டமிட்டிருந்தான் ஆனால் நடந்தது என்ன? அவனையே நினைத்துப் பித்துப் பிடித்துப் போயிருந்த அன்பே உருவான

அந்தத் தந்தை அவனைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு மகனாகவே சேர்த்துக் கொண்டார். அவசரமான கட்டளைகளைப் பெற்ற வேலைக்கார் அவனை நன்கு குளிப்பாட்டி, புத்தாடைகள் அணிவித்து, கைக்கு மோதிரமும், கால்களுக்குப் புதிய செருப்புகளும் போட்டு, அவனது வருகையின் நிமித்தம் பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து விட்டனர். தந்தைக்கும் மகனுக்கும் இருந்த பெரிய இடைவெளி நொறுங்குதல் எனும் பாலத்தால் இணைக்கப் பட்டது. முதலாவதாக, அந்த மகன் மனந்திரும்பாமலும் உடைக்கப்படாமலுமிருந்தால், தனது தந்தையின் முத்தத்தையும், அரவணைப்பையும் ஒருபோதும் அறிந்துகொள்ள மாட்டான். நல்ல குமாரனாக மாறின அவன் இனியொரு முறை கெட்டுப் போவதற்கு வாய்ப்பே இல்லை.

இவ்விதமாக அறிக்கை செய்வதின் மூலம் சிறுமைப் படுத்தப்படாவிட்டால் ஒருவரின் அகந்தையும், பகைமையும், வெறுப்பும் அவரை விட்டு நீங்குவதற்கு வேறொரு வழியே இல்லை. இந்த நிலையை அடைந்த ஒருவர் மறுபடியும் தவறிப் போக முடியாது; ஏனெனில் தனது முந்தின தோல்வியும், நொறுக்கப்பட்டு பாவ அறிக்கை செய்து அவமானப்பட்டுப் போனதையும் ஒரு போதும் மறக்க மாட்டான். அந்த அநுபவமே வலுவான தடையாக மாறி விடுகிறது.

## இல்லற வாழ்க்கையில் இடைவெளி

உடைக்கப்பட்ட அநுபவத்தின் இரண்டாவது கடினமான கட்டத்தை கணவன்-மனைவியின் திருமண வாழ்க்கையில் நாம் சந்திக்கிறோம். நமக்கு அறிமுகமில்லாத அந்நியர்களிடம் அன்பாகப் பழகுகிறோம் ஆனால் நெருங்கின இனத்தவரிடம் அன்பில்லாமல், முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் அநேகமுண்டு. வெளியிலே பாராட்டுக்குரிய தேவ தூதர்களைப் போலவும் வீட்டிலோ அருவருக்கப் படத்தக்க பிசாசுகளாகவும் இருப்பதாக அடிக்கடி நாமே அறிக்கை செய்கிறோம்.





இல்லறவாழ்க்கையில் இவ்வாறு நடக்கும் என்று நடைமுறை நிலைமையை நன்கு அறிந்து திருவசனம் தெளிவாக நம்மை எச்சரிக்கிறது. இங்கு கொலோசெயர் 3:19 அழுத்தமாக நினைவுக்கு வருகிறது:

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள், அவர்கள் மேல் கசந்து கொள்ளாதிருங்கள்."

இல்லற வாழ்க்கையில் ஒரு கணவனுக்குத் தன் மனைவியின் பேரில் கட்டுக்கடங்காத கோபமும், கசப்பும் உண்டாகி, அதன் மீது தனக்கு வெற்றி கிடைக்குமோ, என்னவோ என்று பயப்படும் நிலையைக் கணவன் அடைகிறான். அநேக வேளைகளில் பிரிந்து வாழும் அல்லது விவாகரத்து செய்யும் அபாயத்துக்குள்ளாகின்றனர்.

சுந்தரம்-சுந்தரியின் வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். முதற்சந்திப்பே காதலில் மலர்கிறது. அவர்கள், ஒருவர் மற்றவருக்காகவே உண்டாக்கப்பட்டிருப்பதாக உணரு கிறார்கள். சீக்கிரத்தில் திருமண நிச்சயம் செய்து கொள்கிறார்கள். அடுத்த ஆறு மாத காலத்திற்குப் பிறகு திருமண நாள் குறிக்கப்பட்ட போதிலும், நான்கு மாதங்கள் நிறைவேறுமுன்பே திருமணம் இனிதே நிறைவேறி விட்டது. தேன்நிலவும், திருமண விருந்துகளும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

முதலாண்டு நன்றாகவே ஓடி முடிந்தது. ஆனால் ஒரு நாள் காலையில் சுந்தரி தன் உள்ளத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தாள். சுந்தரத்தைப் பற்றி அவள் மனதில் தேங்கியிருந்த கழிவு நீர் எல்லாம் வெள்ளப் பெருக்கு எடுத்து ஓடி வந்தது. சுந்தரத்தின் வாழ்க்கையில் முன்னர் நடந்த சில நிகழ்ச்சிகளை சுந்தரி விமர்சிக்கத் துவங்கினாள். சுந்தரத்துக்குப் பொறுத்திருக்க அவகாசமில்லை. அவள் வீசின வேகத்திலேயே பந்தை அவனும் அவள் மீது வீசினான். வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறியது. வீடு அதிரத் தொடங்கினது; கதவுகளும் ஜன்னல்களும் அலறத் தொடங்கின.

ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதாக இல்லை. சுந்தரம் சுந்தரியின் மீது முன்பு காட்டின அன்பை விட இப்போது ஏற்பட்ட கசப்பும், வெறுப்பும் அநேக மடங்காகக் காணப்பட்டது. (2சாமுவேல் 13:5).

கிறிஸ்தவ நண்பர்கள் நல்ல கிறிஸ்தவத் திருமண ஆலோசகரிடம் அத்தம்பதியரை அழைத்துச் சென்றனர். ஆனால் பயனில்லை; இருவருடைய இருதயமும் இரும்பாகக் கடினப்பட்டு இருந்தன.

வேறு வழியின்றி, முடிவாக சுந்தரம் திருமணரத்து வேண்டுமென மனுக்கொடுத்தாள். நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமுன்னர் ஒரு கிறிஸ்தவ நண்பர் "நொறுக்கப்படும்" முறையைக் கையாளும்படி சுந்தரத்திற்கு ஆலோசனை கொடுத்தார். அதே நேரத்தில் அந்த நல்லெண்ணம் கொண்ட நணபரின் மனைவி சுந்தரியிடம் சென்று அதே செய்தியைச் சூசகமாகத் தெரிவித்தார். தேவனுக்கு முன்பாகவும், ஒருவர் முன்னிலையில் ஒருவரும் நொறுங்குண்ட நிலையில் சந்தித்தால் என்ன? நடந்தவை எல்லாம் சென்று போனவைகளாகவே இருக்கட்டும்; கிறிஸ்துவின் சிலுவையினடியில் இயேசுவின் இரத்தத்தின் கீழாகப் போட்டு மூடி விடுங்கள் என்று புத்திமதி கூறப்பட்டது.

அவர்கள் அவ்விதமே செய்தார்கள். அவர்களிருவரும் அதுகாறும் ஒருபோதும் செய்திராத மிகவும் கடினமான காரியமாக இருந்தது. என்றாலும், இருவரும் ஒன்றாகக் கூடி முழுமையாக அறிக்கை செய்தார்கள். இப்பொழுது அவர்களுள் ஒருவரும் தற்காப்பு முயற்சி எடுக்கவில்லை; வேலியமைத்துத் தனது நிலையை நீதிப்படுத்தப் பிரயாசப்படவில்லை. பூரணமான அறிக்கையாக இருந்தது. திருமணத்திற்கு முன்பு இருவரும் வழிவிலகின பாவத்திற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர். கர்த்தருக்கு முன்பாகக் கண்ணீர் வடித்து, இந்தப் பாவத்தைக் குறித்து இனிமேல் பேசுவதில்லை என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர்.




1யோவான் 1:9ன்படி தேவன் தங்களிருவரையும் மன்னித்துச் சுத்திகரித்துவிட்டார் என்று பூரிப்படைந்தனர். ஒருவரையொருவர் பூரணமாக மன்னித்ததுமன்றி, தங்களைத் தாங்களே மன்னித்துக் கொண்டனர். மகிழ்ச்சியுடன் தங்கள் முழங்கால்களினின்று எழுந்தனர். இன்னும் சீர்ப்படுத்த வேண்டிய காரியங்கள் பல இருந்தபோதிலும், எரிந்து கொண்டிருந்த அக்கினி அவிந்தது, எஞ்சியிருந்த கசப்பு எனும் புகைமூட்டமும் நீங்கத் துவங்கினது. கர்த்தருடைய வழியில் ஜெயம் கிடைத்தது. குடும்பத்தில் இனி ஏந்தப் பிரச்சினை தோன்றினாலும், அதனைக் குணமாக்கும் நிச்சயமான, நம்பகமான மருந்து உடைக்கப்படும்/நொறுக்கப்படும் அநுபவமே என்று கண்டுகொண்டனர்.

மக்கள் ஏன் வீண் சச்சரவுகளில் நேரத்தையும், வழக்குகளில் பணத்தையும் விரயம் செய்தும் பயன் ஏதுமின்றி, திருமண ஆலோசகர்களிடமும், மனநோய் நிபுணர்களிடமும் விருதாவாக அலைந்து கொண்டிருக்கிறார்கள்-ஆனாலும் நொறுக்கப்படும் முறையைப் பரிசோதித்துக்கூடப் பார்க்க மறுக்கிறார்களே- இது என்ன பைத்தியக்காரத்தனம் என்று இப்பொழுதெல்லாம் சுந்தரமும் சுந்தரியும் ஆச்சரியப் படுகிறார்கள். நொறுங்குதலின்றி மற்றவையெல்லாம் வீண்!

## நாம் எல்லாருமே நொறுக்கப்பட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்

பிள்ளைகள்-பெற்றார் உறவு மற்றும் கணவன்-மனைவி உறவுகளில் மட்டுமின்றி நமது வாழ்க்கைகளின் எல்லாப்பகுதிகளிலும், நாம் எல்லோருமே உடைக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். பெனியேலில் யாக்கோபுடன் போராடின தேவன் நம்முடனும் போராடுவார். நமது பெருமை, கர்வம், சுயசித்தம், மன்னிக்க முடியாத சிந்தை, இருதயக் கடினம், புறங்கூறுதல், வீண்பேச்சு, முற்கோபம், உலக சிநேகம், பொருளாசை முதலிய எல்லா மாம்சத்தின்

கிரியைகளுக்கும் நம்மை நொறுக்குவதற்கே தேவன் முயற்சி செய்வார். யாக்கோபைப் போன்ற நம்மை இஸ்ரவேலாகவும், எத்தர்களைப் பக்தர்களாக்கவும், பொய்யர்களை பிரபுக்களாக்கவும், சதிகாரர்களை சக்தியுள்ளவர்களாகவும் மாற்றுவதே தேவனின் திட்டம். தேவனோடும் மனிதரோடும் போராடி வெற்றி பெற்றார்கள் என்று நம்மைப் பற்றிச் சொல்லப்படவேண்டும். ஆனால் விடியற்காலமட்டும் நம்முடன் போராடி, நமது தொடைச் சந்து நரம்பைத் தொடுவார். அதன் பின்னர் மீதமுள்ள நம் வாழ்நாளெல்லாம் நொண்டி, நொண்டி-உடைக்கப்பட்ட மனிதர்களாக, ஆனால்-தேவன் பயன்படுத்தும் மனிதர்களாக நடப்போம்.

நாம் குற்றமற்றவர்களாகக் காணப்படுவதையே தேவன் விரும்புகிறார். நம்மில் எவரும் பாவமில்லாதவரல்ல, ஆனால் குற்றஞ்சாட்டப்படாதவர்களாக நாம் எல்லாரும் வாழலாம். குற்றமில்லாதவன் அல்லது குற்றஞ்சாட்டப்படாதவன் தவறு ஏற்பட்டவுடனேயே அதனை அறிக்கை செய்து சீர்பொருந்தி விடுகிறான். கோபங் கொண்டாலும் பாவஞ்செய்யாமலும், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக அவன் எரிச்சல் தணிந்தும் போகிறது. மனந்திரும்பி, அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டேயிருப்பதின் மூலமாக தேவனோடும், சகமனிதரோடும் உள்ள தொடர்பு அறுந்து போகாமல் பார்த்துக்கொள்கிறான். உள்ளூர் சபையின் மூப்பர் குற்றஞ்சாட்டப்படாதவராக இருக்க வேண்டும் (1தீமோத்தேயு 3:2) என்பது மட்டுமல்ல, ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவ்வாறிருக்கவேண்டும்.

## நற்பலன்களை நினைத்துப் பாருங்கள்

நாம் போதுமான அளவு நொறுக்கப்பட்டிருப்போமானால், நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்பங்களிலும், நமது சபைகளிலும், தொழில் உலகிலும் எவ்வளவு பெரிய மாறுதல்களும், நன்மைகளும் பிறந்திருக்கும்.




நமது சொந்த வாழ்க்கைகளில் அதிக வல்லமையும், சந்தோஷமும், சுகமும் பெற்று உலகிற்கு வழி காண்பித்திருப்போம். மனத்தாழ்மையிலும், பணிவிலும் கிறிஸ்துவுடன் நுகத்திலே பூட்டப்பட்டிருப்பவர்களே ஆவிக்குரிய பிரகாரமாக மற்றவர்களின் வாழ்க்கையிலே அதிக தாக்கத்தை ஏற்படுத்தினவர்கள். கர்த்தருடைய பணியில் தங்களது பரம அழைப்பின் நோக்கம் நிறைவேறினவர்களாகவும்,அவரில் இளைப்பாறுகிறவர்களாகவும் இருக்கின்றனர். நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் நன்மையாக இருப்பதெல்லாம் நமது சரீர சுகத்துக்கும் அநுகூலமாக இருக்கிறது என்று நாம் அறிய வேண்டும். நமது ஆவிக்குரிய வாழ்க்கையுடன் தொடர்பு இல்லாத ஒரு தசைநாரும், ஒரு அணுவும் நமது உடலில் இல்லை என்று பிரிட்டிஷ் மருத்துவப் பத்திரிகை ஒரு முறை குறிப்பு வெளியிட்டது. இரத்த ஓட்டக்குறைவுள்ள 'சோகை' எனும் நோயினால் பல மாதங்களாக அவதியுற்ற ஒரு பெண், திடீரென்று ஒரு மர்மமான முறையில் முழுமையான நலம் பெற்றதை டாக்டர் பால் டோர்னியர் அறிந்து, ஆராய்ந்து பார்த்தார். தனக்கிழைக்கப்பட்ட தீமையை மன்னிக்க முடியாமல் அல்லது மன்னிக்க மனமற்றிருந்த அந்தப்பெண் திடீரென்று மனப்பூர்வமாக மன்னித்து விட்டாள். அதினால் உடனே சுகம் பெற்றாள் என்று கண்டு பிடித்தார். ஆம், மெய்யாகவே ஆவியில் உடைக்கப்படுதல் உடலின் நன்மையை வளர்க்கிறது.

தங்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகள், மனத்தாங்கல்களை உடனுக்குடன் அறிக்கை செய்து மன்னிக்கும் நற்பண்புள்ள ஒரு குடும்பத்தை எண்ணிப் பாருங்கள். விபரீதமான இடைவெளிகள் ஏற்படுவது சகஜம் என்றாலும், அவற்றை அடக்கி வைத்து, கொதிகலனில் நீராவியின் அழுத்தம் உயராமல் பார்த்துக் கொண்டார்கள். மனதில் பேணி வைக்காமல், குற்றங்களை மன்னித்து மறப்பதுடன் ஒருவருக்கொருவர் அன்பின் முத்தத்தினால் அரவணைத்து வந்தார்கள். இப்படிப்பட்ட குடும்பத்தில் தான் இயேசு வசிக்க

ஆவலுடனிருக்கிறார்.

உள்ளூர் சபையிலும் நொறுக்கப்படுதல் எல்லாரிடமும் ஏற்படும்பொழுதுதான் உயிர் மீட்சி எனும் ஆவிக்குரிய புரட்சி தோன்ற வழி பிறக்கிறது. அருளின் மாமழை பெய்ய வேண்டுமானால் நொறுக்கப்படுதலின் கண்ணீர் சிந்தப்பட வேண்டும். அப்பம் ஆண்டவரின் கையினால் நொறுக்கப்பட்ட பொழுது தான் எல்லாருக்கும் ஆகாரம் கிடைத்தது, ஆசீர்வாதம் பிறந்தது. ஆனால் நாம் நமது மனிதத் தன்மையில் மற்றெல்லா முறைகளையும் கையாண்டு பார்க்கிறோம் - புதிய கட்டடங்கள், புதிய அமைப்புகள், புதிய நடவடிக்கைகள், வழிமுறைகள், புதிய புதிய இசைக் கருவிகள், பாடகர் குழுக்கள் எனப்பலவுண்டு - ஆனால் அவை ஒன்றும் பலிப்பதில்லை. ஏனென்றால், தேவன் மனம் மாறுதலுக்காகவும், மனத்தாழ்மைக்காகவும் காத்துக் கொண்டிருக்கிறார். நாம் கர்த்தருடைய வழியில் வரும் பொழுது, ஆசீர்வாதமும், எழுப்புதலும் இயல்பாகத் தோன்றி விடுகின்றன.

> *"என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்."* (2நாளாகமம் 7:14)

தொழில் மற்றும் வாணிப உலகிலும் தேவனுடைய பிள்ளைகள் தங்களின் நொறுக்கப்பட்ட ஜீவியங்களின் மூலமாக அதிகமான தாக்கத்தையும், நன்மைகளையும் கொண்டு வர முடியும். உலகப்பிரகாரமான மனிதர் அகந்தை ஆணவம் மற்றும் சுயநலத்தால் நிரம்பிச் செயல்படுகின்றனர். தங்கள் அறிவு, ஆற்றல், மற்றும் பணபலத்தையே பிரயோகித்து வெற்றி பெறவும், முன்னேற்றம் அடையவும் நாடுகின்றனர். ஆனால் அவர்கள் கோபாவேசத்தோடு ஒருவர் மீது பாய்ந்து தாக்கத் துவங்கும் பொழுது தாக்கப்பட்டவர் சாந்தமாகவும்,





அமைதியாகவும், பொறுமையாகவும் இருந்து விட்டால் ஆக்கிரமிப்பாளர்களுக்கு என்ன செய்வது என்றே புரிவதில்லை. தன் குற்றங்களை ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்டு, இயேசு கிறிஸ்துவின் கிருபையை வெளிப்படுத்துகிறவர்களை எப்படி நடத்துவது என்று தெரியாமல் திணறுகிறார்கள். இது இயற்கைக்கு விஞ்சின கிறிஸ்துவின் பரலோகத்தன்மை கொண்டிருப்பதால், இது இவ்வுலகின் வியாபாரச் சந்தைகளின் சந்தடிக்கு மேலாக ஒலிக்கிறது.

# கர்த்தாவே, என்னை நொறுக்கும்

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மிஷனரி ஜெபக் கூட்டத்தில் ஒரு இளம் விசுவாசி 'கர்த்தாவே, என்னை நொறுக்கும்!' என்று ஜெபித்தது எனது செவிகளில் விழுந்தது. அது என்னைத் தூக்கிவாரிப் போட்டது; ஏனெனில் அந்த நாள்வரை எனது வாழ்க்கையில் நான் ஒரு போதும் அப்படி ஜெபித்தது கிடையாது. அந்த மன்றாட்டைக் கேட்டபிறகாவது, அப்படி விண்ணப்பிப்பதற்குத் தைரியம் வரவில்லை! எனினும் அந்த வாலிப சீஷனின் இருதயத்தின் ஆழத்தில் இருந்து பிறந்த அந்த அக்கினிப்பொறி போன்ற வார்த்தைகள், எனக்கும் நொறுக்கப்பட்ட வாழ்க்கையின் அவசியத்தையும், தேவையையும் உணர்த்த ஆரம்பித்தன. ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜீவ இரத்தம் பாய்ந்தோடி, கனி தரும் உயிர்த்துடிப்பான வாழ்க்கையைப் பெறுவதற்கு இன்றியமையாத தேவையான ஜெபமாக அது இருந்தது. இப்பொழுதெல்லாம் எனது இடைவிடாத பேரவாவுடன் கூடிய இதயபூர்வமான மன்றாட்டு:

**கர்த்தாவே, என்னை நொறுக்கும்!**